Collection of Dhinakaran Interviews

FAITH - UNITY - DISCIPLINE
ESTD - 1950

LAKE HOUSE

# இளம் தலைமைத்துவ ஆளுமையும்

## சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்



இக்பால் அலி

தினகரன் நேர்காணல்களின் தொகுப்பு

இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள ரிஸ்மியின் சுயவிபரக் கோவை கூட இளம் தலைமுறையினருக்கு படிப்பினையாக அமையக் கூடியன. சமூகப்பணி புரிகின்ற ஒருவர் தன்னை ஆற்றலுள்ள ஒருவராக மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இதிலிருந்து தெரிகின்றது. மொத்தத்தில் இந்நூல் மிகப் பயனுள்ள ஒரு நூலாகும். ஒரு சமூக சேவையாளனின் பங்கும் பணியும் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அவனுடைய வரலாறு பதிவு செய்யப்பட வேண்டியதும் மிக முக்கியமானதாகும். அது பல்வேறு தரப்பினருக்கும் மிகுந்த பயனுடையதாகும்.

பேராசிரியர் றமிஸ் அபூபக்கர்,
உபவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

---

சமூகப் பணி செய்வதற்கும் ஒரு மனம் வேண்டுமென்பார்கள். அந்த மனதை, சமூகம் முன்னேற வேண்டும் என்ற உணர்வை ரிஸ்மியிடம் நான் காண்கிறேன். ரிஸ்மியின் சமூக உணர்வு, சமூகப் பற்று, அதன் வெளிப்படுத்துகை என்பனவற்றைச் சமூகத்தின் கவனத்திற்கு எத்தி வைப்பதன் மூலம் சமூகப் பற்றாளர்கள் பலரை உருவாக்கும் நல்லதொரு முயற்சியைச் செய்திருக்கின்ற இக்பால் அலியும் பாராட்டப்பட வேண்டியவராகிறார். இக்பால் அலியின் இம்முயற்சி சமூக உணர்வு கொண்ட ரிஸ்மி போன்ற இன்னும் பலரை நிச்சயமாக உருவாக்கும் என நம்பலாம்.

ஏ.எம். நஹியா
முன்னாள் பணிப்பாளர் நாயகம் - புனர்வாழ்வு மற்றும்
முன்னாள் பணிப்பாளர் நாயகம் - மீனவர் வீடமைப்பு, மீனவர் நலன்.

---

சமூகத்தில் தனிமனிதன் எப்போது முக்கியத்துவம் பெறுகின்றான் என்றால் அவன் தன்னிலையில் சமூகத்திற்காக தன்னை ஒரு சேவையாளனாக கருதி அர்ப்பணிப்புடன் எவ்வித பிரதி பலன் பாராது செயற்படுகின்ற போது மட்டும்தான். அந்த தியாக மனப்பான்மை கொண்டிருக்கின்ற ஒருவராக சஹீட் எம். ரிஸ்மி விளங்குவதை, இந்நூலின் மூலம் தெளிவாக விளங்கலாம். இலங்கை கொவிட் 19 இல் தாக்கம் பெற்றிருந்த போது இவர் தன் சமூகத்திற்காக அளப்பறிய சேவைகளை ஆற்றியுள்ளார். கோட்டபாய அரசாங்கம் கோவிட் 19 இல் பாதிக்கப்பட்டு இறந்த ஜனாசாக்களை எரியூட்ட முற்பட்ட போது இவரின் பணிகள் போற்றத்தக்கது.

ரா. நித்தியானந்தன். M.Phil (பேராதனைப் பல்கலைக்கழகம்)
கவிஞர், விமர்சகர், ஆய்வாளர், முன்னாள் விரிவுரையாளர்,
உதவிப்பணிப்பாளர், கால்நடை அபிவிருத்தி அமைச்சு - கொழும்பு.

FAITH - UNITY - DISPLINE
ESTD - 1950

# All Ceylon YMMA Conference



## Deshabandu Saheed M Rismy
## National President – 2021-2022

நேர்காணல்களின் தொகுப்பு

# இளம் தலைமைத்துவ ஆளுமையும்

சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்

ஆசிரியர்: இக்பால் அலி

வெளியீடு:

FAITH - UNITY - DISCIPLINE
ESTD 1950

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை

| | | |
|---|---|---|
| **Title** | **:** | **ILAM THALAIMAITHUWA ALUMAIYM**<br>**(Saheed M. Rismiyudanana Nerkanalkalum)** |
| **Language** | **:** | **Tamil & English** |
| **Copy Right** | **:** | **Publisher** |
| **Book Size** | **:** | **185 x 245 mm** |
| **Paper** | **:** | **100 gsm** |
| **Binding** | **:** | **Hand Book** |
| **No of Pages** | **:** | **215** |
| **No of Copies** | **:** | **1000** |
| **Edition** | **:** | **First** |
| **ISBN** | **:** | **978-624-570-927-4** |
| **Publisher** | **:** | **All Ceylon Y.M.M.A Conference** |
| **Concept & Art work** | **:** | **Abu Raidh** |
| **Cover Design** | **:** | **Image Plus - Riswan** |
| **Printed by** | **:** | **Nethra Printers** |
| **Price** | **:** | **2000.00** |

# சமர்ப்பணம்



இந்நூல் வை.எம்.எம்.ஏ.
பேரவையின் ஸ்தாபகத்தலைவர்
கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ்
அவர்களுக்கு சமர்ப்பணம்.

# உள்ளடக்கம்


1. ஆசியுரை i

2. முன்னுரை –பயன்மிக்க ஆவணமும் சிறப்பான பணியும்! ii

3. அணிந்துரை v

4. மதிப்பீட்டுரை xi

5. வாழ்த்துரை xv

6. வாழ்த்துரை – சிந்தனைச் சிற்பி xvi

7. என்னுரை xviii

8. ரிஸ்மியின் சுயவிபரக்கோவை 01

9. ரிஸ்மியின் பிரவேசமும் மடவளை முஸ்லிம்களது பூர்வீக அடையாளங்களும் 06

10. சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் கடந்து வந்த பாதை 17

11. சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பது முஸ்லிம்களின் ஒற்றுமையே 33

12. அரசின் சட்ட திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டோம் 38

13. முன்னோர்களின் தியாகங்களைப் பின்பற்றி புதிய தலைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் 47

14. முஸ்லிம் தனியார் சட்டமும் சிவில் சமூக கூட்டமைப்புக்களுடைய நம்பிக்கையும் 55

15. வளங்கள் இல்லாதவிடத்தும் ஜனாஸா நல்லடக்கத்தில் ஓட்டமாவடி மக்கள் 66

16. மிகச் சிறந்த சேவை குடிநீர் வழங்குதல் 79

17. எதிர்கால தலைமைகளை உருவாக்கும் வை.எம்.எம்.ஏ.நிறுவனம் 83

18. வை.எம்.எம்.ஏ பேரவையின் 71 வது மாநாடும் வருடாந்த பொதுக் கூட்டமும் 90

19. பெண்களை வலுவூட்டும் செயற்பாடுகள். 98

20. சமூக விரோத செயல்களைத் கட்டுப்படுத்தும் பணி 103

21. கொரோனா தொற்றும் அகில இலங்கை வை. எம். எம். ஏ.
பேரவையின் தேசிய செயற்பாடும் 110

22. தேசிய பாதுகாப்புக்குப் பங்களிக்கும் சிவில் அமைப்புக்களில்
அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. முன்னிலையில் 119

23. விசேட தேவையுடைய பிள்ளைகளின் ஆளுமையை உயர்த்த உதவிக்கரம் நீட்டுவோம் 125

24. தியாகங்களின் பெருமையை இளம் தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும் 132

25. பிள்ளைகளுக்கு தேவையான நல்ல சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டியது
பெற்றோர்களின் பொறுப்பு 136

26. அழகிய சமூக வாழ்வுக்கான பணி 141

27. பாராட்டுக்களும் விருதுகளும் 147

பின்னிணைப்பு 149
பத்திரிகை அறிக்கைகள்

01. சிறைகளிலுள்ள முஸ்லிம் கைதிகளின் ரமழான் நலன்களை கவனிக்குமாறு மகஜர்

02. முஸ்லிம் சிறைக்கைதிகள் குறித்த வை.எம்.எம்.ஏயின் மகஜருக்கு உரிய பலன்

03. இனங்களுக்கிடையில் ஐக்கியம் தலைத்தோங்க அடித்தளமாகட்டும்

04. தடுப்பூசிகள் போடக் கூடாதென்ற தவறான சிந்தனைகளை புறந்தள்ளி அனைவரும் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும்

05. குறிஞ்சாக்கேணி படகு விபத்துசமூகத்தின் நன்மதிப்பை பாதுகாப்பதாக இளைஞர்களின் செயற்பாடு அமைய வேண்டும்

06. சூழ்நிலைகேற்ப நிதானம் பொறுமை மிக அவசியம் முஸ்லிம் மக்களிடம் YMMA பேரவை கோரிக்கை

07. நிதானமாகவும் பொறுமையுடனும் பெருநாளைக் கொண்டாடுவோம்!

08. சமூக,சமயம் பாராது விசேட தேவை உடையோருக்கு சக்கர நாற்காலிகள்

09. முஸ்லிம் விவாகரத்து சட்ட சிபாரிசுகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்

10. அனைத்து முஸ்லிம் தேசிய அமைப்புகளும் ஒன்றிணைந்து எதிர்காலத் திட்டம் தொடர்பில் தீர்மானிக்க வேண்டும்

11. முஸ்லிம் தனியர் சட்ட விவகாரம் இணக்கப்பாடுகள் ஏற்படும் வரை சட்டத்திற்கு அங்கீகரமளிக்காதீர்கள் பாரளுமன்ற உறுப்பினர்களுக்கு வை.எம்.எம்.ஏ கடிதம்

12. உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட நிறுவனங்களே மக்களுக்கு சேவை வழங்குகின்றன – சஹீட் எம். ரிஸ்மி

13. எட்டு மாதங்கினுள் ஹஜ் சட்டம் நிறைவேறும்

14. ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும்

15. கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு YMMA கடும் எதிப்பு

16. அஸ்வர் மறைவுக்கு வை.எம்.எம்.ஏ. பேரவை அனுதாபம்

17. முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கு நோன்பு கால உதவிகள் கொழும்பு சிறைச்சாலைக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

18. சிறைக் கைதிகள், அதிகாரிகளுக்கு இஸ்லாமிய பாரம்பரிய உணவு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையால் வழங்கி வைப்பு

19. இன, மத, மொழி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுவோம்

20. பிள்ளைகளுடன் பெற்றோர் நட்புறவோடு இருத்தல் மிக அவசியமானதொன்றாகும்

21. அரசியல் தீர்வு விடயத்தில் அரசியல்வாதிகள் போன்று சிவில் அமைப்புக்களுக்கும் பொறுப்புண்டு வை.எம்.எம்.ஏ. பொதுச் செயலாளர்

பின்னிணைப்பு – 2 175

சஹீட் எம். ரிஸ்மியின் உள்ளம் கவர்ந்த துறை சார்ந்த இளம் தலைமைத்துவங்கள் 176

01. பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

02. பேராசிரியர் பீ.எம். ஜமாஹிர்

03. பன்முக ஆளுமை கொண்ட ஊடகவியலாளர் இர்பான் இக்பால்

04. கலாநிதி M.Z.M. நபீல்

05. கலாநிதி ஷாமிலா தாவூத்

06. பேராசிரியர் எம். ஐ. சபீனா இம்தியாஸ்

07. பேராசிரியர் எம்.எஸ்.எம். அஸ்லம்

08. சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.ஏ.எம். நவாஸ்

09. பட்டயக்கணக்காளர் ரிபாஸ் ஜப்பார்

10. இளம் வயதிலேயே ஊடகத்துறையில் உயரம் தொட்ட அஸாம் அமீன்

11. வளவாளர் பாசிர் மொஹிடீன்

# ஆசியுரை



சமூகப் பணி, தன்னார்வத் தொண்டு சேவையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் வகிபாகம் சொற்களிலோ அல்லது கட்டுரைகளிலோ அடக்க கூடியதல்ல. சமூகத் தொண்டை பேரவை செழிப்புறச் செய்துள்ளது. அந் நிறுவனம் தனது சேவையில் தனித்துப் பயணிக்காமல் ஏனைய சமூக, அரச அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளதோடு பெரும் செல்வாக்குச் செலுத்தியமைக்கு அதன் தலைமைத்துவப் பண்புகளே காரணாகும். அது குறித்து அநேக அமைப்புக்கள் பேரவையை மனம் திறந்து பாராட்டுகின்றன.

அகில இலங்கை வை. எம். எம்.ஏ.பேரவை ஒரு மத சார்ந்த அமைப்பாக இருந்த போதும் ஏனைய மதத்தவர்களுக்கும் பொதுவான மனிதாபிமான உதவிகளை செய்துள்ளதோடு செய்தும் வருகின்றது. சமூக பணியில் பகைமை உணர்வும் துளியளவும் தென்படாத அமைப்பாக காணப்படுவதோடு. புரிந்துணர்வே முதன்மையாக காணப்பட்டுகிறது. மனித வாழ்வை மேம்படுத்துவதோடு சமூக பணியில் அதன் ஈடுபாடு வெள்ளிடை மலையாகும். அகில இலங்கை வை. எம். எம்.ஏ.பேரவையின் சமூக பணியின் தாற்பரியங்களை இலக்கியத் துறையில் நீண்ட கால ஈடுபாட்டைக் கொண்டவரும் எமது ஊடகவியலாளருமான கவிஞர் இக்பால் அலி எமது தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிய நேர்காணல் கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் வெளிவருகிறது.

சமூக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மனிதனின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு சமூக மாற்றத்திற்காகவும் செயற்பட்டு வருவதோடு இந்நாட்டுக்கு பாரிய பணிகள் செய்து வருவது தொடர்பில் ஆழ்ந்து ஆய்வுக்குட்படுத்தி போதிய விளக்கங்கள் முன்வைக்கப்பட வில்லை. அவை வெளிப்படுத்தும் மாற்றங்கள் சரியான முறையில் தெளிவுபடுத்தப்படவில்லை என்பது எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலியின் ஆதங்கமும் இலட்சியமும் ஆகும். அவரின் இலட்சியம் மற்றும் ஆதங்கத்தின் வெளிப்பாடாக பேனாவின் துணையோடு அகில இலங்கை எம். எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மியின் செயற்பாட்டின் ஊடாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

இந்நேர்காணல் கட்டுரைகளில் வை. எம். எம். ஏ. பேரவை அமைப்பின் மூலம் கொரோனா தொற்றுக் காலத்தில் மேற்கொண்ட மனிதாபிமான உதவிகள், விழிப்புணர்வூட்டுதல்கள், முஸ்லிம்களின்

சமூகம் சார்ந்த உரிமை பிரச்சினைகள், போதை ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கைகள், இக்கட்டான கால கட்டத்தில் இரத்ததானம் வழங்குதல், அரசியல் விழிப்புணர்வூட்டுதல் உள்ளிட்ட பல்வேறுப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எமது பத்திரிகையில் தெளிவான விளக்கங்களுடன் சொற் செறிவும் சரளமான மொழி நடையில் நேர்காணல் கட்டுரைகளை அகில இலங்கை வை. எம்.எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மியிடம் பெற்று எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளே நூலுருவாக்கம் பெற்றுள்ளது.

இக் கட்டுரைகள் வாயிலாக இவ்வமைப்பினால் நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் ஆற்றுகின்ற பங்களிப்புக்களையும் பயன்பாடுகளையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. இவ்வமைப்பின் ஆரம்ப ஸ்தாபகர் கலாநிதி ஏ.எம். ஏ. அஸீஸ் முதல் தற்போதைய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி வரை வழிகாட்டலுடன் பல பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் வாழ்க்கை முறைகளையும், சட்டதிட்டங்களையும், பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்ளவும், புதிய தலைமைத் துவத்தை உருவாக்குதல் தொடர்பில் தற்போதைய தலைவர் சஹீட் எம். ரிஸ்மியிடம் கற்றுக் கொள்ள வேண்டிய நிறைய பண்புகளையும், சிறப்புக்களையும் இந்த நேர்காணல் கட்டுரைகள் சுட்டிக்காட்டுகின்றன.

எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி இன, மதம்,மொழி மற்றும் பிரதேச வேறுபாடுகளை கடந்து ஊடகப்பணியாற்றுபவர். சஹீட் எம். ரிஸ்மியின் வாழ்வியல் வரலாற்றோடு இணைந்ததாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தினகரனில் வெளிவந்த நேர்காணல் கட்டுரைகளைத் தொகுத்து அழகுற நூல் வடிவில் வெளியிட தினகரன் அனுசரணை வழங்குவதில் நான் பெருமை கொள்வதோடு இதில் நானும் பங்காளரானதை இட்டு அகமகிழ்கின்றேன். இக்பால் அலியின் இம்முயற்சிகளுக்கு தினகரன் நன்றி பாராட்டக்கடமைப்பட்டுள்ளது.

ரீ. செந்தில் வேலவர்,

பிரதம ஆசிரியர்,

தினகரன்.

# முன்னுரை



**பயன்மிக்க ஆவணமும் சிறப்பான பணியும்!**

நமது வரலாற்றில் ஆவணப்படுத்துதல் மிக முக்கியமான அம்சமாகும். சில வேளைகளில் முக்கிய தலைவர்களின் உரைகள் காற்றோடு கலந்து சென்றுவிடும். பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளும் செய்திகளும் சரியான தொகுப்பின்றி நம்மிடத்தே மறைந்துவிடும். சரியான ஆவணங்கள், தொகுப்புக்களின்றி நாம் வரலாற்றைத் தொலைத்த சமூகமாகவே பார்க்கப்படுகிறோம். இந்தக் கட்டத்தில் இக்பால் அலியின் முயற்சியை நாம் பல வழிகளில் பாராட்ட வேண்டும்.

இக்பால் அலி இளம் வயதிலிருந்தே ஊடகத்துறையில் நாட்டமுள்ளவர். கலை இலக்கிய முயற்சியில் ஈடுபாடுள்ளவர். பல்வேறு அமைப்புக்களினூடாக இலக்கியப் பணியும் சமூகப் பணியும் செய்து வருபவர். இவர் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குறிப்பாக எனது ஊரான சாய்ந்தமருதைச் சேர்ந்தவர். ஆனால், மலையகத்திலே தன்னுடைய வாழ்வை அமைத்துக் கொண்டவர். இன்று ஊடகத்துறையிலும் கலை இலக்கியத்துறையிலும் தேசிய ரீதியாக நன்கு அறியப்பட்ட ஒருவர்.

இவர், தான் வாழ்கின்ற மலையக பிரதேசத்தைச் சேர்ந்த பல்வேறு ஆளுமைகள் கொண்ட சஹீட் எம். ரிஸ்மியின் 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் - சஹீட் எம். ரிஸ்மியின் நேர்காணலும்' கட்டுரைகளின் ஆவணமொன்றை தொகுத்திருக்கின்றார். இத்தலைப்பிலே இந்நூல் அமைந்தாலும் சமகாலத்தில் ஈழத்து முஸ்லிம்கள் எதிர்கொண்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளின் தொகுப்பாக அமைந்த ஓர் ஆவணமாகவும் இதனைப் பார்க்க முடியும். அதே போன்று இக்காலகட்டத்தில் பிரசித்தி பெற்ற இளம் தலைமைத்துவத்தைச் சேர்ந்த சிலரின் குறிப்புக்களும் இத்தொகுதியில் அமைந்து இந்நூலை அழகுபடுத்தியிருக்கிறது. ரிஸ்மியினுடைய நேர்காணல்கள் இத்தொகுப்பாசிரியராலே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரம் குறிப்பிடத்தக்க கட்டுரைகளை இந்நூலாசிரியரே எழுதியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இந்நூலின் முதல் கட்டுரையான 'மடவளை முஸ்லிம்களின் பூர்வீக அடையாளம்' பற்றிய குறிப்பு மிக முக்கியமானதாகும். முஸ்லிம்களின் ஒற்றுமை, அரசின் சட்டதிட்டங்களுக்கு இடைஞ்சல் இல்லாதிருப்பது,

முன்னோர்களின் தியாகங்களும் புதிய தலைமுறைகளும், ரிஸ்மி கடந்து வந்த பாதை, முஸ்லிம் தனியார் சட்டம், ஓட்டமாவடியில் ஜனாஸா நல்லடக்கம், குடிநீர் வழங்கல் முதலான விடயங்கள் தொடர்பான பேட்டிகளும் குறிப்புக்களும் இலங்கையில் சமகாலத்தில் முஸ்லிம்கள் அனுபவித்து வந்த பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறுகின்றன.

ரிஸ்மி அவர்கள் தலைமை வகிக்கின்ற வை.எம்.எம்.ஏ பேரவை தொடர்பான பல்வேறு பேட்டிகளும் குறிப்புக்களும் இத்தொகுப்பில் உள. ஒரு சமூக இயக்கம் எவ்வாறெல்லாம் பணியாற்றலாம் என்பதற்கு இக்கட்டுரைகள் முன்னுதாரணமாக அமைகின்றன. அதன் வருடாந்த நிகழ்வுகள், எதிர்கால தலைமைகளை உருவாக்கும் செயற்பாடு, பெண்களை வலுவூட்டும் பணி, சமூக விரோத செயல்கள் பற்றிய கருத்துக்கள், கொரோனா தொற்றுக்கெதிரான நடவடிக்கைகள், விசேட தேவையுடைய பிள்ளைகள் மீதான கரிசனை, பிள்ளைகள் மீதான பெற்றோர்களின் கரிசனை முதலான விடயங்கள் தொடர்பாக ரிஸ்மியின பேட்டிகள் மிகுந்த பயனுடையதாக அமைகின்றன.

இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள ரிஸ்மியின் சுயவிபரக் கோவை கூட இளம் தலைமுறையினருக்கு படிப்பினையாக அமையக் கூடியன. சமூகப்பணி புரிகின்ற ஒருவர் தன்னை ஆற்றலுள்ள ஒருவராக மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இதிலிருந்து தெரிகின்றது. மொத்தத்தில் இந்நூல் மிகப் பயனுள்ள ஒரு பணியாகும். ஒரு சமூக சேவையாளனின் பங்கும் பணியும் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அவனுடைய வரலாறு பதிவு செய்யப்பட வேண்டியதும் மிக முக்கியமானதாகும். அது பல்வேறு தரப்பினருக்கும் மிகுந்த பயனுடையதாகும். இந்த பயன்மிக்க பணியினை நிறைவேற்றிய இக்பால் அலி அவர்களுக்கு என்றும் நமது பாராட்டுக்கள் உண்டு. இதுபோன்ற பணிகளை இன்னும் அவர் நிறைவேற்ற வேண்டுமென்று ஆசிக்கின்றோம்.

பேராசிரியர் றமிஸ் அபூபக்கர்,
உபவேந்தர்,
பல் கலைக்கழகப் பூங்கா,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அணிந்துரை



அகில இலங்கை முஸ்லிம் வாலிப சங்கப் பேரவையின் 54 வது தேசிய தலைவர் எம்.எஸ்.எம். ரிஸ்மி பற்றி இக்பால் அலி ஆக்கியுள்ள "இளம் தலைமைத்துவ ஆளுமையும் - சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்" என்ற மகுடம் தரித்து வெளிவரும் இந்நூல் வரலாற்றுக் கண் கொண்டு பார்ப்பவர்களுக்கு மிகுந்த பிரயோசனமுடையது. மத்திய மாகாண பாததும்பர பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள மடவளையில் பிறந்தவர் ரிஸ்மி. டச்சுக்காரர் கால சமயமாற்றப் பேரலையிலிருந்து தம்மையும் தம் உடன்பிறப்புக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு திருகோணமலையிலிருந்து வெளியேறி கலாவெவ ஊடாக பொலன்னறு வைக்கு இடம்பெயர்ந்து, அதன் பின்னர், கண்டியை அடைந்து மடவளையில் குடியமர்ந்தவர்களே ரிஸ்மியின் மூதாதையர்களான மடவளை முஸ்லிம்கள். அவர்களின் குடியமர்வு 1638 - 1680 இற்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தது. 2 ஆம் இராஜசிங்கன் கண்டியை ஆட்சி செய்த காலம் (1635 - 1687) அது.

அதற்கு முன்னர் நிகழ்ந்த இன்னுமொரு வரலாற்று நிகழ்வொன்றையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது. போர்த்துக்கல் மன்னன் நான்காம் பிலிப்பின் கட்டளைப் பிரகாரம் போர்துக்கேயர் 1626 இல் தம் ஆளுகைப் பிரதேசத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையும் வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் "கொஸ்கொட" கிராமத்தில் வாழ்ந்த ஏறக்குறைய 4000 முஸ்லிம் குடும்பங்கள் இவ்வாறு வெளியேற்றப்பட்டன. அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் அப்போதைய கண்டி மன்னன் செனரத்தின் உதவியைக் கோர, அவன் இடம்பெயர்ந்து கண்டி இராச்சியத்தில் தஞ்சம் கோரிய அம் முஸ்லிம்களை இலங்கையின் கிழக்குக் கரையில் தன் ஆளுகைக்குட்பட்டிருந்த, தன்னுடைய கோடைக்கால வாசஸ்தலம் அமைந்திருந்த 'நிந்தகம' (நிந்தவூர்) இலும் கல்முனைப் பிரதேசத்திலும் குடியமர்த்தினான் என்பதும் வரலாறு. அவ்வாறு நிந்தவூரில் குடியமர்த்தப்பட்டவர்களின் பரம்பரையில் வந்தவன் என்ற வகையில் எனது பரம்பரை போல் மடவளைப் பிரதேசத்தில் குடியமர்ந்தவர்களின் வழிவந்த ரிஸ்மி பற்றிய இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மடவளை மதீனா பாடசாலையிலும் பின்னர் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியிலும் கற்றவர் ரிஸ்மி. உள்ளூராட்சி மன்ற ஆளுகை நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். மடவளை வை.எம்.எம்.ஏ. யினூடாக தம் சமூகப் பணியை ஆரம்பித்த இவர் காலப்போக்கில், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மாவட்டப் பணிப்பாளராக, தேசிய பொதுச் செயலாளராக, தேசிய உப தலைவராக வெல்லாம் பணி செய்து அதன் 54 ஆவது தேசியத் தலைவராக இப்போது பணி செய்கிறார். நாடளாவிய ரீதியில் 150 இற்கும் மேற்பட்ட கிளைகளை வை.எம்.எம்.ஏ. தேசிய பேரவை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் கண்டியில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலத்தில் கண்டி முஸ்லிம் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் அதன் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1915 இலிருந்து இயங்கி வந்த இக்கண்டி முஸ்லிம் சங்கம் 30 வருடங்களின் பின் 29.07.1944 இல் தன் பெயரை கண்டி வை.எம்.எம்.ஏ. என மாற்றிக் கொண்டதுடன் எகிப்திய காஹிறா வை.எம்.எம்.ஏ. யின் குறிக்கோள்களையும் தன்னுடைய குறிக்கோள்களாக ஏற்றுக் கொண்டது. ரிஸ்மியின் ஊரான மடவளையிலும் வை.எம்.எம்.ஏ. இயக்கம் 04-11-1944 இல் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்கமே மக்கா, மதீனா முதலான சவூதி அரேபியா நகரங்கள் பஞ்சத்தில் சிக்கித் தவித்த போது, பஞ்ச நிவாரண நிதி சேகரித்து அம்மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியது. அந்த அளவுக்கு தாராள மனம் கொண்ட சமூகப் பற்றாளர்கள் நிறைந்து வாழும் ஊர் மடவளை ஊர்.

அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் தலைமையில் 02-04-1950 இல் நிகழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் இளைஞர் இயக்கங்கள் அனைத்தையும் ஒரு மத்திய அமைப்பின் கீழ் ஒன்றிணைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது, அதற்கான அங்குராப்பண வைபவம் 30-04-1950 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் நிகழ்ந்த போது 17 வை.எம்.எம்.ஏ. க்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய 67 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் தான் ‘அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை’ தோற்றம் பெற்றது. ரிஸ்மியின் கிராமமான மடவளை ஊரில் இயங்கிக் கொண்டிருந்த வை.எம்.எம்.ஏ. யின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் முதலாவது தலைவராக எ.எம்.எ. அஸீஸ் தெரிவானார். 1950/51, 1951/52, 1952/53 களில் அதன் தலைவராகவும் மரண பரியந்தயம் அதன் காப்பளராகவும் பணி செய்து முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டியாக, இளைஞர் தலைமைத்துவத்தின் செயற்பாட்டு வடிவமைப்பாளராக அஸீஸ் விளங்கினார். 1956 பெப்ரவரியில் கொழும்பு, தெமட்டகொட வீதியில், அதன் தலைமைக் காரியாலயம் அமையும் வரை அஸீஸின் பாண்ஸ் பிளேஸ் இல்லமே வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமைக் காரியாலயமாக விளங்கியது.

நம்பிக்கை, ஒற்றுமை, கட்டுப்பாடு என்பன இவ்வியக்கத்தின் தாரக மந்திரம் என்பதை அறியும் எவரும் ரிஸ்மி எதை நாடிச் செயற்பட்டார் என்பதைப் புரிந்து கொள்வர்.

“கிறிஸ்தவ மாணவர் இயக்கத்திற்கு நிகரான முஸ்லிம் மாணவர் இயக்கம் இலங்கை முஸ்லிம்களிடை உருப் பெற்றுள்ளதா?” என்றும் அஸீஸ் 1969 இல் ‘தினகரன் வாரமஞ்சரி’யில் எழுதியது “ஐரோப்பிய நினைவுகள்” தொடர் கட்டுரையில் கேள்வி எழுப்பியிருந்தார். இக்கேள்வி முஸ்லிம் மாணவ சமூகத்தினரை அதன்பால் சிந்திக்கத் தூண்டியது. அஸீஸின் இத்தூண்டுகைகள் உருவாக்கிய சமூகச் செயற்பாட்டாளர் களில் முக்கியமான ஒருவராக ரிஸ்மியை நான் பார்க்கிறேன்.

முஸ்லிம் விவாகரத்துச் சட்டம் சம்பந்தமாக முஸ்லிம்களிடையே காணப்பட்ட பிளவுபட்ட கருத்துக்களை அடையாளம் கண்ட வை.எம்.எம்.ஏ. பேரவை உயர் நீதிமன்ற நீதிபதி சலீம் மர்சூப், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா முதலானோரின் தலைமையில் இயங்கிய குழுக்களிடையே உடன்பாடு காணும் முயற்சியில் ஈடுபட்டமையும், இவ்விடயமாக 10-09-2018 இல் மொன்டரினா ஹோட்டலில் நிகழ்ந்த கூட்டமொன்றை வை.எம்.எம்.ஏ. பேரவை ஏற்பாடு செய்திருந்தமையும் கவனத்திற்குரியது. சட்டத்தரணி ஜாவிட் யூசுப் நெறிப்படுத்திய மேற்படி கூட்டத்தில் அமைச்சர் அலி சப்ரி முக்கிய உரை நிகழ்த்தினார். வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைவர் கே. டீன் தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் ரிஸ்மியின் பங்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக அமைந்திருந்தது. ‘வக்ப்’ சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக அஸீஸ் தலைமையிலான வை.எம்.எம்.ஏ. தூதுக் குழு அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஏ.பி. ஜயசூரியாவை அவரின் அமைச்சில் சந்தித்ததுக் கலந்துரையாடியமை போன்ற நிகழ்வுகளும் இச்சந்தர்ப்பத்தில் எம் கவனத்தை ஈர்க்கின்றன.

கொரோனாவினால் உயிர் நீத்த முஸ்லிம்களின் நல்லடக்க விடயத்தில் ரிஸ்மி தலைமையில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் உயர்பீட அங்கத்தவர்களின் கரிசனையும் கவனத்திற்குரியது. கொரோனாவினால் மரணமடைந்தவர்களை ஓட்டமாவடி ‘மஜ்மா நகர்’ மையவாடியில் நல்லடக்கம் செய்ய ஒத்துக் கொண்டமைக்காக ரிஸ்மியின் வை.எம்.எம்.ஏ. பேரவை ஓட்டமாவடி பிரதேச சபைக்கு விருது வழங்கி கௌரவித்தது.

“இப்பிரதேச மக்களும் ஓட்டமாவடிப் பிரதேச சபையும் கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் விவகாரத்தில் பாரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்துள்ளார்கள். இம்மக்கள் உடல்களைத் தூக்கித் தூக்கி அடக்கம் செய்தது மட்டுமல்ல அந்த மையித்துக்களுடன் வரும் அத்தனை பேருக்கும் உணவு, தங்குமிட வசதி வழங்கி உன்னத மனிதர்களாக

இப்பிரதேச மக்கள் வரலாறு படைத்துள்ளனர்” என்று ரிஸ்மி பதிவிட்டிருப்பது கவனத்திற்குரியது.

“இத்தகைய சேவைப் பணியால் நிலைகுலைந்து அல்லலுற்றுக் கொண்டிருக்கும் ஓட்டமாவடி பிரதேச மக்களின் நலனில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் கரிசனை கொள்ள வேண்டியிருக்கிறது”
என்ற ரிஸ்மியின் மனிதாபிமானக் கருத்தும் இந்நூலில் பதிவாகி இருக்கிறது.

“கடந்த 70 வருடங்களாக எங்களோடு கைகோர்த்து எங்களுக்கு அனுசரணை வழங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையை நாங்கள் கௌரவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்”
என்ற ரிஸ்மியின் குரலில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் தாபகத் தலைவர் அஸீஸின் குரலும் இணைந்து தொனிப்பதை முஸ்லிம் சேவையின் வரலாறு தெரிந்தோர் நன்கறிவர். எஸ்.எம்.எச். மசூர், எம்.கே.எம். அபூபக்கர், ஏ.எச்.எம். பாறூக் ஆகியோர் உள்ளடக்கிய அஸீஸின் தலைமையானது இலங்கை வானொலி விசாரணைக் குழு முன் 1953 இல் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தமை போன்ற இலங்கை வானொலியில் முஸ்லிம் சேவையின் தொடக்கத்தை உந்திய பல நிகழ்வுகள் எம் நினைவை வருடிச் செல்கின்றன.

“ஓர் இனத்தின் கலாசார அடையாளங்களை மற்றைய இனத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் ஓர் இனம் மற்றைய இனத்தின் மீது மதிப்பளிக்கும் நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சிகளையே நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம். இலங்கையில் மீலாத் தினம் தேசிய மீலாத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட காலம் முதல் இன்று வரை தேசிய மீலாத் கொண்டாட்டங்களைச் செய்து வருகின்றோம். சர்வமதத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். எமது சமய, கலாசார அடையாளங்களை மற்றைய இனத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்த நிகழ்வின் மூலம் எனைய சமயத்தவர்கள் கௌரவிக்கவும் மதிக்கவும் படுகின்றனர். நாம் எமது சமய விடயங்களைப் பின்பற்றுவதோடு ஏனைய மதங்களைப் பற்றி அறிந்திருத்தலும் அவசியம்”
என்று தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் ரிஸ்மி கூறியிருப்பது அவரின் சமய, சமரச சிந்தனைக்குக் கட்டியம் கூறுமாற் போல் அமைந்திருக்கிறது. ரிஸ்மியின் இக்கூற்றை வாசிக்கும்போது கல்முனை நகரில் 25-06-1934 இல் நிகழ்ந்த மீலாத் விழாவில் ஸ்மித் பாதிரியார் நிகழ்த்திய மீலாத் உரையும், இலங்கைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் 23-02-1945 இல் எஸ்.எல்.எம். ஷாபி மரைக்கார் தலைமையில் நடாத்திய மீலாத் விழாவில் டாக்டர் ஐவர் ஜெனிங்ஸ். சுவாமி விபுலாநந்தர், பேராசிரியர் எச்.ஸீ. ராய் ஆகியோர் நிகழ்த்திய பேருரைகளும் எம் நினைவுக்கு வருகின்றன.

முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென புலமைப் பரிசில் திட்டமொன்றை அப்போதைய வை.எம்.எம்.ஏ. பேரவைத் தலைவர், என்னுடைய சாஹிராக் கல்லூரி மாணவன், பலஸ்தீனத்தில் இலங்கைத் தூதுவராக இருந்த பௌசான் அன்வர் 2000 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் இத்திட்டத்தினால் பயன் பெற்றனர். இத்திட்டம் பின்னால் விரிவாக்கம் பெற்று 300 மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுமளவுக்கு வளர்ச்சி கண்டது. இந்த விரிவாக்கத்தில் ரிஸ்மியின் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவமுடையது. அஸீஸ் தாபித்த இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியின் தர்மகர்த்தாக்களில் ஒருவர், எ.எம்.எ. அஸீஸ் பவுண்டேசனின் ஒரு கால் செயலாளராகவும், பின்னர் இன்று வரை நிர்வாக சபை அங்கத்தவராகவும் இருப்பவன் என்ற வகையில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் இம்முயற்சியியைப் பாராட்டுகிறேன்.

மடவளையில் வட்டி ஒழிப்பின் அடையாளமாக அமைந்துள்ள ‘அந்நூர் இஸ்லாமிய நிதியம்’ வங்கி அமைப்பாக உருமாறிய நிகழ்வும் ரிஸ்மியுடன் சம்பந்தப்படுகிறது. அவ்வமைப்பின் ஆலோசகராகவும், பணிப்பாளர் சபை உறுப்பிராகவும் ரிஸ்மி இருபது வருடங்களாகச் செயற்படுவதையும் இந்நூல் எமக்கெல்லாம் அறியத் தருகிறது.

கண்டி நகரிலும், கொழும்பு தெற்கிலும் முஸ்லிம் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பலரால் உணரப்பட்ட போதும் அதில் காணப்பட்ட செயற்பாட்டுச் சிக்கல்கள் அதன் நடைமுறையைச் சாத்தியமற்றதாக்கிற்று. அஷ்ரஃப் அமைச்சராக இருந்தபோது, பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சட்டத்தரணி சுஹைர் அவர்களையும் அமைச்சின் பணிப்பாளராக இருந்த என்னையும் இம்முயற்சியில் அமைச்சர் அஷ்ரஃப் ஈடுபடுத்தினார். வெற்றி பெறாத அம்முயற்சியின் தடைக்கல்லாக அமைந்த ஒரு முஸ்லிம் அமைச்சர் பற்றி இங்கு குறிப்பிட்டுச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆயினும்,

“கண்டியில் ஆண் பாடசாலையின் தேவை குறித்து நீண்டகாலமாக வலியுறுத்தப்படும் நிலையில் கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட கட்டுகஸ்தொட்டை நகரில் அமைந்துள்ள சாஹிரா ஆண்கள் பாடசாலை அதற்குத் தீர்வாக எழுச்சி பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது”

என்ற ரிஸ்மியின் கூற்று எமக்கு சற்று ஆறுதல் அளிக்கிறது. ஆயினும், சமூகத்தின் இத்தேவை இன்னும் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகவே தொடர்வது சமூகம் அறிந்திருக்க வேண்டிய தொன்றாகும்.

அந்த வகையில் வெளிப்படுத்திச் சொல்லக் கூடிய பல சமூக பங்களிப்புக்களின் பங்குதாரராக ரிஸ்மியை நான் காண்கிறேன். சமூகப் பணி செய்வதற்கும் ஒரு மனம் வேண்டுமென்பார்கள். அந்த மனதைத்,

சமூகம் முன்னேற வேண்டும் என்ற உணர்வை ரிஸ்மியிடம் நான் காண்கிறேன். ரிஸ்மியின் சமூக உணர்வு, சமூகப் பற்று, அதன் வெளிப்படுத்துகை என்பனவற்றைச் சமூகத்தின் கவனத்திற்கு எத்தி வைப்பதன் மூலம் சமூகப் பற்றாளர்கள் பலரை உருவாக்கும் நல்லதொரு முயற்சியைச் செய்திருக்கின்ற இக்பால் அலியும் பாராட்டப்பட வேண்டியவராகிறார். இக்பால் அலியின் இம்முயற்சி சமூக உணர்வு கொண்ட ரிஸ்மி போன்ற இன்னும் பலரை நிச்சயமாக உருவாக்கும் என நம்பலாம்.

இந்நூலாசிரியர் இக்பால் அலி, 'முற்றத்துக்கு வாருங்கள்', 'புள்ளிகள் சில புள்ளிகள்' என்ற கவிதை நூல்களை ஆக்கியவர். 'நான் மூன்ற சக்கரக்காரன்', 'அன்பு பெருக' என்ற இரு பாடல் நூல்களையும், 'நல்லதொரு பயணம்' என்ற சிறுவர் கதை நூலையும் இன்று 'முஸ்லிம்களின் வரலாற்றில், கலாநிதி கே.எம்.எச். காலிதீன்' என்ற நூலையும் 'நயனம்' கலை இலக்கிய சஞ்சிகையையும் வெளிக் கொணர்ந்தவர். பிரபல இலத்திரனியல் ஊடகங்களினதும், தேசியப் பத்திரிகைகளினதும் பிராந்திய செய்தியாளராகச் செயற்படும் இவர் கடந்த 30 வருடங்களாக இலக்கியப்பணி செய்து வருகிறார் என்பதும் பதிவிடற்குரியது. தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவியொருவர் இவரின் கவிதை பற்றிய ஆய்வில் ஈடுபடுவதும் குறித்துச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவமுடையது. அந்த வகையில் இந்நூல் ஆசிரியர் இக்பால் அலி உயர்வாகப் பேசும் ரிஸ்மி சமூகத்தின் கவனத்திற் குரியவராகின்றார். அவரின் சேவைகளும் சமூகக் கணிப்பில் உயர்வாகத் தெரிகின்றன.

ஏ.எம். நஹியா
முன்னாள் பணிப்பாளர் நாயகம் - புனர்வாழ்வு மற்றும்
முன்னாள் பணிப்பாளர் நாயகம் - மீனவர் வீடமைப்பு, மீனவர் நலன்.

# மதிப்பீட்டுரை



### இளைய சமுதாயத்தின் ஆளுமை வெற்றிக்கான பணியும் பங்களிப்பும்

கடந்த இரு தசாப்தத்திற்கு மேலாக கவிதை, கட்டுரை, நேர்காணல் என்பவற்றினை எழுத்தாக்கம் செய்துவருபவர் பத்திரிகையாளர் மற்றும் கவிஞர் இக்பால் அலி. இவர் பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர். பத்திரிகை என்ற பொதுவெளியில் கலந்துரையாடல், சந்திப்புகள், நேர்காணல், விவரணமாக்கல், பதிவுகள் என்ற பன்முக தன்மையில் தன்னை உட்படுத்திக் கொண்ட நல்ல எழுத்தாளர்களில் ஒருவராக விளங்குகின்றார் பத்திரிகையாளன் என்ற நடை உடை பாவனை எதுவுமற்ற ஒரு எளிய கலைஞன். ஒரு பத்திரிகையாளனாக தமிழ் தேசிய பத்திரிகைகளிலும் வெளிநாட்டுத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட சிறப்பித்து பேசக்கூடியவர்களுள் ஒருவர் .

இலங்கை மற்றும் கனடா போன்ற நாடுகளில் புதிதாக வெளிவருகின்ற நூல்கள் கருத்துரைகள், விமர்சனம், ஆய்வுரை என்று பலவேறுபட்ட பதிவுகளில் மூலம் தேசிய மட்டத்தில் மற்றும் உலகளாவிய ரீதியில் தமிழ் நூலாய்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் தனக்கென ஒரு நிலையை இவர் நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

இக்பாலின் தனித்துவமான சிறப்பம்சம் என்னவென்றால் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறுக சிறுக எழுதி தனது எழுத்தாற்றலை தனக்குள்ளே வளர்த்து இன்று பிரபல்யமான பத்திரிகையாளராக இலங்கையின் பெரும் பத்திரிகையாளர்களுடன் இணையாக நின்று பேசக்கூடியவராக திகழ்வது.

வாழ்க்கை என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. வேறுபட்ட மனமும் சிந்தனையும் போலத்தான் எழுத்தாளர்கள் வேறுபட்டவர்களாக காணப்படுகின்றனர். இக்பால் அலியும் அந்த வகையில் மற்ற எழுத்தாளர்களைவிட வேறுபட்ட பண்பினை நிலைப்பாட்டை கொண்டவர். இன்று பத்திரிகையாளராக பறைசாற்றிக் கொள்பவர்கள் பெரும்பாலும் செய்தியாளராக ஒரு வட்டத்துக்குள் நின்று மட்டும் எழுதுகின்றனர். ஆனால் இக்பால் அலி அப்படியல்ல,

ரூபவாஹினி, ஐ.ரீ.என் போன்ற தேசிய தொலைகாட்சிகளுக்கான செய்தியாளராக இருப்பதுடன், கவிஞராக, கட்டுரையாளராக, பக்தி எழுத்தாளராக மற்றும் நேர்முகவியலாளராக இவரை சிறப்பாக கண்டு கொள்ளலாம்.

சமகால கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுநல விரும்பிகள், அரசியல்வாதி என்போரை சரியாக இனம் கண்டு அவர்களை நாடிச் சென்று அவர்களுடைய தகவல்களை திரட்டி நேர்காணல்களாகவும், கட்டுரைகளாகவும், கருத்துரைப்பவராகவும், ஆய்வாளராகவும் படைப்பாளர்களின் திறமையினை வெளிக்கொணரும் சிறந்த பண்பு கூறாக இவரின் எழுத்தாக்கமுள்ளது.

ஒரு எழுத்தாளன் தான் ஒரு படைப்பாளனாக இருப்பது மட்டுமல்லாது மற்ற எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களின் படைப்புகளின் சிறப்பினை எழுத்தாளுமைகளை வெளிப்படுத்தி அவர்களை பாராட்டுவது ஊக்குவிப்பது, தரக் கணிப்பீட்டினை மேற்கொண்டு அவர்களின் எழுத்துக்களுக்கு வலிமையினை வழங்குவது என்பது ஒரு உன்னத பணியாகும். அந்த சிறந்த பணியும், பண்பும் இக்பால் அலியிடமுள்ளது.

இவர் ஒரு ஆக்க இலக்கியக்காரராக இருப்பதனால் சிறந்த படைப்புகளை இனம் கண்டுகொள்வதில் ஏனைய எழுத்தாளர்களின் விட முன்னணியில் திகழ்கின்றார். மறுபுறம் இவர் ஒரு இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த பத்திரிகையாளராக இருந்தபோதும் எவ்வித பேதமற்ற சகல இனத்தினரையும் இன, மத, மொழி பேதமற்று தன்பால் ஈர்த்து கொள்ள கூடிய உயர்பண்பு இவரிடமுள்ளது.

இவருடைய எழுத்தாக்களில் நான்கு வகைபாடுகளை தெளிவாக காணலாம். ஒன்று இவர் ஒரு செய்தியியலாளர். இரண்டு கட்டுரையாளர், மூன்று நேர்முகவியலாளர் நான்கு ஒரு இலக்கிய படைப்பாளர்

மறுபுறம் கோட்பாட்டிப்படையில் இவர் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளர் மறுபுறம் ஒரு நூலாய்வாளர். இவை இவரின் கட்டுரைகள் ஆக்கங்களின் மூலம் நன்கு வெளிப்பட்டுள்ளது.

இவரால் படைப்பாக்கங்களை திறமையுடன் மதிப்பிடவும் வலுவாக பகுப்பாய்வு செய்கின்ற திறனை இவர் கொண்டிருக்கின்றார். பகுப்பாய்வில் பெற்றுக்கொண்ட எழுத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதுடன், இவரின் விமர்சனங்கள், ஆய்வுகள் கருத்துரைகள் வாசகர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் விரிவடையச் செய்ய துணைபுரிகின்றன. பத்திரிகைத்துறைக்கு தேவை கடுமையான உழைப்பும் அக்கறையும். இவருடைய எழுத்துக்களில் மேம்பாட்டுக்கு காரணமாகும்.

புகழ்பெற்ற சாதனையாளர் ஒருவரை அவரது ஆளுமைத் தன்மையை வெளிக்கொணரும் வகையில் நேர்முகம் கண்டு சிறப்புக் கட்டுரை வரைவது ஆளுமை விளக்க நேர்காணல், நடிகர்கள், அரசியல் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களின் நேர்காணல், புகழ் பெற்றவர்களின் நேர்காணல் வகையைச் சேர்ந்ததாகும். புகழ்பெற்றவரின் அல்லது தனிச்சிறப்புள்ள ஊக்கமூட்டும் நேர்காணல் எழுத்தாளர்களின் வாழ்க்கையில் முக்கியமான மாற்றங்களைச் செய்வதற்கான உந்துதலைக் ஏற்படுத்தி போராடுபவர்களுக்கு உதவுகிறது. இக்பால் அலி “இளம் தலைமைத்துவத்தின் ஆளுமையும் - சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்” என்ற தொகுப்பு நூலில் தனது சிறந்த நேர்காணல் ஆளுமையை இவர் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சமூக நலன் விரும்பியின் சமூக நலன் நோக்கும், தொண்டுகளும், சமூக அக்கறையும் இந்நூலில் சிறப்பாக வெளிப்படுகின்றது. இங்கு இவரின் நேர்காணல் மொழி நடையானனது மிக எளிமையானதாக, எல்லா வாசகர்களாலும் எளிதில் புரிந்து கொள்ள கூடியதாக விளங்குகின்றது. சமூக நல விரும்பியின் சேவை எவ்வாறு சமூக மேம்பாட்டுக்கு உதவுகிறது என்பதை சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் அர்பணிப்புடன் இலங்கை முழுதுமாக வை. எம். எம். ஏ என்ற அமைப்பின் ஊடாகப் பல பணிகளை ஆற்றியுள்ளார் என்பதை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. நேர்காணல், கட்டுரைகள் என்ற வகையில் பல்வேறுபட்ட தலைப்புகளில் இங்கு இவரின் படைப்புகள் வெளிப் படுகின்றன. இவர் குறிப்பிடுகின்ற கொரோனா நோய்த்தொற்று கால ஜனாஸா இறப்புகளுக்கு ஓட்டமாவடி மக்கள் எவ்வாறு அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்கள் என்பதை இந்நூல் மிக சிறப்புடன் எடுத்து காட்டுகிறது .

சமூகத்தில் தனிமனிதன் எப்போது முக்கியத்துவம் பெறுகின்றான் என்றால் அவன் தன்னிலையில் சமூகத்திற்காக தன்னை ஒரு சேவையாளனாக கருதி அர்பணிப்புடன் எவ்வித பிரதி பலன் பாராது செயற்படுகின்ற போது மட்டும்தான். அந்த தியாக மனப்பான்மை கொண்டிருக்கின்ற ஒருவராக சஹீட் எம். ரிஸ்மி விளங்குவதை, இந்நூலின் மூலம் தெளிவாக விளங்கலாம். இலங்கை கொவிட் 19 இல் தாக்கம் பெற்றிருந்த போது இவர் தன் சமூகத்திற்காக அளப்பறிய சேவைகளை ஆற்றியுள்ளார். கோட்டபாய அரசாங்கம் கோவிட் 19 இல் பாதிக்கப்பட்டு இறந்த ஜனாசாக்களை எரியூட்ட முற்பட்ட போது இவரின் பணிகள் போற்றத்தக்கது.

எதிர்காலத்துக்கு உகந்த ஆளுமைமிக்க இளைய சமுதாயத்தை உருவாக்குதல், இளைய சமுதாயத்திற்கான தலைமைத்துவ பயிற்சி, குடிநீர் வழங்குவதற்கான அளப்பரிய சேவைகள் என்ற பல்வேறு விதமான சமூக செயல்பாடு வை .எம். எம். ஏ அமைப்பினூடாக மேற்கொண்ட இவரின் பல்வேறு பணிகள் இந்த நூலில் விரிவாக நேர்காணல் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது.

இத்தொகுப்பு நூலானது ஒரு தனி மனித ஆளுமையின் மூலமாக சமுதாயத்துக்கு எவ்வளவு சாதனைகளை மேற்கொள்ளலாம் என்பது முன்னுதாரணமாக கொண்டிருக்கின்றது. எதிர்கால இளைஞர்களுக்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவும் அமைந்திருக்கின்றது. பேச்சளவில் பெருமை பேசிக் கொண்டிருப்பதை விட செயலளவில் சமுதாயத்துக்கு ஏதோ ஒரு வகையில் சேவை செய்வது இவ்வளவு தூரம் பயன்பாடு உடையது என்பதை இந்த நூல் எனக்கு வெளிப்படுத்துகின்றது. வை. எம். எம். ஏ அமைப்பு இனங்களுக்கிடையிலான தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்காக அளப்பரிய சேவையினை ஆற்றி வருவதை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. தேசிய பாதுகாப்புக்கு சிவில் அமைப்புகளின் பங்களிப்புடன் வை. எம். எம். ஏ அமைப்பு ஆற்றிய சேவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இளைஞர்கள், மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஏற்படுத்தி, போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதோடு, அதற்கான உளவியல் ஆலோசனைகளை நிபுணர்களைக் கொண்டு நடத்திய சேவையாற்றி உள்ளது. பெண்களின் ஆளுமை விருத்திக்காக பல்வேறு கருத்தரங்குகளை நடத்தி சேவையாற்றியதில் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் இயங்கும் வை. எம். எம். ஏ அமைப்பு சிறந்த பணிகளை ஆற்றி உள்ளது இங்கு போற்றத்தக்கது. இவ்வாறு பல போற்றுதலுக்குரிய விடயங்களை இந்த தொகுப்பு நூல் வெளிப்படுத்துவது ஒரு ஆவணமாக மாத்திரமன்றி, ஒரு வழிகாட்டியாக, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது மிகச் சிறப்பான அம்சமாகும் இந்த விடயத்தில் வை. எம். எம். ஏ அமைப்பின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி அவர்களுடைய சேவையினை பாராட்டும் விதமாக தொகுப்பினை வழங்கிய இக்பால் அலியின் எழுத்தாக்க நடவடிக்கையானது சமூகத்துக்கும் எதிர்கால சந்ததிக்கும் பயனுள்ள ஒரு பணியாகும்.

ரா. நித்தியானந்தன். M.Phil (பேராதனைப் பல்கலைக்கழகம்)
கவிஞர், விமர்சகர், ஆய்வாளர்,
முன்னாள் விரிவுரையாளர்,
உதவிப்பணிப்பாளர் கால்நடை அபிவிருத்தி அமைச்சு - கொழும்பு,
ஆசிரியர், தூரம்.காம், blogvocal.com.

# வாழ்த்துரை



**இளைய தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் ஒரு முயற்சி**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மியின் நேர்காணல்கள் உட்பட பல விடயங்களை உள்ளடக்கி 'இளம் தலைமைத்துவ ஆளுமையும்- சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' என்ற நூலை ஊடகவியலாளர் இக்பால் அலி தொகுத்து வெளியிடுவது காலத்தின் தேவையை நிறைவு செய்யும் ஒரு முயற்சியாகும்.

கண்டி மாவட்டத்தின் பாரம்பரிய முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான மடவளையைப் பிறப்பிடமாகக் கொண்டு சகோதரர் ரிஸ்மி, கல்விமான் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் உருவாக்கிய வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவராக அடிமட்டத்திலிருந்து வந்தவர். அவர் வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற காலம் கொரோனா தொற்று அரசியல் நெருக்கடியை பரவலாக எதிர்நோக்கிய காலமாகும். இக்கால கட்டத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக அநேக இயக்கங்கள் இயங்கத் தவறி போதும் வை.எம்.எம்.ஏ பேரவை உயிரோட்டத்துடன் இயங்கி தம் சமூகப் பணிகளை முன்னெடுத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

மடவளையை வசிப்பிடமாகக் கொண்ட கொழும்பிலுள்ள ஒர் இயக்கத்திற்கு தலைமை தாங்கிச் செயற்படுவது இலகுவான காரியமல்ல. பெரும் தியாகத்துடனே சகோதரர் ரிஸ்மி பணிபுரிந்தார் என்பது குறிப்பிட்டு சுட்டிக் காட்டக்கூடியது. சகோதரர் ரிஸ்மி தனது இரு தவணைப் பதவிக்காலத்தில் வழங்கிய பேட்டிகளை, எழுதிய கட்டுரைகளை உள்ளடக்கி இந்நூல் வெளியிடப்படுகிறது. இவற்றில் இளைய தலைமுறையினருக்கு குறிப்பாக சமூக சேவையில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டுவோருக்கு நிறைந்த படிப்பினைகள் உள்ளன.

முன்பு போலன்று இக்காலத்து இளைஞர்கள் சமூக சேவையில் ஈடுபடுவதற்கு கூடுதலாக அக்கறை காட்டுவதற்கு தயங்கும் சூழ்நிலையில் இந்த நூல் இளைஞர்களுக்கு சமூகப் பணியில் ஈடுபடுவதற்கு ஊக்கம் அளிக்கும் ஒரு நூலாக அமையும் என்பது எனது கருத்து. "காலையில எழுந்தவுடன் தன் சகோதரனைப் பற்றிச் சிந்திக்காதவன் தன்னைச் சேர்ந்தவனல்ல" என இறைதூதர் (ஸல்) அவர்களின் திருவாக்கினை செயற்படுத்து பவர்களாகவே சமூகப்பணியில் ஈடுபடுபவர்கள் செயற்படுகிறார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

கலாபூஷணம் என்.எம். அமீன்,
தலைவர், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா,
முன்னாள் தலைவர், முஸ்லிம் மீடியா போரம்,
அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்.

# வாழ்த்துரை



**சிந்தனைச் சிற்பி**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் அல்ஹாஜ், தேசபந்து சஹீட் எம். ரிஸ்மி அவர்களின் சிறப்புமிக்க வரலாற்று ஆவண மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்

இவர் கடந்த காலங்களில் பேரவையில் வகுத்த தேசியத் தலைவர், பதில் தேசிய தலைவர், தேசிய உப தலைவர், தேசிய பொதுச் செயலாளர், தேசிய பொதுப் பொருளாளர், கண்டி மாவட்ட பணிப்பாளர், மற்றும் பணிப்பாளர் - தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பணிப்பாளர் பிரதான நிறைவேற்று அதிகாரி (Director, Chief Executive Officer)- உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம், மற்றும் பல அரச நிறுவனங்களின் பணிப்பாளராகவும் மேலும் பல முக்கிய சமூக சேவை நிறுவனங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருந்து தனக்கே சொந்தமான வித்தியாசமான அணுகுமுறைகளை மேற்கொண்டு செயற்படுத்தினார். இப்பதவிகளால் இவருக்குப் புகழ் கிடைத்தது என்பதைவிட இவரது செயற்பாடுகளால் இக்கதிரைகளுக்குதான் மகிமை கிடைத்தது எனக் கூறலாம். ஒட்டுமொத்தமாக முற்போக்குச் சிந்தனைகளாலும் சுறுசுறுப்பான செயற்பாடுகளினாலும் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம் என்று இவரை வர்ணிக்கலாம்.

வருங்காலத் தலைவர்கள் என இவர் அடிக்கடி உச்சரிக்கும் இளைஞர் தலைமுறைகளுக்கு முன்னுதாரணமாக தனது செயற்பாடு களை அமைத்துக் கொண்ட இவரிடமிருந்து இளைஞர்கள் கற்க வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன.

அதுமட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகங்களின் தேசியப் பிரச்சினைக்களான முஸ்லிம் விவாக மற்றும் விவாக ரத்துச்சட்டம் (MMDA), கொவிட் 19 எனும் ஆட்கொல்லி நோயின் பெரும்பாதிப்புற்ற காலங்களில் அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக துணிந்து செயற்பட்டு வை.எம்.எம்.ஏ. பேரவைக்கு பெருமை சேர்த்தார். மேலும் போதைப்பொருள் ஒழிப்பு, எயிட்ஸ் நோய்த்தடுப்பு போன்ற

செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியமைக்கு முன்னின்று செயற்பட்டார்.

முஸ்லிம் சமூகம் ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள் மட்டுப்படுத்தபட்டு செயற்படாமல் எதிர்காலத்தில் ஒரு விரிந்த பரப்பில் பரந்த சிந்தனையோடு தூரநோக்கான பாதையைத் சரியாகத் திட்டமிட்டு இனமத பேதமின்றி செயற்பட்டு தாய் நாட்டிற்குக் களங்கமில்லாமல் உழைக்கும் முன்மாதிரியான சமூகமாக செயற்படல் வேண்டும் என்ற மர்ஹூம் ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களின் சிந்தனைகளோடு செயலுருவில் செய்து காட்டிய பெருமை இவரையே சாரும்.

மேலும், இவர் இன, மத ஒற்றுமையைப் பலப்படுத்தும் பல செயற்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டு முஸ்லிம், பௌத்த, கிறிஸ்துவ மற்றும் இந்து மதத் தலைவர்களின் பாராட்டுக்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றார்.

இவரது ஒட்டுமொத்த சமூகசேவைகளினால் தனது சொந்த ஊரான மடவளைக்கும் தனது மாவட்டமான கண்டிக்கும் ஏன் முழு இலங்கைக்கும் பெருமையைச் சேர்த்துள்ளார் என்பது யாவரும் அறிந்ததே. இவர் எதிர்காலத்தில் எங்கு, எப்பதவிகளில் இருந்தாலும் இவரது சேவைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பரந்து செயற்படுத்துவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியமான உடற்பலத்தையும் மனத்தைரியத்தையும் வாரி வழங்க வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

அல்ஹாஜ் எஸ். தஸ்தகீர்
தேசிய உப தலைவர்,
அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவை,
கொழும்பு.
உதவி மாவட்ட சாரண ஆணையாளர் - பயிற்சி,
Global Eminent Peace Ambassador

# என்னுரை

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மியின் சமூக சேவைப் பணியும், அவருடைய பயன்பாடும், அவரது அடைவு மட்டமும் நேரிலும் கலந்துரையாடலிலும் தேடிப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வரலாற்று ஆவணமாகும். இவரின் இருப்பானது சூழ்நிலைக்கு கூடுதல் மேன்மையை வழங்குவதாகவுள்ளது. அவருடைய சமூகப் பங்களிப்பானது நம்மை புது உலகத்திற்கு அழைத்துச் செல்லத்தக்கது.

சஹீட் எம். ரிஸ்மி சிறந்த சமூகப் பணியாளர். ஒரு வர்த்தகப் பிரமுகராக இருந்தாலும் கல்வியின் அடித்தளம் வரை சென்று பல பட்டங்களையும் பெற்று அதன் புலமைகளில் செழித்தவர். இவர் சமூகப் பணியும், செயற்பாடும் இந்த வழித்தடத்திலேயே நகர்ந்து முன்னேறுகிறது. இவரது சமூகப் பணி இன்றைய சிவில் சமூக செயற்பாட்டாளர்களிலிருந்து தனித்து நிற்கிறது. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸின் சிந்தனை மரபில் இருந்து ஒரு சொட்டும் நெறி பிறழ்ந்து விடாமல் அவருடைய சமூகப் பணி நன்கு பிரகாசிக்கிறது.

அடுத்தவர்களை உதவி செய்வதற்காக வை. எம். எம். ஏ அமைப்பை ஒரு கருவியாகக் கையாண்ட இவர், ஒரு புறம் செய்யும் தொழிலால் ஊரில் மதிக்கப்படத்தக்க ஒருவராகவும் மறுபுறம் தம் சமூப் பணியால் தனது ஊரிலும் இலங்கை முழுவதிலும் பரந்து பட்டு சேவை புரியும் சமூகப் பணியாளராகவும் தோற்றமெடுக்கிறார்.

சஹீட் எம். ரிஸ்மி இன் சமூகவியல் பயணம் வேறுபட்டதாக உணர்ந்து கொள்ள முடிகிறது. இலங்கையில் தேசிய நலனுக்காகப் பங்களிப்பு செய்த புகழ்பெற்ற பெரியார்களான அறிஞர் சித்திலெப்பை, அப்துல் காதர் போன்றவர்களை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வார். இளம் தலைமுறையினர் களும் இந்த இடத்திற்கு வர வேண்டும் என்று மனதில் ஆதங்கப்பட்டுக் கொள்வார். நமது நாட்டின் தேசிய சுதந்திர புருஷர்களாக மதிக்கப்பட்டவர்களுடைய விபரங்கள் பற்றி சஹீட் எம். ரிஸ்மியிடம் பெறமுடிகிறது. இளம் தலைமைத்துவங்களை முன்னேற விடாமல் தடைபோடுபவர்கள் யார் யாரேனக் கூறுகிறார். இவ்வாறு இவர்கள் பற்றி எல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டும் அவருடைய திறமை நம்மை பிரமிக்க வைக்கிறது. கொரோனா காலத்தில் ஜனாஸாக்களை மாலை தீவில்

அடக்கலாம் என்ற செய்தி வெளிக்கிளம்பிய போது சினந்து கொண்டு எதிர் குரலெழுப்பியவர்.

இவருடைய தலைமைத்துவப் பண்பானது நட்பு என்ற அடிப்படையில்தான் எல்லா அணுகுமுறைகளும் அமைந்திருக்கும். ஆதிக்கம், அதிகாரம் ஆகிய மேலதிக்க மன உணர்களைத் துளி கூட இவரிடம் காணுதல் அரிது. இளம் தலைமைத்துவத்தில் தம் சமூக இளைஞர்களை மீண்டெழுவச் செய்வதிற்குரிய குறித்த சிந்தனைகள், செயற் திட்டங்கள் எல்லாம் புதிய பாதையை உருவாக்கக் கூடியவையாக அமைந்துள்ளன.

சஹீட் எம். ரிஸ்மியின் வாழ்க்கையின் மற்றுமொரு சிறப்பு நமக்கொரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. சமூகப் பணியாளர் ஒருவர் எப்படி மக்களை நேசிப்பார் என்பதற்கு எத்தனையோ உதாரணங்களை கூறலாம். இவர் தம் மனைவி பிள்ளைகளையும் சமூகப் பணியைப் போல நேசிக்கிறார். இவர் துணைவியார் ஒர் ஆசிரியை. மகன் பஹத் எம். ரிஸ்மி, சஹத் ரிஸ்மி, மகள் சாரா, இளைய மகன் முஹமட் இந்த தம்பதியினருக்கு மகிழ்ச்சியை வழங்கி வருகிறார்கள்.

அவருடைய வாழ்வியல் வரலாற்றுப் பதிவில் சூழலை மேம்படுத்துபவர்கள் உயர்ந்த மனிதர்களாக மதிக்கப்படுகிறார்கள். அதனால் தான் புதிய தலைமுறையினரைப் பற்றி பேசும் போது மேன்மையான உணர்வுகள் இவரை அறியாமலேயே நுட்பமாக வெளிப்படுவதை நம்மால் அவதானித்துக் கொள்ள முடிகிறது. அவரைச் சுற்றியுள்ள இளைஞர் குழுமத்தினர்கள் பல மடங்கு ஒளியுடன் பிரகாசிக்கிறார் என்று குறிப்பிடலாம்.

அந்தவகையில் “இளம் தலைமைத்துவ ஆளுமையும் - சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்” எனும் நூல் ஒரு வரலாற்று ஆவணமாகக் கருதப்படுவது மட்டுமின்றி, அவர் காலத்தில் முன்னெடுத்த செயற்திட்டங்களை மதிப்பீட்டாய்வு செய்யவும், அந்த திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி அதன் நன்மைகளை மேலும் அறிந்து திறன்பட இயங்குவதற்கான ஒரு வழிகாட்டுதல் களையே இந்நூலில் நேர்காணல்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய சவால்களுக்கான காரணங்களையும் விளைவுகளையும் உய்த்துணரவும் அவற்றை உறுதிப்படுத்தவும் சஹீட் எம். ரிஸ்மியின் வாழ்க்கை வரலாறு மிகப்பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. சஹீட் எம். ரிஸ்மியின் இலக்கு மட்டுமல்ல. அவர் சார்ந்த நோக்கம், இலட்சியம் எந்தளவுக்கு மேலோங்கியுள்ளது என்பதையும் இந்த நேர்காணல் மூலமாக நாம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

அவருடைய ஆரம்ப காலம் முதல் இற்றைவரை இவரால் முன்னெடுக்கப் பட்ட சமூப் பணிகள் பல. அவரது பொதுச் சேவைகள், சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துதல், ஊடக அறிக்கை விடுதல், விவாகம், விவகாரத்து சட்டம் சம்மந்தமான விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தி, இவை தொடர்பில் முன்னெடுத்த குழுக்களிடையே காணப்பட்ட முரண்பாட்டை ஒரு நல்லிணக்கப் பாட்டின் கீழ் கொண்டு வந்து துரிதமாக இயங்கச் செய்தல், கொரோனா நோய் தொற்றுக் காலத்தில் முன்னெடுத்த வேலைத் திட்டங்கள், அவர் இலங்கை உள்ளூராட்சி மன்ற ஆளுகை நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக அங்கு கடமையாற்றிய போது அரச ஊழியர்களுக்கிடையே சிறந்த வழிகாட்டுதல்களையும் புதிய செயற்திட்டங்களையும் வகுத்து அதனை நடைமுறைப் படுத்திக் காட்டி, அவ்வூழியர்களின் உள்ளத்தை வசீகரித்துக் கொண்ட முக்கியமான பங்களிப்பு போன்ற பல விடயங்கள் இந்த நேர்காணலில் வெளிப்படுத்தப்படுகிறது.

முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக விடுக்கப்படும் சவால்களுக்கு சிவில் அமைப்புக்கள் ஒன்று கூடி சவாலுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நியாயப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்களில் அந்த சிவில் அமைப்புக்களின் குழுவிலும் சேர்ந்து செயற்பட்டு வந்துள்ளார். இவை போன்ற பல்வேறுபட்ட சமூம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களோடு இணைந்து இவர் செயற்பட்ட விடயங்கள் அனைத்தும் இவருடைய ஆழ்ந்த சமூகப் பற்றுறுதியை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அவர் தலைவராக ஆக்கப்பட்டதன் பின்பு இவ்வமைப்பைப் பற்றி முஸ்லிம் இளம் வாலிபர்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஊட்டி இந்த அமைப்பு இன்னதுதான் செய்கின்றன என்கின்ற செய்தியை வெளிப்படுத்தி, அதிகளவு வாலிபர்களை இணைத்துக் கொண்டு கிளைகளையும் விரிவுபடுத்தி அமைப்பை மென்மேலும் மேலோங்கச் செய்வதில் அவர் காட்டிய கவனம் முன்னைய வை. எம். எம். ஏ. தலைவர்களின் மனங்களை ஈர்த்துள்ளது.

போதை ஒழிப்பு, எயிட்ஸ், விழிப்புணர்வு திட்டம், விதவைத் தாய்மார் களுக்கு வாழ்வாதார உதவிகள், வறிய பிள்ளைகளுக்கு கற்றலுக்கான புலமைப் பரிசில் நிதி உதவிகள் வழங்குதல், கைத்தொழில் வழிகாட்டுதல்கள், மரம் நடுகை, இரத்த தானம் வழங்குதல் போன்ற இன்னோரன்ன எத்தனை எத்தனையோ பணிகளை எமது இலங்கை நாட்டுக்கும் தம் சமூகத்துக்கும் கலாசாரத்துக்கும் அரிய பணிகளை ஆற்றினார். அவை யாவும் குறிப்பாக எல்லா சமூகத்திற்கும் பயனுள்ள செயற்பாடுகளாகவே அமைந்துள்ளன.

இவ்வமைப்பின் இஸ்தாபகர் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களுடைய சிந்தனைகள், கனவுகள் நனவுகளாகவும் அவருடைய இலட்சியங்கள் புத்துயிர்ப்புடன் நிலை நிறுத்துவதற்கு பாரிய முயற்சியை இவ்வமைப்பின் ஊடாக சஹீட் எம். ரிஸ்மி மேற்கொண்டார் என்று ஈண்டு குறிப்பிடலாம்.

ஆதலால் சஹீட் எம். ரிஸ்மி பிறந்த சொந்த ஊரான மடவளையின் வரலாறும் அவரின் ஊரின் பெயருக்கு பெருமை சேர்த்தவர்களும், அவருடைய வாழ்வியல் வரலாறும் அவர் ஊருக்கு ஆற்றிய பங்களிப்பும், அவர் வை. எம். எம். ஏ. மூலமாக சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு, அவர் மனதைக் கவர்ந்த இளம் தலைமைத்துவங்களுடைய ஆளுமைகள் பற்றிய அறிமுகம், நிழல் படங்கள் என இவற்றையெல்லாம் உள்ளடக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. எனவே இந்நூலின் வருகையின் மூலம் சஹீட் எம். ரிஸ்மியின் ஆளுமைப் பண்புகள் உயிர்ப்பு பெற்று ஒரு தனித்துவ அடையாளத்துடன் எழுந்துள்ளது. உண்மை யிலேயே அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் வரலாற்றில் சஹீட் எம். ரிஸ்மியின் பெயர் ஓர் புதிய அவதாரமாகவே வெளிப்பட்டிருக்கிறது எனலாம்.

எனவே இத்தகைய தகவல்களைத் திரட்டுவதற்காக கொரோனா நோய் தொற்றுக் காரணமாக நாடு முற்றாக முடக்கப்பட்ட ஒரு அசாதாரண சூழ்நிலையிலும், சாதாரண சூழ்நிலையிலும் நேரடியாக செய்திகளை சேகரிப்பதற்காக களப்பணிகளை மேற்கொண்டு கண்டவற்றையும் கேட்டவற்றையும் தினகரனில் தொடர்ச்சியாக வெளிக்கொணரப்பட்ட நேர்காணல் கட்டுரைகளின் தொகுப்புத்தான் இந்நூல். அதேவேளை பின்னிணைப்பில் தினகரன், தினக்குரல், வீரகேசரி, விடிவெள்ளி, நவமணி, மெட்ரோ நியூஸ், தமிழ்மிரர் ஆகிய பத்திரிகையில் வெளிவந்த பொதுவான ஊடக அறிக்கைகளையும், நிழல் படங்களையும் மற்றும் சஹீட் எம். ரிஸ்மியின் உள்ளம் கவர்ந்த இளம் துறை சார்ந்தவர்கள் பற்றிய அறிமுகம் தாங்கிய நூலாக இதனை வெளிக் கொணர்ந்துள்ளேன். இது எனது வாழ்வியல் வரலாற்று நூலாக்க முயற்சியின் இரண்டாவது நூலாகவும் இதனைக் கொள்ளலாம். முதலாவது நூல் மறைந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே. எம். எச். காலிதீன் அவர்கள் பற்றிய வாழ்வியல் வரலாற்று நூலாகும்.

இந்நூல் வெளிக்கொணர்வதற்கு அனுரசணையுடன் ஆசியுரையும் வழங்கி இதற்கு வித்திட்ட தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ரீ. செந்தில் வேலவர் அவர்களுக்கும் இந்நேர்காணலை அனுப்பிய போது என்னைத் தொடர்ந்து எழுதத் தூண்டி இதனை மெருகூட்டி, சரி செய்து செப்பனிட்டு கவர்ச்சிகரமான முறையில் அழகுற காட்சிப் படங்களுடன் தினகரனில் வெளிக்கொணர்வதற்கு ஒத்துழைப்பும், நல்லாதரவும் வழங்கிய தினகரன், பிரதம உதவி ஆசிரியர் எஸ். ஸ்ரீகாந்த் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். என் எழுத்து முயற்சிகளுக்கு என்றும் துணையாகவுள்ள தினகரன் இணையாசிரியர் நண்பர் மர்ளீன் மரைக்கார் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல வேலைப் பளுக்கு மத்தியிலும் முன்னுரை தந்துதவிய தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், அணிந்துரை தந்துதவிய பிரபல்யமிக்க வரலாற்றாய்வாளர் முன்னாள் புனர்வாழ்வு புணரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் ஏ. நஹியா மற்றும் மிகக் குறுகிய காலத்தில் எழுத்துதிருத்தங்களை செய்து அதற்கானதொரு மதிப்புரையைத் தந்துதவிய பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை முன்னாள்

விரிவுரையாளரும், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், விமர்சகர், கால் நடை அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் உதவி பணிப்பாளர், கவிஞர் ரா. நித்தியானந்தன் அவர்களுக்கும் வாழ்த்துரை தந்துதவிய அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசிய உபதலைவர் எஸ். தஸ்தகீர் அவர்களுக்கும், முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம். அமீன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இந்தப் பணியில் செய்திகளை சேகரிக்கச் சென்ற சமயம் ஒவ்வொரு நேரத்திலும் முகம் சுழிக்காது அனைத்து உதவிகளையும் செய்து தரும் அலுவலக உத்தியோகஸ்தர்களான, நிர்வாக அதிகாரி மசூட் தாலிப், நிர்வாக உதவியாளர் நிசாமுதீன், கணக்காளர் பஸ்மிலா, லிகிதர் சாஹிரா ஆகியவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலை அழகான முறையில் அச்சுப் பதிவு செய்து தந்த சஹீட் எம். ரிஸ்மி அவர்களுடைய மனைவியின் சகோதரி ரிஷானா ஹில்மியின் கணவரும், நேத்திரா அச்சக உரிமையாளரும், குறிஞ்சி பதிப்பகத்தாருமான எஸ்.எம். ஹில்மி அவர்களுக்கும் மற்றும் இந்நூலை வடிவமைத்து தந்ததுவிய நண்பர் எம். எம். எம். ரிழ்வான் அவர்களுக்கும், அட்டைப் படத்தை வடிவமைத்த இமேஜ் பிளஸ் ரிஸ்வான் ஆகியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதனை ஒரு நூலாக வெளிக் கொணர்வதற்கு தேவையான தகவல் களையும் பெறுமதிமிக்க ஆலோசனைகளையும் வழங்கி பூரண ஒத்துழைப்புத் தந்துவதவிய அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி அவர்களுக்கும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் ஆர். மகேஸ்வரன் அவர்களுக்கும், மௌலவி எம். எச். புர்ஹான், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஐ. எம். முஹ்தார், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே. எம். ஹாபிஸ் ஆகியோர்களுக்கும் என்னுடைய நன்றிகள்.

இக்பால் அலி
சிரேஷ்ட ஊடகவியலாளர்.

# ரிஸ்மியின் சுயவிபரக்கோவை

பெயர் : **பேலவிதானலெகெதர மொஹமட் சஹீட் மொஹமட் ரிஸ்மி**
நிரந்தர முகவரி : **இல** : 54/15, **தெல்தெனிய வீதி, மடவளை பஸார்**
தொடர்பு இலக்கங்கள் :
0812476762 (வதிவிடம்)
+94777391691 (கைத்தொலைபேசி)
முகநூல் : @Saheed M Rismy
ட்வீட்டர் : @acymma
மின்னஞ்சல் : rismy555@yahoo.com & orbitrismy@gmail.com

**சுய விபரம்:**
முதலெழுத்துக்களுடன் பெயர் : எம். எஸ். எம். ரிஸ்மி
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : மொஹமட் சஹீட் மொஹமட்

| | | |
|---|---|---|
| பிறந்த திகதி | : | 09 டிசம்பர்1962 |
| வயது | : | 59 |
| பால் | : | ஆண் |
| சிவில் நிலை | : | திருமணமானவர் |

தே. அ. அ. இலக்கம் : 623440893V
கற்ற பாடசாலை : மதீனா தேசிய பாடசாலை மற்றும் புனித, சில்வெஸ்டர் கல்லூரி.

**தொழில் நோக்கங்கள், முயற்சியாளர்**
இஸ்லாமிய நிதியியல், வங்கி முறைமை, சர்வதேச பாடசாலை, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD), இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் (SLILG), முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டுப் பயணம் ஆகியவற்றிற்கு ஆலோசனை வழங்குதலில் தொழில்முறை வல்லுநராக இருத்தல்.

போட்டி மிகுந்த உலகின் போக்குகள், அபாயங்கள் சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் போதைப் பொருள் தடுப்பு, விழிப்பூட்டல்.

**பிரதான திறன்கள்**
- தலைமைத்துவம்
- குழு வேலை
- நெகிழ்வுத்தன்மை (Flexibility)
- ஆக்கபூர்வத்திறன்
- ஒழுங்கமைப்பு

**மொழிப் புலமை**
- ஆங்கிலம் - வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல்
- சிங்களம் - வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல்
- தமிழ் - வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல்
- அரபு - வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல்
- ஹிந்தி மற்றும் மலையாளம் - பேசுதல்

**கல்வி தகமைகள்**

- க.பொ.த சாதாரண தரம் 1979, க.பொ.த உயர் தரம் 1983 .

**தொழில்முறை தகைமைகள்**

- எம். பி. ஏ (MBA) -வியாபார முகாமைத்துவ முதுமாணி பட்டம்.
- இலங்கை இ. ஆர். எஸ். வணிக பாடசாலை ஊடாக ஐஐசி தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கம்போடியா.
- 2013 பட்டப் பின் படிப்பு இஸ்லாமிய நிதியிலும் வங்கி முறையும் (UK), இஸ்லாமிய வங்கி முறையும் முகாமைத்துவமும் (IBS- இலங்கை), டிப்ளோமா இஸ்லாமிய நிதியியல் வங்கி முறையியல் (ABP) UK.
- 2008 டிப்ளோமா இன் வர்த்தக முகாமைத்துவம் (இலங்கை)
- 2019 இல் ஆர். எச் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் “ஊக்கமளிக்கும் தலைமைத்துவம்” பற்றிய பயிற்சி நிகழ்வை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.
- “மனித உரிமைகள் நடைமுறை: சமகால உலகிலுள்ள சவால்கள்” பற்றிய பயிற்சியாளர் நிகழ்வில் தெற்காசிய ஆசிய பயிற்சி -
  27 ஜனவரி 2021 இருந்து 17 பெப்ரவரி 2021 வரை
- 2013 இல் இலங்கை ஐபிஎஸ் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நிதி மற்றும் முகாமைத்துவத்தில் பிஜிடி ஐ வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல். - மெரிட் /Merit
- இஸ்லாமிய நிதி மற்றும் வங்கியில் இங்கிலாந்திலுள்ள வணிகர்களின் சங்கத்தில் ஏபிபி பட்டதாரி டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.
- 2011 இல் இலங்கை ஐபிஸ் பல்கலைக்கழகத்தில் இல் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதியில் டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல். - டிஸ்டிங்சன் /Distinction
- 1995 - 1996 அரபி மொழியியல் டிப்ளோமா (சவூதி அரேபியா)
- 2008 இல் வணிக முகாமைத்துவ நிறுவனத்தில் வணிக முகாமைத்திவத்தில் டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.

**இணை–பாடவிதான செயற்பாடுகள்**

- ஹில் கன்ரி குறிபார்த்து சுடுதல் விளையாட்டுக் கழகத்தில் இன் தற்போதைய உறுப்பினர். 2010 இல் தேசிய மட்டத்தில் பங்கேற்றிருத்தல் மற்றும் 2011/ 2013/ 2014 (பிஸ்டல், ஷாட்கன் மற்றும் துப்பாக்கிகள்) கூர்மையான துப்பாக்கி சுடும் (Sharp Shooter) தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்றிருத்தல்.
- பாடசாலை வாத்தியக்குழுவில், உறுப்பினர்.
- பாடசாலை கேடட் சார்ஜன்ட்.
- பாடசாலையில் ஒரு சிரேஷ்ட மாணவத் தலைவராகவும், இஸ்லாமிய மஜ்லிஸில் (Islamic Majlis) ஒரு உறுப்பினர்.
- வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.

**விளையாட்டு**

குறிபார்த்து சுடுதல், குத்துச்சண்டை, கராத்தே, பாடசாலை மட்ட கிரிக்கெட் மற்றும் கால்பந்து.

**தொழில்முறை அனுபவம்**

2020 பதில் தலைவர், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை.

2019 உப தலைவர், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை.

2018/2019 பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் (SLILG), உள்நாட்டலுவல்கள், மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு.

2018 முதல் முகாமைத்துவ நிர்வாகப் பணிப்பாளர், சராசரி பொறியியல் மற்றும் கட்டுமான தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி.

2017/2018 (PRO) மக்கள் தொடர்பாடல் அதிகாரி, உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர்.

2017 ஆலோசகர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்.

2018 முதல் இன்று வரை முகாமைத்துவ/ நிர்வாக பணிப்பாளர்.

2017-2019 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD)

2016-2019 பணிப்பாளர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD)

2015-2016 பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை, லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் லிமிடட். நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு.

2013-2018 நிர்வாக சபை உறுப்பினர், ரஹீமியா அரபு கல்லூரி.

2011 - 2015 வெளிநாட்டு முகாமையாளர் - “சிசியு” லொஜிஸ்டிக்ஸ், கட்டார்.

2006 முதல் இன்று வரை - பணிப்பாளர்/பங்காளர், அன்-நூர் முதலீட்டு நிறுவனம்.

2004 முதல் இன்று வரை - பணிப்பாளர்/பங்காளர், ஹில் கன்றி சர்வதேச பாடசாலை.

1999 - 2014 பணிப்பாளர் - ஒபிட் ட்ரவல்ஸ் லிமிடட்.

1998 - இன்று வரை முகாமைத்துவ பங்காளர் - ஓர்பிட் சர்வதேச நிறுவனம்.

1987 - 1999 சவூதி அரேபியா - விற்பனை முகாமையாளர்

1984 -1996 எச்பி குழு (HB Group)

**சமூக மற்றும் அரசியல்**

2020/2022 தேசிய தலைவர் அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை.

2022 இலிருந்து காசநோய் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய திட்டத்தின் (NPTCCD) “காசநோய் பங்குதாரர்கள் குழு” உறுப்பினர் - சுகாதார அமைச்சு.

2021 மதீனா தேசிய பாடசாலையின் முன்னாள் மாணவ தலைவர்கள் அமைப்பின் உறுப்பினர்.

2021 இருந்து இன்று வரை (CCMSL) உறுப்பினர், இலங்கை நாட்டு ஒருங்கிணைப்பு பொறிமுறை /உலகளாவிய நிதியம்.

2019 - உப தலைவர், அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை .

2020 - பதில் தேசிய தலைவர், அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை .

2017 ஒருங்கிணைப்பாளர், கல்வி, சமூக வலுவூட்டல் அமைப்பு.

2017-2019 தேசிய பொதுச் செயலாளர், அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை.

2016 மலேசியாவில் பியூச்சர் லீடர்ஸ் என்கின்ற தலைமைத்துவ திட்டத்தில் ஒரு பிரதிநிதியாக பங்குபற்றியிருத்தல் .

2016-2018 இணை ஒருங்கிணைப்பாளர், கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர்.

2015 இருந்து இன்று வரை அபிவிருத்திக் குழு உறுப்பினர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, கண்டி மாவட்டம்.

2014-2015 பொதுச் செயலாளர், பழைய மாணவர் சங்கம், மதீனா தேசிய பாடசாலை .

2014-2015 புலமைப்பரிசில் செயற்றிட்ட தவிசாளர், அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை.

2014-2017 தேசிய பொதுப் பொருளாளர், அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை.

2014 உப குழு தவிசாளர், சீர்திருத்த நிறுவனம், போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனருத்தாபனம், மினுவாங்கொடை மற்றும் புலமைப் பரிசில் செயற் திட்டம்.

2013 பொதுப் பொருளாளர், அகில இலங்கை சமாதான நீதவான்களின் சுதந்திர சங்கம்.
2012 சமாதான குழு மற்றும் சிவில் தடுப்பு குழு, வத்தேகம பொலிஸ் பகுதி (Member of Peace Committee & Civil Defense Committee Wattegama Police Area)

2011 உறுப்பினர், மடவளை மக்கள் மன்றம் (Madawala Peoples Forum)

2011-2013 மாவட்டப் பணிப்பாளர், அகில இலங்கை வை எம் எம் ஏ மாநாடு, கண்டி, மாத்தளை மற்றும் குருணாகலை. (District Director, ACYMMA Conference Kandy, Matale and Kurunegala)

2007-2015 தலைவர், மடவளை வை.எம்.எம்.ஏ (YMMA)

2006 உப தலைவர், ஹவுஸ் ஆப் சரிடி (House of Charity)

2004-2017 Trustee, Jamiul Khairath Jummah Masjid, Madawala Bazaar

2001-2005 தலைவர், சுஹதா அமைப்பு (Suhada Foundation)

2001 உப தலைவர் & உறுப்பினர், எஸ்.டி.எஸ் மதீனா தேசிய பாடசாலை (SDS, Madina National School)

2001-2002 இணைத் தலைவர், தேசிய மீலாத் குழு (National Meelad Committee)

# ரிஸ்மியின் பிரவேசமும் மடவளை முஸ்லிம்களது பூர்வீக அடையாளங்களும்

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மியின் வாழ்வியல் வரலாற்றியின் இருப்பானது தான் பிறந்து, வளர்ந்த ஊரான மடவளை எனும் அடித்தளத்தில் இருந்து பார்க்க வேண்டியுள்ளன. ஒரு அமைப்பின் தனது செயற்பாட்டின் கட்டமைப்பு அமைத்துக் கொள்வதில் மடவளையில் பிறந்து வளர்ந்த சஹீட் எம். ரிஸ்மி என்பவரினால் வெற்றிகாண்கின் றன. இவ்வகையில் இப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து தம் ஆளுமைகளைப் பதிவு கொண்டவர்களையும் இந்த ஆணவத்தில் இணைத்துக் கொள்வது ஓர் ஆரோக்கியமான பணியாகும்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் வரலாறும் மற்றும் அவர்கள் முன்னெடுத்த சமூகவியல் பணிகள் என்பன பரந்தளவில் ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அந்த வகையில் இவ்வமைப்பின் இன்றைய தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி வாழ்வியல் வரலாறுப் பின்னணியை நோக்குவதோடு அவர் பிறந்து வளர்ந்த பிரதேசத்திற்கு பல்வேறுபட்ட துறைகளிலும் தமது முகவரியை பிரகாசிக்கச் செய்த பெரியார் களுடைய பெயர்களையும் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் பிறந்த பிரதேசம் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திற்கு உட்பட்ட பாததும்பர பிரதேச செயலயகப் பிரிவிலுள்ள "மடவளை" என்னும் பிரதேசமாகும். இப்பிரதேச முஸ்லிம்கள் தனித்துவமான இஸ்லாமிய அடையாளங்களோடு பெரும்பான்மையினராக வாழுகின்ற சூழலிலேயே இவர் பிறந்தார்.

**மடவளை என்னும் ஊர்**

கண்டி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணியுடன் இணைந்த விதத்திலேயே இந்த மடவளை என்னும் ஊரும் தோற்றம் பெற்றுள்ளது. 1638 ஆம் ஆண்டில் இலங்கைக்கு டச்சுக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் வந்து இறங்கிய இடம் திருகோணமலையாகும். அந்த நேரம் கண்டி மன்னன் விமலதர்மசூரியன் கோட்டை அரசர்களுடன் முரண்பட்டுக் கொண்டு இருந்தான். கண்டி அரசன் சென்று இந்த டச்சுக்காரர்களை வரவேற்றான். அவர்களுக்கு அரசன் ஒருவரின் ஆதரவு இருந்தமையால் திருகோணமலையில் நன்றாக முஸ்லிம்கள் குடியேறினர். அக்கால கட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களும் கண்டி இராச்சியத்திற்கு உட்பட்டதாகும். அப்பொழுது மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் ஏராளமான

முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். இந்த டச்சுக் காரர்கள் வியாபாரம் நோக்கம் கருதியே வந்தவர்களாவர்.

ஆனாலும் அவர்களுடைய அடி மனதில் புரொட்டஸ்லாந்து கிறிஸ்து வத்தைப் பரப்ப வேண்டும் என்று இருந்தது. அவர்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் பாடசாலைகள் தொடங்கினார்கள். வீட்டுக்கு வீடு சென்று அவர்கள் போதனைகள் செய்தார்கள்.

இருந்தபோதிலும் முஸ்லிம்கள் மார்க்கம் என்றால் விட்டுக் கொடுப்பதில்லை. எத்தனை பேர்தான் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினாலும் கூட முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக கிறிஸ்வத்தைத் தழுவினார்கள் என்று எங்கேயுமே வரலாறு ஒன்று இல்லை. அப்பொழுது முஸ்லிம்கள் இதனை அவதானித்தார்கள். இது நமது பிள்ளைகளுக்கு கஷ்டம் வரப் போகிறது எனக் கருதி திருகோணமலையில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து கலாவெவ (காலாவிய) என்னும் இடத்திற்கு வந்தனர்.

பின்னர் கலாவெவயில் இருந்து பொலன்னறுவைக்குச் சென்றனர். அங்கு இவர்களுடைய செயற்பாடுகளை யும் நம்பிக்கைகளையும் பார்த்த பொலன்னறுவை இராசாதானிய அரசன் தன்னுடைய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு குமாரியை இந்தக் குழுமத்திற்குத் தலைவராகச் சென்ற ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்தார். அதன் பின்னர் அவர் எல்லோரையும் கூட்டிக் கொண்டு கண்டிக்கு வந்தார்.

கண்டி அரசன் இந்த மக்களுக்கு வசிப்படமாக இந்த மடவளைப் பிரதேசத்தைக் கொடுத்தான். 1638-1650 களில் இந்த இடத்தில் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டு 350 வருட காலத்திற்கு மேலாகும். அப்பொழுது இங்கு தேவைக்கு ஏற்ப அதிகளவிலான காணிகள் இருந்தன. இவர்கள் இந்த இடங்களை வயல் நிலங்களாகவும் மாற்றிக் கொண்டார்கள். இந்த இடத்தில் பொருத்தமான பிரதான பயிர்ச் செய்கை பண்ணுவதற்கென இறப்பர், கோப்பி, கொக்கோ ஆகியவற்றை தெரிவு செய்திருந்தார்கள். குறிப்பாக இந்த இடத்தின் பழைய பெயர் தும்பர மடவளை. இப்பிரதேசத்தைச் சுற்றி வர எத்தனையோ தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. 1505 இல் போர்த்துக்கேயர் வந்திருந்திருந்தார் கள். அதற்குப் பின் 1796 இல் ஆங்கிலேயர் களும் வந்தார்கள். இவர்களுடைய வருகையால் நகர்ப்புறங் களில் வாழ்ந்த முஸ்லிம்கள் பாதிக்கப் பட்டார்கள். ஆனாலும் நகர்ப்புற முஸ்லிம்கள் மடவளைக்கு வரவில்லை.

மடவளையை சுற்றிவர தேயிலை, கோப்பி, இறப்பர் போன்ற பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மடவளை மக்கள் பிரதான தொழிலாக

தோட்டப்புற பகுதிகளிலுள்ள சந்தைகளுக்கு வியாபாரத்திற்குச் செல்வதாக இருந்தது.

விசேடமாக அக்காலத்தில் போக்குவரத்துப் பாதைகள் மிகக் குறைவு. வெளியே போவதில்லை. ஆகவே ஒவ்வொரு ஊர்களும் ஒவ்வொரு தலைவர்களைக் கொண்டு தான் எல்லாம் இயங்கும். மடவளையிலும் சிங்கள அரசன் முகாந்திரம் பட்டம் கொடுத்தான். அக்கால கட்டம் சிங்கள அரசு எப்படி இருந்தது என்றால் முதலாவது அரசன். திசாவ, ரட்டே மஹத்மியா, கோரல, முகாந்திரம், கிராமத் தலைவர்கள் (விதானை) என்ற வரிசையில் இயங்கின. முகாந்திரமார்களுக்குத் தான் அக்காலத்தில் கிராமத் தலைவர் பதவிகள் வழங்கப்பட்டன. ஆகவே இவர்கள் நல்ல செல்வாக்கோடு இருந்தார்கள். 1940 இல் மடவளையில் கடைசியாக இருந்த முகாந்திரம் எஸ். எல். ஏம். எல். மரைக்கார் ஆவார். இவரும் இவரது மனைவியும் பள்ளிவாசலின் பின் பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவருடைய மகன் தான் சட்டத்தரணி. எம். ஏ. எஸ். மரைக்கார். இவர் கண்டி நீதிமன்றங்களில் மிகவும் பிரகாசித்தார். அந்தவகையில் இப்பிரதேசத்தில் பல்துறைகளிலும் பிரகாசித்தவர்களின் பெயர்களை இதில் ஆணவப்படுத்துகின்றமை எதிர்காலச் சந்ததியினர்களுக்கு ஒரு பெரும் சான்றாக அமையும்.

**புகழ்பூத்த சட்டத்தரணிகள்.**

1955 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி காலத்தில் தேர்தல் தொகுதிகளை மாற்றியமைப்பதற்கான எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டவர் எம். ஏ. எஸ். மரைக்கார். சட்டத்தரணி எம். ஏ. எஸ். மரைக்காரின் பேரர்களான சட்டத்தரணி இஸ்ரத் இமாம். இவர் மேல் முறையீட்டு நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். சட்டத்தரணி அல்தாப் மரைக்கார், சட்டத்தரணி அஸ்ரா மரைக்கார் மூவரும் பிரபல்யமான வழக்கறிஞர்களாவர்.

சட்டத்தரணி எஸ். எம். முஸ்தபா. அவர் முன்னணிமிக்க சட்டத்தரணி. இவருடைய தந்தை ஒரு வர்த்தகர். செய்யத் முஹமட். எம். எம். முஸ்தபாவின் மகன் பிரபல்யமான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, அவருடைய மகன் தான் முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைசர் முஸ்தபா. இவருடைய அமைச்சின் பொதுசன அதிகாரியாகவும் புலமைப் பரிசில் திட்டத்திற்கு ஆலோசகராகவும் சஹீட் எம். ரிஸ்மி கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஏஸ். ஏல். ஏம். எல் மரைக்கார் (முகாந்திரம்) அவர்களுடைய இரு பேரன்மார்களான சட்டத்தரணி எம். ஏ எம். முஹ்சீன், சட்டத்தரணி எம். ஏ. எம். லத்தீப்

கண்டியில் பிரபல்யமான சட்டத்தரணி யாக விளங்கினர்கள். இவர்கள் பிரபல்யமான மார்க்கச் சொற்பொழிவு களையும் ஆற்றக் கூடியவர்களாகவும் இருந்தனர்

சட்டத்தரணி யூ. எல். ஏ. வஹாப், சட்டத்தரணி எம். ஏ. கிவ். கஸ்ஸாலி. இவர் கொழும்பில் கடமையாற்றினார்.

சமகாலத்தில் சட்டத்தரணி ஏ. எல். ஏம். அனீஸ், சட்டத்தரணி பைசர் அலி, சட்டத்தரணி ஹுஸ்னி, சட்டத்தரணி ரிஸ்னி, சட்டத்தரணி இன்சாப் ஜவாத், சட்டத்தரணி பர்ஹானா சுஹைர் முதலியவர்கள் பிரகாசித்துக் கொண்டிருக் கின்றனர்.

சமகாலத்திற்கு முற்பட்ட குறிப்பிடத்தக்க சட்டத்தரணிகளின் பெற்றோர்கள் ஆலிம்களாகவும் வர்த்தகர் களாகவும் இருந்துள்ளார்கள் என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

**ஆலிம்கள் (இஸ்லாமிய மார்க்க போதகர்கள்)**

மடவளை முஸ்லிம்களின் சமூக சமய, பொருளாதார, அரசியல் நிலை என்பவற்றின் கட்டமைப்பை உருவாக்குதில் ஆலிம்களின் பங்களிப்பு அளப்பரியது. அக்காலங்களில் பள்ளிவாசல்களில் சம்பளம் கொடுத்து ஒரு பிரதான இமாம் என்று வைப்பதில்லை. அக்காலங்களில் ஊரிலுள்ள உலமாக்களே தான் வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆ குத்பாக்களை ஓதுவார்கள். ஐவேளைத் தொழுகைகளையும் நடத்துவார்கள். அதேபோன்று பள்ளியில் முஅத்தின் மார்களும் (பள்ளிவாசலில் கடமை புரிபவர்) வைப்பதில்லை. ஆனாலும். அந்தந்த நேரங்களில் கடமைகள் சரியாக நடக்கும். இதற்காக எல்லோரும் சேர்ந்து செய்வார்கள். பொதுவாக பள்ளி சுத்தம் செய்தல், ஹவுதுகளுக்கு தண்ணீர் நிரப்புதுல் போன்ற சகல அம்சங்களும் ஊர் மக்களால் நடைபெறும். அதற்குப் பிற்பட்ட காலங்களில் தான் பள்ளிவாசல்களுக்கு கத்தீப்மார்கள், முஅத்தீன் வைப்பதென்ற நிலைமை உருவாகியுள்ளது.

செய்யத் முஹம்மத் ஆலிம். இவர் மிகப் பிரபல்யமான ஆலிம். இவரும் மடவளை பிரதான பள்ளிக்குப் பின்னால் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அதே போன்று இவ்விடத்தில் எஸ். ஏல். ஏம். எல். மரைக்கார் மற்றும் அவர் மனைவி ஆகியோர் இங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செய்யத் முஹம்மத் ஆலிமின் மகன் தான் ஜமால்தீன் முப்தி. 1638 களில் அந்தக் காலத்தில் உள்ள முப்திகள் போலல்ல இக்காலத்தில் உள்ள முப்திகள். இவர் அறிஞர் சித்திலெப்பை வெளியிட்ட முஸ்லிம் நேசன் பத்திரிகையில் கட்டுரை எழுதினார். இந்தக் பத்திரிகையில் அக்பர் நீதவான் ஒரு வினாவொன்றை எழுப்பியிருந்தார். அதற்கு

ஜமால்தீன் முப்தியினுடைய பதில் அவர் மனதில் நினைத்த மாதரி மிகவும் ஆழமான கவர்ச்சிகரமான பதிலை எழுதியிருந்தார். அதனை வாசித்த நீதவான் அக்பர். அவருடன் மிகுந்த நட்புறவுடன் செயற் பட்டவர். இவர் கொழும்பு சாஹிரா கல்லூரியிலுள்ள பள்ளிவாசலில் முதலாவது பிரதான இமாமாகவும கடமையாற்றியவர்.

அஷ்ஷெய்க் மஹ்மூத் செய்லாணி. இவர் குராசானி மௌலானாவினால் நக்சபந்தியா தரீகாவுக்கு நேரடி கலிபாவாக நியமிக்கப்பட்டவர். குராசானி மௌலானா வும் முஹம்மத் செய்லாணியும் படுத்த கட்டில் இப்பொழுதும் களுத்துறை நக்ச பந்தியா தைக்காவில் இன்னும் இருக்கிறது.

மஹ்மூத் ஆலிம் அவர்களுக்குப் பின்னர் புகழ்பூத்த ஆலிம்களாக இன்னும் பலர் இருந்துள்ளனர்.

உதுமா லெப்பை ஆலிம். சட்டத்தரணி யூ. எல். ஏ. வஹாப்பின் தந்தை. சம்சுடீன் ஆலிம். இவர் காயல் பட்டடிணத்தில் ஓதியவர். இவர் எஸ். எல். எம். எல். மரைக்கார் (முகாந்திரம்) அவர்களுடைய மருமகன். சின்ன ஆலிம் இவர் ஐ. எம். முஹ்தர் ஆசிரியரின் தந்தையின் தந்தையாவார்.

முகைதீன் அப்துல் காதர் ஆலிம். (பேட் ஆலிம்) என்றும் அழைப்பர். பேட் என்பது தலைமயில் தலைப்பா கட்டுவதற்காகக் குறிப்பிடுவார்கள். இதனையே அவர் அதிகம் அணிவார். இவர் சட்டத்தரணி எம். ஏ. கிவ். கஸ்ஸாலியின் தந்தையாவார்.

அப்துல் ஹைய் ஆலிம். முன்னாள் அமைச்சர் ஏ. சீ. எஸ். ஹமீத் அவர்களுடைய மைத்துனர். அஷ்ஷெய்க் முஹம்மது அப்துல் ஹலீம் பஹ்ஜி. இவர் நச்சபந்தியா தரீக்காவின் கலிபா. முஹ்சீன் ஆலிம். எம். எச். எம். ஹம்தூன் ஆலிம். முஹ்மூத் ஆலிம் சாய்பு. இவர் பிரதேச சபை உறுப்பினர் மலீக் அவர்களுடைய தந்தை. சம காலத்தில் அஷெஷய்க் எம். எச். எம். புர்ஹான் (பஹ்ஜி), அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை உப தலைவர். இவ்வமைப்பின் பிரதான அலுவலக உத்தியோகஸ்தரும் கூட.

இத்தகைய ஆலிம்கள் மடவளையில் பெரும் பணியாற்றியுள்ளனர். சீர்திருத்தம் ஆண்களுக்கு மட்டுமல்ல அதிகளவு பெண்களுக்கும் செய்யப்பட வேண்டும் என்று அக்காலத்தில் அடையாளம் கண்டு பணியாற்றிவுள்ளார்கள்.

அக்காலத்தில் பெண் ஆலிமாக்கள் எவரும் இருக்கவில்லை. பிற்பட்ட காலத்தில் கிரைன்டிங் மில் சலீம் நானாவின் துணைவியார் இருந்தார். அவர் பெயர் சித்தி நவாஸியா (கல்லெளிய). அவர் பெண்கள் பகுதியில் கூடுதலாக கவனம் செலுத்தினார். மடளையில் வாரம் ஒரு முறை மார்க்கச்

சொற்பொழிவுகள் நடைபெறும். ரமழான் மாதம் வந்தால் பெருநாள் வரைக்கும் ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணி முதல் லுஹர் நேரம் வரைக்கும் பெண்களுக்கான மார்க்கச் சொற்பொழிவுகள் பாடசாலைகளில் இடம்பெறும். இதற்கு முழு மடவளையிலுள்ள பெண்களும் செல்வார்கள். இதனை இந்த உலமாக்கள் தான் செய்வார்கள்.

இவர்கள் பெண்களுடைய சீர்திருத்தம் என்ற விடயத்தை முன்வைத்து செயற்பட்டமையினால் அக்காலத்திலுள்ள மடவளைப் பெண்கள் நல்ல மார்க்க அறிவுள்ளவர்களாக இருந்துள்ளார்கள். அவேளையில் இந்த உலமாக்கள் இன்னுமொரு வேலை செய்தார்கள். இவர்கள் பாடசாலையில் படிப்பித்த காரணத்தினால் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுடன் மிக நெருக்கமாக இருந்து செயற்பட்டுள்ளார்கள். அக்காலத்தில் மடவளையில் இருந்த ஆசிரியர்கள், முழு நாட்டிலும் மிகப் பிரபல்யமான அதிபர்களாக இருந்துள்ளார்கள். அந்த ஆசிரியர்கள் எல்லோரும் இந்த உலமாக்களுடன் தான் பழகினார்கள். அந்த ஆசிரியர்களும் ஆலிம்களைப் போன்று மார்க்க அறிவுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கெங்கெல்லாம் அதிபர்களாக இருந்தார்களோ அந்தப் பாடசாலையிலும் இஸ்லாமிய அறிவைப் போதிப்பதில் பெரிய பங்களிப்பைச் செய்தார்கள். இந்த குறித்த ஆசிரியர்களிடத்தில் தான் மர்க்கம் படித்தோம். ஒழுக்கம் படித்தோம் என்று இன்று கூறுபவர்கள் இருப்பதைக் காணலாம். அதற்கு காரணமாக இருந்தவர்கள் இந்த உலமாக்கள்தான் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அவர்கள் பெண்களுடைய ஒரு பகுதியையும் பார்த்தார்கள் மறுபக்கம் ஆசிரியர்களுடைய பகுதியையும் பார்த்தார்கள். அந்தக் காலத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய வசதி படைத்தவர்கள் தான் ஊரில் இருந்தார்கள். அவர்களுடனும் இவர்கள் நன்றாகப் பழகினார்கள். அந்த வசதி படைத்தவர்கள் தங்களுடைய பெண் பிள்ளைகளுக்கு உலமாக்களையும் ஆசிரியர்களையும் மணமகனாகத் தேடக் கூடிய அளவுக்கு அவர்களுடைய உள்ளத்தில் உலமாக் களையும் உலமாக்களுடன் சேர்ந்து இருக்கக் கூடிய ஆசிரியர்களும் இடம் பிடித்திருந்தார்கள். அந்தளவுக்கு ஆரம்ப காலத்தில் மார்க்கக் கல்வியை நேசித்தார்கள். இந்த மடவளை என்ற பிரதேசத்தை ஒரு கட்டுக் கோப்பான நிலைமைக்கு கொண்டு வந்தார்கள். ஆனால் சமகாலத்தில் புதிதாக ஒன்றைக் கட்ட முடியவில்லை. அன்று அவர்கள் கட்டியதைத் தான் நாம் இன்று மெருகூட்டி யுள்ளோம். அந்தளவுக்கு ஒரு உறுதியான அத்திவாரத்தைப் போட்டிருந்தார்கள். எந்தளவு ஆசிரியர்கள் மிளிர்ந்தார்கள் என்றால் குத்பாக்களில் ஓதக் கூடிய சூராக்களில் பிழைகள் யாரும் விட்டார்

என்றால் அதைக் கூட ஆசிரியர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். அந்தளவு திறமை உள்ளவர்கள் இருந்தார்கள்.

1986 களில் இருந்து 2012 ஆம் ஆண்டு வரைக்கும் நிர்வாக சபையில் அஷ்ஷெய்க் புர்ஹான் (பஹ்ஜி) அவர்கள் சாதாரண உறுப்பினராகவும், பின்னர் நிர்வாக சபை உறுப்பினராகவும் அதற்குப் பின்பு 2012 தலைவராகவும் கடமையாற்றியவர். 1986 இல் சஹீட் எம். ரிஸ்மி வெளிநாடு சென்றவர் 1999 களில் மீண்டும் நாட்டுக்கு வந்தார். 1999 களில் மடவளைப் பெரிய பள்ளிவாசலின் நிர்வாக சபையில் இணைந்து கொண்ட அஷ்ஷெய்க் புர்ஹான் அவர்கள் இருக்கும் காலம் வரையிலும் சஹீட் எம். ரிஸ்மி நிர்வாக சபையில் இருந்து கடமை யாற்றியுள்ளார்.

மடவளையை அண்மித்துள்ள அக்குறணை, தெஹியங்க, கும்புகந்துர. கலஹாமம் ஆகிய பிரதேச மக்களுக் கிடையேயும், மடவளையிலுள்ள உலமாக் களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக் கிடையேயும் நெருங்கிய தொடர்பு ஒன்று இருக்கும். அப்துல் வஹாப் ஹாஜியார் என்ற ஒருவர் இருந்தார். அவரை கணக்கப் பிள்ளை என்று ஊரில் அழைப்பார்கள். அவருடைய சொந்த ஊர் நிகலொல்ல, கலஹாமம். அந்த வஹாப் ஹாஜியார் 1920 களில் திருமணம் செய்து மடவளைக்கு குடிபுகுந்தவர். அவருடைய மார்க்க பங்களிப்பு அளப்பரியது. அவரிடம் மார்க்கத் தேர்ச்சி திறன்பட இருந்தது. அவர் எல்லா உலமாக்களுடன் நன்கு பழகி மார்க்கத் தைத் திறன்பட கற்று கொண்டவர்.

அவை மட்டுமல்ல இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் மௌலானாக் களின் செல்வாக்கும் மடவளை மண்ணில் தாக்கம் செலுத்தியுள்ளது. மடவளைக்கு முத்துக் கோயாத்தங்கல் வருகை தருவார். அவர்களுடைய மகன்மார்கள் வருவார்கள். இவர்களுடன் இணைந்து மடவளை யிலுள்ள உலமாக்களும் குர்ஆன் மத்ரசாவை உருவாக்கினார்கள். அதில் ஒன்றுதான் மடவளையில் மத்தரஸத்துல் ஜலாலியாவாகும். ஜலால்தீன் தங்கல் என்பவர்தான் இந்த மத்ராசாவை ஆரம்பித்தவர்.

2010 ஆம் ஆண்டு வரையிலும் இது மிகவும் சிறப்பாக இயங்கியது. இதன் மூலம் குர்ஆன் தஜ்வீத் பாண்டித்தியம் பெற்றவர்கள் உருவாகினார்கள். மௌலானாவின் வருகையும் மிக முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. அதுதான் தற்போது மெரு கூட்டப்பட்டு இருக்கிறது.

சமகாலத்தில் பாடசாலைப் பிள்ளைகள் கல்வியின் பக்கம் அதிகம் நாட்டம் கொள்வதால் அப்பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியை கற்றுக் கொள்வதில் சந்தர்ப்பம் இல்லாமற் போகிறது. பிள்ளைகள் இதற்காக நேரம் ஒதுக்கிக்

கொள்ள மாட்டார்கள். மார்க்கத்தைப் படித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து மடவளை வை. எம். எம். ஏ. இந்த யோசனையை ஆரம்பத்தில் முன்வைத்தது. இப்படியான வரட்சி நிலையொன்று காணப்படுகின்றது. எனவே வாரத்திற்கு ஒரு முறையாவது அஹதிய்யா வகுப்புக்களை நடத்த வேண்டும் என்ற அறிவுறுத்தல் ஒன்றை முன் வைத்தனர்.

அதற்கு உடன்பட்டதனாலேயே அஹதிய்யாப் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. அதில் ஓதிக் கொடுத்தவர்கள் அனைவரும் உலமாக்களாவர். 1500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். அதன் அதிபராக புர்ஹான் மௌலவி அவர்கள் இருந்தார்கள். இங்கு கற்ற மாணவிகளால் அரபு கல்லூரியொன்று ஆரம்பிக்குமாறு புர்ஹான் ஹஸ்ரத்திடம் ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கு இணங்க மடவளையில் பெண்களுக் கான கதீஜா என்ற அரபுக் கல்லூரி தோற்றம் பெறுகின்றது. இந்தப் பெண்கள் கல்லூரின் அத்திவாரம் அஹதிய்யா, அஹதிய்யாவின் அத்தி வாரம் தான் வை.எம். எம். ஏ. ஆகும்.

இந்த மாணவிகள் கல்வி பயிலும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு சஹீட் எம். ரிஸ்மி பிரதானமான ஒருவர். மடவளையில் பெரிய விழா இடம்பெற்றது. அதன் போது சவூதி ஆரேபியா நாட்டுக்கான தூதுவர் முஹம்மத் மஹ்முத் அல் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தூதுவர் கலந்து கொள்வதற்கான முழு ஒழுங்குகளையும் சஹீட எம். ரிஸ்மி செய்திருந்தார். இந்நிகழ்வில் மடவளை ரஹீமியாவில் விருந்துபசாரம் இடம்பெற்றது.

இப்பெண்கள் கல்லூரிக்கான கட்டிடத்தைக் கட்டுவதற்கு நிதி உதவி சவூதி அரேபியாவினால் வழங்கப்பட்டது. இஸ்லாமிய கலாசார நிலையம் ஆரம்பிக் கப்பட்டது. இதன் தலைவராக நாஜிம் ஹாஜியார் அவர்களும் செயலாளராக சஹீட் எம். ரிஸ்மி அவர்களும் நியமிக்கப் பட்டனர். இதற்கான கட்டிட நிர்மாணப் பணியும் தொடங்கப்பட்டது. இன்று இதில் தான் கதீஜா மத்ரஸா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1995 இல் ஆண்களுக்கான ரஹீமியா மத்ரஸா, ஆரம்பிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு பெண்களுக்கான கதீஜா மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரு மத்ரஸாக்களுடைய நிர்வாக குழுவிலும் சஹீட் எம். ரிஸ்மி இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குர்ஆன் மக்தப் எல்லாப் பள்ளி களிலும் நடைபெறுகின்றது. 1980 களுக்கு முன் ஆரம்பத்தில் ஒரு ஜு்ம்ஆப் பள்ளிவாசலும் ஒரே ஒரு தக்கியாவும் தான் மடவளையில் இருந்தது. அதற்குப் பின்னர் மடவளையில் 16 தைக்கியா பள்ளி வாசல்கள் உருவாகி இருக்கிறது. இந்த

ஒவ்வொரு பள்ளிவாசல்களும் அந்தந்தப் பகுதிகளுடைய தேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. இதுவே ஆக முக்கியமான விடயம்.

இதில் 2011 ஆம் ஆண்டு சஹீட் எம். ரிஸ்மி அவர்களினால் அரபியின் உதவியோடு மேசி லங்காவின் அனுசரணையுடன் கல்கெடியாவத்தயில் புதிய தைக்காப் பள்ளியொன்று நிர்மாணம் செய்யப்பட்டது. அதற்கு அல் அமானி அஸ்போத என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்கு அடிக்கல் நாட்டியவர் புர்ஹான் ஹஸ்ரத் அவர்கள். இவ்வாறு தைக்காக்கள் உருவாக்கப்பட்டன. முதல் தைக்கியா கலிலுர் ரஹ்மான் தக்கியா. இது பஸாரில் உள்ளது. இரண்டாவது பங்களாகெதர தைக்கியா, மலை வீட்டுத் தைக்கியா, புகையிலைத் தோட்டத் தைக்கியா, ரேந்தப் பொலத் தைக்கியா, யஹங்கல தைக்கியா, பிஹில்லதெனிய தைக்கியா, இலுக்குவத்த தைக்கியா, கல்வீட்டுத் தைக்கியா, பொல்கொல்ல பள்ளியவெலத் தைக்கியா, கல்கெட்டியாவத்த தைக்கியா, கொஹொங்காமத்தொட்டுவ தைக்கியா, வங்குவகட தைக்கியா, அபூசாலித் தைக்கியா, கொட்டுவேகெதர தைக்கியா, ஆகியன உருவாகியன.

இந்த தைகக்கியாக்களின் உருவாக்கமானது குர்ஆன் மத்ரஸாவைப் பரவலாக்கி, மக்தப்களை உருவாக்குவதிலும் அந்ததந்தப் பகுதியிலுள்ள ஆண் பெண் பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் மார்க்க ரீதியிலான வழிகாட்டல்களுக்கு மிகப் பெரிய பிரயோசமாகவும் மார்க்க வளர்ச்சி அடிப்படையக இருந்தது. தற்போது 60 க்கும் மேறபட்ட உலமாக்கள் இப்பிரதேச்தில் வசித்து வருகின்றனர்

.

**வைத்தியர்கள்**

ஆரம்ப காலத்தில் வைத்திய சேவை புரிந்தவர் கண் வைத்திய நிபுணர் எம். ஏ. ஜெய்னுலாப்தீன், அபுசாலி ஹாஜியாரின் மகன். ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் மைத்துனர். கனடாவில் வாழ்ந்து மரணம் அடைந்தவர். வைத்தியர் லாபீர், இவர் கேர்ணல் பஸ்லி லாபிரின் தந்தை. இளம் வைத்தியர்கள் நஜீமா அனீஸ், ரிஸ்கா மலீக், ஆஷிப், யஹியான், ஷகீர் நிஸாம், பாதிமா பஸ்னா பழீல்தீன், பாதிமா சஹ்லா அன்வர்.

**அதிபர்கள்**

மடவளை மதீனாலிலுள்ள அதிபர்கள் நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றியுள்ளார்கள். இன்னும் அவர்களை இந்த ஊரகளில் ஞாபகப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

எச். எம். இல்லியாஸ், நிககொல்லையில் அதிபராக இருந்தார். இன்று போய் அவரைப் பற்றி விசாரித்தாலும் அவருடைய ஆளுமைகளைப் பற்றிப் பேசுவார்கள். எம். எல். எம். மர்ஹூம்.

எம். எம். எம். மஹ்ரூப் (முஜீப் ஆசிரியர்) எம். எம். எம். சாஹீர், எஸ். ஏம். தாஹா, எஸ். ஏ. ஆர். எம். தாஹா, யூ. அபுல்ஹசன், எ. எம். எம். முஹ்சீன் (பள்ளியில் இளம் தலைமைகள் உருவாவதற்கு மூல காரணமாக இருந்தவர்). எம். ஐ. எம்.முளவ்பர், ஜே. எம். முனவ்பர், கே.எம். லுக்மான், ஏ.எச்.எம். சித்தீக், ஹிதாயா முதலிய அதிபர்மார்களுடைய கல்விப் பங்களிப்பு அளப்பரியவை. இன்று அவர்கள் எம் மத்தியில் இருந்தும் இல்லாவிடினும் அவர்கள் வளர்த்த பாரம்பரியமும், மரபும் இன்றும் நிலையாகவுள்ளது.

**கலை இலக்கியம்.**

மடவளை மண்ணின் தனித்துவத்தையும், பாரம்பரிய கலை கலாசார, விழுமியங் களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஆக்க இலக்கியம் படைத்து வருகின்ற பலர் உள்ளனர். கலாபூசணம் மடவளை பஸார் நிசார், கலாபூசணம் மடவளைக் கலீல், சிறுகதை எழுத்தாளர் ஜே. எம். சித்தீக், இளம் கவிஞர் அன்சார், எம். சியாம் ஆகியவர்கள் கலை இலக்கிய உலகில் தனக்கென்ற தனி அடையாளத் தைப் பதிவு செய்துள்ளனர்.

**ஊடகம்**

எஸ். ஏ. ஆர். எம். கமருடீன், கே.எம். தாலூத், கலாபூசணம் எஸ். ஏ. சக்கூர், கலாபூசணம் எச். எம். மன்சூர், கலாபூசணம் ஜே. எம். ஹாபீஸ், எம். ஏ. அமீனுல்லா முதலிய ஊடகவியலாளர்கள் இவ்வூருக்கும் நாட்டுக்கும் பயனுள்ள பல அபிவிருத்திப் பணிகளையும் தொண்டுகளையும் செய்து, இம்மண்ணில் மிளர்ந்து கொண்டி ருக்கிறார்கள்.

பன்முக சிந்தனையைக் கொண் டவர் சஹீட் எம். ரிஸ்மி அவர்கள். இன்று சமூக வலைத்தளங்களில் "மடவளை நியூஸ்" என்ற நாமத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அச்சு இணைத்தள ஊடகத்தின் ஸ்தாபக ஆலோசகர். முதலில் குறித்த பெயரில் அச்சில் செய்திப் பத்திரிகையாக இது வெளி வந்தது. அதற்கு இவர் ஆலோசராக இருந்து செயற்பட்டவர். ஊடகத் துறை சார்ந்தவகைளை கௌரவித்தல் மதிப்பளித்தல், அவர்களுடன் நெருங்கிப் பழகுதல் போன்ற நல்ல குணாம்சங்களையும் உடையவர். இந்தப் பரந்துபட்ட ஊடகத்துறை சார்ந்த சிந்தனையும் இவருடைய தலைமைப் பண்பை இளம் தலை முறைகளுக்கு சிறப்புடன் உணர்த்தக் கூடியது. அதன் பின்னர் "மடவளை நியூஸ்" என்ற சமூகவலைத்தள செய்தி ஊடகம் உருவாக்கம் பெற்றது. இந்த சமூக வளைத்தளத்தின் மூலம் முத்திரை பதித்த இயக்குனர்களாக எம். எல். எம். சஜாத் முஹமட், எம். என். முஹமட் நபீஸ், எச். முஹமட் அஸ்மி. முதலியவர்கள் உள்ளார்கள் என்பதைப் பதிவு செய்ய வேண்டிய ஒன்று. இந்த

சமூக வலைத்தளத்தின் ஆரம்ப முதல் இற்றைவரை எழுதி வரும் நூலாசிரியர் இக்பால் அலியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டு**

எஸ் எம். ஜான், எஸ். எம். ஐயூப், எஸ். எம். சாஹிர். (ஹொக்கி) சிராஸ் சஹாப்தீன் (கிரிகெட்) ஆகியவர்கள் தேசியமட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பிரகாசிக்கின்றனர்

**காவற்துறை**

பிரதிப் பொலிஸ் மா அதிபர் வை. ஜி. ஆர். எம். லாபீர் (விளையாட்டு ரகர்), இவர் அதிரடிப்படையில் கமாண்டோவாக சேவையாற்றியவர். கேரணல் பஸ்லி லாபீர், தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் உடன் சக படைப்பில் இணைந்து சேவையாற்றியவர். ஜும்ஆப் பள்ளிவாசல் முன்னால் செல்லக்கூடிய பாதைக்கு இவரது பெயர் சூட்டப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதனை மடவளை வை.எம்.எம்.ஏ ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. யுத்தத்தின் போது தாய் நாட்டுக்காக உயிர் நீத்தவர். இவர்களது சேவைகள் இம்மண்ணுக்கு பெருமை சேர்க்கக் கூடியதாக உள்ளன.

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ. எச். எம். நஸீம், எஸ். பி. ஜி. ஆர். எம். ரிபாத், ஜே.எம். கலீல், ஏ.எம். மகீன், ஏ.ஆர்.எம். இஸ்மாயீல் மற்றும் எஸ்.எம். ஐயூப் (இலங்கை கடற்படை), ரஸ்லான் பாரூக் (விசேட அதிரடிப் படை), ஏ.ஏ.எம். ஹரீஸ் (இலங்கை இராணுவம்) , தற்போது இராணுவத்தில் லெப்டினன் கடமையாற்றும் ரியாஸ் மொஹமட் சித்தீக் போன்ற காவற்துறையினர்களின் பணி மேலும் இம்மண்ணுக்கு புடம் போடும் என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றும் மேலாக இந்த ஊரின் சிறப்பம்சம் தலைமைக்கு கட்டுப்படுதல், பாரிய எண்ணங்களோ, மிக ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற சிந்தனையோ அற்ற நல்ல குணப் பண்பாடுகளையும் அடுத்தவர்களுடன் நேச மனப்பாங்குடன் பழக கூடியவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அதேவேளையில் ஆலிம்களை மிகவும் கண்ணிப்படுத்து கின்றவர்களாகவும், ஊர் பெரிய பள்ளியின் கட்டுப்பாட்டுக்கு பெறுமதிப்பு கொடுப்பவர் களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சமூக கட்டமைப்பு எமது பிரதேசத்தின் எதிர்காலத்திற்கு ஆரோக்கி யமான ஒரு சூழலைத் தோற்றுவிக்கும் என்பதை இங்கு குறித்துக் காட்டப்பட வேண்டியதாகும்.

# சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் கடந்து வந்த பாதை

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் கடந்து வந்த பாதை பற்றிய விவரணம்.

**பள்ளிப் பருவம்**

சஹீட் எம். ரிஸ்மி மத்திய மலைநாட்டின் தலைநகரமான கண்டி மாவட்டத்தில் மிகப் பிரபல்யமான மடவளை மடிகே என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் 1962-12- 09 ஆம் திகதி பிறந்தார். தந்தையின் பெயர் எம் ஐ. எம். சஹீட். தாயின் பெயர் நபீஷா பீவி.

1970 இல் மடவளை மதீனா பாடசாலையில் தான் ஆரம்பக் கல்வியினைக் கற்றார். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கேற்ப ஆண்டு ஒன்று தொடக்கம் 10 வகுப்பு வரையும் அங்கு பயிலும் கால கட்டத்தில் பல்வேறு பிறகிருத்தி பாட செயற்பாடுகளில் ஈடுபாடு உடையவராக திகழ்ந்தார். கல்வி, விளையாட்டு, "கெடட்" போன்வற்றில் மிகவும் ஈடுபாடு காட்டி வந்தார். கல்விப் பெறுபேறுகளில் சிறந்த மாணவர்களுள் ஒருவராகவும் விளங்கினார்.

அவர் கல்வி பயிலும் போது "கெடட்" என்று ஒன்று இருக்கவில்லை. மதீனாப் பாடசாலையில் பேண்ட் வாத்தியக் குழு புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக டி. பி. வேரப்பிட்டிய நியமிக்கப்பட்டதை அடுத்து பாடசாலையில் பெரு வரவேற்பு வைபம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கென "பேண்ட்" உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைமை இருந்தது,

அப்போது முதல் கெடட் பேண்ட் வாத்தியக் குழுவிற்காக மாணவர்கள் தெரிவுகள் இடம்பெற்றன. அதில் சஹீட் எம். ரிஸ்மி அவர்களும் ஒருவர். அதில் அவர் திறன்பட செயற்பட்டார். பேண்ட் வாத்தியக் குழுவின் பொறுப்பாளராக ஆசிரியர் சபருல்லாஹ் இருந்தார். அதிபர்களாக எஸ். எம். தாஹா அவர்களும் மற்றும் ஜே. எம். முனவ்பர் அவர்களும் இருந்தார்கள். இவர்கள் பேண்ட வைத்தியக் குழுவின் மீது அதிக கவனத்தைச் செலுத்தி மாவட்ட மட்டத்தில் பிரல்யம் அடையச் செய்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எந்தளவு எனில் 1978, 1979 களில் கண்டி புனித சில்வெஸ்டர், கண்டி ராஹுலா கல்லூரிகள் முதலிய மிகப் பிரபல்யமான பாடசாலைகளுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டன.

1980 ஆம் ஆண்டு கந்தகெட்டிய தமிழ் வித்தியாலயத்தில் விசேட நிகழ்வு வொன்று இடம்பெற்றது. பிரதம அதிதி களை அழைத்துக் செல்வதற்கு மடவளை மதீனா பேண்ட் வாத்தியக் குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டடிருந்து. அப்பாட சாலையில் பேண்ட் வாத்திய இசைக் கருவிகள் இருந்த போதிலும் ஆனால் அவர்களுக்கு பேண்ட் வாத்தியக் கருவிகளை இசைக்கத் தெரியவில்லை.

அங்கு சென்ற பேண்ட் வாத்தியக் குழு மாணவர்கள் தாங்கள் மடவளை மதீனா மாணவர்கள் என்று தனியே அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அப்பாடசாலை மாணவர்களையும் இணைத்துக் கொண்டு பேண்ட் வாத்தியம் இசைத்தனர். அக்காலம் சமூகங்களுக் கிடையிலான உறவு மிகவும் நெருக்கமாக இருந்தது. அங்கு சென்ற மாணவர்கள் யாரும் மதீனா பாடசாலை மாணவர்கள்

என்று சொல்லவும் இல்லை. எல்லோரும் சேர்ந்து கந்தகெட்டிய மாணவர்கள் போல வரவேற்பினை செய்தார்கள். அதற்கு தலைமை தாங்கியவர் தான் சஹீட் எம். ரிஸ்மியாகும்.

அவர் மாணவப் பருவத்திலேயே தலைமைத்துவப் பொறுப்பு ஏற்று ஒரு முன் மாதிரி மாணவனாக நடந்து வந்துள்ளார். அது இன்றுவரையும் வெவ்வேறு சமூக அமைப்புக்களிலும் தேசிய ரீதியிலும் தலைமைத்துவப் பொறுப்புக்களை ஏற்று இளம் தலைமுறையினரை வழிநடத்துவற்கு போற்றப்படும் தலைமைத்துவப் பண்புகள் இயல்பாகவே அவரிடம் இளம் வயதிலேயே காணப்பட்டது என்று குறிப்பிடலாம்.

அப்பொழுது ‘கெடட் பேண்ட்’, வாத்தியக் குழுவாக மாற்றியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் கெடட் சீரமைக்கப்பட்டது. அதன் முதல் சாஜனாக சஹீட் எம் ரிஸ்மி தெரிவு செய்யப்பட்டார். இன்றைக்கும் மடவளை மதீனா பேண்ட் வாத்தியக் குழு எங்கு சென்றாலும் மிகவும் பிரபல்யமான குழுவாக விளங்குகின்றன. இப்பாடசாலையில் முன்னாள் மதீனாவின் பேண்ட் வாத்திய சங்கம் உருவாக்கப் பட்டுள்ளது. இதில் இணைந்து பங்காற்றக் கிடைத்தமையிட்டு தாம் பெருமிதம் அடைவதாக சொல்லி வருகிறார்.

க. பொ. த. சாதாரண தரம் கற்றதோடு பின்னர் க. பொ. த உயர் தரக் கல்வியினைக் கற்பதற்கு கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரில் இணைந்து கொள்வதில் வெற்றி பெற்றார். 1983 இல் அங்கு க. பொ. த. உயர் தரம் வரை கற்றார். இப்பாடசாலையிலும் கெடட்டில் இணைந்து கொண்டார். தற்போது எஸ். பி. ஆக ஓய்வு பெற்ற ஏ. எச். எம். நசீம் மற்றும் மத்தீஸ் ஐயா பற்றி நாம் எல்லோரும் அறிந்திருக்கலாம். நசீம் என்பவர் சில்வஸ்டர் கல்லூரியில் மிக பிரபல்யமான ஒருவர். அவருடைய தம்பி என்றுதான் அவரைப் பாடசாலையில் எல்லோரும் அழைப்பார்கள். அந்த வகையில் கெடட் அணியிலும் இணைந்து தம் திறமைகளைக் காட்டி வந்தார்.

தங்கு தடையின்றி க. பொ. த. சாதாரண தரத்திலும், குறிப்பாக க. பொ. த. உயர் தரப் பரீட்சையிலும் சிறப்பான பெறு பேறுகளைப் பெற்றிருந்தார்.

**தோல்வி கண்ட தொழில் முயற்சிகள்**

அவர் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதை விட இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக சேவையாற்ற வேண்டும் என்ற மிகுந்த ஆர்வம் இருந்தது. விமானப்படைத் தொழில் நுட்ப பிரிவிலும் மற்றும் ஜேர்மன் தொழில் நுட்பக் கல்லூரியலும் இணைந்து கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கு விண்ணப்பம் செய்தார். இதற்கு தமிழ் மொழி மூலப் பிரிவில் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். 1983 களில் அப்போது போக்குவரத்து அமைச்சராக எம். எச். முஹமட் இருந்தார். அக்கால கட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களினால் பரிந்துரைக்கப்படும் பெயர் பட்டியலுக்குத் தான் எல்லா நியமனங்களும் வழங்கப் படும்.

அவர் அவைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட போதிலும் இறுதியாக அவரது பெயர் பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

அவருக்கு, நாட்டுக்கு தன்னால் ஆன பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு சிறு பாரயத்தில் இருந்தது. அதிலும் முதலாவது. இரண்டாவது மூன்றாவது என்ற வகையில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றினார். இது தொடர்பில் புலனாய்வுத் துறையினாலும் விசாரணை

செய்தார்கள். அதற்கு ஊரிலுள்ளவர்கள் பிரமுகர்கள் நல்ல ஒழுக்கமிக்க பிள்ளையென நற்சான்றிதழ்கள் வழங்கியிருந்தார்கள்.

எனினும் மாவனல்லையிலுள்ள அவருடைய நண்பர் முனவ்பர் மற்றும் அரூஸ் ஆகிய இருவரும் நுழைவுக்கான கடிதம் வரவில்லையா? எனறு கேட்கும் வரைக்கும் தனக்கு ஜேர்மன் தொழில் நுட்ப கற்கை நெறிக்கும் மற்றும் விமானப் படைக்கும் அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் இருந்தார். அதன் போது குறித்த நண்பர் தனக்கு பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்து அனுப்பி விட்டதாகவும் தெரிவித்திருந்தார். இது அவருக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்தது. அதன் தலைமைக் காரியலயம் நீர்கொழும்பில் இருந்தது. அங்கு சென்று பரிசீலனை செய்து பார்த்தால் பாராளுமன்ற உறுப்பினரின் தெரிவிலிருந்து அவர் பெயர் நீக்கப்பட்டிருந்தது. அப்பாட நெறிக்கு தோற்றுவதற்கான சீருடையை தைத்துக் கொள்வதற்கு கூட கடிதம் அனுப்பி இருந்தார்கள். இறுதி நேரத்தில் அவர் பெயர் வெட்டப்பட்டிருந்தது. அது அவருக்கு மிகவும் கவலையை தோற்றிவித்தது. அவரால் தாங்க முடியாமல் இருந்தது. ஒரு கோபமும் வெறித்தனமும் ஏற்பட்டது.

இதே போன்று தான் 1984 களில் உதவிப் பொலிஸ் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. மறைந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபூர் அவர்களே புதியவர்கள் இணைத்துக் கொள்வதற்கான பிரிவுக்கு பொறுப்பாக இருந்தார். தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் அவர் காலத்தில் தான் அதிகளவு பொலிஸில் இணைந்து கொண்டார்கள். எஸ். ஐ. பதவிகள் நிறையப் பேருக்கு வழங்கப்பட்டன.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபூர் அவர் தந்தையின் வகுப்புத் தோழன். இருவரும் மாத்தளை சாஹிராவில் ஆங்கிலப் பிரிவில் கல்வி கற்றவர்கள். இதற்கு விண்ணப்பம் செய்யப் போவதாக தந்தையிடம் தெரிவித்தார். அப்பொழுது இன்னாருடைய மகன் என்று மட்டும் சொல்ல வேண்டாம் என்று தந்தை அழுத்தமாக கூறி விட்டார். ஆனாலும் அவர் மனம் தளர்ந்து விடாமல் அதற்கும் விண்ணப்பம் செய்தார்.

நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றினார். நேர்முகப் பரீட்சையினை திறன்பட செய்தமையால் இதிலும் நியமனம் கிடைக்கும் என்று உறுதியோடு வந்து தாயிடம் கூறினார். அப்போதே தாயார் ‘இதிலும் தனக்கு நம்பிக்கை இல்லை’ என்று கூறி விட்டார். இதிலும் இறுதி நேர்முகப் பரீட்சை வரைக்கும் சென்றார். இதிலும் அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப் பட்டிருந்தமையால் அவர் பெயர் நீக்கப்பட்டடிருந்தது. உண்மையிலேயே அவருக்கு அரச பாதுகாப்பு கடமையில் இணைந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை. அவருக்கு தொடர்ச்சியாக தோல்வி நிலை ஏற்பட்டது. இதற்குப் பின்னர்தான் புதிய திருப்பமுனையொன்றுக்கு வருகின்றார். இதற்கு மாற்றுவழியொன்றைக் கையாளுவதென்றால் சிறந்த உபாயம் தனியார் கம்பனில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்தில் முனைப்பினைக் காட்டத் தொடங்கினார்.

**தனியார் கம்பனியில் வேலையில் இணைந்து கொள்ளல்**

அவருக்கு கம்பனியில் வேலை கிடைத்தது. அது ஏற்றுமதி இறக்குமதி கம்பனியாகும். ஒரு சிறிது காலம் லிகிதராக கடமையாற்றினார். அதற்குப் பின்னர் “இராணி பிரதர்” என்று அழைக்கப்படும் ஒரு

பாய் ஒருவரின் கம்பனியில், தொழிற் சாலையில் விநியோக முகாமையாளராக இணைந்து கொண்டார். ஒரு மாவட்டத்திற்கு பொறுப்பாக செயற்பட்டார். அவருடைய சேவையின் காரணமாக பதவி உயர்வு பெற்று மாவட்ட முழுக்க சேவையாற்றினார். அதன் பின்னர் நல்ல வருமானத்தைப் பெற்றதுடன் அவர்களுடைய கம்பனியின் முகவராகவும் செயற்படத் தொடங்கினார்.

1986 இல் நாட்டில் கடுமையான யுத்தக் காலம் நடைபெற்றது. நாடளாவிய ரீதியில் எல்லா இடங்களுக்கும் செல்வதற்கு அவர் தாய் அனுமதிக்கவில்லை. அவர் ஒரு நாள் கிழக்கு மாகாணம் சென்ற சமயம் விடுதலைப் புலிகள் அவர் முன்னால் சென்ற வாகனத்தை நிறுத்தி சாரதியை தாக்கி விட்டு அந்த வாகனத்தை எடுத்துச் சென்ற சம்பவத்தை நேரில் கண்டார். அதற்குப் பின்பு குறித்த தொழிலை செய்வதற்கு அவருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. அத்துடன் அவரின் தாயாருக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை. மேலும் படிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. ஒருபுறம் நாட்டின் போர்க்காலப் பிரச்சினை மறுபுறம் ஜே. வி. பி. கிளர்ச்சி. இப்படி நாட்டின் நிலைமை மிக மோசமாக இருந்தது.

**வெளிநாட்டுப் பயணமும் கல்வியை தொடர்தலும்**

எல்லோரும் போல் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்தது. அந்த வகையில் 1986 இல் பஹ்ரைன் நாட்டுக்கு தொழில் வாய்ப்புக் காகச் சென்றார். ஆனாலும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

அவர் முதலில் அரபு மொழி யினைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. ஆறு மாத காலத்தில் அரபு வாய்மொழி மூலக் கற்கை நெறியை நிறைவு செய்தார். மேலும் சவூதி அரேபியாவில் மன்னர் சவூத் பல்கலைக் கழகத்தில் அரபு மொழியில் ஒரு வருடம் டிப்ளோமா கற்கை நெறியினையும் நிறைவு செய்தார்.

இஸ்லாமிய வங்கி டிப்ளோமா, பி. ஜி டி பட்டப் படிப்பு, எம். பி. ஏ. பட்டம் முதலியனவற்றை நிறைவு செய்தவர். மேல் படிப்பில் அதிக நாட்டமும் ஆர்வமும் உடையவர். தம் படிப்பை கைவிடாமல் தமது 50 வயதிலும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து கல்வித் துறையில் தம் இலக்கை அடைந்துள்ளார். இவரது இந்த விடா முயற்சியே அவரது சமூகப் பணிகளிலும் பாதிப்புச் செலுத்துகின்றது.

அதற்கு காரணம் தன் பிள்ளைகள் நன்றாகப் படிக்கின்றார்கள். வீட்டுக்குள் கல்வி சூழல் உருவாக வேண்டும் என்ற ஆர்வமும், மறுபுறம் மனைவி ஓர் ஆசிரியை ஆவார். ஆகவே தானும் படிக்க வேண்டும். தம் வீட்டுச் சூழலும் கல்விச் சூழலாக மாற்றம் பெற வேண்டும். பிள்ளை களின் கல்விக்காக முழுப் பங்களிப்பையும் மனைவி வழங்குகின்றார். தானும் பட்டப் படிப்பையும் மேல் பட்டப் படிப்பையும் முடிக்க வேண்டும் என்ற அவாவுடன் குறித்த இலக்கை அடைந்தது மட்டுமல்ல படிப்புக்கு வயது எல்லை இல்லை என்பதை நிரூபித்தும் காட்டியுள்ளார்.

தமது பிள்ளைகளுக்கு ஒரு கௌரவம் இருக்க வேண்டும். தமது தகுதியும் தகைமைகளும் நல்லதாக இருக்க வேண்டும். கற்க கற்கத்தான் புலமை விருட்சத்தினின்று கனிந்து முதிர்ந்த அறிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு மேலாக அரசாங்கத்தின், இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவகத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும், தற்போதைய அகில இலங்கை வை. எம். எம். ஏ.

பேரவையின் தேசிய தலைவராகவும் இருந்து செயற்படுவதற்கும் அதை மேலும் மேன்மைப்படுத்தி உந்து சக்தியோடு நிமிர்த்தி வைப்பதற்கும் அவர் பெற்றுக் கொண்ட கல்வி துணை புரிந்தது.

**அரபி மொழி பேச அரபி ஒருவரின் உதவி.**

இருந்த போதிலும் அங்கேயும் ஆரம்பத்தில் சோதனை காத்திருந்தது. அங்கு சென்று 10 நாட்களில் அந்தக் கம்பனியினை அரசாங்கம் மூடும்படி சொல்லி விட்டது. அங்கு சென்ற அவருக்கு தொழில் இல்லை. பெரும் திண்டாட்டம். அக்கம்பனி வேறு எங்காவது போகும் படி கூறியது. சவூதி அரேபியா நாட்டில் இருந்து வந்த பெரிய சேகு ஒருவர் அவருக்கு அழைப்பு விடுத்தார். அதற்கு குறித்த நிறுவனம் அனுமதி வழங்கியது.

அந்தச் சேகு அவரை அழைத்துச் சென்று சாரதி வேலைக்கு அமர்த்தினார். அது ஆரம்பத்தில் அவருக்கு திருப்தியாக இருக்கவில்லை. விருப்பமின்மை காணப் பட்டது. ஆனாலும் அதிலும் ஒரு நன்மை இருந்தது. அவர் அரபு மொழி கற்பிக்கக் கூடிய ஒரு விரிவுரையாளர். அவருக்கு கண்கள் தெரியாது. அவருடன் பயணம் செல்லும் போது அவர் மீது ஒரு அலாதியான மனிதாபிமானம் ஏற்பட்டது. அவருக்கு இரு மனைவிமார்கள் இருந்தார்கள்.

குறித்த இந்த இரு மனைவி மார்களுக்கு பொருட்கள் வாங்கும் போது சரி சமனாகத்தான் வாங்குவார். அதிகளவில் பொருட்கள் வாங்குவார். சில சந்தர்ப்பங்களில் 12 பெட்டி இறைச்சிக் கோழிகள் வாங்கினால் 7 பெட்டி இரண்டாவது மனைவிக்கும் 5 பெட்டி முதல் மனைவிக்கும் பிரித்து வழங்கும்படி கூறுவார். எனினும் இந்தப் பெட்டிகளை பகிர்ந்தளிப்பதில் நியாயத் தன்மை இருக்கவில்லை. எனவே அப்பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது சேகு அவர்களுக்கு தெரியாமல் சரிசமனாகப் பிரித்து இருவருக்கும் கொடுத்து விடுவார். சேகு அது பற்றி பெரியளவில் ஆராய்வதில்லை.

இப்படி அவர் சம்பளத்தை எடுத்து எண்ணிப் பார்க்க அவரிடம் தான் கொடுப்பார். அவருடன் இருந்தே அரபு மொழியைக் கற்றுக் கொண்டார். அரபு மொழி மீது அதிக பற்று ஏற்பட்டது. அவருடன் இருந்து அரபு மொழியை சரளமாக பேசும் வாய்ப்பு கிடைத்தது.

**வியாபாரத்தில் முன்னேற்றம்**

1990 களில் குவைட் தாக்குதல் இடம்பெற்றது. சவூதி அரேபியாவிலும் அரபிகள் அச்சத்தில் இருந்தார்கள். அங்கு ஏதாவது சரி ஒரு வியாபாரம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நகரில் இருந்து பொருட்களை வாங்கிச் சென்று அங்குள்ள கிராமங்களில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். ஒரு கிலோ தக்காளி 1 ரியாழுக்கு வாங்கி 12 ரியாழுக்கு விற்பனை செய்தார். 25 ரியாழுக்கு ஈச்சம் பழத்தை வாங்கி 150 ரியாழுக்கு விற்பனை செய்தார். அப்பொழுது வலை குடா போர் உக்கிராமாக நடைபெற்றது. ஷெல்கள் குண்டுகள் விழும் பெரும் சப்தங்கள் காதில் கேட்கும். ஆனாலும் அச்சமின்றி 200 கிலோ மீட்டர் தூரம் தானே வாகனத்தை செலுத்திச் சென்று பொருட்களை விற்பனை செய்வார். இவைகளை பள்ளிகளில் முன் வைத்துத் தான் வியாபாரம் செய்தார். பொதுவாக யுத்த காலகட்டத்தில் மனதில் ஒரு அச்ச நிலை தோன்றியிருந்தாலும் துணிச்சலோடு அந்த வியாபாரத்தை தனியாக கஷ்டப்பட்டு செய்தவர்.

பின்னர் இன்னுமொரு அரபியின் அறிமுகம் கிடைத்தது. அந்த புதிய

சேகுவிடம் பாடசாலைகளில் சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. அதனைச் நடத்த ஆட்கள் இல்லை. அதை செய்தவர்கள் விட்டுச் சென்று விட்டார்கள். அதனை எடுத்து தாருங்கள் " எனக் கேட்டார். அந்த சேகு சுகாதார அமைச்சின் ஊடாக அனுமதி எடுத்துக் கொடுத்தார். பாடசாலைகளில் சிற்றுண்டிச் சாலைகள் திறந்தார். அங்கு சகோதரர்கள் இருவர் இருந்தார்கள். பகுதிநேர வேலை களுக்காக அவர்களையும் இணைத்துக் கொண்டார். இவ்வாறு அவர் ஐந்து கடைகள் திறந்தார். இரு சில்லறைக் கடைகளுடன் மூன்று சிற்றுண்டிச் சாலைகள் திறந்து வியாபாரம் செய்தார். வியாபாரத்தை சோர்வின்றி சுறுசுறுப்பாக குறித்த புதிய அரபியுடன் இணைந்து மேற்கொண்டார்.

இந்தியா மற்றும் இலங்கை நாடுகளில் உள்ளவர்கள் 100 க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை செய்தார்கள். அவர் குடும்பத்தில் யார் யாருக்கெல்லாம் உதவி செய்ய முடியுமோ அவர்களை எல்லோரையும் அங்கு வரவழைத்து வேலை வழங்கினார். அப்பொழுது அந்நாட்டு அரச உத்தியோகஸ்தர்களுடன் நட்புறவைப் பேணி இலங்கையை சேர்ந்தவர்களுடைய பிரச்சினைகளை அங்கே முடித்துக் கொடுக்குமளவுக்கு பொது வேலைகளிலும் ஈடுபட்டார்.

அது மட்டுமல்ல அவர் வீட்டில் இரு அறைகள் இருந்தன. அந்தரத்தில் வருபவர்களுக்கென ஒதுக்கி வைத்திருந் தார். யார் வந்தாலும் தங்க வைத்து அவர்களுக்கு சாப்பாடு வசதிகள் ஏற்பாடு கள் செய்து கொடுத்து அவர்களுடைய தேவை முடியும் வரை வைத்திருந்து அனுப்பிவைப்பவர். ஆனாலும் அவர்களை கவனிக்க நேரம் இருக்காது. அவருக்கு வேலைப்பளு மிக அதிகம். ஆனாலும் அதற்குரிய சகல ஏற்பாடுகள் செய்து கொடுத்திருப்பார்.

அங்குள்ள ஆசிரியர்களை அழைத்துச் செல்வதற்கான போக்கு வரத்துச் சேவையினை நடத்தி வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் மனைவி பிள்ளைகள் எல்லோரும் அவருடன் வந்து விட்டார்கள். அவர் தனியான பிரத்தியேக போக்குவரத்துச் சேவையினை நடத்தினா லும் அவருடைய பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு அதற்கென மைத்துனர் ஊடாக வாகன ஒழுங்குகளை செய்து கொடுத்திருந்தார்.

பொதுவாக அவர் 24 மணித்தி யாலத்தில் 21 மணித்தியாலம் வேலை செய்வார், மிகக் கடுமையான உழைப் பாளி. முழு மூச்சாக உழைத்தவர். ஒவ்வொரு கடையிலும் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலம் இருப்பார். எல்லா கடைகளுக்கும் பொருட்களை வாங்குவதற்கு யாரையும் நம்பியும் பணம் கொடுக்க மாட்டார். அவர் கடைகளுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களை யும் தான் கொள்முதல் செய்வார். அப் பொருட்களை தானே கொண்டு சென்று எல்லாக் கடைகளுக்கு விநியோகம் செய்வார்.

இவ்வாறு வியாபாரத் துறையில் பல கடைகளையும் நடத்தி இவர் வாகன போக்குவரத்து சேவையினையும் செய்து வந்த இவர் வியாபாரத் துறையில் பாரிய முன்னேற்றதைக் கண்டார்.

1998 களில் சவூதியில் மகள் சாரா கிடைத்தார். 2000 ஆம் ஆண்டளவில் இலங்கை செல்ல வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தார். சவூதியில் இருக்கும் காலத்தில் போதுமானளவு சொத்துக் களைச் சேர்த்துக் கொண்டார். இதனைப் பராமரிக்க வேண்டும். ஊரோடு சேர்ந்து

வாழ வேண்டும் என்ற அடிப்படையில் 1998 களில் செப்டம்பர் மாதம் மனைவி பிள்ளைகள் மீண்டும் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். 1999 களில் அவர் ஒக்டோபர் மாதம் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வந்தார்.

**திருமண பந்தம்**

1990 இல் திருமணம் செய்தார். மனைவியின் பெயர் சித்தி ரலீனா. ஊர் கட்டுகஸ்தோட்டை. அவர் ஓர் ஆசிரியை. நான்கு பிள்ளைகள். மூத்த மகன் பஹத் எம் ரிஸ்மி, BSc(Hons), MSc (UK), PGD (CAN), மடவளை மதீனா, கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி, சவுதி அரேபியாவிலுள்ள தூதுராலயத்தின் பாடசாலை முதலிய பாடசாலைகளில் கல்வி கற்றவர். ரஜரட்ட பல்கலைக் கழகம் தெரிவு செய்யப்பட்டவர். லண்டனில் முதுமாணி பட்டப்படிப்பை முடித்து விட்டு கனடாவில் பயோடெக்னாலஜியில் கல்வியாளராகவும், ஆராய்ச்சியாளரா கவும், மாணவ ஆலோசகராகவும் அனுபவம் பெற்றவர். தற்போது Apotex Inc (கனடா) இல் தரக் கட்டுப்பாட்டு வேதியிய லாளராகவும், மேலும் டொராண்டோ இன்ஸ்டிடியூட் ஆ∴ப் ∴பார்மசூட்டிகல் டெக்னாலஜியில் வருகை தரக்கூடிய விரிவுரையாளராாவும், உத்தரவாதக் கூட்டாளராகவும் பணிபுரிகிறார். இவர் கனடாவில் இரு குழந்தைகளுடன் குடும்ப சகிதம் வாழ்ந்து வருகிறார். அவர் மனைவி சகூரா. அவரும் ஒரு விஞ்ஞாப் பட்டதாரி. சகோதரர் சபீன் சாலியின் மகள். இவருடைய எதிர்பார்ப்பு கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்வதாகும்.

இரண்டாவது மகன் சஹத் எம் ரிஸ்மி, BEng(Hons), MTech (Aus) மடவளை மதீனாவில் க. பொ. த சாதாரண தரம் வரை படித்தவர். உயர் தரக் கல்வியினை புனித திருத்துவக் கல்லூரியில் கற்றவர். அவர் லண்டன் சென்று பட்டப் படிப்பை நிறைவு செய்தவர். அதன் பின்பு ஆஸ்திரேலியாவில் முதுமாணி பட்டப்பின் படிப்பை முடித்து விட்டு சுகாதாரம், கல்வி மற்றும் வணிகக் துறைகளில் தகவல் தொழில் நுட்ப நிபுணராக தொழில் புரிந்து அனுபவம் பெற்றவர். தற்போது வெஸ்∴பார்மர்ஸ் குழுமத்திற்கு சொந்தமான புகழ்பெற்ற ஆஸ்திரேலிய ஈ-காமர்ஸ் நிறுவனத்தில் மென்பொருள் மேம்பாட்டு பிரிவில் வணிக ஆய்வாளராக பணிபுரிகிறார். 26 வயதில் இருவரும் முதுமாணிப் பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள் என்பது முக்கிய விடயம்.

சஹீட் எம். ரிஸ்மி தம் பிள்ளை களை திருமணம் முடித்துக் கொடுக்கும் போது அவருடைய எதிர்பார்ப்பானது வசதிகள் அல்ல. அப்பிள்ளைகள் நல்ல குடும்பமாக இருக்க வேண்டும். மார்க்கப் பற்று இருக்க வேண்டும். ஒரு பட்டப் படிப்பை மேற்கொண்டவராக இருக்க வேண்டும். பெண்ணாக இருந்தாலும் சரி ஆணாக இருந்தாலும் சரி. மகளுக்கு கணவனைத் தேடும் போதும் ஒரு பட்டதாரியினைத் தான் தேடினார். மகன்மார்களுக்கு மனைவியைத் தேடும் போது பட்டதாரிகளைத் தான் தேடினார்.

அவர்களுடைய எதிர்கால சந்ததி யினர்கள் கல்விச் சூழல்மிக்க குடும்பமாக மாற வேண்டும். தன்னுடைய பேரப் பிள்ளைகள் வெறுமனே இந்நாருடைய பிள்ளைகள் என்று சொல்லாமல் ஒரு விஞ்ஞாயினுடைய பிள்ளை. ஒரு பொறியியலாளருடைய பிள்ளை என்று சொல்லப்பட வேண்டும். காரணம் என்ன வென்றால் அது பெருமைக்காக அல்ல. எதிர்காலத்திலுள்ள தலைமுறையினர்கள் இதன் மீது ஆசையும் ஆர்வமும் வர வேண்டும். எல்லோரும் இப்படித்தான் கஷ்டப்பட்டு வந்தவர் என சொல்ல வேண்டும்.

மகள் மொஹமட் ரிஸ்மி சாரா தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மொழித் துறைக்கு தெரிவு செய்யப் பட்டவர். அவர் வேறு துறையைத் தெரிவு செய்ய வேண்டும் என்று விரும்பியதால், B.Sc.Psychology & Counseling(R)•Dip in Counseling & Psychology•Advanced Certificate in Psychotherapy கற்கையை தொடர்கின்றார். அவர் திருமணம் செய்து விட்டார். மருமகன் எம்.ஐ.எம். முஹமட், விமானம் மற்றும் விமானத் துறை முகாமைத்துவ பட்டப் படிப்பு முடித்துள்ளர். கடைசி மகன் முஹமட், படித்துக் கொண்டிருக்கிறார். அவரது இலக்கு, தரவு விஞ்ஞானி, செயற்கை நுண்ணறிவு ஆக வேண்டுமென்பதே. அவர் கிரிகட் கடினப் பந்து விளையாட்டில் ஆர்வமுள்ளவர் .

மனைவி ரலீனா புனித அந்தோனி யார் கல்லூரியில் ஆசிரியராக (SLTS Gr1,GTC முதலாம் தரத்தில்) கடமை புரிந்து விட்டு இறுதியாக கட்டுகஸ்தோட்டை சாஹிரா கல்லூரியிலும் கல்விப் பணியாற்றி விட்டு ஓய்வு பெற்றுள்ளார்.

**அரசியலில் ஈடுபாடுகள்**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எழுச்சியின் அலை நாடெங்கும் வீசும் கால கட்டம் ஆகும். ஆனாலும் மடவளைக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு பொருத்தமான அமைப்பாளர் ஒருவர் தேவையாக இருந்தது. அவருக்கு அரசியல் தெரியாது. எந்தவொரு அனுபமுமில்லை. ஆனாலும் அவரைச் சந்திக்க வேண்டுமென ரவூப் ஹக்கீமிட மிருந்து அடிக்கடி அழைப்புக்கள் வந்தன. அவர்கள் மடவளைக்கு அமைப்பாளராக இருக்க வேண்டும் என கோரிக்கையும் சேர்த்து விடுத்தார்கள். ஆனாலும் அவர் முடிவு எடுப்பதில் ஒரு தர்ம சங்கடமான நிலையில் இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் அவருடைய மதினி ஆசிரியை ரிஸானாவின் திருமணம் திகன மல்லிகா ஹோட்டலில் நடை பெற்றது. அத்திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஸ்ரப் வருகை தந்திருந்தார். அவர் முகத்தில் காணப்பட்ட முகப்பொழிவு சஹீட் எம். ரிஸ்மி அவர்களுக்கு அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது. 1999 களின் இறுதியில் விருப்பம் தெரிவித்து அமைப்பாளர் பதவியைப் பெற்றுக் கொள்கிறார்.

2000 ஆம் ஆண்டில் மர்ஹூம் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் மரணம் அடைந்தார், அஷ்ரப் அவர்களுடைய அனுதாப அலையோடு இரு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. அத்தேர்தல் கள் உயிர்களைப் பலிகொடுத்த தேர்தல் ஆகும். அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். ரவூப் ஹக்கீம் தனித்துப் போட்டியிட்ட தருணம் அது.

2000-10-10 இல் நடைபெற்ற தேர்தலிலின் போது வாக்குச் சாவடிகளில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. அதில் 18 வாலிபர்கள் பெரும் காயங்களுக்கு உள்ளார்கள். இதில் ரவூப் ஹக்கீம் அமோக வெற்றி பெற்றார்.

சஹீட் எம். ரிஸ்மியின் சகோதரர் தற்போது லண்டனில் வசிக்கும் ரிபான் கடும் காயங்களுக்கு உள்ளானார். அதே வேளை சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் சிறு காயத்திற்கு உள்ளானார். இந்த தேர்தலில் காயப்பட்ட 18 பேரைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்காகக ரவூப் ஹக்கீம் அவர்களை தமது வாகனத்தில் முன்னால் ஏற்றி ஒவ்வொரு வீடாக அழைத்துச் சென்றார். அதன் பின்னர் தான் அரசியலில் துடிப்போடு முழு மூச்சாக இயங்கு

வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அக்கால கட்டத்தில் பைசர் முஸ்தபா கூட ரவூப் ஹக்கீமின் வெற்றிக்காக வேலை செய்தார்.

இப்படிச் செல்லும் ஒன்றரை வருடத்தில் மீண்டும் அரசாங்கத்தில் மாற்றம் நடை பெறுகின்றது. அரசாங்கம் கலைக்கப்படுகிறது. தனித்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ. தே. கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது. டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி மீண்டும் தேர்தல் நடந்தது.

**உடத்தலவினையில் 10 உயிர்களைப் பலியெடுத்த தேர்தல்**

இந்த தேர்தலின் போது மடவளை யின் மீது எதிர் தரப்பினர்களுக்கு ஒரு பார்வையிருந்தது. உடதலவின்னையில் ஒரு பெரும் தாக்குதல் இடம் பெற்றது. அதில் 10 பேர் உயிரிழந்தார்கள். இது இப்பிரதேசத்தில் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு சோக வரலாற்றுச் சம்பவம் ஆகும்.

தேர்தல் தினத்தில் மடவளைச் சேர்ந்த வாலிபர்கள் 14 பேர் வாகனத்தில் சென்றனர். அவர்கள் உடத்தலவின்னை யில் வைத்து எதிர் தரப்பினர் வழிமறித்து பெரும் தாக்குதலை மேற்கொண்டனர். இந்த துப்பாக்கித் தாக்குதல் சம்பவத்தில் மடவளையைச் சேர்ந்த 10 பேர் உயிர் இழந்ததுடன் 4 பேர் படுகாயமுற்றனர்.

இதன் போது அந்த இடத்திற்கு கண்டி பொலிஸ் நிலையத்தின் தேர்தல் கண்காணிப்பு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த மடவளையைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்கர் ஏ. எச். எம். நஸீம் அவர்கள் உடன் சென்று எத்தனை பேர் உயிர் இழந்துள்ளார்கள் எனவும் எத்தனை பேர் படுகாயமுற்றுள்ளார்கள் எனவும் அறிவித்தார். உண்மையான நிலைப்பாடு அவர் ஊடாக தெரியவந்தது. அந்த இடத்திற்கு யாரும் போக முடியாது. அப்படிப் போனால் கூட மேலும் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சம் இருந்தது.

இந்த உயிர் இழந்த ஜனாஸாக் களை நல்லடக்கம் செய்யும் இரு நாட்கள் வரையிலும் மடவளைப் பிரதேசத்திலுள்ள அனைத்து மக்களும் நோன்பு நோற்று இருந்தார்கள். தண்ணீரை மட்டும் குடித்து விட்டு முழு ஊர் மக்கள் எல்லோரும் பட்டினி நோன்பு இருந்தார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெறும் ஓரிரு மணித்தியாலயத்திற்கு முன்னர் வாகன மொன்றில் வந்த நல்ல இதயங்கள் கொண்ட மனித நேயமிக்க பௌத்த தேரர் ஒருவர் சஹீட் எம். ரிஸ்மி அவர்களை சந்தித்து "மாலையில் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல தயாராகும் தருணத்தில் பெட்டியின் பின்னால் யாரும் போக வேண்டாம். பெட்டியின் பின்னால் சென்றால் எதிர் தரப்பினர் தாக்குதுல் நடத்த திட்டமிட்டுள்ளார்" என்று கூறி விட்டுச் சென்றுள்ளார்.

பெட்டிகளை வாக்குகள் எண்ணு கின்ற மத்திய நிலையத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கு சற்று முன்னர் அவர் உடனே தமது ஆதரவாளர்களிடம் யாரும் பெட்டியின் பின்னால் போக வேண்டாம் என உரத்துக் கூறி அறிவுறுத்தல் விடுத்து இருந்தார். ஆனாலும் எதிர்பாராமல் பெட்டியின் பின்னால் செல்வதற்கு வேட்பாளர் திடிரென்று வாகனம் ஒன்றை அனுப்பியிருந்தார்கள்.

சஹீட் எம். ரிஸ்மி இந்த தருணத் தில் யாரும் வாகனத்தில் ஏற வேண்டாம் என்று பெரும் சப்தம் போட்டு உரத்துக் கூறிய போதிலும் அந்தச் சொல்லை யாரும் பொருட்படுத்தவில்லை. மடவளை

யைச் சேர்ந்த துடிப்புள்ள இளம் இரு வாலிபர்கள் வண்டியைக் காண உற்சாகத் துடன் முதலில் ஏறி விட்டார்கள். அதைக் கண்டு அங்கு நின்ற ஏனைய சகோதரர் களும் ஏறினார்கள்.

அந்த பௌத்த தேரரின் கூற்றுப் படி வாக்குப் பெட்டிக்குப் பின்னால் சென்ற வாகனம் திட்டமிட்டபடி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் மடவளையைச் சேர்ந்தவர்கள் 10 பேர் உயிர் இழந்தார்கள். அதேவளையில் இத்தேர்தல் வன்முறை யின் போது கம்பளையில் ஒருவரும் தெல்தோட்டைச் சேர்ந்தவர் ஒருவரும் மொத்தமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்

இந்த தேர்தலுக்குப் பின்னர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு நான்கு பலமான அமைச்சுப் பதவி வழங்கப் பட்டது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் கள், கப்பல், துறைமுகம், புனர்வாழ்வு, கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி வழங்கப்பட்டது.

அந்தச் சம்வத்திற்கு பிறகு முதலாவது பெருநாளை மடவளைப் பிரதேச முஸ்லிம்கள் ஊர் முழுக்க வெள்ளை ஆடை அணிந்து துக்கம் அனுஷ்டித்தனர். அன்று பெருநாள் தொழுகை தொழுத பின்னர் சஹீட் எம். ரிஸ்மி இல்லத்தில் காலைச் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பள்ளியில் தொழுது விட்டு பெரும்பாலான மக்கள் அவரது இல்லத்தில் உணவு சாப்பிட்டார் கள். இதில் ரவூப் ஹக்கீம், சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்கள் வேறுபாடு களின்றி எல்லோரும் கலந்து கொண்டனர். கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். அச்சம்பவத்தில் உயிரிழந்த வர்களை ஞாபகமூட்டி விசேட துஆப் பிரார்த்தனையும் இடம் பெற்றதோடு அவர்களுக்கு அனுதாப விசேட உரையும் இடம்பெற்ற நிகழ்வாக அது அமைந்தது.

சஹீத் ரிஸ்மி அவர்கள் வெளி நாட்டில் இருந்து வந்தவுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றை ஆரம்பித்திருந்தார், அப்போது அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் அரசியலுக்குள் நுழைந்து பல அரசியல் சவால்களை எதிர்நோக் கினார். இவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் 2001 - 12 - 05 ஆம் திகதி உயிர்கள் காவு கொள்ளப்பட்ட நாளை அவர் மட்டுமல்ல மடவளை மக்களும் என்றும் மறக்க முடியாத தினம் என்று எப்பொழுதும் ஞாபமூட்டி வருகின்றனர்.

**மடவளை தேசிய மீலா விழாவின் பிரதான நபர்**

2002-01-02 ஆம் திகதி அந்த ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா ஏறாவூரில் நடத்த தீர்மானிக்கப் பட்டிருந்தது. இது கட்சியின் தவிசாளர் பஷீர் சேகு தாவூத்தின் பரிந்துரைக்கு இணங்க அங்கு நடத்துவது என திட்டமிட்டி ருந்தார்கள். ஊரில் 10 பேர்களின் உயிர்கள் பலியாகியுள்ளன. இதனை அமைச்சரிடம் கதைத்து ஊருக்கு கொண்டு வர வேண்டும் என்று ஊரில் முக்கிய நபர்களில் ஒருவரான எம்.எஸ். ஜாபீர் அவரிடம் தெரிவித்தார்.

அதன் பின்பு 2002-01-03 அன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களை அவரது காரியாலயத்திற்கு வர வழைத்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள். சஹீட் எம். ரிஸ்மி, ஏ.எல்.எம். ரிசாட், ஜே.எம். யாசீன் சேர், மௌலவி ஏ.டப்லிவ்.எம். நவாப்தீன், எம்.எம். ரியாஜ், எம்.எஸ்.எம். மசூர், லண்டனில் வசிக்கும் ஏ.எம். ரிஸ்வான் முதலிய ஆறு முக்கியஸ்தர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஊரில் 10 பேரை இழந்திருக் கின்றோம். தேசிய மீலாத் விழாவை தங்களுடைய ஊருக்கு தர வேண்டும் என்ற

கோரிக்கையை அமைச்சர் ஹக்கீம் அவர்களிடம் முன் வைத்தார்கள். இரவு ஒரு மணி மட்டும் வரை அந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. அமைச்சர் ரவூப் ஹக்கீம் இணக்கம் தெரிவித்தார்.

எனினும் சில நேரம் வாக்குமாறக் கூடும். 100 நாள் செயற் திட்டத்தின் கீழ் அமைச்சர் இம்டியாஸ் பாக்கிர் மார்க்கார் அவர்களினால் மடவளையில் தபால் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெறவுள்ளது. இதற்கு அமைச்சர் கலந்து கொள்ள வேண்டாம். பஷீர் தாவூத் அவர்களை அனுப்புங்கள். அவர் மூலமாக மடவளையில் மீலாத் விழா நடத்தவுள் ளோம். இம்முறை விட்டுக் கொடுத்துள் ளோம் என்று அவர் மூலமாக அறிவிப்பை விடுக்க வேண்டும் என அந்த இடத்தில் சஹீட் எம். ரிஸ்மி ஆலோசனையொன்றை முன் வைத்தார்.

ஏற்கனவே கலந்துடையாடல் ஈடுபட்டதன் படி அக் கூட்டத்திற்கு பஷீர் சேகு தாவூத் வந்தார். அவரது அன்றைய உரை மடவளையில் தேசிய மீலாத் விழா நடத்தப்படும் என்று இருந்தது. அது பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாகவும் வெளிவந்தது. தேசிய மீலாத் நடத்துவதற்கான உத்தரவாதம் பகிரங்கமாக வழங்கப்பட்டது. உண்மையிலேயே இந்த செய்தியினால் சேகு தாவூத் அவர்களுக்கு ஊரில் விமர்சனங்கள் எழுந்தன. ஏறாவூருக்கு வந்த மீலாத் விழாவை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேள்விகள் எழுப்பினார்கள்.

இந்த செயற் திட்டத்திற்காக 5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றைக்கு அது 50 அல்லது 100 கோடி பெறும். ஒரு பாரிய அபிவிருத்தி திட்டம் ஆகும்.

இந்த 5 கோடி முழுமையான முஸ்லிம்களும் மட்டுமல்ல எல்லா சமூகத்திற்குமானது. அது உடதலவின்னயைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்தப் பிரதேசத்திற்கு 2 கோடி 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்னும் மேலதிகமாக அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதலாவது அடிக்கல் மடவளை பௌத்த விஹாரையில் இடம் பெற்றது. அப்படியே மடவளை பள்ளிவாசல், பாதைகள், பாலங்கள், ஊரிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகள், பாடசாலை மைதானம் என சகல அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது கடைசியாக கேட்போர் கூடம் வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதற்கு மேலதிகமான ஒன்றரைக் கோடி நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தன. இப்போது இதைச் செய்வது என்றால் 15 கோடி ரூபா வேண்டும். இதைச் செய்து கொண்டு போகும் போது பணம் போதாது என்ற நிலை இருந்தது. அன்று திரைசேரியில் சரித்த ரத்வத்தை இருந்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், சஹீட் எம். ரிஸ்மி குழுவினரை பாராளுமன்றம் அழைத்துச் சென்று அங்கு பலருடன் கலந்துரையாடி அதற்கான முழு நிதியினையும் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் ஒரு அங்க சம்பூரணமான அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தை நிர்மாணித்து கொண்டமை குறித்து இப்பிரதேச மக்கள் சஹீட் எம். ரிஸ்மியின் மிகப் பெரும் சாதனையாகப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

இந்த கேட்போர் கூடத்திற்குச் சென்று பார்த்தால் சஹீட் எம். ரிஸ்மியின் ஆளுமையாக அவரின் பெயர், பதவி, அந்தக் குழுவினரின் பெயர் அந்தக் கல்லில் இருக்கும். அது மட்டு மல்ல நன்றிக் கடனுக்காக பஷீர் சேகு தாவூத்

அவர்களுடைய பெயரையும் கல்லில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் உயிர் நீத்த 10 இளைஞர்களுடைய பெயர்களும் கல்லில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி இவர் ஊரின் சமூக மேம்பாட்டுக்காக பாரிய பங்களிப்பை ஊர் மக்களுடன் சேர்ந்து செய்துள்ளார். உயிரிழந்த 10 குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்சம் விகிதம் அவரது இல்லத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

2002 ஆம் தேசிய மீலாத் விழா பிரதமர் ரனில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரபல பேச்சாளர் பேராசிரியர் கலாநிதி பர்வின் சுல்தானா, திடீர் தௌபீக், எஸ்.எம். தௌபீக் மற்றும் ஏனைய பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் அவரும் அவரது குழுவினர்களும் எதையும் கேட்டதில்லை. ஹக்கீம் வர்த்தக அமைச்சராக இருக்கும் போது எந்த நியமனமும் அவருக்கு வழங்கவில்லை. ஆனால் நீதி அமைச்சராக இருக்கும் போது இணைப்பாளராக நியமனம் வழங்கினார். பின்னர் நகர அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளராகவும் நியமனத்தை வழங்கி அதன் விடுதிகளுக்கான பொறுப்பு வாய்ந்த பதவியொன்றை வழங்கி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவரைப் பெருமைப்படுத்தினார்.

ரவூப் ஹக்கீம் இவை மட்டுமல்ல இன்னமும் அவர் பல்வேறுபட்ட வேலைகளை ஊருக்கு நிறையச் செய்திருக்கலாம் என்ற ஆதங்கம் அவருக்கு இருக்கிறது.

ரவூப் ஹக்கீம் ஊருக்கு செய்யா விட்டாலும் அவர் கட்சியில் தனித்துக் கேட்கும் வேளையில் வெற்றி பெறவில்லை எனில் கட்சியின் தலைவராக இருக்க வாய்ப்பில்லாமற் போய் இருக்கும். ஏனென்றால் அவருடைய தலைமைத் துவத்தைப் பாதுகாக்கத் தான் அவ்வளவு உயிர்களையும் ஊரின் வாலிபர்கள் தியாகம் செய்தார்கள் என்று சொல்லிக் கொள்வதில் அவர் எப்பொழுதும் மனம் தளர்வதில்லை.

மேலும், இங்கு மடவளை மண்ணில் தபாலகம் உயர்தரத்தில் காட்சி அளிப்பதற்கான காரணகர்த்தாவாக மடவளை வை.எம்.எம்.ஏ. யும் விளங்குகின்றது. இத்தகைய அளப்பரிய சேவையின் மூலம் மடவளை ஊரின் வரலாற்றில் மடவளை வை.எம்.எம்.ஏ. யின் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

**அவரது தந்தை சஹீட் அவர்களும் அரசியலும்**

அவர் தந்தை ஸ்ரீ.ல சு. கட்சிக் காலத்தில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஜி. பெர்னாண்டோ அவர்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தவர். அப்போது பாண் வாங்குவதற்கு வரிசையில் காத்து நிற்க வேண்டும். தந்தை ஹோட்டல் பேக்கரி நடத்தி வந்தார். அவருக்கு மாத்திரம் அரசாங்கம் வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கியிருந்தது.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றது. 1977 -07- 22 அன்றைய தினம் அவரது வீடு கடைகள் எல்லாம் தாக்குதல் களுக்குள்ளாகி முற்றாக தரை மட்டமாக அழித்து ஒழிக்கப்பட்டன. ஐ. தே. கட்சியில் ஊறினவர்கள் அக்கால கட்டத்தில் இருந்தார்கள். அந்த அரசியல் பழிவாங்கும் கலவரத்தில் கடையெல்லாம் உடைத்து

இல்லாமற் செய்து விட்டார்கள். அவர் தாயார் செய்து வந்த கைத்தொழில் நிலையம் எல்லாம் தாக்குதலுக்கு உள்ளாகின. அவர் வாப்பாவின் மைத்துனர் இசாக் ஹாஜியார் மடவளையில் வசித்து வந்தவர். அவர் பெரிய செல்வந்தர். அவர் ஊரை விட்டு இடம்பெயர்ந்து சென்று விட்டார்.

எனினும் அவர் தந்தை, ‘தான் போக மாட்டேன். இந்த இடத்திலேயே இருந்து கடைகளைத் திறந்து மீண்டும் எழுந்து வருவேன்’ என்ற இலட்சியத்தோடு எரிந்த கடையைத் திருத்தி மீளத் திறந்து வியாபாரம் செய்தார்.

அவர் தாய் அக்கால கட்டத்தில் அழகியற் கலையிலும் தையல் கலையிலும் பிரபல்யமானவர். அக்காலத்தில் மணப்பெண்ணை அலங்கரிப்பதில் பிரசித்தமானவர். 1000 க்கும் மேற்பட்ட மணப்பெண்களை அலங்கரித்துள்ளார். தாயார் மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசுவார்கள். சிங்கள இளம் யுவதிகளையும் அழைத்து வந்து தையல் கலைப் பயிற்சிகளையும் வழங்கி வந்தார்.

அவர் வாப்பா சிங்கள மக்களுடன் அதிகம் நேசம் கொண்டவர். அவர்களுக்கு நிறைய உதவி செய்வார். பாணுக்காக வரிசையில் நின்ற காலத்தில் எளிய மக்களை அவதானித்து அவர்களை கடையின் பின்பக்கமாக வரச் சொல்லி பாண்களை கொடுத்துதவுவார். இன்று அவர் வாப்பாவுக்கு 91 வயது ஆகும். ஒரு நோய் நொடியுமின்றி இருக்கிறார். வயதுக்குரிய பலவீனம் இருக்கிறது.

மடவளையில் இரு மலைகள் உள்ளன. ஒன்று உசக்க மலை. மற்றையது கொட்டுவே கெதர. அந்த இரு மலைகளின் சொந்தக்காரர்களாக சஹீட் எம். ரிஸ்மி அவர்கள் பாட்டன்மார்கள் தான் இருந்தார்கள். தந்தை சஹீட் மடவளையின் பூர்வீகக் குடிகளில் வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். வாப்பாவின் ஆறு பரம்பரையினர்கள் இன்று வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பற்றி கேட்டால் யாரும் சொல்வார்கள்.

1956 களில் 1977 வரையிலும் பல அரசியல் ரீதியாக பல சேவைகள் செய்துள்ளார். பதியுதீன் மஹ்மூத் காலத்தில் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் போது அவரின் தந்தை மடவளையை விட்டுக் கொடுக்கவில்லை.

அவரின் தந்தை அரசியல் ஆதரவாளர்களால் பாதிக்கப்பட்டாலும் பதவி நியமனங்கள் வழங்கும் போது கட்சி பேதங்கள் பார்க்கமாட்டார். ஆசிரியர் நியமனம் வழங்கும் போது ஐக்கிய தேசிய கட்சியின் வி. சி. உறுப்பினராக இருந்தவர்களுடைய மகளுக்கும் வழங்கினார். அவர் தந்தை 8, 9 வகுப்புக்களில் படித்த யார் எவரென்று பார்க்கவில்லை. ஆசிரியர் தொழில் நியமனத்தைப் பெற்றுக் கொடுக்க முன்நின்று உழைத்தவர்.

மடவளையில் உள்ள அதிகமானவர்களை அரச துறையில் சிற்றூழியர்களுக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க துணையாக இருந்துள்ளார். இலங்கை, போக்கு வரத்துச் சபை, சுகாதார சேவை போன்ற பல்வேறு அரச நிறுவனங்களில் பதவி நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தவர்.

மடவளை விளையாட்டு மைதானம் ஏ. ஜி. பெர்னாண்டோவின் மூலம் உருவாக்கப்பட்டதாகும். அன்று இருந்த பாராளுமன்ற உறுப்பினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வத்தேகம தேர்தல் தொகுதியின் அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஜி.

பெர்னாண்டோ அவர் தந்தையுடன் மிகவும் ஆத்ம நண்பராக நெருங்கிப் பழகின ஒருவர்.

இந்த ஊர் ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டை. ஸ்ரீ.ல. சு. கட்சியிலும் படித்தவர்கள் ஆதரவாளர்களாக இருந்தனர். மதீனா பாடசாலைக்கு மைதானம் இருக்கவில்லை. அன்று வத்தேகமையின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஜி. பெர்னாண்டோவின் மூலம் கிடைக்கப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கியவர்.

ரிஸ்மிக்கும் அவரது சகோதரருக்கும் சுன்னத்துக் கல்யாண வைபவம் நடைபெற்றது. அக்காலத்தில் அது மிகப் பிரமாண்ட முறையில் நடைபெறும். அதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பி னர் ஏ. ஜி. பெர்னாண்டோ அவரையும் அவரது சகோதரரையும் மடியில் தூக்கி வைத்து அன்பு காட்டி பரிசுப் பொருள் வழங்கி வைத்தார். இப்படி பெரும் பான்மையின சகோதரர்களுடன் இணைந்து இன நல்லிணக்கத்தைப் பேணும் விடயத்தில் அவரின் தந்தை நல்லதொரு வழிகாட்டலை செய்துள்ள தாகவும் அவர் போன்றதொரு நபரைக் காண முடியாது என தமது தந்தையின் செயலை வியந்து பாராட்டி வருகிறார்.

ஒரு தடவை அப்பகஸ்பிட்டிய வெத மஹத்தியாவுக்கு அகில இலங்கை நீதவான் பதவி கிடைத்தது. அவருக்கு மாபெரும் வரவேற்பு வைபவம் ஒன்றை ரிஸ்மியின் தந்தை ஏற்பாடு செய்தார். அதே போன்று சிங்கள மக்கள் மத்தியில் திருமண வைபவம் நடந்தால் அவர்களுக்கு மத்தான வரவேற்பளித்து, கடைக்கு முன்னால் மேடை அமைத்து கௌரவிப்பவர்.

ஏ. ஜி. பெர்னாண்டோவின் மகள் மற்றும் அப்பகஸ்பிட்டிய வெத மஹத்தியாவின் மகள் போன்றவர்களை திருமண ஊர்வல வாகனத்தில் இருந்து இறக்கி அவர்களை கடைக்கு முன்னால் விசேட கௌரவிப்பு வழங்கியவர். இன்றைக்கு அந்த இன நல்லிணக்கம் உறவு அறுந்து விட்டது. இந்த வீதியில் உள்ள சிங்களவர்கள் ஒவ்வொருவம் சக்கீலா முதலாளி எங்கே என்று விசாரிப்பார்கள். அவரின் தந்தைக்கு சக்கிலா முதலாளி என்றுதான் சொல்வார் கள்.

அவர் தந்தையின் மீதுள்ள நட்பின் காரணமாக அவரைத் தேடி வந்து பசுப் பாலைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் செல்லுகின்ற இப்பிரதேச சிங்கள மக்கள் இன்னும் இருக்கின்றனர். அவர் சிங்கள மக்களுடன் அந்தளவுக்கு மிக நெருக்கமான உறவோடு இருந்திருக் கிறார். இப்போது அவருக்கு வயது 91 ஆகும். இன்னும் தம் தந்தையை சிங்கள சகோதரர்கள் தேடி வந்து பார்க்கின் றார்கள்.

அவரின் தாயாரும் சிங்கள மக்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தவர். 1971 ஆம் ஆண்டு இலங்கையில் அணிசேரா மாநாடு நடைபெற்றது. அதை முடிந்த கையோடு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அவர்களுக்கு கொழும்புக்கு வெளியே முதலாது கௌரவிப்பு மடவளையில் நடைபெற்றது. அவர் தந்தை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களை மடவளைக்கு அழைத்து வந்து கௌரவித்தார். பூ கொடுத்து வரவேற்றவர் அவரது தாய். இப்படியாக அவர் தந்தை இந்த அரசியல்வாதிகளுடன் நெருங்கிப் பழகி ஊருக்கு பெரும் சேவைகள் செய்துள்ளார்.

அவர் தந்தை தன்னைப் பற்றியோ தம் பிள்ளைகள் குடும்பம் பற்றியோ யோசிக்காமல் தம் ஊர் சமூகம் பற்றி யோசித்து சேவையாற்றியவர்.

அக்காலத்தில் பாதைகள் எல்லாம் திருத்தியமைக்கப்பட்டன

1968 களில் மடவளை மதீனாப் பாடசாலைக்கு கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களை அழைத்து வந்து முதலாவது இரு மாடிக் கட்டிடம் வழங்கி வைப்பதற்கு துணை நின்றவர்.

அதே போன்று விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டது ஆக முக்கிய அம்சமாகும். அன்று இதன் மூலம் பலருடைய எதிர்ப்பை அவரின் தந்தை சம்பாதிக்க நேரிட்டது. அது தனியார் காணியாகும். தந்தையுடய காணியும் அடங்கும். சஹீட் அவர்கள் தம் சமூகப் பணி மூலமாகவும் அரசியல் பணியாளர் கள் மூலமாகவும் தம் ஊருக்கு ஆற்றி யுள்ள பங்களிப்பு அதிகம். அவருக்கு கிட்டியுள்ள மதிப்பார்ந்த கௌரவம் இன்னும் பேசுபொருளாக காணப் படுகின்றன.

**சஹீட் எம். ரிஸ்மியின் நோக்கு**

இன்றைய சூழலில் வாலிபர்கள் அரசியலுக்கோ அல்லது பொது சேவைக்கோ வருவதற்கு தயார் இல்லை. அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். கடந்த 70 வருட அரசியல் வாழ்க்கையிலும் நம்பிக்கை இழந்து விட்டார்கள். யாரும் முன்னுக்கு போக விட மாட்டார்கள் என்றதொரு வெறுப்பு அவர்களிடம் இருக்கிறது.

இளைஞர் அமைப்பின் தலைவர் என்ற வகையில் ஒவ்வொரு விடயத்திலும் எதிர்கால சவால்களை எதிர்கொண்டு அதனை எப்படி சமாளித்துக் கொள்ள வேண்டும் என்ற வழிகாட்ட வேண்டிய பொறுப்பு தனக்கும் எமது சமூகத்திற்கும் இருக்கிறது.

எதிர்கால வாலிபர்களுக்கு தலைமைத்துவப் பொறுப்பை எப்படி கையளிக்க முடியும் அவர்களை உருவாக்கி கையளிக்கின்ற வேலையை செய்ய வேண்டிய தேவைப்பாடு நிறைய இருக்கிறது. அவர்களை வழிகாட்டி வலுவூட்டல் செய்தல் வேண்டும். அவர்களுடைய சரியான அரசியல் மற்றும் சமூகப் பணி என்ன என்பது பற்றி தெரியாது. அதற்கான தெளிவூட்டுதல் அவசியம். அவர்களுக்கு இடைநடுவில் இருக்கக் கூடிய தடைகள் எல்லாவற்றை யும் இல்லாமற் செய்து முன் கொண்டு வருதல் வேண்டும்.

ஒவ்வொரு ஊர்களிலும் ஊர் பெரியவர்களின் தடை இருக்கிறது. அவர்கள் எந்த விசயத்தை செய்தாலும் வாலிபர்களை முன்வராமல் தடுக்கின்ற ஒரு கூட்டம் இருக்கிறது. ஒவ்வொரு துறைகளில் உள்ளவர்களும் அதாவது மதத் தலைவராக இருக்கலாம். ஆசிரியராக இருக்கலாம். அரசியல் வாதிகளாக இருக்கலாம். சிவில் சமூக தலைமைகளாக இருக்கலாம் .

உண்மையிலேயே நாம் வெளியே போகும் போது எதிர்கால தலைமை களை உருவாக்கினோமா என்று சுய விமர்சனம் செய்ய வேண்டும். அப்படி அல்லா விட்டால் இளம் தலைமுறையினர் களை உருவாக்க முடியாது என்ற உன்னத கொள்கை அவரிடம் சிலிர்த்து நிற்கிறது. இந்தச் சிந்தனை எல்லோருக்கும் வரக் கூடிய ஒன்றல்ல. இது தான் தலை மைத்துவ விட்டுக் கொடுப்பு. தலைமைத் துவத்தை உருவாக்குதல் என்ற சிந்தனை அவரை ஒரு உயர்ந்த மனிதனாக மதிப்பீடு செய்ய வைக்கின்றது.

**உயர்ந்த குணப் பண்புகள்.**

பல்லின சமூகத்திற்கு மத்தியில்

நல்லுறவுப் பாலம் அமைத்து இதயங்களை ஒன்றிணைக்கின்ற தன்மை அவரிடம் இயல்பாகவே காணப்படுகின்றது. எப்பொழுது இவர் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற சிந்தனையே அவர் மூச்சாக இருக்கிறது. மனித நேயமும் விருந்தோம்பல் பண்பும் விருட்சமாக உயர்ந்து நிற்கிறது. எல்லோருடனும் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். துன்பப்பட்டவர்களுக்கு தனது சிரமத்தையும் பாராது ஓடி ஓடி உதவி செய்வதில் தனித் தன்மைமிக்க பிறவி. எப்படியாவது சரி புதிய துலைமுறையினரை வளர்த்து விட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் மிக்கவர்.

எந்த நேரத்திலும் யாருக்காவது உதவி செய்ய வேண்டும் என்ற மனப் பாங்கில் இயங்குபவர். தனது வாகனத்தில் கண்டியில் இருந்து கொழும்பு செல்லும் போது அன்றைய தினம் யாராவது தெரிந்த உலமாக்கள், வேறு பல நண்பர்கள் உள்ளார்களா என்று ஆராய்ந்து பார்த்து அவர்களையும் அழைத்துச் செல்வது பழக்க வழக்கமாகும். அது மட்டுமல்ல அவர்கள் மீளவும் திரும்பி வருவதாக இருந்தால் அழைத்து வந்து கண்டியில் விடுவார்.

அருமையான இதயம் படைத்தவர். தன்னுடைய பிள்ளைகள் படித்து கனடாவில் ஒரு விஞ்ஞானியாக தொழில் புரிவது போன்று ஏனைய பிள்ளைகளும் கற்றுத்தேற வேண்டும் என்று ஊக்கமும் உற்சாகமும் உதவியும் செய்பவர். எவ்வளவு சோளியாக இருந்த போதிலும் யாரைக் கண்டாலும் அவர்களுடன் தனது காரை நிறுத்தி அவர்களுடைய சுக துக்கங்களை விசாரித்து செல்லுகின்ற நல்ல மனம் படைத்தவர். ஆனால் கறார் பேர் வழி. வெட்டொன்று துண்டு இரண் டென்று பேசுபவர். ஒரு செயல் வீரர். சுறுசுறுப்பாகச் செயற்படுபவர். வை. எம். எம். பேரவையின் பல மாநாடுகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியுள்ளார். அதே வேளை வை. எம். எம். ஏ. கிளைகளை உருவாக்குவதிலும் அவைகளை திறன்பட இயங்கச் செய்வதிலும் வல்லவர். அவரின் சமூகப் பணிகளில் மனித நேயம் தரிசித்து நிற்பது போன்று ஏனைய பொது செயற் பாட்டிலும் மனித நேயம் முனைப்புற்று நிற்பதைக் காணலாம். இத்தகைய பெருமைக்குரிய மனிதர் சஹீட் எம். ரிஸ்மி நம்மத்தியில் இருந்து செயல்படுகின்றார் என்பதில் நாம் அனைவரும் பெருமை கொள்ளுதல் வேண்டும்.

# சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பது முஸ்லிம்களின் ஒற்றுமையே

ஷஹீட் எம். ரிஸ்மி அவர்கள் பொது நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின், உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி, முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள், விளையாட்டுத்துறை அமைச்சரின் பொதுசனத் தொடர்பு அதிகாரி, பணிப்பாளர் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் மற்றும் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

மடவளை வை.எம்.எம்.ஏ. ஊடாக சமூகப்பணியை ஆரம்பித்து பின்னர் பல சமூக அமைப்புக்களில் அங்கம் வகித்து 20 வருடகாலம் தனது பொதுப் பணியில் செயற்பட்டு வந்துள்ளார். அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மாவட்டப் பணிப்பாளராகவும், தேசிய பொதுப் பொருளாளராகவும், தேசிய பொதுச் செயலாளராகவும், தேசிய உப தலைவராகவும் மற்றும் நிறுவனங்களின் பதில் தேசிய தலைவர்களாகவும் பணியாற்றி வந்தள்ளார். தற்போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட சஹீட் எம். ரிஸ்மி ஞாயிறு தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்.

**கேள்வி: இன்றைக்கு 100 வருடம் பழைமை வாய்ந்த வை. எம். எம். ஏ. நிறுவனம் 1950 களில் சம்மேளனமாக உருவெடுத்து 2020 களில் 70 ஆண்டு நிறைவைக் கடந்து அதன் விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் அதன் சம்மேளனத்தின் 54 வது புதிய தேசியத் தலைவராக கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த நீங்கள் பதவி ஏற்று இருப்பது மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. இத்தேர்தல் காலட்டத்தில் இலங்கை முஸ்லிம் அரசியல் களநிலவரம் என்ன என்பதைப் பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் வரலாறு ஒரு புதிய மாற்றங் களை வேண்டி நிற்கிறது. எனினும் இன்று முஸ்லிம் வாக்காளர்கள் யாருக்குப் வாக்குப் போடுவதென்று தெரியாமலும் கொரோனா தொற்று அச்சம் காரணமாகவும் குழம்பிப் போய் இருக்கிறார்கள். நாம் நமது பொறுப்பை உணர்ந்து செயற்படாவிட்டால் நாளை வரலாறு இலங்கை முஸ்லிம் மக்கள் மீது பழிச்சொற்களை அள்ளி வீசும். நாளைய தலைமுறை குற்றவுணர்வுடன் வாழ நேரிடலாம். எனவே இலங்கை வாழ் முஸ்லிம் வாக்காளர்கள் எல்லோரும் தமது பொறுப்பை உணர்ந்து வாக்குச் சாவடிகளுக்குச் சென்று கட்சி வேறுபாடுகளை மறந்து

கட்டாயம் வாக்களித்தல் மிக அவசியமாகும்.

இலங்கை முஸ்லிம் மக்கள் எவருக்கும் தங்களுடைய வாக்குகளை அளிக்கலாம். ஆனால் எமது சமூகத்தையும் சமூகத்தை நிமிர்த்தும் அரசியலையும் நேசித்து செயற்படும் வேட்பாளர்களை தெரிவு செய்வது முஸ்லிம் மக்களுடைய கடப்பாடாகும். எமது முஸ்லிம்கள் தமது வாக்குரிமையை கட்டாயம் பயன்படுத்த வேண்டும். வாக்களிப்பு வீகிதம் குறைவடைந்தால் எங்களுடைய பிரதி நிதித்துவம் இல்லாமற் போவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் நாங்கள் பெரும் சவால்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படும் என்பதை நான் அழுத்தமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளையில் சுகாதார திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைய அதன் விதிமுறைகளை சரியான முறையில் கடைப்பிடித்து எமது வாக்குகளை வழங்க வேண்டும். தேர்தல் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி எம்மைப் பற்றி பெரும்பான்மையின சமூகத்திடம் காணப்படும் சந்தேகங்களைக் களையக் கூடிய வகையில் சமூக இடை வெளியைப் பேணி முகக் கவசங்கள் அணிந்து ஒழுங்காக நடந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

விசேடமாக இந்த சந்தர்ப்பத்தில் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இலங்கை வாழ் மக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

**கேள்வி: நாங்கள் அவர்களைத் தெரிவு செய்வதன் நோக்கம் என்ன?**

**பதில்:** பரம்பரை பரம்பரையாக எமது முதாதையர்கள் பெற்றுத் தந்த உரிமைகள் நாளுக்கு நாள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு அதிகரித்துச் செல்லுகின்றது. அந்த உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. மேலேத்தேய நாடுகளில் ஒரு தனி மனிதனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும் கூட இலங்கையில் சமூக உரிமைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன. எனவே முஸ்லிம்களுடைய பிரநிதித்துவம் பாராளு மன்றத்தில் அதிகரிக்கும் போதே முஸ்லிம்களுடைய தனித்துவம் மற்றும் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

அத்துடன் முஸ்லிம்களுடைய நிம்மதியான வாழ்வியலையும் பாதுகாப்பையும் அரசியல் அபிலாசைகளையும் பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கையும், பிரதேச ரீதியிலான அபிவிருத்தி இடை வெளியையும் சமூக நல மேம்பாட்டுத்

திட்டங்களையும், பிரதேச அபிவிருத்தி யையும், பிரதேச ரீதியாக ஏற்றத் தாழ்வையும் முஸ்லிம் மக்களுடைய அடிப்படையிலான சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினை போன்றவற்றுக்கு ஒரு சரியான தீர்வை நோக்கிற் செல்வதற்கும் முஸ்லிம் மக்களுடைய குரல் பாராளுமன்றத்தில் ஒலிப்பதற்கும் முஸ்லிம் மக்களுடைய பிரதிநித்துவம் மிகவும் அத்தியவசியமாகும் என்பதை உணர்ந்து மக்கள் வாக்களித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் எதிர் கட்சியிலோ அல்லது ஆளும் கட்சியிலோ பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டு முஸ்லிம்களுடைய பலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**நாங்கள் எல்லோரும் ஒரே கட்சி சார்பானவர்கள் என்ற மன நிலையில் இருந்து வாக்களிப்பதை விட நாங்கள் எல்லோரும் இலங்கையர் என்ற அடிப்படையில் எமது வாக்குகளை வழங்க வேண்டும். இந்த செயற்பாடு நடைமுறையில் வரும்போது பெரும் பான்மையினங்களுக்கிடையே காணப் படும் இடைவெளியை குறைக்க முடியும். துரதிருஷ்டவசமாக ஏதோ ஒரு வகையில் பெரும்பான்மையின மக்களுக்கும் எமக்குமிடையே புரிந்துணர்வு இல்லாமல் நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த இடைவெளியை நிவர்த்தி செய்து கொள்ள இயலுமாகும்.**

எந்தக் கட்சியில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டாலும் அது எதிர்கட்சியாக இருந்தாலும் சரி ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி அதிகமான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் முஸ்லிம்களுக்குரிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். பிரதிநிதித்துவம் குறையும் பட்சத்தில் உரிமைகளுக்கான உத்தரவாதம் இல்லாமற் போய்விடும். மேற்கத்திய நாடுகளில் தனிமனிதனுக்குத் தான் அதிகளவு உரிமைகள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் சமூக உரிமைகளுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வாக்குரிமைதான் பிரதான காரணியாகும். எங்களுக்கு இருக்கக் கூடிய பெரியதொரு பலம் வாக்குரிமை மட்டும்தான். இதன் ஊடாக எங்களுடைய ஒட்டு மொத்த, சமூக உரிமைகளுக்கும் உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

**கேள்வி: இந்தச் சந்தர்ப்பத்தில் வை. எம். எம். ஏ. இயக்கத்தின் தலைவர் என்ற வகையில் சரியான வேளையில் சரியான வழிகாட்டுதலை வழங்குதல் வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் எப்படிப்பட்ட பாராளுமன்றப் பிரதி நிதிகளை அனுப்புதல் வேண்டும் என்று கூறுவீர்களா?**

**பதில்:** முஸ்லிம் மக்களுக்கு சேவை செய்யக் கூடிய, இதுவரை காலமும் மக்களுக்குச் சேவை செய்த, சேவை செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நாட்டின் எதிர்காலம் மக்களின் பிரதிநிதிகளின் கைகளிலேயே தங்கி இருக்கிறது. அதனால் நன்றாப் படித்தவர்களையும் அனுபவம் உள்ளவர்களையும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றித் தெரிந்தவர்களையும் மக்களுக்கு மக்கள் நலன் கருதி சேவை செய்யக் கூடியவர்களையும் சரியாக இனங்கண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும்.

மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டும் ஒரு முறை மக்களை ஏமாற்றுபவர்களை நிராகரிக்க வேண்டும். வெறும் பதவிக்கும் பாராளுமன்றப் பிரதிநித்துவத்தைப் பெற்றுக் கொண்டு சுகம்போகம் அனுபவிக்க முயற்சிப்பவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல வெறும் வாய்ப் பேச்சு வீரர்களையும் செயல் திறனற்றவர்களையும் மக்களுக்கு களத்தில் நின்று வேலை செய்ய முடியாதவர்களையும் முஸ்லிம்களாகிய நாங்கள் அங்கீகரிக்கக் கூடாது. இந்த நாட்டில் வாழுகின்ற மக்களுக்கு இருக்கின்ற ஒரு உரிமைதான் வாக்குரிமை. எந்தவிதமான அற்ப சொற்ப சலுகைகளுக்கும், கெடுபிடிகளுக்கும், ஏமாற்று வித்தைகளுக்கும், பொய் பித்தலாட்டங்களுக்கும், சுகபோகங்களுக்கும், தற்காலிக செயற்பாடுகளுக்கும் முஸ்லிம்களாகிய நாங்கள் விலை போகக் கூடாது. மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர்களுக்கே மக்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும் அவர்களையே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும்.

**கேள்வி: அப்படியானால் யாருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூற முடியுமா?**

**பதில்:** முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை சிதறடிப்பதற்காகவும் முஸ்லிம் பிரதிநித்துவங்களை இல்லாமல் ஆக்குவதற்கான சூழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெற்றிவாகை சூடமுடியாத சந்தேகத்திற்கு இடமான வேட்பாளர்களுக்கு வாக்களித்து எமது பெறுமதி மிக்க வாக்குகளை வீணாக்கி விட வேண்டாம்.

இன்று என்றுமில்லாதவாறு கட்சிகளும், எண்ணிடலங்கா சுயேச்சைக் குழுக்களும், முஸ்லிம் மக்களின் வாக்குகளை சிதறடிக்க களமிறங்கியுள்ளன. வாக்குகளைக் கேட்பது அவர்களது உரிமை. ஆனால் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்து தமது வாக்குகளை கட்சி வேறுபாடு

களின்றி ஆளும் கட்சிக்கு வாக்களித்தாலும் சரி அல்லது எதிர்கட்சிக்கு வாக்களித்தாலும் சரி முஸ்லிம்களாகிய நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் தமது வாக்குரிமையின் பெறுமதியை உணர்ந்து கட்டாயமாக வாக்களிக்க வேண்டியது முஸ்லிம் மக்களின் உரிமையும் கடமையுமாகும்.

எங்களுடைய சமூகத்தில் அதிகமான வாக்குகள் நிராகரிக்கப் படுகின்ற கருத்து ஒன்று இருக்கிறது. அதனால் முதியவர்கள், வலது குறைந் தவர்கள் ஆகிய அனைவரையும் வாக்களிக்கச் செல்வதற்கான வசதி களை இளைஞர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**கேள்வி: வை. எம். எம். ஏ. சம்மேளனத்தின் 54 தலைவராக தெரிவு செய்யப்பட்ட நீங்கள் சமகாலத்தில் இந்த அமைப்பை எந்த வகையில் தொடர்ந்து முன்னெடுக்க வுள்ளீர்கள் என்று கூறுவீர்களா?**

எங்களது அமைப்பு அரசியல் சார்பற்ற சமூகம் நலன் சார்ந்த அமைப்பாகும். இது 1017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு 100 வருடத்தைத் தாண்டிவிட்டது. 1968 ஆம் பாராளுமன்றக் கட்டளைச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம். தேர்தல் கண்காணிப்புக் குழுவான பெப்ரல் அமைப்பில் ஸ்தாபக அங்கத்துவம் பெற்ற அமைப்பு. தற்போது கொழும்பு மாவட்டம் தவிற பல இடங்களில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லாவற்றையும் விட கொரோனா தொற்றோடு நாங்கள் சமாந்தரமாக போட்டி போட்டுக் கொண்டு பயணம் செய்ய வேண்டியிருக்கிறது.

02 ஆகஸ்ட் 2020
தினகரன் வாரமஞ்சரி

# அரசின் சட்ட திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டோம்

**நீங்கள் மரணம் எய்து விட்டால் மரணித்தவருக்கு அல்ல அந்தப் பொறுப்பு வாழ்ந்து கொண்டிருப்பவருக்குத் தான் அந்த பொறுப்பு அமைகிறது. அந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளத்தான் நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த கடமையை நாங்கள் மீறி இறைவன் கூறியதற்கு முரணாக நாங்கள் தகனம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம் எனில், அந்தப் பாவத்தைச் செய்ததாக நாங்கள் கருதப்படுவோம். அதனால், எங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அரசாங்கம் சட்டத்தை நிலை நாட்டும் போது அது அவர்களோடு சம்மந்தப் பட்டது. அந்த அதிகாரிகளோடு சம்மந்தப் பட்டது. நாங்கள் அந்தப் பாவகாரியத்தில் இருந்து தப்பித்துக் கொண்டோம் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**கேள்வி:** அகில இலங்கை வை. எம். எம். ஏ ஆரம்ப வரலாறு பற்றி கூறலாமா?

**பதில்:** ஆம். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை இந்நாட்டிலுள்ள முஸ்லிம் தேசிய அமைப்புக்களில் மிகப் பழைமை வாய்ந்த முதன்மை வாய்ந்த அமைப்பாக காணப்படுகிறது. நாடளாவிய ரீதியில் 150 கிளைகள் உள்ளன. அதிகமான வலையமைபைக் கொண்ட முஸ்லிம் அமைப்பு என்று கூறலாம். இந்த அமைப்பு 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1950 களில் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் இவ்வமைப்பை 17 முஸ்லிம் அமைப்புக்களை ஒன்று சேர்த்து வை. எம். எம். ஏ. பேரவையை உருவாக்கினார். அந்த அமைப்பு 1968 பாராளுமன்ற கட்டளை சட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. அன்றைய நிதி அமைச்சரினால் வரிச் சலுகையும் வழங்கப்பட்டது.

இந்த அமைப்பு பல்வேறு சமூக மனிதாபிமானப் பணிகளை செய்வதில் இன்றியமையாத தொன்றாக விளங்கு கின்றது.

**கேள்வி:** நீங்கள் இவ்வமைப்பின் தேசிய ரீதியில் தேசிய தலைவராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் தலைமையில் முன்னெடுக்கப்படும் தற்போதைய வேலைத் திட்டங்கள் பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** 2020ம் ஆண்டு நான் இவ்வமைப்பை கையேற்ற காலத்திலேயே 70 வது ஆண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடுவதற்கு திட்டமிட்டிருந்தோம். கொரோனா தொற்றுக் காலமாக

இருந்தாலும் எல்லா செயற்பாடுகளையும் 70 வது வருட நிறைவை முன்னிட்டு நடத்துவதற்கென அதற்கான சின்னத்தையும் வெளியிட்டுள்ளோம். இக்கால கட்டத்தில் பல தடைகள் வந்தாலும் இவ்வருடம் தொடர்ச்சியாக நடக்கக் கூடிய எல்லாச் செயற்பாடுகளையும் நிறுத்தாமல் நான் திட்டமிட்டு நடத்தி வருகின்றேன்.

**கேள்வி:** நீங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து செய்யக் கூடிய பல திட்டங்கள் செய்து வருவதாக அறிகின்றோம். அவ்வாறாயின் நீங்கள் அப்படி என்ன திட்டங்கள் மேற்கொண்டு வருகின்றீர்கள்?

**பதில்:** அரச நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளுடன் உறவைப் பேணி பல வேலைத் திட்டங்களை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். உலகளாவிய நிதியத்தின் நாட்டு ஒருங்கிணைப்பு பொறிமுறையின் CCM கட்டமைப்பும் எண்ணக்கருவும், தேசிய சொத்துடைமை மற்றும் பங்களிப்புத் தீர்மானம் மேற்கொள்ளல் ஆகிய கொள்கைகளை பிரதிபலிப்பதை கொண்டவை. அது வந்து 10க்கும் மேற்பட்ட அமைச்சுக்களும், சர்வதேச அமைப்புக்களும் இணைந்து மேற்கொள்ளும் திட்டமாகும். இத்திட்டத்தில் சேர்ந்து இலங்கையில் பிரபல்யமான ஐந்து அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதில் வை. எம். எம். ஏ அமைப்பும் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயம். அந்த வகையில் இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைப் போன்று எல்லா வகையிலான செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு எமது அமைப்பு தகைமை பெற்று இருக்கிறது.

**கேள்வி:** இவ்வேலைத் திட்டங்களில் தங்களுடைய அமைப்பு வகிக்கும் பங்கு எவை?

**பதில்:** இலங்கையில் சிறுபான்மையின மக்கள் காச நோயினால் அதிகமாகப் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய மக்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் கவனயீனமாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் அரசாங்கம் மாதாந்தம் வழங்கப்படும் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதில்லை.

அதேபோன்று அவர்கள் மாதாந்தம் வைத்திய பரிசோதனை செய்து கொள்வதில்லை என சுகாதார அமைச்சினால் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. கொழும்பு மாவட்டத்தை மையமாக வைத்துப் பார்க்கும் போது அங்கே நாட்டாமை வேலை செய்பவர்களே அநேகமானவர்கள் காச நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். அவை மட்டுமல்ல இக்குறித்த நோய் பற்றி கொழும்புக்கு வெளியே வாழும் சிறுபான்மையின மக்கள் கவனம் செலுத்துவது மிகவும் குறைவு. இது கவலையான செய்தியாகும்.

ஆனால் பெரும்பான்மையின மக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படக் கூடிய அனைத்து வளங்களைப் பெற்றுக் கொண்டு தங்களுடைய உடல் ஆரோக்கியத்தைப் பேணி வருகின்றனர். இதற்கு அதரவு அளிக்கும் வகையில் சுகாதார அமைச்சின் காச நோய் தடுப்பு விழிப்பூட்டல் மற்றும் நோயாளிகளை வைத்தியசாலைக்கு இணைக்கும் செயற் திட்டத்திற்கு தேசிய பொது வைத்திய சாலைகளில் வை. எம். எம். ஏ பிரதிநிதிகளின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் 8 உப குழுக்களுடன் வை. எம். எம். ஏ. பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் ஊடாக தேசிய வலையமைப்பில் பல்வேறு செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்த வகையில் ஸ்ரீலங்கை யுனைட் நிதி உதவியுடன் இளைஞர்கள் தலைமையில் ஜனநாயக கட்டமைப் புக்களை வலுப்படுத்துவதற்கும். செயற் படுத்துவதற்கும் நோக்கமாக கொண்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தகவல் அறியும் சட்டம், சட்ட உதவி ஆணையகம், மனித உரிமை ஆணையகம், நுகர்வோர் சபை ஆகிய அரச நிறுவனங்கள் தொடர்பில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி இதன் மீது மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்நிறுவனங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் விரிபடுத்தவும், பலப்படுத்தவும் 25 மாவட்டங் களை உள்ளடக்கியதாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்து 50 வாலிபர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். ஏதேனும் அநீதிகள் ஏற்பட்டால் இந்த நிறுவனங்களின் உதவியையும் ஆலோசனையையும் பெற முயற்சி செய்பவர்களுக்கு கூடவே எமது நிறுவனத்தின் பிரதிநிதிகளும் பங்களிப்பு நல்கவுள்ளனர்,

இப்படி குறிப்பாக உலக நிதி நிறுவனத்தின் ஆதரவில் போதைப் பொருள் தடுப்பு சம்மந்தமாக கடந்த 06 வருடங்கள் சேவையாற்றி வருகின்றோம். அதேவேளையில் எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வும், நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கத்தோடும், சர்வதேசத்தோடும் இணைந்து பல எண்ணற்ற சேவைகள் செய்கின்றோம்.

**கேள்வி:** உங்களது நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைள் என்ன?

**பதில்:** ஆங்கில மொழி அறிவையும், தகவல் தொழில் நுட்ப அறிவையும் கிராம மட்டம் எங்கும் எடுத்துச் செல்வதற்கு முன்னின்று செயலாற்றி வருகின்றோம்.

கொரோனா தொற்று ஆரம்பம் முதல் இன்றுவரையிலும் கல்வியில் பாதிக்கப்பட்ட சிறார்களின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இது தொடர்பில் அனைத்துப் பல்லைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மாணவர்கள் ஒன்றியத்தினருடன் இணைந்து செயலாற்றி வருகின்றோம். எமது 25 மாவட்டங்களிலும் கல்வித் துறையின் மேம்பாட்டுக்காக பல்கலைக் கழக மாணவர்கள் ஊடாக விழிப்புணர் வூட்டல்கள் நடத்தி வருகின்றோம்.

க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பின்பு, அடுத்த கட்டம் என்ன செய்ய வேண்டும். பெற்றோர்களுக்கான வழிகாட்டல்கள் கருத்தரங்குகள், செயல மர்வுகள் என செய்து வருகின்றோம். இக்கால கட்டத்தில் உள்ள மாணவர்களை எப்படியும் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்குடன் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றோம்.

நாடளாவிய ரீதியில் க. பொ. த. உயர்தரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சை நிதி வழங்குதல், தொழில் நுட்பக் கல்விக்கு மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளுகின்ற வளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். கல்வியின் ஊடாக சமூகத்தை முன்னேற்றுவதற்காக செயற்பட்டு வருகின்றோம்.

**கேள்வி:** கொரோனா தொற்றினால் கணிசமான வர்த்தகர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் பற்றி நீங்கள் கவனம் செலுத்தவில்லையா?

**பதில்:** உண்மையிலே வியாபாரத் துறை யில் கொறொனா தொற்றுக் காரணமாக அனைத்து சமூகமும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர். இந்த எல்லா சமூகத்தையும் இன, மத வேறுபாடு களுமின்றி மீளவும் சிறந்த முறையில் மேலும் மேம்படுத்தலாம் என்ற விழிப் புணர்வூட்டல்கள் செய்து வருகின்றோம். வீழ்ச்சியடைந்த வியாபாரங்களை முன்னேற்றுவது எப்படி? புதிய வியாபாரங் களை ஆரம்பிப்பதற்கான செயற் திட்டங்கள், கைத்தொழில்களைச் செய்து விடுபட்டவர்கள் வீட்டில் இருந்தவாறு கைத்தொழிலைச் செய்வதற்கும், அவர் களுக்கு சின்னஞ் சிறிய தொழிற்சாலை களை அமைத்துக் கொடுப் பதற்கும் என பல செயற் திட்டங்களை மேற்கொள்ள நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இந்த திட்டத்தை கண்டியைச் சேர்ந்த கலாநிதி ரிசாட் ஹுசைன் அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் முன்னெடுத்து வருகின்றோம்.

அவரவர் வீடுகளில் இருந்தவாறு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் சிறிய மிசின் இயந்திரங்கள், சிறிய லேத் மிசின், நூடில்ஸ் மிசின் இயந்திரம் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்து, வாழ்வாதார மேம்பாட்டை ஊக்குவித்து வருகிறோம். இதிலே விதவைப் பெண்களுக்கு முன்னுரிமை யளிக்கபடுகிறது.

**கேள்வி:** உங்கள் அமைப்பின் மூலம் கொரோனா தொற்றுக் காலத்தில் மேற் கொள்ளப்படும் மனிதாபிமான உதவிகள் பற்றி கூறுவீர்களா?

**பதில்:** கடந்த வருடத்தில் கொரோனா தொற்றுக் காரணமாக சுய தனிமைப் படுத்தல் ஊடரங்குச் சட்டம் நாடு முழுக்க அமுல்படுத்தப்பட்ட நாளில் இருந்து இன்று வரையிலும் எமது கிளைகள் மூலமாக நாட்டில் இனங் காணப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், குறிப்பாக இரண்டாம் கொரோனா தொற்று அலை ஏற்பட்ட பின் கொழும்பு அதிகமாகப் பாதிக்கப்பட்டது. உண்மையிலே எந்தவொரு அனர்த்தம் வந்தாலும் கொழும்பில் உள்ளவர்களே எப்பொழுதும் உதவி செய்வார்கள். இம்முறை நாங்கள் எங்களது பகுதியில் சுயமாக இயங்குகின்றோம். எங்களுக்கு எந்த உதவியும் தேவையில்லை என எமது கிளையினர் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி மொனராகலை வை. எம். எம். ஏ. மாவட்டப் பணிப்பாளர் 35 இலட்சம் ரூபா சேகரித்து, இன, மத பேத மின்றி எல்லா மக்களுக்கும் உலருணவுப் பொதிகளை தமது பகுதிகளிலே விநியோகம் செய்தார்.

அதே போன்று பண்டாரவளையில் இருந்து மேலதிகமாக சேகரிக்கப்பட்ட ரூபா 15 இலட்சம் பணத்தை கொழும்பு மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இதன் மூலம் சுமார் 1000 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் எங்களுடன் இணைந்து விநியோகம் செய்தார்கள்.

இலங்கையிலுள்ள அனைத்து வை. எம். எம். ஏ. கிளைகளின் மூலமாக மனிதாபிமான உதவிகள் நடைபெறுகின் றன. கொழும்பில் முதன் முதலில் மனிதா பிமான உதவிகளை ஆரம்பித்து வைத்ததும் எங்கள் அமைப்புத் தான். கொழும்பில் இவ்வமைப்பு சோர்வடையாமல் இன்னும் மனிதாபிமான உதவிகளை செய்து கொண்டு இருக்கின்றன.

நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டு தேசிய விவகாரங்களுக்கான தவிசாளர் கே. என். டீன் அவர்கள் பாரிய பங்களிப்பு பங்களிப்பை ஆற்றி வருகிறார்.

**கேள்வி:** உங்களது உணவுப் பொதியில் ஆயுர்வேத நோய் எதிர்ப்பு நிவாரண மூலிகை மருந்து விநியோகம் செய்யப் பட்டதாக அறிகின்றோம். அது பற்றி ?

**பதில்:** மேல் மாகாண ஆளுநரின் உதவியுடன் வை. எம். எம். ஏ. அமைப்போடு சேவையாற்றுகின்ற வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய கொழும்பு ஆயுர்வேத வைத்திய திணைக் களத்துடன் இணைந்து ஒவ்வொரு உலருணப் பொதிகளுடன் ஆயுர்வேத நோய் எதிர்ப்பு சக்தி உரித்தான மூலிகை மருந்துகளை வழங்கி வருகின்றோம். அது மேல் மாகாணத்தில் மட்டும் தான் இலவசமாக வழங்கப்படுகிறது. அது ஒரு தரமான மருந்து ஆகும். அதை ஒரு வாரத்திற்கு மூன்று வேளையிலும் பாவிக்கும்படி வழங்கப்பட்டன.

இந்த ஆயுர் வேத நோய் எதிர்ப்பு மருந்துகளை ஏனைய எட்டு மாகாணங் களிலும் உள்ள ஆளுநர்களும் நிதி ஒதுக்கீடுகள் செய்து அமைப்புக்கள் மூலமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கோரிக்கையாக நான் முன் வைக்கின்றேன். ஏனைய ஆளுநர்களும் இதை செய்வார்களாயின் நாடளாவிய ரீதியில் மக்கள் பயன் பெறுவார்கள் என நான் கருதுகின்றேன்.

வைத்தியர்கள், சுகாதார பரிசோத கர்கள் பயன்படுத்தக் கூடிய கொரோனா தொற்று பாதுகாப்பு உடைகள், கொரோனா தொற்றை மையப்படுத்தி 2021 ஆம் ஆண்டிற்கான புதிய கலண்டரையும் நாங்கள் அச்சிட்டு இருக்கின்றோம் என்பது மிகவும் முக்கிய அம்சமாகும்.

**கேள்வி:** கொரோனா செயற்பாட்டால் தற்காலத்தில் நாம் பின்பற்ற வேண்டிய பணிகள் எவை ?

**பதில்:** கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, மஹிய்யாவ, காத்தான்குடி, அக்கரைப்பற்று என பல இடங்களில் இருந்து எமது கிளையின் நிர்வாகத்தினர் தொடர்பு கொள்ளுவார்கள். அப்போது நாங்கள் காத்திரமான ஆலோசனைகளை அவர் களுக்கு வழங்குவோம். அவர்களுக்கு அரச அதிகாரிகளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்படுங்கள். அவர்கள் மக்களிடமிருந்து என்னென்ன விடயங்களை எல்லாம் எதிர்பார்க்கின்றார்களோ அவற்றை இலகுபடுத்தி, ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். நாங்கள் அவர்களுடன் இணைந்து வேலை செய்யும் போது நாங்கள் கஷ்டத்தை எதிர்பார்ப்பதில்லை.

இப்படி மாவட்ட செயலாளர், பொது சுகாதார பரிசோதகர், வைத்திய அதிகாரிகள் ஆகியோரின் உதவிகளைப் பெற்று சேவையாற்றியமையால் அதிகளவு

பாராட்டுக்கள் கிடைத்துள்ளன. திருகோணமலையில் சில பிரதேச செயலகப் பிரிவுகள் முடக்கப்பட்டிருந்தன. எங்களது வை. எம். எம். ஏ பிரதிநிதிகளின் உதவிகள் கிடைத்தமையினால் சரியாக 14 நாட்களுடன் கொரோனா தொற்று அற்ற பகுதியாக விடுவிக்கப்பட்டது. எமது இயக்கத்திலுள்ள தொண்டர்களின் அர்ப்பணிப்பினாலும் கூட்டு முயற்சியினாலும் கொரோனா தொற்றை மிக வெற்றிகரமாக முறியடிக்க முடிந்துள்ளது.

**கேள்வி:** கொரோனா தொற்றால் உயிரிழந்த உடல் தகனம் விடயம் தொடர்பில் உங்கள் கருத்து என்ன ?

**பதில்:** இன்று தகன விடயம் ஒரு இன மதம் சார்ந்த பிரச்சினையாக காட்டப்படுகிறது. உண்மையிலேயே இது பற்றி தெளிவின்மையே முக்கிய காரணமாகும். இது இஸ்லாமியரைப் பொறுத்த வரையிலும் மதம் சார்ந்த விடயம். அடுத்தவர்களுக்கு இது மதம் சார்ந்த விடயம் இல்லை. என்றாலும் கிறிஸ்தவ சமயத்தவர்களும், பௌத்த சமயத்தில் ஒரு சாராரும் அடக்கம் செய்வதில் உடன்பாடு உடையவர்கள். ஒரு குடும்பத்தில் தகப்பன் உயிரோடு இருக்கும் போது மூத்த புதல்வன் உயிரிழந்தால் அவரை அடக்கம் செய்யும் வழக்கம் பௌத்த மக்கள் மத்தியில் இருக்கிறது. அதனால் இது ஒரு பொதுவான பிரச்சினை.

முஸ்லிம்கள் குர்ஆன் ஹதீஸ்களைப் பின்பற்றி வாழுகின்ற சமூகமாகும். முஸ்லிம் ஒருவர் உயிரிழந்தால் தான் வாழ்ந்த மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று குர்ஆனில் சொல்லப்படுகிறது. இது பற்றி வேறு யார் என்ன சொன்னாலும் குர்ஆனில் ஐந்து இடங்களில் அடக்கம் தொடர்பில் கூறப்பட்டள்ளது. அதே நேரம் ஹதீஸிலும் கூறப்பட்டிருக்கிறது.

அந்த வகையிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். உரிமையைப் பெற்றுக் கொள்ளவும் முயற்சி செய்கின்றனர். ஆனாலும் முஸ்லிம் சமூகம் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு மதித்து நடக்கின்ற சமூகம் என்ற வகையில் அந்த தீர்மானத்திற்கு இதுவரையிலும் கட்டுப்பாட்டுடன் நடந்து வருகின்றனர்.

ஆனால் எங்களைப் பொறுத்த வரையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கம் நடைமுறைப் படுத்தும் சட்ட திட்டங்களுக்கு எந்த இடைஞ்சலும் செய்வதற்கு முஸ்லிம் எந்தவகையிலும் தயார் இல்லை.

மரணம் எய்து விட்டால் மரணித்தவருக்கு அல்ல அந்தப் பொறுப்பு வாழ்ந்து கொண்டிருப்பவருக்குத் தான் அந்த பொறுப்பு அமைகிறது. அந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளத் தான்

நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த கடமையை நாங்கள் மீறி இறைவன் கூறியதற்கு முரணாக நாங்கள் தகனம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம் எனில் அந்தப் பாவத்தைச் செய்ததாக நாங்கள் கருதப்படுவோம். அதனால் எங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அரசாங்கம் சட்டத்தை நிலை நாட்டும் போது அது அவர்களோடு சம்மந்தப்பட்டது. அந்த அதிகாரிகளோடு சம்மந்தப்பட்டது. நாங்கள் அந்தப் பாவ காரியத்தில் இருந்து தப்பித்துக் கொண்டோம்.

இந்த விவகாரத்தில் பல அமைப் புக்கள் பல முயற்சிகள் எடுத்தாலும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை வந்து முதலாவது நீர்கொழும்பில் நடந்த முதல் தகனத்தில் இருந்து இந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் நேரடியாக அரசாங்கத்திற்கு ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், சுகாதார அமைச்சர், அதிகாரிகளுக்கு கோரிக்களை அடிக்கடி விடுத்து அழுத்தம் செலுத்தி வருகின்றோம் என்பது உண்மையே.

இந்த விவகாரம் தொடர்பில் உண்மையை விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படுமாயின் முஸ்லிம்கள் யாரும் எதிர்க்க மாட்டார்கள். இதில் விஞ்ஞான ரீதியாக அல்லாமல் வேறு வழியில் அறியாமல், தெளிவில்லாமல் துறை சார்ந்த ஒரு குழுவின் ஊடாக இது தீர்மானிக்கப்பட்டதா என்ற சந்தேகமும் முஸ்லிம் மக்கள் மத்தியில் இருக்கிறது.

இறுதியாக வைத்திய நிபுணத்துவ குழுவினர் தகனமும் செய்யலாம், அடக்கமும் செய்யலாம் என்ற கருத்தை வெளியிட்டனர். இந்தக் கருத்தை உலகளாவிய ரீதியில் கடைப்பிடிப்பதை நாங்கள் அறிகின்றோம். உலக சுகாதார அமைப்பு, உலகிலுள்ள 194 நாடுகளில் இதை ஏற்றுக் கொண்ட விடயமாகும். ஆனால் இங்கு மட்டும் புதிதாக ஒரு விடயத்தை முன் வைத்திருப்பதால் மனதிற்கு கஷ்டமாக இருக்கிறது. உண்மையிலே நிலத்தில் உள்ள நீர்வளத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப் படுமாக இருந்தால் முஸ்லிம்கள் எதிர்க்க மாட்டார்கள்.

**கேள்வி:** கொரோனா தொற்றால் உயிரிழந்தவரின் உடலை மாலை தீவில் அடக்கலாம் என்ற கருத்தும் நமது நாட்டில் இடம்பெற்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** ஒரு சாரார் இது நல்ல காரியம் எனக் கருதி இந்த அடக்குதல் விவகாரத்தை மாலை தீவுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ, இன்னுமொரு நாட்டுக்கோ எங்களுடைய உடல் எடுத்துச் செல்வதற்கு முயற்சி செய்தார்கள். இந்த நாட்டில் நாங்கள் பூர்விகக் குடிகள்.

நாங்கள் 1200 வருடம் வரலாற்றை கொண்டவர்கள். இங்கேயே பிறந்து வாழ்கின்றோம். இங்கேயே அடக்கம் செய்யப்பட வேண்டும். இன்னுமொரு நாட்டுக்குப் போக முடியாது என்று எல்லா அமைப்புக்களும் அரசியல் தலைமை களும் வாய் மூடியிருக்க நேரடியாக வை. எம். எம். ஏ. பேரவை மட்டும் ஒரு ஊடக மாநாட்டை நடத்தி ஊடக அறிக்கையை வெளியிட்டோம்.

எங்களுக்கு பல அழுத்தங்களுக்கு மத்தியில் நேரடியாக ஒரு முதுகெலும்பு உள்ள ஒரு தேசிய அமைப்பாக இருந்து மாலை தீவு ஜனாதிபதிக்கும் அங்குள்ள இலங்கை தூதுவர் ஊடாக வேண்டு கோளை விடுத்தோம். அவர்களும் இதே அடிப்படையாகக் கொண்டு அதை மீளப் பெற்றுக் கொண்டு எங்களுக்கு பதிலையும் அனுப்பியுள்ளார்கள்.

இதனால் பாதிப்பு இருக்குமாயின் நாங்கள் மாற்று ஒரு ஆலோசனை ஒன்றை நாங்கள் அரசாங்கத்திடம் முன் வைத்திருக்கின்றோம். அவ்வுடலைப் பாதுகாப்பாக வைத்து கொங்கிரீட் சந்தூக்கில் அதை நாங்கள் செய்து அடக்கம் செய்யுங்கள். அதை அடக்கு வதற்கான முழு செலவையும் நாங்கள் பொறுப்பேற்கின்றோம் என்று நாங்கள் அரசாங்கத்திடம் ஏற்கனவே ஆரம்பத்தில் ஏப்ரல் மாதம் அளவில் கோரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கின்றோம். பாரம்பரிய முறைக்கு இடமளிக்க இயலாது என்று கூறினால் கொங்கிரீட்டில் செய்யப் பட்ட சந்தூக்கில் அடக்கம் செய்வதற்கு வழிவகை செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம். ஒன்று தலா 60000 செலவாகும். எத்தனை பேர் வந்தாலும் அதை நாங்கள் பொறுப்பேற்போம் என்று தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

15-01-2021

# முன்னோர்களின் தியாகங்களைப் பின்பற்றி புதிய தலைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்

**மக்கள் அடிமையுணர்வுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இன்று அடிமட்டத்தில் இருந்து உயர் மட்டம் வரையிலும் இன முரண்பாட்டு ரீதியாக உடல், உள நிலை பாதிக்கப்பட்டுள்ளனர். முதலில் இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தம் மனதைப் பரிபூரமாண முறையில் பரிசுத்தப்படுத்திக் கொண்டு வெளியே வர வேண்டும். இதன் மூலம் தான் நாடும், வீடும், கல்வி, பொருளாதாரம், சகல சமூகமும் தானாகவே வளர்ச்சி அடையும்.**

நாம் சுதந்திரதின விழாக்களை மாத்திரம் நடத்தி விட்டு இருக்காமல், நாங்கள் பெற்ற சுதந்திர வரலாறு பற்றி எதிர்கால தலை முறையினர்கள் மத்தியில் பேசப்பட வேண்டும். அது பற்றி எடுத்து நடக்கச் செய்ய வேண்டும். எதிர்காலத்தில் நாங்கள் பெற்ற படிப்பினைகள் தியாகங்கள் எல்லாம் அறிந்து வழிநடத்தக் கூடிய புதிய தலைமுறைகள் உருவாக்கப்படவேண்டும். அடிமையுணர்வில் இருந்து வெளியே வருவதற்கு மூவின மக்களும் ஒன்று சேர்ந்து முன்னோர்கள் இணைந்து போராடியதைப் போன்று போராட முன் வர வேண்டும். இவையே என்னுடைய கருத்தாகும் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**கேள்வி:** எமது தாய் நாடு 73 வது சுதந்திர தின நிகழ்வு கொண்டாடும் தினத்தில் நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில் :** உண்மையிலேயே இந்த இனிய நன்நாளை இத்தாய் நாட்டின் பிதாமகன் என்ற வகையில் மிகப் பெறுமதிமிக்க நாளாகவே மதிக்கின்றேன். நாங்கள் இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் கிறிஸ்தவ ஆகிய மக்கள் அனைவரும் இன்று 04 - 02 - 2021 ஆம் ஆண்டு 73 வது சுதந்திர தினத்தை சிறப்புடன் கொண்டாடு கின்றோம். கடந்த காலங்களில் 182 மன்னர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்துள்ளார்கள். 1812 ஆம் ஆண்டுடன் மன்னர்களின் ஆட்சிக்காலம் முடிவு பெறுகின்றன. அதன் பின்னர் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், பிரித்தானியர் ஆகிய

நாட்டவர்கள் எமது எமது தாய் நாட்டை ஆக்கிரமித்து காலனித்துவ ஆட்சி செய்தனர். ஆனால் 1802 ஆம் ஆண்டில் இருந்து 1948 ஆம் சுதந்திரம் கிடைக்கும் வரையிலும் ஆங்கிலேயர்களுடைய காலனித்து ஆதிக்க ஆட்சிக் காலத்தில் எமது நாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் ஆகிய அனைத்து மக்களும் சகோதர வாஞ்ஞையுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தனர். மூவின மக்களுடைய சமூகத் தலைவர்களும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக போராடியுள்ளனர். முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையிலும் இந்த நாட்டின் பொருளாதாரம் பாதுகாப்பு மருத்துவம் எனப் பல்வேறு துறைகளில் முக்கிய பங்களிப்பை நல்கி வந்துள்ளார்கள்.

அதிலும் விசேடமாக இந்நாட்டிற்கு வர்த்தக ரீதியாக வருகை தந்த அரேபியர்களும் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார்கள். இந்த அரேபியர்கள் தான் இரத்தினக் கல் வியாபாரத்தை உலகம் முழுக்க கொண்டு சென்றவர்களாவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது

**கேள்வி** : காலனித்துவ ஆட்சியாளர்களுக்குப் பின்னர் இந்த சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் காணப்படும் சிறுபான்மையின் மக்களின் மனோ நிலை தொடர்பில் உங்களது அபிப்பிராயம் என்ன?

**பதில் :** சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் எல்லாயின மக்களும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் சகவாழ்வுடனும் ஒற்றுமையாக வாழ்ந்தனர். சுதந்திரத்திற்குப் பினனர் அரசியல் கட்சி முறையில் ஆட்சியாளர்கள் 73 ஆண்டு வரையிலும் மாறி மாறி ஆட்சி செய்தனர். எனினும், இந்த ஆட்சியாளர்கள் குறிப்பாக சிறுபான்மையின சமூகத்தினர்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள், உயிர்த் தியாகங்கள் செய்தவர்கள் என்பதை மறந்து செயற்படும் நிலை காணப்படுவதை அதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த நாட்டில் வாழும் சகல மக்களுடைய சமூகத் தலைமைகளும் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள் என்பதை பொறுப்புக் கூறுதலை தெளிவாக எடுத்துக் கூற தவறி விட்டனர். குறிப்பாக தனியொரு இனத்தை அல்லது சமூகத்தைத் திருப்திபடுத்தும் கொள்கைகளிலும் பார்க்க எல்லா இனங்களுக்கும் சமூகங்களுக்கிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் கொள்கைகள் அமுலாக்கப்படுதவன் மூலமே இன நல்லுறவைக் கட்டி எழுப்ப முடியும். தொடர்ந்து மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் இதைப் பற்றிக் கவனத்தில் கொள்ளப்படாத நிலைப்பாடே காணப்படுகிறது. இல்லையேல் உண்மையான சுதந்திர தினத்தின் அடையாளத்தைக் கண்டு கொள்ள முடியாது.

எந்தவொரு ஆட்சியாளராக இருந்தாலும் சிறுபான்மையின

மக்களுடைய மனதை திருப்திப்படுத்தக் கூடிய வகையில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என நான் கருதுகின்றேன்.

**கேள்வி :** நீங்கள் ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள்?

**பதில் :** உண்மையிலேயே இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக மூவின மக்களும் பல் வேறுபட்ட தியாகங்களைச் செய்துள்ளனர். இந்நாட்டு மக்கள் பிறப்பின் அடிப்படையில் ஓர் இனமாகவும் மதமாகவும் ஒற்றுமையாக வாழ்ந்திருக்கிறார்கள். இலங்கையர் என்ற வகையில் முஸ்லிம்களுக்கும் நீண்டதொரு வரலாறு இருக்கிறது. கடந்த 73 வருடங்கள் தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல் தலைமை கள் தத்தம் அரசியல் இலாபத்திற்காகவும் தம் பதவிகளையும் ஆட்சியினையும் தக்க வைத்துக் கொள்வதற்காக இப்படியான அரசியல் காய் நகர்த்தல்களை செய்கின்றன. இன ரீதியிலான போக்குகள் நிலை பெற்றுள்ளன. இந்நாட்டில் வாழும் சமூகங்களுக்கிடையே பரஸ்பர சந்தேகங் களும், பிணக்குகளும், அமைதியின்மையை யும், இன ரீதியிலான கலவரங்களையும் தோற்றுவிக்கின்றன. எனவே இதில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு, ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது.

**கேள்வி:** துரதிருஷ்டவசமாக மக்கள் மனோநிலை பாதிக்கப்பட்டு இருக்கின்ற சூழ்நிலையிலேயே நாங்கள் 73 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றோம். இது கவலை தரும் செய்தியாகும். இதற்காக நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

**பதில் :** மக்கள் அடிமையுணர்வுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இன்று அடி மட்டத்தில் இருந்து உயர் மட்டம் வரையிலும் இன முரண்பாட்டு ரீதியாக உடல் உள நிலை பாதிக்கப்பட்டுள்ளனர். முதலில் இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தம் மனதைப் பரிபூரமாண முறையில் தம்மை பரிசுத்தப்படுத்திக் கொண்டு வெளியே வர வேண்டும். இதன் மூலம் தான் நாடும், வீடும், கல்வி, பொருளாதாரம் சகல சமூகமும் தானாகவே வளர்ச்சி அடையும். சுதந்திர தின விழாக்களை மாத்திரம் நடத்தி விட்டு இருக்காமல் நாங்கள் பெற்ற சுதந்திர வரலாற்று பற்றி எதிர்கால தலைமுறை யினர்கள் மத்தியில் பேசப்பட வேண்டும். அது பற்றி எடுத்து நடக்கச் செய்ய வேண்டும். எதிர்காலத்தில் நாங்கள் பெற்ற படிப்பினைகள் தியாகங்கள் எல்லாம் அறிந்து வழிநடத்தக் கூடிய புதிய தலைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். அடிமையுணர்வில் இருந்து வெளியே வருவதற்கு மூவின மக்களும் ஒன்று சேர்ந்து முன்னோர்கள் இணைந்து போராடியதைப் போன்று போராட முன் வர வேண்டும். இவையே என்னுடைய கருத்தாகும்.

**கேள்வி :** உங்களது வை. எம். எம். ஏ பற்றிக் கூற முடியுமா?

**பதில் :** இந்த வை. எம். எம். ஏ. பேரவை 1917 ஆம் ஆண்டில் இருந்து குறிப்பாக சுதந்திரத்திற்கு முன்னர் இருந்து இந்நாட்டில் மக்களுக்கு பொதுப்பணி செய்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் 1947 ஆம் ஆண்டில் தம் மனைவியுடன் லண்டன் நாடு சென்றார். அங்கு இருந்த வரும் வழியில் எகிப்தில் கெயிரோவில் உள்ள வை. எம். எம். ஏ அமைப்புக்கும் விஜயம் செய்தார். அதைப் பற்றி மிக ஆழமாக அறிந்து கொண்டார். அதன் பின்னர் 1950 ஆம் ஆண்டில் ஏப்ரல் 30 ஆம் திகதி 17 வை. எம். எம். ஏ கிளை அமைப்புக்களை ஒன்றிணைத்து வை. எம். எம். ஏ பேரவையாக உருவாக்கினார். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் தலைவராகவும், லாபீர் ஏ. காசிம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

**கேள்வி :** வை. எம். எம். ஏ பேரவையின் அமைப்பில் இருந்து நீங்கள் முக்கியமாகக் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன?

**பதில்:** இந்தச் சந்தர்ப்பத்தில் கலாநிதி அஸீஸ் கூறிய கூற்று ஒன்று ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

"எந்த சமூகம் முன் சென்ற தம் தலைவர்களை மதிக்கவில்லையோ அந்த சமூகத்தில் இருந்து தலைவர்கள் உருவாக மாட்டார்கள்" என்று அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸின் மிகப் பிரதான கூற்றாகும். அதன் உண்மைப் பெறுமானம் நமக்கு இன்று வெளிப்படையாக புலப்படுகிறது. எங்கள் சமூகத்தில் அரசியல் தலைமைகளையும் சிவில் தலைமைகளையும் உருவாக்க யாரும் முன் வருவதில்லை. அரசியல் தலைவர்கள் கூட தங்களுடைய அடிவருடிகளை மட்டும் உருவாக்கிச் செல்லுகின்றார்களே தவிர எதிர்கால தலைவர்களை உருவாக்குவதில்லை. அன்று சிவில் சமூகம் தான் அரசியல் தலைவர்களை உருவாக்கின.

எதிர்காலத்தில் சிவில் தலைமைகள் ஒன்றுபட்டு புதிய அரசியல் தலைமை களையும் சிவில் தலைவர்களையும் உருவாக்குவதற்காக முயற்சிகள் செய்ய வேண்டும். இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் புதிய தலைமைத்துவ தட்டுப்பாடு அதிகளவு நிலவுகின்றது. எனவே இந்த புதிய தலைமைத்துவங்களை உருவாக்குவதற்கு எல்லாம் அமைப்புக் களும் ஒன்று சேர்ந்து எங்களுக்கிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளில் இருந்து விடுபட்டு எதிர்கால தலைவர்களை உருவாக்குவதற்காக நாங்கள் முன் வர வேண்டும்.

1960 களில் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் கொண்டிருந்த சிந்தனையின் இலட்சத்தை உயிர்ப்பித்து சமூகத்தை மீளப்புனரமைப்புச் செய்ய வேண்டும். 2021 ஆண்டில் இது எங்களுடைய பொறுப்பு ஆகும் எனப் பிரகடனம் செய்து திடசங்கற்பத்துடன் செயற்பட வேண்டும். பேரவையாக இருக்கட்டும் கிளை அமைப்புக்களாக இருக்கட்டும் நாம் மேற்கொள்ளும் பணிகள் இன்றைய சூழலில் வினைத் திறன்மிக்கவையா அல்லது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமை மிக்கவையா என இதய சுத்தியோடு கலந்தரையாட வேண்டி இருக்கிறது. பொருளாதார ரீதியில் அடுத்த சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும். மேற்கத்திய நாடுகள் தொழில் நுட்ப ரீதியில் பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்காக முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இவை பற்றி நாங்கள் எப்படி சிந்தித்து நடக்க வேண்டும்.

குறிப்பாக கொரோனா தொற்றுக் காலத்தில் நாங்கள் எவ்வாறு வாழ வேண்டும். நாங்கள் புதிய சாதாரண வாழ்க்கை முறையில் எவ்வாறு வாழுதல் வேண்டும். சமூக பொருளாதார சுகாதார ரீதியில் நாங்கள் எவ்வாறு வாழ வேண்டும். இந்தச் சவால்களை எவ்வாறு வெற்றி கொள்ள வேண்டும். கொரோனா தொற்றினால் கடுமையாகப் பாதிப் படைந்து தோல்வியை எதிர்நோக்கின ஒரு சில நாடுகள் தடுப்பூசியைக் கண்டு பிடித்து அதன் ஊடாக வெற்றி பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

கொரோனா தொற்று எமக்கு வராமல் தடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்தி நாங்கள் முன்னோக்கிச் சென்று இந்த உலகத்தை வெல்ல வேண்டும். கொவிட்டை வெற்றி கொண்ட சமூகமாக வும் வெற்றி கொண்ட நாடாக மாற்றுவதற்கு எமது முஸ்லிம் சமூகத்தினுடைய எல்லா செயற்பாடுகளும் பங்களிப்பும் அமைய வேண்டும் என்பதே என்னுடைய அவா. இவற்றையே நான் வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவரின் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸின் சிந்தனையின் மூலமாக கற்றுக் கொண்டேன்.

**கேள்வி :** இன்றைய முஸ்லிம்களுடைய எதிர்கால கல்வி நிலை தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** 1940 களில் கல்வியை நாடாமல், புரியாமல் விட்டமையால் முஸ்லிம் சமூகத்தினருடைய நிலை இன்னும் பின்னோக்கிய காணப்படுகின்றது. இதனால் முஸ்லிம்களது வாழ்வியல் அதளபாதலாத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கல்வியின் ஊடாக எமது பின்னடைவுகளை வெற்றி கொள்வதற்கு நாங்கள் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டி இருக்கிறது. இந்நிலையில் இருந்து தம் சமூகத்தை

மீட்டெடுக்க அல்லது குறைந்த பட்சம் தம் சமூகத்தின் வீழ்ச்சியை எடுத்துக் கூறுவதற்கேனும் தோன்றப் போகின்ற மற்றுமொரு அறிஞர் அஸீஸ் யார்? மற்றுமொரு கொடைவள்ளல் நளீம் ஹாஜியார் யார்? மற்றுமொரு அரசியல் பரோபகாரி ராசிக் பரீத் யார்? மற்றுமொரு அறிஞர் அஞ்ஞா நெஞ்சம் கொண்ட எந்த சத்திக்கும் அடிபணியாத மசூத் ஆலீம் போன்றவர்கள் யார்? நாம் இந்த கேள்விக்கான விடையைத் தேட வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் நாம் வாழும் இந்த யுகத்தில் நாம் அனைவரும் எல்லாம் தெரிந்தவர்கள் என்ற மடமையில் சிக்கிக் கொண்டிருக்கின்றோம். தனக்கு ஒரு பட்டம் இருந்து விட்டால் தனக்கு எல்லாம் தெரியும் என்ற மமதைக்குள்ளே பெரிமிதப்படும் சமூகமாக முஸ்லிம் சமூசம் மாறியிருப்பது முஸ்லிம் சமூகத்தை குழிதோன்றி புதைப்பதற்கு சமனாகும். இன்று சமூக வலைத்தளங்களில் எழுதும் எழுத்துக்கள் இதை வெளிக்காட்டிக் கொண்டிருக் கின்றன. இந்த சமூகவலைத்தளங்களை கையாளும் முறை தெரியாமல்தான் நாங்கள் எங்களது தோல்விகளை தொடர்ந்து சந்தித்து வருகின்றோம். முஸ்லிம்களுடைய எதிர்கால சமூகத்தை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்ற விடயத்தில் நமக்கு யார் சொல்லித் தருவார்கள் என நாங்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கின்றோம்.

எனவே நாம் அனைவரும் அகில இலங்கை வை. எம். எம். ஏ உடன் இணைந்து புதிய பாதையில் அர்ப்பணிப் போடு தூய்மையான எண்ணத்தோடு தாழ்வு மனப்பாங்குகளையும் கசப்புணர்வு களையும் மறந்து சுயநலங்களையும் துறந்து செயற்பட்டால் பெரும் மாற்றத்தை அடைய முடியும். இந்நாட்டில் நமக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பலைகள் சவால்கள் எல்லாம் வெயிலைக் கண்ட பனிபோல் மறைந்து விடும். எனவே நாம் என்ன செய்ய வேண்டும். எமது பேரவை பிரதான கொள்கை வகுக்கும் பீடமாகவும், கிளைகள் கொள்கை செயற்படுத்தும் களங்களாகவும் மாற்றப்பட வேண்டும். பேரவை அடுத்த அமைப்புக்களோடு சேர்ந்து செயலாற்றக் கூடிய ஒரு பலமான அமைப்பாகவும் மாற வேண்டும். பேரவையும் கிளைகளும் சம்பிரதாய கல்விச் சிந்தனையில் இருந்து விலகி இன்றைய கால கட்டத்தில் சமூகத்தின் போக்கில் அவதானத்துடன் உறுதியான கல்விக் கொள்கைகளை வகுக்க வேண்டும். படித்த, படிக்காத இளைஞர்களை வலுவூட்டுவதற்கு இஸ்லாத்தில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு அமைய இந்த நாட்டின் நல்ல பிரஜைகள் என்ற பெயருடைய கோட்பாட்டில் எல்லா சமூகத்தோடும் இணங்கி ஒற்றுமையோடு செயற்படக் கூடிய ஒரு எதிர்கால சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இப்படியான ஒரு முற்போக்கு செயற் திட்டங்களைச் சம்மந்தப்பட்ட

குறைகளை தூய்மையுடன் சிந்திக்கக் கூடிய தகைமையுடைவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று செயற்படுவதற்கு நாம் உறுதி பூண வேண்டும். இந்த நூற்றாண்டில் காலடி வைக்கும் வை. எம். எம். ஏ. நாமம் கொண்ட அனைவரும் இன்றைய தினம் இறைவன் அங்கீகரிக்கக் கூடிய கைங்கரியமாக அவை அமைய வேண்டும் எனக் கருதுகின்றேன்.

**கேள்வி :** உங்கள் பேரவையில் மொழி சார்ந்த பாகுபாடுகள் காணப்படுவதாக அறிந்தேன். அவை உண்மையா?

**பதில் :** எமது சமூகத்தில் எல்லா வகையிலான வளங்களும் துறைசார்ந்த வர்களும் இருக்கின்றார்கள். ஒரு சர்வகலாசாலை போன்றது எங்களுடைய பேரவை. எமது சமூகத்தில் மொழி முரண்பாடுகள் காரணமாக துறை சார்ந்த தலைவர்களை எதிர்காலத்தில் வெளியே கொண்டு வருவதற்கு முடியாமை இருந்தன. இது தேசிய மட்டத்திலும் அரச மட்டத்திலும் தாக்கம் செலுத்தியமை முக்கிய அம்சமாகும். நாளுக்கு நாள் பல இயக்கங்கள் அதிகரித்துச் செல்கின்றது. சில அமைப்புக்கள் ஆரம்பித்த வேகத்திலே மறைந்து விடும்.

கொழும்பை மையமாக் கொண்டு பல்வேறு அமைப்புக்களை துறை சார்ந்த வர்கள் செல்வந்தர்கள் ஒன்றிணைந்து தமது சமூகத்திற்கு ஏதோ செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடும் கவலையோடும் ஆரம்பிப்பார்கள். ஆனால் ஒரு சில செயற் திட்டங்களைத் தவிர அநேகமான செயற் திட்டங்களும் தோல்வியில் முடிந்து மக்கள் மத்தியில் போய் சேராமல் எங்கேயோ ஓர் இடத்தில் நின்று விடுகிறது. அந்த வகையிலே ஒரு குறிப்பிட்ட சாரார் மாத்திரம் தான் இந்த செயற்பாட்டின் மூலம் மனிதாபிமான உதவிகளைச் செய்யக் கூடியதாக இருக்கிறது.

இதற்கான காரணம் என்ன வென்றால் நமது நாட்டின் தேசிய மொழி சிங்களம், நமது தாய் மொழி தமிழ், சர்வதேச மொழி ஆங்கிலம். ஆனால் தமிழ் மொழியில் பேசி தங்களுடைய செயற் பாடுகளை வெளிக்காட்டக் கூடியவர்கள் அதிகளவு வாலிபர்கள் யுவதிகள் இருக்கின்றார்கள். குறிப்பாக கொழும்பு மையமாக வைத்து ஆரம்பிக்கக் கூடிய எல்லா அமைப்புக்களும் ஆங்கில மொழியில் தான் எல்லா விடயங்களையும் செய்கின்றார்கள். ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள வாலிபர்கள் மொழி ரீதியிலான பின்னடைவுகள் காரணமாக அவ்வமைப்புடன் இணைந்து கொள்வ தில்லை. ஆங்கில மொழியில் செயற் திட்டங்களை மேற்கொள்பவர்கள் முதல் தரம் வாய்ந்தவர்கள் என நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். இது பாமர மக்கள் மத்தியில் அடி மட்ட மக்கள் மத்தியில் இவர்களுடைய சேவை போய்

சேராமல் இடை நடுவே நின்று விடுகின்றது. எனவே எல்லா வகையிலான செயற் பாடுகளும் மும்மொழிகளிலும் நடைபெற வேண்டும். முடியாவிட்டால் தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் நாங்கள் செயலாற்ற வேண்டும். அந்த வகையிலேயே அகில இலங்கை வை. எம். எம். பேரவையானது நான் செயலாளராக இருந்த கால கட்டத்திற்குப் பின்னர் அனைத்து செயற்திட்டங்களும் அறிக்கை களும் அனைத்து ஆவணங்களும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வெளிக் கொணரப்படுகின்றது.

இதற்கு முன்னர் கடந்த 65 வருடங்களாக தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டு ஆங்கிலம் மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து வந்தமையினால் கிராம மட்டங்களில் இருந்து எங்களது அமைப்புடன் வாலிபர்களை உள்வாகிக் கொள்ள முடியாமைப் போயிற்று. தற்போது எந்த மொழியிலாக இருந்தாலும் அவர்கள் செயற்படுவதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் வை. எம். எம். ஏ. தயாராகி விட்டது . தத்தமது அறிவுத் திறன், ஆற்றல், ஆளுமைகள் இருக்கின்ற வேளையில் சம்மந்தமில்லாமல் ஆளுமை யற்றவர்கள்களுடைய பணியில் ஒரு சில விடயங்களுக்கு பின்னடைவாக அமையாலாம். தச்சன் தச்சனுடைய வேலையைத் தான் செய்ய வேண்டும். எழுத்தாளர், எழுத்தாளர் பணியை செய்ய வேண்டும். எல்லோரும் எல்லா விடயத்திலும் கையடிக்கப் போய்தான் குறித்த துறைகளுக்கு மதிப்பு இல்லாமல் அல்லது அந்த துறை சார்ந்தவர்களுக்கு மதிப்பின்றி நாங்கள் பின்னடைவுக்கு நாங்கள் ஆளாகிவிடுகின்றோம். எனவே தமிழ் மொழிக்கும், எமது தாய் மொழிக்கும், எமது தேசிய மொழிக்கும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பொழுது அவ்வாறானதொரு முரண்பாடு எமது அமைப்பில் இல்லை.

04-02-2021 தினகரன்

# முஸ்லிம் தனியார் சட்டமும் சிவில் சமூக கூட்டமைப்புக்களுடைய நம்பிக்கையும்

**முஸ்லிம் தனியார் சட்ட விவகாரம் குறித்து அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தினகரனுக்கு வழங்கிய செவ்வி**

**கேள்வி :** இலங்கையில் "முஸ்லிம் தனியார் சட்டம்" தொடர்பிலான தீர்மானம் வழக்கம் போல கொஞ்சக் காலம் கலந்துரையாடலில் நகர்ந்து செல்லும். பின்னர் எந்தவிதமான அவசரத் தேவையுமில்லாமல் கிடப்பிலே போடப்படும். .ஆனாலும் தற்போது இந்த விவகாரம் சற்று சூடுபிடித்திருக்கின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

**பதில்:** நீங்கள் சொல்வது உண்மைதான். இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றும் காழி நீதிமன்ற சட்ட சீர்திருத்தில் முஸ்லிம்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டு விடும் என்ற அச்ச நிலை தோன்றியுள்ளது. முஸ்லிம் சமுதாயம் தங்களுடைய விவாகரத்துச் சட்டம் சம்மந்தமான விடயங்களை மாவட்ட நீதி மன்றங்களில் சமர்ப்பித்து அந்த நீதி மன்றங்களில் நீதி கேட்க வேண்டுமென்ற சில பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதன் வரலாற்று ரீதியிலான பிரச்சினைகள் அல்லது அதனை உரிய காலத்தில் அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியாமை போனமைக்கான அடிப்படைக் காரணங்கள் பலவுள்ளன. மற்றும் அவற்றுடன் புதைந்திருக்கும் யதார்த்தங்களை கண்டறிந்து கொள்வதற்கான தேவைப் பாட்டில் சம்மந்தப்பட்டவர்கள் உண்மையான தீர்வொன்றுக்கு கவனத்தைச் செலுத்துவதன் மூலமே சரியான, நியாயமான காழி நீதி மன்ற சட்ட சீர்திருத்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதே சமயம் தற்கால அரசியல் சூழலை கருத்திற் கொண்டு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் மீது மட்டும் இதனை கையளிக்காமல் அமைச்சரவைக் குழுவினர்களிடம் நியாயத்தை எமது பக்க நியாயங்களை விளக்கிக் கூறி அதனை உள்வாங்கச் செய்து நீடித்து நிலைத்திருக்கும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

முஸ்லிம் தனியார் சட்ட விவகாரம் இன்று எல்லோருடைய கவனத்தையும்

குறித்து நின்றாலும் அது இன்னும் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட வில்லை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இது அமைச்சரவைக் குழுவில் விவாதிக்கப்பட்டு அதனை வர்த்தகமானியில் வெளியிட்டதன் பின்னர் மீண்டும் ஒரு முறை அமைச்சரவைக் குழுவில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு மீளவும் வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்படும். அதற்குப் பிறகு தான் பாராளுமன்ற விவாதத்திற்கு வரும்.

அதே சமயத்தில் முஸ்லிம சமூகம் அந்த வர்த்தமானிக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, அதனை சவாலிடவும் முடியும். எனவே இது முடிந்துவிட்ட விடயமல்ல. நமக்கு நேரம் காலம் இருக்கிறது. எனவே இது பற்றி முஸ்லிம் மக்கள் அனைவரும் தெளிவாக சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். முதலாவதாக காழிக்கோடுகள் ஏன் அமைக்கப்பட்டன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**கேள்வி :** இந்த முஸ்லிம் தனியார் காழி நீதி மன்றத்தின் பயன் என்ன?

**பதில்:** உண்மையிலேயே இந்த காழிக் கோடுகள் எல்லாம் விவாகரத்துக்காக ஏற்படுத்தப்பட்டவை அல்ல. இதன் முதல் பணி திருமணத்தில் பிணக்குகள் ஏற்படும் போது பிரச்சினைகளை தீர்த்து வைத்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். அவர்களை சமாதானப்படுத்தி ஒன்று சேர்த்து வைக்கின்ற பணிகளையே அவை செய்கின்றன.

அதுவும் இயலாத பட்சத்தில் விவாகரத்து நேர்ந்தால் இஸ்லாமிய முறைப்படி கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளைத் தீர்த்தல், பிள்ளைப் பராமரிப்புக்காக கட்டணங்கள் போன்ற வற்றைப் பெற்றுக் கொடுப்பதே இதன் பிரதான பணியாகும். ஆனாலும் ஒரு சில காழிக்கோடுகள் சரியாக செயற்பட வில்லை என்பது உண்மைதான்.

இதனால் சில பெண்களும் சில ஆண்களும் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என்பது நாம் அறிந்த உண்மை. ஆனாலும் நூற்றுக்கு நூறு விகிதம் எல்லோரும் இப்படியாக தவறு இழைப்பவர்களோ அல்லது முஸ்லிம்களுக்கு கொடுமை செய்பவர்களோ அல்ல.

இந்த காழி நீதி மன்றங்கள் ஆரம்ப முதல் இன்று வரையிலும் சீர்திருத்தங்களுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உண்மையிலேயே அல்லாஹ் தஆலாவுக்குப் பயந்து அறிவுடன் இஸ்லாமிய மார்க்க விழுமியங்களை உணர்ந்து சேவை செய்கின்றனர். இது தான் உண்மை.

**கேள்வி :** முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடுகள் என்ன?

**பதில் :** இதில் எந்தவிதமான பெரியள விலான குறைபாடுகளும் இல்லை. இந்த விடயத்தை நாம் ஒவ்வொருவரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அடுத்து காழிக் கோடுகள் ஏன் விமர்சிக் கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு காழிக் கோடுகளில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. சில பிழையாக நடந்தி ருக்கலாம். சிலர் லஞ்சம் பெற்றி ருக்கலாம். பெண்களை அலைக்கழித் திருக்கலாம். வழக்குகளை முடித்துக் கொடுக்காமல் காலம் தள்ளிப் போட்டி ருக்கலாம் போன்ற குற்றச் சாட்டுகள் இங்கு இருக்கின்றன. அது உண்மை தான் பொய்யல்ல.

ஆனால் நூற்றுக்கு நூறு விகித மான காழிக் கோடுகள் அவ்வாறு நடப்ப தில்லை. இந்த விவகாரம் தொடர்பில் மிக நீண்ட வருடங்களாக சட்ட வரைபுகளை மேற் கொண்டு வரும் சட்டத் துறை அறிஞர்களோடும் காழி கோட்டு நீதிபதிகளோடும் மற்றும் அவை தொடர்பில் எமது வை. எம். எம். ஏ. பேரவையின் முக்கியஸ்தர் என்ற வகையிலும் அது பற்றி நன்கு அறிந்தவன் என்ற வகையில் அதனை விமர்சனம் செய்ய தேவை இல்லை என்பதை என்னால் அழுத்தம் திருத்தமாக கூற முடியும்.

விவகாரத்து என்று வரும் போது மூன்று அல்லது நான்கு மாதம் நீதமான முறையில் விசாரணை செய்து சிறப்பான கண்காணிப்புடன் தீர்ப்பு வழங்க வேண்டும். உண்மையில் இந்த காழிக் கோடுகள் நீதிச் சேவைகள் ஆணைக்குழு என்று சொல்லுகின்ற சுயாதீனமான குழு இது. நீதி அமைச்சுக்கு கீழே தான் இருக்கிறது. எனவே பிழை செய்பவர்களை தடுத்து நிறுத்த அதிகாரம் நீதி அமைச்சுக்கு உள்ளது.

**கேள்வி:** இந்த விவகாரம் தொடர்பில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை முன்னெடுக்கும் வேலைத் திட்டம் என்ன?

**பதில்:** 2020 - 12- 31 ஆம் திகதிகளில் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் வக்பு சபைத் தலைவர் சப்ரி ஹலீம்டீன் தலைமையில் சீர் திருத்தக் குழு நியமிக்கப்பட்டது. அங்கு குறிப்பிட்ட சீர்திருத்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட முன்னரே, 2021-03-08 ஆம் திகதியில் பலதார திருமணம் காரணமாக காழி நீதிமன்ற முறைமை தடை செய்யப்பட வேண்டும் என்று அமைச்சரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது என அறிகிறோம். தொடர்ந்து 21-06 2021 ஆம் ஆண்டு சீர்திருத்தக் குழுவினர் அறிக்கை யினை நிறைவு செய்து அமைச்சரவைக்கு கையளித்தார்கள். எனினும் அமைச்சர வையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதைத்

தொடர்ந்து சீர்திருத்தக் குழுவில் இருந்து அதற்கான எதிர்ப்புக்கள் எழுந்தன. அகில இலங்கை ஜம்ம்மிய்யதுல் உலமா சபையின் செயலாளர் மௌலவி அர்கம் நூருல் அமீன், சட்டத்தரணி ரிஸ்கி ஹபீப் ஆகியோர் அமைச்சரவையின் தீர்மானத் திற்கு எதிராக சீர்திருத்தக் குழுவில் இருந்து வெளியேறினர்.

அமைச்சரவையின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாத சிவில் அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள், பிரச்சார அமைப்பு கள் என எல்லா அமைப்புக்களும் இந்த விவகாரத்தில் மீண்டும் ஒன்றுபட்டு, இது சம்மந்தமாக அனைவரும் கலந்துரையாடி அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முகம்கொடுத்து எதிர்ப்புத் தெரிவிக்கின்ற விடயத்தில் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இவ்வேளையில் ஜம்மிய்யதுல் உலமாவும், வை. எம். எம். ஏ இயக்கமும் ஒரே நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தனர். எனினும், குறிப்பாக ஜம்மிய்யதுல் உலமா ஒரு விடயத்தில் மாத்திரம் அதாவது பெண்கள் காழியை நியமிக்கக் கூடாது என்று கூறி வருகிறது. ஆனால் வை. எம். எம். ஏ. பெண்கள் காழியை நியமிக்கலாம் என்று கூறுகிறது. அது மூன்று பேர் கொண்ட ஒரு யூரி சபையினை உருவாக்கி ஒரு குழுவில் இரண்டு பெண்களையும் ஒரு ஆணையும் சேர்த்து குழுவாக அமைக்க வேண்டும் என்ற ஒரு வரைபினை வை. எம். எம். ஏ. அமைப்பு கொடுத்திருந்தது. அந்த கருத்திலேயே தொடர்ந்து இருந்து வருகிறது.

**கேள்வி:** சமகாலத்தில் உங்கள் அமைப்பு இது தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**பதில்:** ஏற்னவே அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு ஒரு சட்ட வரைபினை வரைந்து சட்டவல்லுனரிடம் பரிசீலனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. அது மீண்டும் அமைச்சரவைக்கு வந்து மீளவும் பாராளுமன்றம் வரும். பின்னர் வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்பட்டு சட்டமாக்கப்படும் வரையிலும் சகல முயற்சிகளை நாங்கள் எடுக்க வேண்டும்.

அந்த வகையில் நாங்களும் தொடர்ந்து இது தொடர்பில் பல முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றோம். இதற்காக எல்லா சிவில் அமைப்புக்களும் ஒன்று பட்டு அரசுக்கு அழுத்தங்கள் கட்டாயம் கொடுத்தல் வேண்டும். அதற்கான முயற்சிகளில் சம்மந்தப்பட்ட அமைப்புக்களுடன் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த விவகாரம் குறித்து சமூகத்திற்கு பதிலளிக்கும் கடப்பாடும் பொறுப்புக் கூறலும் சிவில் சமூகத்திற்கும் முக்கிய பங்கு உண்டு. அந்த நெறிமுறையினை உணர்ந்து சளைக்காமல் வெற்றிகிடைக்கும் என்ற உறுதியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அதேவேளை அரச தரப்பினர்கள் மத்தியில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த கூடிய சமிக்ஞையினை நீதி அமைச்சர் அலி சப்ரி சமீபத்தில் சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட காணொளியினை பார்த்த போது அதில் நல்லதொரு சமிக்ஞை தென்படுகிறது. நீடித்துள்ள இந்தப் பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வையும் தமது காலத்தில் காலம் தாழ்த்தாமல் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற தமது உறுதியான நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

**கேள்வி:** இத்தீர்மானங்கள் கை கூடாமல் போனால் இதன் கதி என்ன?

**பதில்**:உண்மையிலேயே முஸ்லிம்களுடைய தனியார் சட்ட முறைமையில் அவர்கள் மாற்றுவார்களாயின் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் திருமண விவகாரத்து விடயங்களில் பொது நீதி மன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். ஏற்கெனவே செலவில்லாமல் இலவசமாக கிடைக்கப் பெற்றிருந்த சேவையை பெரும் பணம் செலுத்தி முடிக்க வேண்டிய நிலமை வரும்.

காழி நீதிமன்றங்களுக்குச் சென்று குறுகிய காலத்தில் முடித்துக் கொள்ள வேண்டிய வழக்குகள் எல்லாம் வருடக் கணக்கில் இழுபடும் நிலைமை ஏற்படும். இது பொது நீதி மன்றத்திற்கு செல்லும் போது அந்த வழக்கிற்கு மனுத் தாக்கல் செய்ய மட்டும் ரூபாய் 25000 செலவாகும். வருடக் கணக்கில் வழக்குகள் நடக்கும். ஒவ்வொரு வருடமும் பணம் செலவு செய்ய வேண்டும். அதேநேரத்தில் இரகசியங்கள் எல்லாம் பகிரங்கமாக பேச வேண்டிய ஒரு நிலைமை ஏற்படும். இதுதான் நாம் எதிர்கொள்ளக் கூடிய பாரிய விளைவுகள்.

அதே வேளை கால தாமதம் கூட ஏற்படலாம், நீதி மன்றங்களில் வழக்குகள் தேங்கி கிடப்பதால் ஏனைய பொதுவான வழக்குகளுக்கு ஏற்பட்டுள்ள நிலையே இதற்கு ஏற்படும். நீதி மன்றங்களில் வாதப்பிரதிவாதங்கள் ஆராயப்படுமே யன்றி இரு தரப்பினரையும் சமாதானப் படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் இல்லை. அது சம்மந்தமான ஆவணங்கள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும். இப்படி பலதரப்பட்ட பிரச்சினைகளை நாங்கள் எதிர்நோக்க வேண்டிவரலாம்.

எனவே, நாங்கள் அனைவரும் கருத்து முரண்பாடுகளைத் தவிர்த்து சில விட்டுக் கொடுப்புகளுடன் இதற்காக ஒன்றுபட்டுப் போராடி இந்த விடயத்திலேயே எவ்வாறாவது அரசாங்கத்தின் உதவியைப் பெற்று சட்ட ரீதியிலான வழிமுறைகளில் முஸ்லிம் சமூகத்திற்குப் பாதகமில்லாமல் நீதியை நிலைநாட்ட தேவையான நிறுவன ரீதியிலான மாற்றங்களை செய்ய

அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டி இருக்கிறது.

**கேள்வி:** இந்த தீர்மானம் தொடர்பில் அரச தரப்பினரின் தற்போதைய கருத்து என்ன?

**பதில்:** ஜனாதிபதி அவர்களுக்கு ஒரு மகஜர் கையளித்ததுடன் மேலும் நாங்கள் இது தொடர்பில் சிரேஷ்ட அமைச்சர்களைச் சந்தித்தோம். நீதி அமைச்சரும் ஆதரவளித்தால் ஒரு சாதகமான முடிவை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றோம். எனவே இந்த நாட்டில் எப்பொழுதும் சட்டத்தைப் பின்பற்றி நடக்கக் கூடிய ஒரு சமூகமாகவே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். ஒரு நல்லிணக்கப்பாட்டின் மூலமாக எல்லா உரிமைகளையும் பெற்றுக் கொள்ளுகின்ற சமூகம் என்ற வகையில் எல்லோரும் ஒன்றுபட்டு அவர்களுடைய உள்ளங்களை மாற்றம் செய்து ஒரு சில விடயங்களை விட்டுக்கொடுத்தாலும் எங்களுடைய குர்ஆன் ஹதீஸ் வழி முறைகளுக்கு ஏற்ப உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் எவ்வாறாவது போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றோம். ஆயினும் நாங்கள் வித்தியாசமான போராட்டங்களை நடத்தக் கூடியவர்கள் அல்லர்.

முஸ்லிம்கள் எப்பொழும் சாத்வீகமான மிக அமைதியான முறையில் பொறுமையுடன் எதனையும் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றவர்களாகவே இருந்து வருகின்றனர். விசேடமாக ஹுதைபியா உடன் படிக்கையினை நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நாங்கள் இந்த விடயத்தைக் கையாளும் போது எமக்கு சாதகமான பெறுபேற்றை ஏற்படுத்த உதவும் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி:** இந்த விவகாரம் தொடர்பில் முன்னிலையில் இயங்கும் பிரதான சிவில் அமைப்புக்கள் குறித்து கூறுவீர்களா?

**பதில்:** இது தொடர்பில் மக்கள் மத்தியில் இது சம்மந்தமான ஒரு தெளிவின்மை காரணமாக எங்களது உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் கூட்டாக செயற்படல் வேண்டும் என்ற அடிப்படையில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் செயலாளர் மௌலவி அர்கம் நூருல் அமீன், வை. எம். எம். ஏ. பேரவை பிரதிநிதிகளான தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, முன்னாள் தலைவர் கே. டீன், செயலாளர் சாபித் சவாத், முஸ்லிம் கவுன்சிலின் பிரதிநிதிகளான என். எம். அமீன், ஹில்மி அஹமட், சூறா கவுன்சிலின் பிரதிநிதிகளான டி. கே அசூர், ஜாவிட் யூசுப், அல் முஸ்லிமாத் பெண்கள் அமைப்பின் பிரதிநிதி டாக்டர் மரீனா தாஹா முதலிய இந்த அமைப்புக்கள் சார்ந்த பிரதிநிதிகள்

ஒன்று சேர்ந்து “சிவில் சேவிஸ் எலைன்ஸ்” சிவில் சமூக கூட்டமைப்பு என்ற ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அக்கூட்டமைப்புக்கு ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அவர்களை தலைவராக நியமித்துள்ளோம். அவர்களுடைய தலைமையின் கீழ் எங்களுடைய பயணமுயற்சிகளை மேற் கொண்டு வருகின்றோம். கிவ். சீ. கனகரட்ணம் குழு, டாக்டர் பாரூக் குழு, டாக்டர் சஹாப்தீன், நீதியரசர் சலீம் மர்சூப் போன்றவர்களால் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**கேள்வி:** முஸ்லிம் தனியார் சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டு வருதற்காக கடந்த 70 வருடங்களாக முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இது ஏன் இவ்வளவு காலமும் கவனத்தில் கொள்ளப்பட வில்லை. ஏன் இப்பொழுது அமைச்சர் அலி சப்ரி காலத்தில் மட்டும் இவ்விடயம் பெரும் பரபரப்பாக பேசப்படுகிறது என்பது பற்றி கூறுவீர்களா?

**பதில்:** அமைச்சரவையில் முன் வைத்துள்ள அறிக்கைக்கு எதிராக எவ்வாறு செயற்படுவது என்பது பற்றி பல முறை சிவில் அமைப்பைச் சார்ந்த பல புத்திஜீவிகள், துறை சார்ந்தவர்கள் எனக் கொண்டு பல்வேறுபட்ட கலந்துரை யாடல்களை நடாத்தி முதன் முதலில் அமைச்சரைச் சந்தித்து அவரிடம் இது சம்மந்தமாக ஒரு புரிந்துணர்வுவோடு இந்த விடயத்தை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்று அவருடன் நாங்கள் கலந்துரை யாடல்கள் நடத்தினோம்.

இந்தக் கலந்துரையாடலின் போது இறுதியாக அவர் “எல்லா விடயங்களும் என் கையில் இல்லை. அமைச்சரவையில் 30 பேர் இருக்கின்றார்கள் தான் மட்டும் தான் முஸ்லிம். முடியுமாக இருந்தால் சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிநாட்டு தூதுவர்களை இது போன்றவர்களை சந்தித்து இதன் மூலமாக கலந்துரையாடி ஏதோ ஒரு வகையில் நீங்கள் அழுத்தத்தைக் கொடுத்து முயற்சி செய்யுங்கள்” என்று எங்களிடம் அவர் கூறிய அறிவுரைக்கு இணங்க நாங்கள் பாகிஸ்தான் தூதுவரைச் சந்தித்தோம்.

எவ்வாறாயினும் நாங்கள் அவர் களுடைய முறைமையோடு திட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாங்கள் உடன்பட்ட பல விடயங்கள் இருந்தன. ஆனாலும் பலதார திருமணத்தை தடை செய்தல், அந்த காழிகோட்டு முறைமை யில் சிலவற்றை நீக்குவது தொடர்பில் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இந்தப் பிரச்சினையை அன்றே தீர்த்து இருக்கலாம். ஆனால் அன்று இருந்த அரசியல் வாதிகளால் முடிக்க இயலவில்லை. அன்று பாராளுமன்ற குழுவிடம் ஒப்படைக்கப்

பட்டது. அவர்களுக்கிடையே உடன்பாடும் ஒற்றுமையும் இல்லாமல் ஓர் இறுதித் தீர்மானத்திற்கு வர முடியவில்லை. அன்று இருந்த பிரதமர் இதற்கு சரியான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது தான் உண்மை.

உண்மையிலே பலமான அரசு இருந்த காலகட்டத்தில் இந்த விடயத்தை அன்றே தீர்த்து இருக்க வேண்டும். அதற்கு இன்றுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் தான் பொறுப்புக் கூற வேண்டும். அதனைத் தொடர்ந்து தற்போதைய அரசாங்கத்தில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டிற்கு கீழே முற்றிலும் முஸ்லிம் தனியார் சட்டத்திற்கு கவனம் செலுத்தப்பட்டது. முஸ்லிம் தனியார் சட்ட வரைபில் வை. எம். எம். ஏ. மேற்கொண்ட முயற்சி பற்றி நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களை வை. எம். எம். ஏ. குழுவினர்கள் சந்தித்து முஸ்லிம் விவாகம், விவாகரத்து சம்மந்தமாக தீர்வு காணும் விடயம் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டது.

அதற்கான ஒத்துழைப்பு நாங்கள் வழங்க தயாராக இருக்கன்றோம் என்று கூறி நாங்கள் ஏற்கனவே தயாரித்த அந்த அறிக்கையை அவரிடம் கையளித்தோம். மீண்டும் அவர் ஒரு சில விடயங்களை அடையாளம் காட்டி இன்ன இன்ன விடயங்களில் தனக்கு உடன்பட முடியாது. எனவே, மீண்டும் சீர்திருத்தம் செய்து இன்னுமொரு அறிக்கை தாருங்கள். மக்களுடன் கலந்துரையாடி மூன்று மாதத்தில் அவர் அந்த அறிக்கைகளைக் கைளிக்கச் சொன்னார்.

சற்று தாமதித்து அந்த அறிக்கை யினை நாங்கள் கையளித்தோம். உரிய அறிக்கையிலே மிக அழகான முறையில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் வை. எம். எம். ஏ. இன் வரைபு அவரிடம் கையளிக்கப்பட்டது.

அதற்கிடையே இந்த சீர்திருத்தத்தை செய்வதற்காக வேண்டி 31-12-2020 நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களால் வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன் தலைமையில் ஒரு சீர்திருத்தக் குழுவை இதற்காக அவர் நியமித்தார். குறிப்பாக அவர்களுக்கு இது சம்மந்தமாக மூன்று விடயங்கள் சம்பிரதாயப்படி கூறப்பட்டு இருந்தது. திருமண வயது எல்லை, திருமணப் பத்திரத்தில் பெண் கையொப்பமிடுதல், அதே நேரத்தில் பெண் காழி இது சம்மந்தமான ஒரு தீர்மானம் எடுப்பதற்கு ஒரு சீர்திருத்தக் குழு மட்டுப் படுத்தப்பட்ட குழுவை அங்கு அமைத்து அவர்களிடம் கையளித்திருந்தார். அந்தக் குழுவிலே வை. எம். எம். ஏ யால் கையளிக்கப்பட்ட அந்த அறிக்கையையும், ஜம்மியயதுல் உலமா சபையின் அறிக்கையையும் அந்த சீர்திருத்தக் குழுவில் எடுத்து ஆலோசனை செய்ததாக பின்னர் எங்களுக்கு தெரியவந்தது.

**கேள்வி:** இதன் வரலாறு பற்றி தெளிவு படுத்துவீர்களா?

**பதில்:** ஆம் பல 100 வருடங்களுக்கு முன்னர் இருந்து முஸ்லிம் சமூகம் அனுபவித்து வந்த குறிப்பாக ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் இருந்தே ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கை முஸ்லிம்கள் கலாசாரம் மற்றும் மரபு ரீதியான இஸ்லாமிய சட்ட திட்டங்களைப் பின் பற்றி வந்தார்கள். ஆரம்பத்திலேயே இந்தோனேசியாவில் இருந்து அறிமுகப் படுத்தப்பட்ட “அல் பகாயா” என்ற ஒரு முறைமையைப் பின் பற்றி வந்தாலும் காலப் போக்கில் ஆங்கிலேயர் வருகையோடு 1806 ஆம் ஆண்டிற்கு பின்னர் “முஹம்மதிய்யன் சட்டம்” என்று இருந்தது. அதன் கீழ் எங்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. பின்னர் 1929 ஆம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்தில் “சென்ரல் மெரேஜ் ஓடியனஸ்” இந்த முறைமைகளின் ஊடாக ஒரு சட்ட திட்டம் இங்கு 1929 ஆம் ஆண்டு இலங்கையில் கொண்டு வரப்பட்டாலும் அதனடிப் படையில் எங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு மரபு ரீதியாக அந்த உரிமைகளை நாங்கள் அனுபவித்து வந்தோம். எங்களுடைய முன்னோர்கள் ஜஸ்டிஸ் அக்பர், டி. பி. ஜாயா, எம். எல். எம். ஹனிபா போன்ற எங்களுடைய பெருந் தலைவர்கள் தொடர்ச்சியாக எடுத்த முயற்சியின் காரணமாக 1951 ஆம் ஆண்டு எங்களுக்கு முஸ்லிம் தனியார் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதே கால கட்டத்தில் தேச வழமைச் சட்டம், கண்டியன் சட்டம் என்று அவர்களுடைய கலாசார மரபு ரீதியான தனியார் சட்ட திட்டங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இந்த விவகாரம் சம்மந்தமாக திருமணம், விவாகரத்து, பராமரிப்பு இவை போன்ற விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தன. நீதிமன்ற முறை என்று எங்களுக்கு பின்பற்றக் கூடியதாகவும் வழங்கப் பட்டிருந்தன. அந்த வகையில் உலக நாடுகளிலும் இதே முறைமைகள் மிகவும் சிறப்பாக பின்பற்றக் கூடிய நிலையிலேயே உள்ளன. இந்த காழிகோட் முறைமை குடும்ப பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், இணக்கப் பாட்டுக்கு கொண்டு வருவதற்கும் மரபுரீதியாக தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. 64 காழி நீதிமன்றங்கள் இந்நாட்டில் உள்ளன. இருந்தாலும் காலத்திற்கு காலம் ஒரு சில குறைபாடுகள் பேசப்பட்டு வந்திருக்கின்றன. அந்தந்த கால கட்டத்தில் அவ்வப்போது நீதிச் சேவை ஆணைக்குழு தேவைக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்களை தெரிவு செய்வதற்கு தவறியிருக்கின்றது. அதன் காரணமாக ஒரு சில காழிமார்கள் செய்யக் கூடிய பிழைகள் தவறுகளினால் காழி நீதி மன்றங்கள் மீது குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதில் உண்மை இருக்கின்றது. ஆனால் அனைவரும் அவ்வாறு இல்லை என்பது தான் உண்மை. பல விவாதங்களும்

ஆய்வுகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்து தொடர்ந்து ஒரு சீர்திருத்தம் வரவேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு அனைவரும் இருந்தார்கள்.

இந்த சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காக ஒருமித்த கருத்து இருந்தது. 1956 ஆம் ஆண்டில் இருந்து பல குழுக்கள் தெரிவு செய்யப் பட்டு பல குழுக்கள் இது சம்மந்தமாக ஆலோசனைகளும் ஆய்வுகளும் செய்து வந்தார்கள். குறிப்பாக பாரூக் கமிட்டி, சஹாப்தீன் கமிட்டி என்று ஆரம்ப காலத்திலே இருந்த இந்த குழுக்களுக்கும் 2008 ஆம் வரையிலும் எந்தவிதமான தீர்மானமும் எடுக்க முடியாமல் போனமை மக்களின் ஒத்துழைப்பின்மையினாலும் ஒற்றுமையின்மையினாலுமே ஆகும்.

எனவே 2009 ஆம் ஆண்டு இருந்த நீதி அமைச்சர் மிலிந்த மொரகொட ஒரு சீர்திருத்தக் குழுவை அமைத்தார். அது நீதியரசர் சலீம் மர்சூப் அவர்களின் தலைமையில் பல்வேறு பட்ட துறைசார்ந்த வர்களை உள்ளடக்கிய ஒரு சிறந்த குழுவாக அமைக்கப்பட்டன. இந்தக் குழு தொடர்ந்து ஆய்வுகளிலும் கலந்துரை யாடல்களிலும் ஈடுபட்டு மிக நீண்ட காலத்தின் பிறகு 2018 ஆம் ஆண்டு ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால் அந்தக் குழுக்குள்ளே அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாத பல முரண் பாடுகள் காணப்பட்டன. 10 அம்சங்கள் உள்ளிட்ட விடயங்களில் அவர்கள் முரண்படுகின்றார்கள். அதில் குறிப்பாக திருமண வயது எல்லை, காழி நீதிபதிகளின் தெரிவுத் தகைமைகள், சட்டத்தரணியா, உலமாக்களா என்ற ஒரு விடயம், பெண்காழி நியமனம், மணப் பெண் பத்திரத்தில் கையொப்பமிடுதல் இவை போன்ற அம்சங்களில் குறிப்பாக முரண்பட வேண்டிய ஒரு நிலை அங்கு ஏற்பட்டு இறுதியாக அந்தக் குழு இரண்டாக பிளவுபடுகின்றது. அது ஏற்கனவே இருந்த குழுத் தலைவர் சலீம் மர்சூப் தலைமை யிலும், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தாபாவை தலைவராகக் கொண்ட குழுவும், ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் ரிஸ்வி முப்தி தலைமையில் இன்னுமொரு குழுவும் ஆரம்பிக்கப் படுகிறது. அந்த குழுக்களுக்கிடையே காணப்பட்ட பிளவுகளை அடையாளம் கண்ட வை. எம். எம். ஏ பேரவை அவர்களிடையே காணப்பட்ட முரண் பாடுகளில் இருந்து உடன்பட வைப்ப தற்காக 2018-09-10 ஆம் திகதி மென்டரினா ஹோட்டலில் ஒரு கருத்தரங்கை வை. எம். எம். எம். பேரவை நடத்தியது.

விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில் பிளவுபட்ட குழுக்களை ஒருங்கிணைப்பதற்காக வை. எம். எம். ஏ. பேரவை எடுத்த முயற்சியின் படி இந்தக் கருத்தரங்கில் 136 பேர் கலந்து கொண்டனர். சட்டத்தரணிகள், உலமாக்கள் (சமய போதகர்), காழிமார்கள், துறை சார்ந்தவர்கள்

கலந்து கொண்டனர். அந்தக் கருத்தரங்கில் இன்றைய நீதி அமைச்சர் அலி சப்ரி பிரதான பேச்சாளராக கலந்து கொண்டார். அன்று இருந்த உடன்பாடுகளுக்கு முரண்பட்ட வர்களை உடன்பட வைப்பதற்கு அவர் முயன்றார். அந்தக் கருத்தரங்கு வை. எம். எம். பேரவையின் முன்னாள் தலைவர் கே. டீன் தலைமையில் நடைபெற்றது. அக் கருத்தரங்கில் வை. எம். எம். ஏ உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். இன்றைய தலைவர், முன்னாள் செயலாளர், இன்றைய செயலாளர் கூட சட்டத்தரணி சாபீர் சவாத் அங்கு இருந்தார். ஒருங்கிணைப்பாளர் குழுவில் முன்னாள் சவூதி அரேபியாவின் தூதுவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜாவிட் யூசுப் அவர்கள் இருந்து அக்கருத்தரங்கை நடத்தினார். ஓரளவு உடன்பாடுகள் எட்டப்பட்டாலும். அந்த இரண்டு குழுக்களுக் கிடையே ஒரு சில முரண்பாடுகள் காணப்பட்டன.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை ஒரு அறிக்கையினை யும் உத்தேச வரைபினையும் அன்று இருந்த நீதி அமைச்சர் தலதா அதுகோரளையிடம் கைளித்தது. அதே போன்று முஸ்லிம் சமய கலாசார தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம், அமைச்சின் செயலாளர், அமைச்சர்மார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு தெளிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வை. ஏம். எம். ஏ பேரவை அன்று செயற்பட்டது.

ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் ஜனாஸா அடக்கம் தொடர்பில் ஒன்றுபட்டு நின்றதைப் போன்று பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த முஸ்லிம் தனியார் சட்டம் பறிபோகக் கூடாது என்ற விடயத்திலும் முஸ்லிம்கள் ஒருமித்த கருத்தில் இருந்து செயற்படுவதைப் பார்க்கின்ற போது மனதிற்கு ஆறுதல் அளிக்கின்றது. இந்த விடயத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கிறது. எதிர் வரும் காலங்களில் இவர்களும் இது தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டிய பொறுப்பு முக்கியமானதாகும் எனக் கருதுகின்றேன்.

# வளங்கள் இல்லாதவிடத்தும் ஜனாஸா நல்லடக்கத்தில் ஓட்டமாவடி மக்கள்

**அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் அதி உயர் தேசிய விருது ஓட்டமாவடி பிரதேச சபைக்கு. அகில இலங்கை வை. எம். எம் ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவிவிக்கிறார்.**

**கேள்வி :** இம்முறை உங்களது அமைப்பு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு அதி உயர் தேசிய விருது வழங்க முன்வந்தமைக்கான காரணம் என்ன?

**பதில் :** இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் ஓட்டமாவடி மஜ்மா நகர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இவ்விடம் இலங்கையில் கொரோனாவினால் உயிரிழந்த ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக் களை நல்லடக்கம் செய்திடும் தேசிய மையவாடியாக அடையாளப்படுத்தப்பட்ட வரலாற்றுப் பதிவுகளையும் தம் வாழ் நாளில் மறக்க முடியாத, தம் தாய், தந்தையர்களையும், இரத்த உறவுகளை மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து வந்து பார்த்து நம் இரு கைகளையும் யேந்தி துஆ பிரார்த்தனை புரியக் கூடிய ஒரு பிரதான இடமாகவும் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடி அமைந்துள்ளது. மார்ச் மாதம் 05 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் வரையிலும் கொரோனாவுக்கு காவு கொள்ளப்பட்ட சுமார் 3000 பேர் அளவிலான உயிர்கள் இவ்விடத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேச மக்களும், ஓட்டமாவடி பிரதேச சபையும் இந்த உடல்களை நல்லடக்கம் செய்யும் விவகாரத்தில் தமது வாழ்வில் பாரிய தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் செய்துள்ளார்கள் என்பது இந்த நாடும் உலகமும் அறிந்த உண்மையே. இம்மக்கள் உடல்களை தூக்கி அடக்கம் செய்வது மட்டுமல்ல அந்த மையத்துடன் வரும் அத்தனை பேருக்கும் உணவுகள், தங்குமிட வசதிகள், தண்ணீர் என வழங்கி மனித மகத்துவத்தை வென்ற உன்னத மிக்க மனிதர்களாக இப்பிரதேச மக்கள் வரலாறு படைத்துள்ளனர்.

அந்த வகையில் நாளாந்தம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்காக உடலின் வலியையும் சுமையையும் தாங்கிக் கொண்டு அந்த மையவாடிச் சூழலில் வீசும் வாடையையும், அங்கு வரும் உடல்களை ஏற்றி இறக்கி உடல் களைத் தூக்கிப் புதைப்பதற்கு இராப்

பகலாய் சேவையாற்றுவதற்கு வழிகோலிய ஓட்டமாவடி பிரதேச சபைக்கு இம்முறை அதி உயர் தேசிய விருதை வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனென்றால், அரசாங்கத்தால் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையினை அடுத்து உடனடியாக மறுகணமே தாமதியாமல் நமது கலாசாரம் பண்பாட்டின் விழுமியத்தை பாதுகாக்கும் நோக்குடன் துரிதமாக செயற்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் ஓட்டமாவடி தவிசாளர் அலியார் முஹம்மது நௌபர், அதன் செயலாளர் சாலி முஹம்மது சிஹாப்தீன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் துறை சார்ந்த அனைவரையும் கௌரவப்படுத்தும் வகையில் அகில வை. எம். எம். ஏ. பேரவை தேசிய ரீதியில் வருடாந்தம் வழங்கும் அதி உயர் விருதை இம்முறை ஓட்டமாவடி பிரதேச சபைக்கு வழங்கத் தீர்மானம் மேற்கொண்டுள்ளோம். வருடா வருடம் நாட்டுக்கும் சமூகத்திற்கு தேசிய மட்டத்தில் சேவையாற்றியவர்களுக்கு வழங்கப்படும் ஓர் உயர்தர விருதாகும். தேசிய ரீதியில் சமூகப் பங்காற்றுபவர் களுக்காக வருடா வருடம் இவ்விருது வழங்கப்படுவது வழக்கமாகும். எனினும், வரலாற்றில் முதல் தடவையாக ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்குக் கடந்த வருடம் வழங்கி வைத்தோம். ஆனால் அரச நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவது இதுவே முதற் தடவையாகும். இவ்விருது கடந்த 70 வருடங்களாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** தற்போது அடக்கப்படும் இடம் பற்றி?

**பதில்:** தற்போது ஓட்டமாவடியில் மஜ்மா நகர் மையவாடியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கொரோனாவினால் உயிரிழந்த உடல் அடக்கலாம் என்ற வர்த்தமானி அறிவித்தலை விடுத்தவுடன் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் அலியார் முஹம்மது நௌபர், செயலாளர் சாலி முஹம்மது சிஹாப்தீன், வர்த்தக சங்க தலைவர் முஹம்மது அப்துல் காதர் நியாஸ்டீன், அதன் உறுப்பினர்கள், செயலாளர், கல்குடா ஜம்மஜிய்யதுல் உலமா சபை, கிழக்கு மாகாண கொவிட் 19 கொரோனா செயலணியின் பாதுகாப்பு படைப் பிரிவினர்கள், அரச உயர் அதிகாரிகள் ஓட்டமாவடியில் அடக்கு வதற்கான முயற்சிகளில் இறங்கினர். ஓட்டமாவடியில் மஜ்மா நகர் மையவாடி அப்பிரதேச மக்களுடைய முதுகெலும்பாக அமைந்துள்ள விவசாய பொருளாதாரம் மற்றும் குடியிருப்பு சார்ந்த நிலம் எனலாம். ஏனெனில் அந்த இடம் வேளாண்மை

செய்கையினையும், சோளச் செய்கையினையும் பிரதான தொழிலாகவும் ஜீவனோபாயமுமாக கொண்டுள்ளது. அந்த இடத்தில் பொது மையவாடிக்கு ஓட்டமாவடி பிரதேச சபை 10 ஏக்கர் காணியை ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனாலும் பிரதேச சபை ஒதுக்கீடு செய்த காணியை கொரோனா செயலணி பாதுகாப்புப் படை அதிகாரிகள் அடக்கம் செய்வதற்கு பொருத்தமான இடமாக அமையவில்லை என தெரிவித்தனர்.

எனினும், அதற்கு அருகாமையில் அமைந்துள்ள இடங்களைப் பார்வையிட்ட கொரோனா விசேட பாதுகாப்பு செயலணியின் உயர் இராணுவ அதிகாரிகள் அவ்விடத்தில் மிகவும் பொருத்தப்படாக அமைந்த 03 ஏக்கர் காணி நிலத்தைக் காட்டி குறித்த காணி சொந்தக்காரரை அழைத்து அவருடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டனர். தினமும் நாட் கூலிகளாகவும் விவசாயம் செய்து அதிலிருந்து கிடைக்கின்ற விளைபொருட்களை விற்று அப்பணத்தில் தமது குடும்பத்தை பாதுகாத்து வந்த முஸ்லிம் விவசாய குடும்பங்கள் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக தம் காணியை தியாகம் செய்தார்கள். பரம்பரை பரம்பரையாக இப்பிரதேசத்தில் விவசாயத்தை நம்பி வாழ்ந்த மக்கள் இதை விட்டுக் கொடுத்தாலும் தற்காலத்தில் எவ்வாறு வருமானம் பெறுவது என்பதில் பதில் தெரியாமல் அல்லாஹ்வுக்காக தியாகம் செய்துள்ளார்கள். ஆனாலும் அவர்களுக்கு பதில் காணிகளும் பெற்றுத் தருவதாக கோரியிருந்த போதிலும் இதுவரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பின்னர் இடம் போதாமையால் 03 ஏக்கர் காணி முடியும் முன்னரே உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு மேலும் 02 ஏக்கர் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னர் மிகுதி 2 ஏக்கர் பெறப்பட்டு மொத்தம் 07 ஏக்கர் காணியில் திட்டமிட்டபடி மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையிலும் சுமார் 3000 உடல்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

**கேள்வி: ஓட்டமாவடி பிரதேச சபையின் வகிபாகம் பற்றி?**

**பதில்:** உண்மையிலேயே இதுதான் மிகப் பெறுமானம் மிக்கதாகும். ஓட்டமாவடி பிரதேசமும் பிரதேச சபையும் ஜனாஸாவையும் அடக்க வேண்டும் என்ற விசயத்தில் எல்லோரும் ஏகமானதாக செயற்பட்டனர். கொரோனாவுக்குப் பொறுப்பான பிரிகேடியர் கமகே இது பற்றி பிரதேச சபையின் செயலாளர் சாலி முஹம்மது சிஹாப்டீன் அவர்களுடன் பேசும் போது, அடக்கம் விடயத்தில் உங்களுக்கு முழு ஆதரவுடனும் உங்களுடனும் தான் இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் எங்கேயாவது அடக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் தவிசாளர், செயலாளருக்கும் இருந்தது. இனங்காணப்பட்ட அந்த குறித்த இடத்தில் வேலிகள், பயிர் பச்சைகள், குடியாற்றம் இருந்தமைக்கான எந்த தடயங்களும் இருக்கக் கூடாது என்று பிரிகேடியர் கமகே தெரிவித்த கோரிக்கைக்கு ஏற்ப அவருக்கு அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் எனக் கூறிவிட்டு பிரதேச சபை, ஊர் மக்கள், காத்தான்குடி, ஏறாவூர் பள்ளி வாசல்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் என ஒன்று சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மானின் ஜே. சி. பி. யைக் கொண்டு வந்து மையவாடியை சிரமதானம் செய்து செப்பனிடப்படப்பட்டு கையளிக் கப்பட்டது.

மார்ச் மாதத்தில் வைத்திய சாலைகளில் அடக்க முடியாமல் வைக்கப் பட்டிருந்த மையங்களுடன் அடக்க ஆரம்பித்த போது ஒரு நாளைக்கு எட்டுப் பத்து என அங்கு உடல்கள் வந்தன. பின்னர் ஏப்ரல் அரைவாசி நாட்களைத் தாண்டி வரும் போது 160 உடல்கள் வந்து சேர்ந்தன. 217 வரை அடக்கம் செய்யப் பட்டன. ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி 3வது 4 வது அலை வரும் போது அவர்களுடைய கற்பனைக்கு அதிகமாக உயர்ந்து போயிற்று. அவர்களுக்கு ஒரு பாரிய சுமையாக இருந்தது. அவர்கள் என்னமோ நினைத்தார்கள் என்னமோ நடந்து போயிற்று. அவர்களுடைய கொள்ளளவு வந்து 316 அடக்கி விட்டு முடிக்கலாம் என மனத்திருப்தியோடு எண்ணியிருந்தனர். போகப் போக அவர்களுடைய தலையில் தூக்க இயலாத சுமைகளாய் நிறைந்து விட்டன.

பிரதேச சபையின் தவிசாளர் அலியார் முஹம்மது நௌபர் பிரதேசத் தின் அபிவிருத்திப் பணிகளை செய்வதை விடுத்து முழுக்க முழுக்க மையத்து அடக்கம் செய்கின்ற பணிகளுக்கே முக்கியத்துவம் வழங்கினார். 03 ஏக்கர் முடியும் போது பொருத்தமான இடமொன் றைப் பாருங்கள் என படையினர் கூறினர். அதில் 1200 தான் அடக்க முடியும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது

உண்மையிலேயே 02 ஏக்கரில் பௌதீக ரீதியாக எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாமல் தான் முஸ்லிம் களுடைய உடல்களை அவர்கள் அடக்க ஆரம்பித்தார்கள்.

**கேள்வி :** இப்படி அடிப்படை வசதிகள் இல்லாத நிலைமையில் இலங்கை ஒட்டுமொத்த சமூகத்தின் தேசிய மையவாடியாக காணப்படும் இவ்விடத்தை கவனத்தில் கொள்வது ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் தலையாய கடமையல்லவா?

**பதில் :** நிச்சயமாக, எவ்வித தங்கு தடைகளுமின்றி மேற்கொள்வதற்கு

அரசாங்கம் அனுமதியளித்துள்ள ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியில் தகுந்த முறையில் உடல்களை நல்லடக்கம் செய்ய ஆரம்பத்தில் போதிய வளங்கள் இல்லா விட்டாலும் முஸ்லிம்களுடைய மார்க்கக் கடமை சரியாகப் பேணப்பட வேண்டும் என்ற வகையில் ஓட்டமாவடி சமூகம் பெரிதும் பாதிக்கப் பட்டாலும் ஓட்டமாவடியிலேயே உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும், முஸ்லிம்களுடைய ஜனாஸா மார்க்கக் கடமை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விடயத்தில் உறுதியாகவும் பொறுப்புணர்வுடனும் ஓட்டமாவடி சமூகம் இருக்கின்றது. இங்கு அரசியல் என்று பார்ப்பதில்லை. இதற்காக எல்லா முஸ்லிம் தமிழ் கட்சியினர்களும் ஒன்று பட்டுச் செயற் படுகின்றனர்.

வளங்கள் இல்லா விட்டாலும் விரக்தியின் விளிம்பிற்கு சென்றாலும் அல்லாஹ்வுக்காக எந்த பெரிய சுமைகள் வந்தாலும் தாங்கிக் கொண்டு செயற் படுகின்றனர். விசேடமாக மார்க்கத்தில் ஜனாஸாவுக்கு எத்தகைய கண்ணியத்தை வழங்க வேண்டுமோ அத்தகைய கண்ணியத்தை வழங்கி வருகின்றனர். இனம், மதம் என்று வேறுபாடு பார்க்காமல் ஒரு சரி சமமாக மதித்து சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ ஆகிய உடல் அனைத்திற்கும் உரிய மரியாதையையும் கண்ணியத்தையும் வழங்கி வருகின்றனர். எல்லா இன மக்களது உடல்களையும் தோளில் தூக்கி சுமந்து வந்து அடக்கம் செய்கின்றனர். இங்கு பிற சமூகத் தினருடைய 300 உடல்கள் அடக்கப் பட்டுள்ளமை என்பது முக்கிய அம்சமாகும்.

இந்த இடத்திற்கு முஸ்லிம் சமூகத்தினருடைய உதவி ஆரம்பத்தில் கிடைத்திருக்க வேண்டும். நடுக்காட்டில். குப்பைத் திடலுக்கு அருகாமையில் மின்சாரம் இல்லாமல், மழை வெயில். யானைக் காடு, குழி தோண்டுவதற்கு ஜே. சி. பி. இல்லை. அங்கு வேலை செய்பவர்களுக்கு கொடுக்க சம்பளம் இல்லை. அவர்களுக்கு உரிய நேரத்திற்கு சாப்பாடு இல்லை. நோன்பு பெருநாள் காலம் என்று பார்க்காமல் தொடர்ந்து பொதுவேலைப் பணிகளில் ஈடுபட் டுள்ளனர். ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்காகவும் ஓட்டமாவடி மையவாடி சமூகம் கஷ்டத்தை தாங்கிக் கொண்டு செயற்படுகின்றனர்.

ஆனால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இப்போது தான் வருகின்றார்கள். என்ன தேவை, என்ன வேண்டும் என்று வருகின்றார்கள். இதை வெளிப்படையாகச் சொல்வதில் எந்த சங்கடமும் இல்லை. ஏனென்றால் அதன் வேதனையும் சுமையும் வலியையும் சுமந்திருப்பவர்கள் அவர்களே.

இந்த சுமையை இந்த நாட்டு முஸ்லிம்களுக்காக தாங்கிக் கொண்டு

இருக்கின்றார்கள். அடிப்படை வசதிகள் இல்லாமல் ஊர் மக்களை எழுப்பி விட்டு, பள்ளியை முற்றாக உடைத்து உருவாக்கப்பட்டது தான் இந்த மையவாடி. ஜனாதிபதி, பிரதமர், இராணுவத்தினர் இணைந்தே சடலம் அடக்குவதற்கான அனுமதியை வழங்கி இருக்கின்றனர். எனினும், இதில் அவர்களுடைய செல்வாக்கு எதுவும் கிடையாது. இந்த சமூகத்திற்காக ஒட்டுமொத்த சுமைகளை அவர்கள் சுமந்து நிற்கின்றனர். இதுதான் உண்மை.

ஓட்டமாவடி அடக்கும் விடயத்தில் ஊர் மக்களது காணியைப் பிடித்து, தொழில் செய்த மக்களை துரத்திவிட்டு, பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வளவு கஷ்டப்படுவது முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் எரிக்கப்படக் கூடாது என்பதற்காக மட்டுந்தான் ஆகும். ஓட்டமாவடி சமூகம் மையம் அடக்கும் விடயத்தில் ஒரு துளி கெட்ட பெயரைக் கூட வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை.

நோன்பு பெருநாள் நல்ல நாள் காரியங்கள் எந்த விடயமாகமாக இருந்தாலும் லீவு கிடையாது. எந்நாளும் இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கின்றனர். வெயில், மழை எனப் பாராமலும் இரவு நேரங்களிலும் அடக்கம் செய்து முடிப்பார்கள். சில நேரம் அதிகாலை 3.00 மணி வரையிலும் போகலாம். அவர்கள் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி மக்களுடைய உதவிகளைக் கொண்டுதான் அங்கு வேலை செய்பவர்களுக்கு சம்பளம், ஜே. சி. பி திருத்துவதற்கும், பொலிதீன், செனிடைஸர் வாங்குவது மற்றும் அங்கு உடன் தேவையானவற்றை பெற்றுக் கொள்ளவும் செலவுகள் செய்யப்பட்டன. இதற்காக மொத்தம் 2.9 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டன.

எனினும் தூக்க முடியாமற் போய் விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் கண்டியில் செயற்படும் கொரோனா செயலணியின் ஒத்துழைப்புடன் ஜூலை மாதத்தில் இருந்து மையம் அடக்குவதற்காக கஷ்டப்படும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு ஆதரவாக செயற்பட முன்வந்தார்கள். சுமார் ஒரு மீசான் கட்டைக்கு ரூபா 300 வரும். 2500 மீசான் கட்டைக்கு கணக்குப் பார்த்தால் எட்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பணங்கள் செலவாகும். அவர்களைக் கொண்டு காலை முதல் இரவு மட்டும் வேலை செய்யும் போது அவர்களுக்கு தண்ணீர், சாப்பாடு கொடுக்க வேண்டும். நம்மவர்களுக்கு கொடுக்கும் போது, நமக்கு உதவிக்கு வந்த படைவீரர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும். அதே நேரம் ஒரு மையத்தோடு வரும் போது இஸ்லாமிய மார்க்கப்படி பக்கத்தில் வீட்டில் மையம் என்று சொன்னால் அந்த வீட்டுக்கு 03 நாளைக்கு உணவு கொடுக்க

வேண்டியது பக்கத்து வீட்டுக்காரரின் பொறுப்பாகும். இந்த ஜனாஸாவுக்குள் இந்த ஊரை வாங்கக் கூடிய மிகப் பலம்வாய்ந்த செல்வந்தர்களும் இங்கு அடக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் ஓட்டமாவடி பிரதேசத்தின் வர்த்தக சங்கமும் அந்த ஊர் மக்களும் எத்தனை ஆயிரம் பேர் வந்தாலும் அவர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகள், உணவு வகைகளை, தண்ணீர் களை கொடுத்து கொண்டே இருக்கின்றார் கள். இதற்கு எங்கேயும் அவர்கள் பணம் சேகரிக்க வில்லை. பணம் பெற்றுக் கொள்ளவும் இல்லை. அந்த மக்களுடைய சேவை மனப்பாங்கு பற்றி உண்மை யிலேயே மையம் அடக்கும் விடயத்தில் எல்லோரும் காய்ந்து கருவாடாகி விட்டார்கள் என்று கூறலாம். எல்லோரும் காலை, இரவு வேளை என்று பாராமல் உடல்களை தூக்கி நல்லடக்கம் செய்வார் கள். மையத்துடைய விடயங்களை வெளிப் படையாக கதைக்கக் கூடாது. என்றாலும், 10 அல்லது 15 நாட்கள் கழிந்த உடல்களும் இங்கு வரும். அப்படி வரும் உடல்கள் பழுதடைந்து வரும். வாகனத்தில் ஒன்றுக்கு மேல் ஒன்றென பெட்டிகளை அடுக்கிக் கொண்டு வரும் போது பெட்டிகள் உடைந்து சிதைந்து விடும். அப்பொழுது இராணுவமும் இருக்க மாட்டார்கள். பொது சுகாதார பரிசோதகரும் சென்று விடுவார்கள். அந்த சிதைந்த உடல்களையும் சிரமம் பாராமல் அடக்குவார்கள். மையவாடிக்கு கொரோனாவினால் உயிரிழந்தவர்களை ஏற்றி வரும் குறித்த அந்த வாகனம் வந்து உடல்களை இறக்கி விட்டுப் போகும். ஆனால், அந்த இடத்தில் இரத்தக் கொதிப்பு, சீனி வியாதி உள்ளர்கள் இருப்பார்களாயின் உண்மையில் அந்த இடத்திலேயே உயிரை மாய்த்துக் கொள்வார்கள். அந்தளவுக்கு கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி நிலையில் அங்குள்ள ஊழியர்கள் பணிபுரிவார்கள். அவை மட்டுமல்ல அங்கு எந்தவிதமான வசதி வாய்ப்புக்கள் கிடையாது. இதற்கென பொறுப்பாக 11 ஊழியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். ஒருவருடைய வேலை நேரம் காலை 9.00 முதல் மறுநாள் அதிகாலை 3.00 மணி வரை செல்லும். அவர்களுக்கு ஒரு பெறுமதியான ஊதியம் வழங்கப்படுகின்றன. இருந்த போதிலும் இவர்கள் காலம், நேரம் என்று பாராமல் பணிபுரிந்து வருகின்றார்கள். இப்படியான நெருக்கடியான கட்டத்தோடு தான் இதனைச் செய்கின்றனர். இந்த மக்கள் பெரும் சுமையை சுமந்து கொண்டிருக் கிறார்கள். இந்த சுமையை இலங்கை யிலுள்ள அனைத்து முஸ்லிம் சமூக மக்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் வெளிப்படையாக சொல்ல விரும்புகின்றோம். ஓட்டமாவடிக்கு மையத்துடன் கூட வருபவர்களையும் ஒரு மையத்தாகத் தான் வரவேற்க வேண்டி இருக்கிறது. இப்பிரதேசத்திற்கு ஒரு கௌரவம் இருக்கிறது. மையத்து அடக்க

இடம் கொடுத்து விட்டு அதற்குப் பரிகாரமாக அவர்கள் கையை நீட்டும் நிலையில் இல்லை. உண்பதற்கு உணவு இல்லாவிட்டாலும் மையத்துக்களை அடக்கும் பணியிலேயே அந்த ஊர் மக்கள் இருக்கிறார்கள்.

ஒட்டமாவடி பிரதேச சபைக்கு இதற்கென நிதி இல்லா விட்டாலும் கடைசி வரையிலும் மையத்தை அடக்கு விடயத்தில் சோர்ந்து போகமால் அடக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றார் கள். அவர்கள் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்கின்றனர். அரசாங்கத்திட மிருந்தது ஆகக்குறைந்தது ஒரு டோச் லைட் கூட அவர்களுக்கு கிடைக்க வில்லை. எனினும் இவ்வளவு தேவை இருக்கிறது என்று அவர்கள் யாருக் கிட்டேயும் இதுவரை கையேந்தி கேட்கின்ற மனோ நிலை இல்லை. அவர்கள் ஒரு கொள்கையோடுதான் இருக்கிறார்கள். இங்கு ஸம் ஸம் ரிபாய் ஹாஜியார் போன்ற எத்தனையோ நாட்டிலுள்ள மிகப் பெரிய செல்வந்தர்கள் அடக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் என்ன வேண்டும் என கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இது வரைக்கும் வாய் திறந்து எதையும் கேட்டதில்லை. அவர்கள் மையத்தை அடக்குகின்றார்களே தவிர அதை வைத்து வியாபாரம் செய்யவும் இல்லை. இதை வைத்து விளம்பரம் தேடவும் இல்லை

அவர்கள் உண்மையிலேயே கடைசி வரையிலும் மையத்தை அடக்கும் விடயத்தில் அதன் சுமையைதான் சுமந்து கொண்டு இருக்கின்றனர். அதை ஒரு பெரிய சுமையாகவோ அல்லது வேறு இடத்திற்கு தள்ளிவிடுகின்ற நிலை பாட்டிலோ இல்லை. அது வேறு இடத்திற்குச் சென்றாலும் நல்லமுறையில் மாற்றம் பெற்றுச் செல்ல வேண்டும் என்ற மனோ நிலையோடு தான் பணிபுரிகின்ற னர். சுமந்து கொண்டு செல்லும் மையத்தை மிகப் பக்குவமான முறையில் இன்னுமொரு தோளுக்கு கொடுக்க வேண்டும் என்ற தூய எண்ணமே அவர்களிடம் இருக்கிறது. தூக்கி கொண்டு சென்ற மையத்தை நடு ரோட்டில் போட்டு விட்டுச் செல்லுகின்ற மனோ நிலை அவர்களிடம் இல்லை. கல்குடா முஸ்லிம் களால் மையம் அடக்கும் விடயத்தில் குற்றம், குறை எவையேனும் வந்து விடக் கூடாது என்ற நிலைப்பாட்டோடு இருக்கின்றனர். ஊர் மக்களுடைய காணியை எந்தளவுக்கு சரி எடுத்துக் கொடுத்தாவது மேலும் குறித்த இடத்தில் எப்படி அடக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கின்றனர். இது தான் உண்மை.

இந்த மையவாடிக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி நேரடியாக வந்து சென்றவர். இம்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் உட்பட எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்து

சென்றுள்ளார்கள். இப்பிரதேச மக்களுடைய வலி என்ன? சுமை என்ன? என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். குறைந்தது ஜனாஸாத் தொழுகைக்கு கூட வசதி இல்லை. ஜனாஸாக் குழிக்குள் மழை பெய்து தண்ணீர் நிரம்பினால் அதை வெளியே இரைக்க வசதியில்லை. அதற்கு கடந்த வாரம் தான் ஒரு மோட்டார் கிடைக்கப் பெற்றது. கடந்த வாரம் தான் மையம் அடக்கும் இடத்தில் தொழுவதற்கு ஒரு கொட்டில் கட்டப்பட்டது. ஏழு மாதம் கடந்த பின்னர்தான் இந்த இடத்திற்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு மலசல கூடம் செய்து கொடுத்துள்ளார்கள். இப்படித் தான் இந்த மையவாடியின் உண்மை தன்மை காணப்படுகிறது.

இந்த பிரதேச சபையில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். 06 கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து இன, மத பேதமின்றி நல்லதொரு விடயத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இந்த மையம் அடக்கும் வேலையை ஆரம்பித்த நாள் முதல் ஜும்ஆத் தொழுகை சரியாக தொழ முடியவில்லை. அங்கு ஊழியர்கள் மாலையில் மையத்தை அடக்கி விட்டு அன்று இரவைக்கு 08 மணிக்குப் பின்னர் எந்த உடலும் வந்தாலும் தொலை பேசியின் மூலம் அழைப்பு விடுக்க வேண்டாம் என்று இராணுவத்தினருக்கு ஒரு தடவை சொல்லிவிட்டு வந்தார்கள். ஆனாலும் அன்று இரவு 10.00 மணிக்கு வைத்தியர் ஹம்தானி தொலைபேசியின் மூலம் செயலாளருக்கு அழைப்பு விடுத்தார். ஊர் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. வைத்திய சாலையில் “குளிரூட்டி” இல்லை. அங்கு 04 நாட்களாக மையம் வெளியே இருக்கிறது. ஜனாஸாக்கள் அழுகிப் போகிறது. அது அழுகினால் அவ்விடத்திலேயே வைத்து எரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ன செய்வது என்று அந்த தொலைபேசி அழைப்பின் மூலம் தெரிவித்தார். அப்பொழுது உடனே செயலாளர் அவர்கள் தவிசாளர் உட்பட்ட சம்மந்தப்பட்ட வர்களுடன் கதைத்தார். பக்கத்திலுள்ளவர் கள் நள்ளிரவு 12.30 மணி அளவில் அங்கு சென்று அந்த மையத்தை தூக்கி வந்து அடக்கி விட்டு அன்று சஹர் செய்தார்கள். அவர்கள் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் போன்ற நல்ல நாட்களில் கூட அவர்களது பிள்ளைகளுடன் சந்தோசத்தை அனுபவிக்க நேரமில்லை. அந்த வலியோடு தான் அவர்கள் பணி செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

இந்த மையம் அடக்கம் தொடர்பில் கொழும்பிலும் ஏனைய இடங்களில் இருந்து கொண்டு வட் செப்பிலும் முகப்புத்தகத்திலும் பதிவிடுவதை பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் நேரடியாக படும் அவஸ்தை அளப்பரியது. இந்த சொல்லொண்ணாத் துயரங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு அவர்கள் சமூகத்தின் ஓர் அங்கம் என்ற

அடிப்படையில் தேசியத்தின் நலனுக்காக பங்களிப்புச் செய்துள்ளார்கள். ஆனால் யார் எப்படி விளங்கிக் கொள்கின்றார்கள் என்பது பற்றி எந்தக் கவலையும் அவர்களுக்கு இல்லை. அல்லாஹ் போதுமானவன். இதுவரையிலும் எப்படி செய்தார்களோ இதற்குப் பின்னாலும் அதை கொண்டு செல்ல தயாராக இருக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையிலும் உடனடியாக இந்த சுமைக்கு சமூகத்தின் பிரதிநிதிகள், சமூகத் தலைவர்கள் அவர்களது வேதனையையும் கஷ்டத்தையும் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வரும் மையத்தை திருப்பி அனுப்புவதோ அதை அடக்க மாட்டோம் என்று தங்களை அவர்கள் கேவலப்படுத்திக் கொள்ளவோ அவர்கள் தயாராக இல்லை. தோளில் சுமந்து செல்லும் மையத்தை தோள் கொடுத்து தூக்கிச் செல்லுபவர்களாகவே இருக்க வேண்டுமே தவிர இடையில் விட்டுச் செல்லும் படக் காட்சிகளைப் போன்று ஒன்று நடந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருக்கின்றார்கள்.

இங்கு 3000 மரணங்கள் அடக்கப்பட்டுள்ளன. ஒரு மையத்துடன் ஆக குறைந்தது 5 பேர் வந்து போய் இருந்தாலும் 15000 பேர் ஓட்டமாவடி மண்ணுக்கு வந்து சென்றிருக்கலாம். பிரதேச சபைக்குச் சொந்தமான 1.6 மில்லியன் ருபாய் செலவு செய்து விட்டு கடனில் இருக்கின்றனர். கண்டி மாவட்ட கொவிட் 19 செயலணியின் ஏற்பாட்டில் கண்டி மக்களுடைய பங்களிப்புடன் ஜே. சி. பி ஒன்று வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார்கள். இங்கு இரண்டு ஜே. சி. பி இயங்குகின்றன. ஜே. சி. பி ஆனது 6 மணித்தியாலம் தொடராக வேலை செய்யக் கூடியவையாகும். காலை 8.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை அது வேலை செய்யும். இதில் ஒன்று பழுதடைந்தாலும் மற்றதைக் கொண்டு வேலை செய்யலாம் என்ற அடிப்படையில் இப்படி சீரான முறையில் உடல்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றன.

அதேவேளையில் ஓட்டமாவடி ஜனாஸா அடக்கம் விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் செயலகம் திருப்தியடைந்துள்ளது. ரோன் கமரா மூலம் படம் எடுத்து ஜனாதிபதி, பிரதமர் பார்வைக்கு மாதாந்தம் அனுப்பி வைக்கப்படுகின்றன. அவர்களும் நேரில் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். முதலாவது அல்லாஹ்வுக்காக இரண்டாவது முஸ்லிம் சமூகத்திற்காக மூன்றாவது நாட்டின் தேசிய பாதுகாப்பை நிறைவேற்றிய திருப்தியோடு ஓட்டமாவடி சமூகம் செயற்படுகின்றனர்.

எனவே. இங்கு சிங்கள, கிறிஸ்தவ, தமிழ் ஏனைய சமூகத்தவர்களின் உடல்களையும் அவர்களின் தோளில் சுமந்து அடக்குகின்றார்கள். பிற

சமூகத்தைச் சேர்ந்தவர்களுடைய சுமார் 300 பேர் அளவிலான உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இங்கு அடையாளம் காணப்படாத உடல்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கேள்வி :** அந்த மையவாடிக்கு நீங்கள் ஆற்றக் கூடிய பங்களிப்பு என்ன?

**பதில் :** இந்த மையவாடியை காலம் பூராவும் பாதுகாக்க வேண்டும் என்ற விடயத்தில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதே போன்று நாய்கள் தோண்டுதல், யானைகள், மாடுகள் நடமாட்டங்கள் காணப்படு கின்றன. இதற்காக சுற்றி வர வேலியும் யானைக்கான மின்சாரவேலியும் கட்டாயம் நிர்மாணிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அங்கு சென்ற நாம் இதனை நேரடியாக அவதானித்தோம். உண்மை யிலேயே இதனைப் பார்வையிட்ட போது கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு அந்த குழுவில் சென்ற எல்லோருக்கும் ஏற்பட்டன. இக்குழுவினர் கள் ஜனாஸாக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றவிடயத்தில் கவனம் செலுத்தி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

**கேள்வி :** இவை தவிர அங்கு கடமை புரியும் ஊழியர்களுக் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்பு இல்லையா?

**பதில் :** உண்மையிலேயே இது நல்லதொரு கேள்வியாகும். ஓர் ஆச்சரியமான விடயம். அங்கு களப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு சகோதரர்களுக்காவது அப்படி சம்பவம் இதுவரையிலும் இடம்பெறவில்லை. 420 இறாத்தல் இடைகொண்ட ஜனாஸாக் களைக் கூட, எட்டுப் பேர் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு தூக்கி நல்லடக்கம் செய்துள் ளார்கள். அவர்களுக்கு இதுவரையிலும் எந்தவிதமான கொரோனா தொற்றும் வரவில்லை என்று கூறுகின்றனர். இது உண்மையான செய்தியாகும். நல்ல நோக்கத்துடன் செயற்பட்டமைக்காக வல்ல இறையோனின் பாதுகாப்பு கிடைக்கும் என்பதற்கு ஏற்ப அவர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தொடர்ந்து களப்பணி ஆற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரே நேரத்தில் ஒரு லொரியில் 50 உடல்களும் அல்லது இரண்டு லொரிகளில் 25 அல்லது 30 உடல்கள் அங்கு தினசரி வரும். இதனை எந்தவிதமான மனச் சோர்வும் இன்றி அதற்குரிய கண்ணியத் தோடு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படும். இந்த களப் பணியில் ஈடுபடுபவர்கள் எவருக்குமே ஒரு நோய் கூட தொற்றவில்லை. ஒரு தடிமலோ, காய்ச்சலோ இல்லை. அவர்கள் தமது சொந்த உம்மா, வாப்பாவை எப்படி அடக்கம் செய்பவார் களோ அதை போன்று அடக்கம் செய்கின்றார்கள். இது தான் உண்மை. இரவையிலோ அல்லது அதிகாலையிலோ வீட்டுக்கு செல்லும்

போது குடும்பத்தவர்களுடன் அவர்கள் சேர்ந்து பழக முடியாத நிலைமையில் உள்ளனர். அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் அச்சப்படுகின்றனர். அவர்கள் எல்லோரும் களைப்படைந்து இருக்கின்றார் கள். இவர்களுடைய சேவைக்காக இறைவன் இம்மையிலும் மறுமையிலும் நல்லருள் புரிய வேண்டும். இதற்காக நாம் எல்லோரும் இரு கரம் ஏந்தி அவர்களுக் காக பிரார்த்தனை புரிய வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**கேள்வி :** கல்குடா ஜம்மிய்யதுல் உலமா சபையின் இந்த விவகாரத்தில் எத்தகைய பங்களிப்பை செலுத்தியுள்ளார்கள்?

**பதில் :** இந்த விஜயத்தின் போது கல்குடா ஜம்மிய்யதுல் உலமா சபையினையும் சந்தித்தோம். இந்த சந்திப்பு கல்குடா ஜம்மிய்துல் உலமா கிளையின் ஓட்டமாவடி அலுவலகத்தில் இடம் பெற்றது. மையம் அடக்கும் விவகாரத்தில் நூற்றுக்கு நூறு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு ஆதரவாக இருப்பதோடு மக்களையும் அதற்கு சார்பாக கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள் ளார்கள். அத்துடன் இந்த சந்தர்ப்பத்தில் ஜம்மிய்யதுல் உலமா சபையினையும் சந்தித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டமைக்கு வை. எம். எம் ஏ குழுவினருக்கு அவர்கள் நன்றி தெரிவித் தார்கள். இந்தச் சந்திப்பில் ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எம். எம். எம். தாஹிர், செயலாளர் ஏ. எல். முஸ்தபா, கலாசார உத்தியோகஸ்தர் மௌலவி ஏ. எல். பீர்முஹம்மது, பொது சுகாதார மருத்துவ அதிகாரி ஏ. எல். எம். நௌபர், வை. எம். எம். ஏ மாவட்டப் பணிப்பாளர் ஜஹாப்தீன் உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

**கேள்வி :** உங்கள் தலைமையில் களப் பயணம் மேற்கொண்ட குழுவில் யார்யா ரெல்லாம் இடம்பெற்றனர்?

**பதில் :** யட்டநுவர பிரதேச சபையின் உறுப்பினரும் அமைச்சர் மஹிந்தானந்த வின் இணைப்புச் செயலாளருமான வசீர் முக்தார், அப்துல் ரசீட்- தவிசாளர் குலோபல் சொப்ட் நிறுவனம், கியாஸ் ரவூப் - பணிப்பாளர் ஸம் ஸம் பவுண்டேசன் எஸ். எம். ரிஸ்வி - அபிவிருத்தி சபை அங்கத்தவர், கண்டி வைத்தியசாலை, பஸ்லான் பாரூக் - தவிசாளர், பஸ்லான் பாரூக் பவுண்டேசன் ஆகிய முக்கிய பிரதி நிதிகள் இந்தக் குழுவில் பங்கேற்றனர். இந்தக் குழுவினர் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களுடன் சிநேகபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியினை யும் பிரதேச தவிசாளருடன் சென்று நேரில் பார்வையிட்டனர். அத்துடன் கல்குடா ஜம்மிய்துல் உலமா சபையினரையும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இத்தகைய சேவைப் பணியால் நிலை குலைந்து அல்லலுற்றுக் கொண்டிருக்கும் ஓட்டமாவடிப் பிரதேச மக்களின் நலனில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் கரிசனை கொள்ள வேண்டியிருக்கிறது. எத்தனையோ ஆயிரம் உடல்கள் இங்கு அடக்கப்பட்டுள்ளன. கோடான கோடி பெரும் பண பலம் கொண்ட செல்வந்தர் களின் உடல்கள் இங்கு அடக்கப் பட்டுள்ளன. அவரவர் குடும்பத்தைச் சேர்ர்ந்தவர்கள் எல்லோரும் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியின் பக்கம் பார்வையைச் செலுத்தி அந்த மையவாடியினை காலம் பூராகவும் பாதுகாப்பதற்கு என்னென்ன பங்களிப்புக் களை எல்லாம் செய்ய முடியுமோ அவைகளை நேசக் கரம் கொண்டு செய்வதற்கு மனமுவந்து முன்வருதல் வேண்டும். அந்த மக்கள் வாய் திறந்து கேட்கமாட்டார்கள். எனவே நாங்களே தானாக முன்வந்து அவர்களைத் தொடர்பு கொண்டு மையவாடிக்கு தேவை என்னவென அறிந்து அப்பிரதேச சபைக்கு நிலையான வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவோமாயின், நாம் அவர் களுக்கு உதவிக் கரம் நீட்டுவோமாயின், எதிர்காலத்தில் மகிழ்வான பிரதேசமாக அதை மாற்றலாம்.

24-09-2021

# மிகச் சிறந்த சேவை குடிநீர் வழங்குதல்

**உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கு ஆதாரம் நீர். உயிரற்ற ஜடங்களின் தூய்மைபேணவும் உதவுவது நீர். நீரின்றி உலகமே இல்லை. எல்லா வளங்களுக்கும் மூலவளம் நீரே. உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உன்னத பொக்கிசமே நீர். அந்த நீர் வளம் அற்ற பகுதிகளுக்கு நீர் வழங்குவது இறைவனுக்கு சேவை செய்வதற்கு ஒப்பானது. எல்லா சேவைகளிலும் சிறந்த சேவை குடிதண்ணீர் வழங்குவதாகும்.**

அவ்வாறான சேவைகளை தொடர்ந்தும் செய்து வரும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை, மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையம் இலங்கையில் இன ஒற்றுமைக்கு பெரும் பங்களிப்பையாற்றி வருகிறது. அகில இலங்கை வை . எம். எம். ஏ. பேரவையும் மற்றும் கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையமும் இணைந்து தலைமன்னார் மற்றும் முசலி பிரதேசங்களுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்கள், பௌத்த விஹாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், தமிழ் பாடசாலை ஆகிய 10 பிரதான இடங்களில் சுத்தமான குடிநீர் விநியோகம் பொது மக்களின் பயன்பாட்டுக்காக சனிக்கிழமை 23 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. தலைமன்னார் பிரதேசத்தில் உள்ள தலைமன்னார் பொலிஸ் நிலையம், வாலுகாராமய பௌத்த விஹாரை, பிலதெல்பியா பப்டிஸ்ட் கிறிஸ்தவ தேவாலயம், தலைமன்னார் ஸ்டேசன் வீதியில் அமைந்துள்ள அகபே கிறிஸ்தவ தேவாலயம், தலை மன்னார் துறை அ. த. க பாடசாலை மற்றும் முசலிப் பிரதேசத்திலுள்ள காயக்குழி கிறிஸ்தவ தேவாலயம், சிங்கள கம்மான பௌத்த விஹாரை, கொக்குப் படையான் றோ. த. க. பாடசாலை ஆகிய பத்து பிரதான அரச நிறுவனங்களிலும் வணக்கஸ் தலங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட நீர்விநியோகத் திட்டம் பொது மக்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் மற்றும் மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் எம். பி. எம். சரூக் மற்றும் அனுசரணையாளர்கள் சார்பாக “மல்டிலெக்” கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் ஏ. அப்துல் பத்தாஹ் மற்றும் அக்பர் அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி இங்கு உரையாற்றும்போது,

“இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை நீர் விநியோகத் திடடத்தை ஆங்காங்கே செய்து வந்தாலும், எங்களது மகளிர் பிரிவு இதுவரை காலத்திலும் 1500 க்கும் மேற்பட்ட நீர்விநியோக இணைப்புக் களை பரந்தளவில் ஏற்படுத்திக் கொடுத்து வந்துள்ளார்கள். இந்த தண்ணீர் விநியோகம் சம்பந்தமான விசேட கூட்டம் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நத்வி பஹாவுத்தீன் ஏற்பாட்டில் மென் ரிஹானா ஹோட்டலில் இடம்பெற்றது. இது சம்பந்தமாக அவர் கருத்தினை முன்வைத்தபோது, ஸகாத் ஸகாதா நிதி ( ஏழை வரி) உரிய முறையில் ஏழை மக்களை சென்றடைவதில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய அவர், இந்த நீர் விநியோகத்தை முன்னெடுக்கும் போது முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி ஏனைய சமூகங்களுக்கும் பகிர்ந்தளிக்க முடியும் என்ற மார்க்க சட்டத்தின் ஆலோசனையினை உள் நாட்டிலும் வெளி நாட்டிலுமுள்ள முக்கியமான மார்க்க அறிஞர்களிட மிருந்து பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த முதல் கூட்டத்தின் போது கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தை யும் இணைத்து செயற்படுவோம் என்ற ஒரு தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இரண்டாவது கூட்டம் மாளிகா வத்தை இஸ்லாமிய நிலையத்தில், முன்னாள் அமைச்சர் எம். எச் முஹம்மத் அவர்களின் மகன் ஹுஸைன் முஹமட் தலைமையில் இடம் பெற்றது. இதன் போது வை. எம். எம். ஏ ஊடாக நாடளாவிய ரீதியில் விண்ணப்பம் கோரியிருந்த போதும். அதற்கான விண்ணப்பம் மன்னார் பிரதேசத்தில் இருந்து அதிகளவு வந்திருந்தது. இதற்கான நிதி உதவியை வழங்கும் தனவந்தர்கள் முதல் கட்டமாக மன்னார் மாவட்டத்தை தெரிவு செய்து வேலைத் திட்டத்தை ஆரம்பிப்போம் என்று ஆலோசனை கூறினார்கள். இதற்கான வேலைத் திட்டத்தின் தலைவராக அப்துல் லத்தீப்பை நியமித்த போதிலும் அவருக்கு சுகயீனம் காரணமாக அவரால் செயற்பட முடியவில்லை. தலைவர் என்ற வகையில் இதனை நான் பொறுப்பெடுத்து செயற் படுத்தி வருகின்றேன். பல்லின சமூகங் களுக்கிடையிலான ஒற்றுமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் இவ்வேலைத் திட்டம் ஒரு பாலமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை” என்று அவர் கூறினார்.

தலைமன்னார் பியர்கம வாலுகாரம விஹாராதிபதி வலல்லாயுட்டு விமலசிறி கருத்து தெரிவிக்கும் போது, எமது விஹாரைக்கு ஆழ் குழாய் கிணற்றினை நிர்மாணித்து தண்ணீர் வழங்கியமையிட்டு நான் இறைவனின் ஆசிர்வாதத்துடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நீர்விநியோகத்தை எல்லோரும்

பயன்படுத்தும் வகையில் அகில இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவை மற்றும் கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிறுவனம் இணைந்து வழங்கினர். இந்த நற்பணியை மென்மேலும் சிறந்த முறையில் சகல சமயத்தவர்களுடைய ஆசிர்வாதங்களுடன் முன்னெடுத்துச் செல்ல இறைவன் நல்லருள் புரிய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சிலாபத்துறை சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் அலுவலகத்தின் வைத்திய அதிகாரி உரையாற்றும் போது, "எங்களது சுகாதார பணிமனைக்கு சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தி தந்த அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை மற்றும் கொழும்பு மாளிகா வத்தை இஸ்லாமிய நிலையம் ஆகிய இரு அமைப்புகளுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். இந்த தண்ணீர் திட்டத்தின் மூலம் சுகாதார பணிமனைக்கு வரும் கணிசமானளவு தாய்மார்கள் நன்மை யடையவுள்ளார்கள். எங்களது குடும்ப நல உத்தியோகஸ்தர் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடுகள் இருப்பதாக தெரிவிக் கின்றனர். இந்த பிரதேசங்களிலும் தண்ணீர் வசதியைப் பெற்றுக் கொடுக்க நீங்கள் ஆவன செய்வீர்களென எதிர் பார்க்கின்றோம். உங்கள் பணி மேலும் சிறக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

அகபே கிறிஸ்தவ தேவாலயத்தின் பங்குத் தந்தை வி. சந்திரன் உரையாற்றும் போது, "மக்களின் தேவைக்காக தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு சபையின் சார்பாக தலைவர்களுக்கு நான் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் கிராமத்தின் நன்மையைக் கருதி இன்னுமொரு வேண்டுகோளை நாங்கள் உங்களிடத்தில் முன்வைத்துள்ளோம். அதாவது மரண சடங்குகளின் போது ஒரு பந்தல் ஒன்றையும் கதிரை கொஞ்சமும் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. தண்ணீர் வசதியைச் செய்து தந்தது போன்று இதனையும் மனதில் எடுத்து செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்" என்று தெரிவித்தார்.

தலைமன்னார் துறை அ. க. க பாடசாலையின் அதிபர் உரையாற்றும் போது, "அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை மற்றும் கொழும்பு இஸ்லாமிய நிலையத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அரசியல்வாதிகள் எங்கு வாக்குகள் கிடைக்கின்றதோ அங்குதான் உதவிகள் செய்து கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் பாடசாலையின் தேவையைக் கருதி ஓடிவந்து உதவியைச் செய்தமைக்கு உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களது பாடசாலையில் தமிழ், கிறிஸ்தவ, முஸ்லிம் ஆகிய சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள்

படிக்கின்றனர். சமூக மட்டத்தில் எந்தவொரு பிரச்சினைகள் இல்லாத பாடசாலை. இந்தப் பாடசாலைக்கு உதவி செய்வதற்கு யாருமே இல்லை. குடிக்கின்ற தண்ணீர் கொடுப்பது கடவுளுக்கு சமன். இது பெரிய உதவியாகும். உங்களுடைய உதவிகளை இன்னும் இப்பாடசாலைக்கு எதிர்பார்க்கின்றோம்.

உங்களிடம் கையேந்தி உதவி களைக் கேட்டுக் கொள்கின்றேன். உங்களுக்கு பாடசாலை சமூகம் சார்ந்த வகையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வில்பத்துவ விஜயதிலக விஹாராதி பதி, உரையாற்றும் போது, முதலாது சமயத்திற்கு முன்னுரிமை அளிக்காமல் ஒற்றுமையுடன் உயிர்வாழ்வதற்கு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டும். இரண்டாவது தான் நாங்கள் சமயத்திற்கு முன்னுரிமையளித்தல் வேண்டும். பௌத்தம், கிறிஸ்தவம், முஸ்லிம் முதலிய எல்லா சமயங்களும் நல்ல விடயங் களையே போதிக்கின்றன. முஸ்லிம்கள் இவ்வீதியால் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்காக தினசரி எந்நேரமும் செல்வார்கள். நீங்கள் வழங்கியது மிகவும் சுத்தமான தண்ணீர். இது பெரும் புண்ணிய காரியம் ஆகும். இந்தப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தினர் இருக்கின்றனர். இந்த அமைப்புக்கள் செய்யும் பணி எங்களுக்கு பெரும் சக்தியாகும்" என்று அவர் தெரிவித்தார்.

கொக்குப்படையான் றோ.க.த.க பாடசாலையின் அதிபர் எல். எம். எஸ். பீரிஸ் இங்கு உரையாற்றும் போது, "இந்தப் பாடசாலையில் ஆறு வருடங்கள் கடமையாற்றியுள்ளேன். அக்கால கட்டத்தில் நீருக்காகப் பட்ட கஷ்டம் பல கோடி. இப்பாடசாலை பிள்ளைகளுக்கு நீரை வழங்கிய அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை மற்றும் கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்திற் கும் எதிர்கால வாழ்வை மகிழ்ச்சிகர மாக்கியமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சுற்றாடலைப் பார்க்கும்போது எப்படியான சுற்றாடலில் மாணவர்கள் இங்கு கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்கு நன்கு விளங்கும். நவீன யுகத்தில் படிக்க வேண்டிய நேரத்தில் ஒரு கணனி கூட இப்பாடசாலையில் இல்லை. அவசர தேவையாக இருந்தால் அயல் பாடசாலைக்குச் சென்று போட்டோ பிரதிகளை எடுத்து வருகின்றோம். இப்படியான இதர தேவைகள் இந்த மாணவர்களுக்கு இருப்பதால் உங்களால் முடியுமான உதவிகளை வழங்கி கல்வியை மேம்படுத்த உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன் 28-01-2022

# எதிர்கால தலைமைகளை உருவாக்கும் வை.எம்.எம்.ஏ. நிறுவனம்

அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி முஸ்லிம்களது சமகால விடயங்கள் தொடர்பாக தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி

**கேள்வி :** எதிர்காலத் தலைமைகளை உருவாக்கு வதற்கென வை. எம். எம். ஏ இன் செயற்பாடுகள் என்னவென்று கூறுவீர்களா?

**பதில் :** தலைமைத்துவம் என்பது காத்திரமான ஆளுமைகளையும் பதிவு செய்தவர்களையும் அடையாளப் படுத்துவதாகும். உண்மையிலேயே மார்க்கத் தலைமைகள் எதிர்காலத்தில் சரியான தலைமைத்துவத்தை உருவாக் கினார்களா? அரசியல் தலைவர்கள் அரசியல் தலைமைத்துவங்களை உருவாக்கினார்களா? என்பதை ஒவ்வொருவரும் ஒரு தடவையாவது தம்மைப் பற்றி சுய விமர்சனம் செய்து பார்க்க வேண்டும்.

நாங்கள் எங்களுடைய கடமை களை சரிவர உண்மைக்கு மாறாக செய்துள்ளோமா? மார்க்கத் தலைமை களாயின் சரியான முறையில் மார்க்கத் தலைமைகளை உருவாக்கியுள்ளார்களா? அரசியல் தலைவர்கள் அரசியல் தலைமைகளை உருவாக்கினார்களா? அந்த வகையில் வை. எம். எம். ஏ. தங்களுடைய கடப்பாடுகளைச் சரியான முறையில் செய்துள்ளார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒரு தலைவர் இரண்டு தடவைகள் இருக்கலாம். ஆனாலும் அவர் அடுத்த தலைவரை உருவாக்கி விட்டுத்தான் செல்ல வேண்டும். இதுதான் இதனுடைய அழகிய சிறப்பு.

அதுவும் வை. எம். எம். ஏ. இன் தலைமைத்துவப் பண்பானது யாப்புக்கு கட்டுப்பட்டது. அதன் பரிணாம வளர்ச்சி யானது அதிகாரம் பகிர்ந்தளித்தல், விட்டுக்கொடுப்பு, சேவை மனப்பாங்கு, அடுத்த தலைவரை உருவாக்குதல், புதிய தலைமைத்துவங்களுடன் ஒன்று சேர்ந்து செயற்படல் மற்றும் புதிய தலைமை களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல் தொடர்பான பல்வேறு சிந்தனைப் பார்வைகளையும் உள்ளடக்கியதாகும் என்று கூறலாம்.

**கேள்வி :** தற்போதைய மக்களுடைய இயல்பு வாழ்நிலை குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில் :** கடந்த இரண்டு வருடங்களாக கொரோனவால் நாடும், உலகமும் முடக்கி ஒடுக்கப்பட்டிருந்தது. அந்த மனோநிலையில் இருந்து தற்போது சற்று வெளியே வந்தாலும், நூறு விகிதம் ஒவ்வொரு மனிதனும் பீதியின்றி அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிய வில்லை. குறிப்பாக சரியான முறையில் சமய கடமைகளை செய்து கொள்ள முடியவில்லை. ஒரு இக்கட்டான நிலையில் தான் புதிய சாதாரண நிலைமைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம். ஆனாலும் நாங்கள் கொரோனாவுடன் நாம் எப்படி

வாழ்தல் என்பது பற்றி கற்றுக் கொள்ளுதல் வேண்டும். எங்களுடைய அன்றாட வாழ்க்கை முறையில் இருந்து நாங்கள் பின்நோக்கி நகர முடியாது. கொரோனா இருப்பதை விட வேகமாக வந்தாலும் தொடர்ந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்குத் தான் “புதிய சாதாரண வாழ்க்கை” என்று கூறி இன்று உலகத்தில் புதிய வசனம் ஒன்று பயன்படுத்தப்படுகிறது. எனவே தான் காலம் தரும் மாறுதலுக்கு ஏற்ப நாம் அதனை மறுதலிக்காமல் வாழ பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

**கேள்வி :** இக்கால கட்டத்தில் பேசு பொருளாக காணப்படும் பாக்கிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கையர் பற்றி

**பதில்:** இந்த ஈனச் செயலை எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ளமட்டான். உண்மையிலேயே எமது நாட்டுப் பிரஜை ஒருவரான பிரியந்த குமார அநியாயமாக கொலை செய்யப்பட்டது என்பது கவலை தரும் செய்தியாகும். அதற்கு முதலாவது கண்டப் பிரகடனத்தை முன்வைத்த சிவில் அமைப்புக்களில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையும் ஒன்றாகும். உண்மையிலேயே அந்நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் அதிரடியாக தலையிட்டு 48 மணித்தியாலயத்தில் 100 க்கும் மேற்பட்டவர்களை கைது செய்ததுடன் அதன் பிரதான சூத்திரதாரியையும் கைது செய்து அதற்கு எதிரான கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றியதோடு சட்ட நடவடிக்கையினையும் மேற்கொண்டவர். பிரியந்த குமாரவைப் போராடி காப்பாற்ற முயற்சித்த அதான் மலிக் என்ற மனிதாபிமானிக்கு பாக்கிஸ்தானின் உயர் விருது கௌரவிக்கப்பட்டமை உலகில் முக்கிய கவனத்தைப் பெற்றது. இந்த விடயம் தொடர்பில் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டாக பிரதமர் இம்ரான் கான் திகழ்ந்துள்ளார். இது அனைவருக்கும் முன்மாதரிமிக்க படிப்பினை தரும் ஒரு நடவடிக்கையாகும்.

ஆனாலும், இது இலங்கைக்கு பெரும் பாதிப்பு. அவர் எந்த மதமாக இருந்தாலும், அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இலங்கை யருக்கு இப்படியான சோகமான ஒரு நிலைமை வரும் போது இது போன்று நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற் படவேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கில் சவூதி அரேபியாவில் அங்குள்ள சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட கிழக்கிலங்கை யுவதி ரிசானா ந.ஃபீக்கின் தண்டனை விடயத்திலும் இந்நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு செயற்பட்டோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

**கேள்வி :** இன்று சரியாகவோ, தவறாகவோ இன்றைய முஸ்லிம் வாலிபர்கள் மத்தியில் ஒருவித குற்றவுணர் விரக்தி மனப்பான்மை தலை தூக்கி வருவதை நாம் அவதானித்து வருகின்றோம். குறிப்பாக இளந் தலைமுறையினர்கள், எதிர்கால சந்ததி யினர்கள் ஏனைய சமூகத்துடன் சேர்ந்து எவ்வாறு பயணம் செய்தல் என்று தெரியாமல் தாழ்வு மனப்பான்மையுடைய வராக திக் பிரமை அடைந்த நிலைமையில் இருக்கின்றனர். இது பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** ஆம், உண்மையிலேயே ஏப்ரல் உயிர்த் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் ஒரு குற்ற உணர்வோடு பயந்த ஒரு தாழ்வு மனப்பான்மையோடு வாழும் ஒரு சமூகமாக இருக்கிறோம்.

அண்மையில் நடந்த பாகிஸ்தான் சம்பவம் கூட இன்னும் எங்களை பின்னுக்குத் தள்ளிவிடுமா என்ற ஒரு ஐயமும் இருக்கிறது. உண்மையிலேயே இது ஒரு மத ரீதியிலான தாக்குதலோ இன ரீதியிலான தாக்குதலோ அல்ல. இரு குழுக்களிடையே இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஆகும். ஆனாலும் இது தொடர்பிலும் இலங்கை பிரஜை என்ற வகையில் ஒரு குற்றவுணர்வு காணப் படுகிறது. இந்த மன நிலையில் இருந்து நாங்கள் வெளியே வர வேண்டும். இன்றைக்கு எதிர்கால சந்ததியினர்கள். தாழ்ந்த மனநிலையோடு இருப்பார்களா யின் ஒடுக்கப்பட்ட சமூகமாக நாங்கள மாறிவிடுவோம். நாங்கள் இதில் இருந்து வெளியே வரவேண்டும்.

ஏனைய மற்றும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தோடு பிட்டும், தேங்காய் பூப் போன்று நகமும், சதை போன்று பிறந்த நாள் முதல் மரணிக்கும் வரையிலும் பரஸ்பரம், புரிந்துணர்வு, தேசிய ஐக்கியம் என்பவற்றை இந்த மண்ணில் வேரூன்ற வைத்திட வேண்டும் என்று சலிப்படையாமல் வாழத் துடிக்கும் இளம் உணர்வுகள் புரிந்து கொள்ளப் படாமல் அலட்சியம் செய்யப்பட்டு விடுவோமோ என்ற மனதார அச்சத்தைக் கொண்டுள்ளனர். காரணம் தம் சமூகம் எந்தக் குற்றமும் செய்யாமல் அவஸ்தைப் படுவதைப் பார்த்தே. கபடமில்லாத இதய உணர்வுகளை சரியாகப் புரிந்து கொண்டு எமது இளம் தலைமுறையினர்களையும் எதிர்கால சந்ததியினர்களையும் வழி நடத்த வேண்டிய தேவை இருக்கிறது.

எவ்வாறாயினும் இதற்கு ஒவ்வொரு துறைசார்ந்தவர்களுடைய பொறுப்பு இருக்கிறது. எதற்கும் அச்சப்படத் தேவையில்லை. முஸ்லிம்கள் 1400 வருடங்களைக் கொண்ட சமூகம். எந்த கால கட்டத்திலும் இந்த நாட்டுக்கு எந்தவொரு துரோகமுமிழைக்காத ஒரு சமூகம். சட்டத்தை 100 விகிதம் மதிக்கக் கூடிய சமூகம். இந்த நாட்டின் யுத்த வெற்றிக்காக எண்ணற்ற உயிர்த் தியாகங்களைச் செய்த சமூகம். ஆனாலும் எங்களை ஒரு வர்ணக் கண்ணாடி போட்டுப் பார்க்கின்றனர். இதில் இருந்து நாங்கள் வெளியே வருவது எவ்வாறு என்பது பற்றி எதிர்காலப் பாதையினைக் காட்ட வேண்டும்.

உண்மையிலேயே நாங்கள் 20 வருடங்களுக்கு பின்நோக்கிச் சென்று பார்த்தால் நாங்கள் ஏனைய சமூகத் தோடு எவ்வாறு வாழ்ந்தோம். அந்த வாழ்க்கை முறைப் பின்னணியை ஏனைய காலங்களோடு ஒப்பிட்டு எவ்வாறு ஒற்றுமையாகவும் சகவாழ் வுடனும் மனிதாபிமானப் பண்பு களுடனும் வாழ்ந்தோம் என்பதை மீளாய்வு செய்ய வேண்டும். அதே வேளையில் எங்களுடைய உரிமை களைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் பெரும்பான்மை சமூகத்தினர்களும் எமக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கி யுள்ளனர் என்கின்ற பழைய வரலாற்று அம்சங்களையும் நாம் எடுத்தாராய்ந்து நடக்க வேண்டியிருக்கிறது. சிங்கள சகோதரர்கள் எங்களின் நியாயங்களை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு அவர்கள் ஒரு வலுவான சக்தியாக விளங்கியுள்ளார் கள். எனவே, நாம் விழிப்பாக இருந்து நாம் நாட்டுக்காகப் பெற்றெடுத்த நல்லவைகளை இழந்து விடாமல் பாதுகாத்து முன்நோக்கிச் சொல்ல வேண்டும். இதற்கான கடுமையான முயற்சிகளை மிக ஆழமாக முன் னெடுக்க வேண்டி இருக்கிறது. இது நன்கு

படித்த சமூகத்தினுடைய பொறுப்பாகும். இது பற்றி எமது இளைய தலை முறையினர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டிய தேவையும் கடப்பாடும் இருக்கிறது.

**கேள்வி :** அப்படியால் இது தொடர்பில் நீங்கள் முனனெடுக்கும் செயற்பாடுகள் குறித்தும் இது தொடர்பான ஆலோசனை களையும் கூற முடியுமா?

**பதில்:** ஆம். நிச்சயமாக இன்று நாங்கள் என்ன பிழை செய்துள்ளோம். இந்த இடைவெளி வருவதற்கான காரணம் என்ன? 1956 க்குப் முன்பட்ட காலத்தில் ஒரு பாடசாலையில் தமிழ், முஸ்லிம், சிங்களம், கிறிஸ்தவ ஆகிய மணவர்கள் கல்வி கற்ற காலம் ஒன்று இருந்தது. ஒரு தொழிலுக்கோ அல்லது வேறு எங்கேயோ சென்றாலும் எல்லோருடைய முகங் களையும் பார்த்து புன்னகையோடு கலந்துரையாடினோம். அது மட்டுமல்ல அக்காலத்தில் பேச்சு, பார்வை, மனப்பான்மை, உதவி புரிதல் போன்ற பண்புகளில் ஒருவொருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டார் கள். இனங்களுக்கிடையே நல்ல பரஸ்பர தொடர்புகளும் நல்ல எண்ணங்களும் சிந்தித்துத் பேசுதல் போன்ற நல்ல பண்புகள் காணப்பட்டன. நாம் ஒரு இனத்தை அல்லது ஒருவரை இன, மத, மொழி, சாதி ரீதியாகப் பார்க்காது மனிதப் பண்புகளுடன் மனிதாபிமானத்துடன் பார்க்கும் காலத்திலும் வாழ்ந்திருக் கின்றோம்.

இந்நாட்டில் வாழும் அனைவரும் ஒரே குடையின் கீழ் ஒரே நாட்டவர்கள் என்ற மனப்பான்மையுடன் வாழ்தல் வேண்டும். ஒருவர் மற்றைய இனத்தோடு சேராது ஒதுங்கிச் செல்லல் முடியாது. சேர்ந்து போக வேண்டும். இனங்களைக் கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் மனம் திறந்து பேசுதல் என்ற விடயத்தில் பல்லின மக்களிடையே இன நல்லிணக் கத்தை உருவாக்குவதற்கு வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உண்மையிலே சிங்கள மக்கள் மிகவும் நன்றியுடைவர்கள். உதவி செய்யும் மனப்பான்மை உடையவர்கள் கருணை யுடையவர்கள். சிறந்த விருந்தோம்பல் பண்புடையவர்கள். அடுத்தவர்களை மதிக்கக் கூடியவர்கள். அரச உத்தியோ கஸ்தர்கள் கூட மிகவும் சிறந்தவர்கள். முஸ்லிம் அரச உத்தியோகஸ்தருடன் சேர்ந்து வேலை செய்வதற்கு சரியான விருப்பம் உடையவர்கள். நாம் எல்லோரையும் தவறாகப் பார்க்க முடியாது. ஒரு சில நபர்கள் இனவாதம் பேசுவார்கள். அதற்காக எல்லோரையும் தவறாகப் பார்க்க முடியாது. தவாறாக மதிப்பிட முடியாது. ஒரு இனம் மற்றைய இனத்தின் மீதுள்ள சந்தேகங்களையும் தவறான சிந்தனை எண்ணப்பாடுகள் ஒழிக்கப்படல் வேண்டும். அதாவது ஒரு இனம் மற்றைய இனத்துடன் சேர்ந்து வாழும் போதும், பழகும் போதும், பேசும் போதும், கலந்துரையாடும் போதும், சந்திக்கும் போதும் தான் ஓர் இனத்தின் உள்ளுணர்வுகளையும் மனப்பான்மை யினையும் நற்பண்புகளையும் நல்ல குணநெறியினையும் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. உள்ளூராட்சி மாகாண அமைச்சின் கீழ் உள்ள உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமை புரியும் போது, நான் ஒருவர் மாத்திரம் முஸ்லிமாக இருந்த போதிலும் ஏனைய அனைத்து சக ஊழியர்களும்

பெரும் பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடன் சேர்ந்து செயலாற்றியவன் என்ற வகையில் நான் அவர்கள் எல்லோரும் நல்ல பண்புடையவர்கள் என்று கூறுவேன். இன்றும் கூட என்னுடன் தொடர்பு கொண்டு கதைக்கின்றார்கள். அந்த இடத்திற்கு நான் மீண்டும் வர வேண்டும் என்ற அவாவுடன் பேசுகின்றார்கள்.

அந்த வகையில் அகில இலங்கை வை. எம். எம். பேரவையின், தேசத்தை கட்டி எழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் இரத்த தான முகாம், பொதுச் சிரதமானம், மரம் நடுகை போன்ற பாரிய முன்மாதிரியான வேலைத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றோம். இவ்வேலைத் திட்டங்களின் போது பௌத்த சமயத் தலைவர்கள், முஸ்லிம் சமயத் தலைவர்கள், இந்து சமயத் தலைவர்கள், கிறிஸ்தவ சமயத் தலைவர்கள், அரச உயர் அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினர்கள் என வரவழைக்கப் பட்டு அவர்களுடைய ஆசீர்வாதங்களுடன் முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக இந்நாட்டிலுள்ள எல்லா சமூகத்தினரிடையே நல்லிணக்கத்தையும் விழிப்புணர் வையும் ஏற்படுத்துவதில் பாரிய பங்களிப்பை செய்து வருகின்றோம் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள, அபாயகரமான அவௌடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அனுசரணையுடன் நாட்டைப் போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்கான முழு வேலைத் திட்டம் ஒன்றை மிக நீண்ட காலமாக செய்து வருகின்றோம். இதில் ஆயிரக் கணக்கான சிங்கள சகோதரர்களுடன் நேரடியாக அவர்களுடைய நெருங்கிப் பழகி, போதை வஸ்துப் பாவனையில் இருந்து விடுவித்து புனர்வாழ்வளித்துள்ளோம். இதன் மூலம் சிங்கள சமூகத்திற்கு மத்தியில் ஒரு கௌரவமான பார்வை இருக்கின்றது, தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு என்பது சமூகத்தின் அடி மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய நியதி. அதற்கான நிகழ்ச்சி நிரலை வை. எம். எம். ஏ. பேரவை வகுத்து எமது முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஒருவர் எவ்வாறு மற்றவர்களின் மனப்பாங்கினை புரிந்து கொள்வது என்கின்ற செயற் திட்டத்தின் கீழ் போதை வஸ்துப் பாவனையால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பத்திற்கு புனர்வாழ்வு அளித்து, சமூயமயப்படுத்தி வருகின்றோம். இதில் பயிற்றுவிக்கும் திட்டத்தின் கீழ் பயிற்ச்சியாளர்களை உருவாக்கி வருகின்றோம். இதில் இளைஞர்கள் இணைந்து கொள்ளலாம். அந்த வகையில் பல்லின சமூகத்திற்கு இடையிலான இணைப்பு பாலமாக எங்களுடைய போதை ஒழிப்பு செயற்திட்டம் பிரதானமானதாக அமைந்துள்ளது.

மேலும் ஒரு இனத்தின் கலாசார அடையாளங்களை மற்றைய சமய இனத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒரு இனம் மற்றைய இனத்தின் மீது மதிப்பளிக்கும் நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சிகளையே நாங்கள் தொடர்ந்து செய்து வருகின்றோம். குறிப்பாக சொல்லப் போனால் அரசாங்கத்தினால் இலங்கையில் மீலாத் தினத்தை தேசிய மீலாத் விழாவாகப் பிரகடனப்படுத்தப் படும் காலம் முதல் இன்று வரையிலும் தேசிய மீலாத் விழா கொண்டாட்டங்

களை செய்து வருகின்றோம். ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வுக்கு சகல சர்வ சமயத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். பௌத்த, தமிழ், கிறிஸ்தவ முதலிய சமயத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். இந்நிகழ்வு ஒவ்வொரு வருடமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவையில் நேரடி ஒலிபரப்பப் படும். எமது சமய கலாசார அடையாளங் களை மற்றைய சமய இனத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் முன்மாதரிமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் எமது சமய நடவடிக்கைகளை விளங்கிக் கொள் வதுடன் எங்கள் மீது பற்று வைப்பதற்கும் ஒருவரை ஒருவர் சந்தித்து மனம் திறந்து பேசுவதற்கும் உண்மையான தேசிய சகவாழ்வுக்கான வேலைத் திட்டம் எமது வை. எம். எம். ஏ. பேரவையால் ஒவ்வொரு வருடமும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. இந்த நிகழ்வின் மூலம் ஏனைய சமய இனத்தவர்கள் கௌரவிக்க வும், மதிக்கவும் படுகின்றனர்,

நாம் எமது சமய விடயங்களைப் பின்பற்றுவதோடு ஏனைய மதங்களைப் பற்றி அறிந்து இருத்தல் அவசியம். மற்றைய மதங்களை கௌரவித்தல், மதித்தல் சிறந்தது. நாம் மற்றைய சமய இனத்தவர்களைப் புரிந்துணர்வுடன் பார்ப்பது, பேசுவது, பழகுவது. சிந்தித்து பேசுதல் வேண்டும். விருந்துபசாரங் களைப் பரிமாறிக் கொள்ளுதல் வேண்டும். அவர்களுடன் நல்ல உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். மற்றவர்களை மனிதாபி மானத்துடன் நோக்குதல் வேண்டும். எல்லாவற்றுக்கு மேலாக நாம் எல்லோரும் “இலங்கையர்” என சிந்தித்து வாழ வேண்டும். இப்படி நிறைய அறிவுரைகள் சொல்லலாம்.

**கேள்வி :** நீங்கள் இறுதியாக கூற விரும்புவது என்ன?

**பதில்:** ஊடகம் என்பது உலகில் மிகவும் பெறுமதியான சாதனமாகும். அதன் தேவைப்பாடு ஒவ்வொரு சமூகத்திற்கும் அவசியமான தொன்றாக இருக்கிறது. அதனை உருவாக்கிக் கொள்ள முஸ்லிம் சமூகத்தால் இயலாமைப் போனது என்பது தவிர்க்க முடியாதது.

ஆனாலும் ஊடகம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள இயலாமைப் போனமைக்கான போக்குகளைக் கடந்தும் முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களை யும் சொல்லொண்ணாத் துயரங்களையும் ஏனைய சகோதர ஊடகங்களின் வாயிலாக வெளிக் கொணர்ந்து வருகின்றனர். எனினும், அந்த ஊடகங்களின் மூலம் முழு நிறைவான தகவல்களையும் முஸ்லிம் களுடைய முழுமையான தேவைகளையும் நிறைவு செய்வது என்பது சாத்தியப் படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. அதனால்தான் இலங்கை முஸ்லிம்கள் சமூக வலைத் தளம் ஊடாக தங்களுடைய பதிவுகளை இடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனாலும் அது உண்மையிலே நெறிப்படுத்தப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை. இதன் மூலம் எமது முஸ்லிம் சமூகம் முற்றிலும் தோல்விகளை எதிர்நோக்கிய சமூகமாக பெரும்பாலும் காணப்படுகின்றன. இருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த ஊடகவியலாளர்கள் இதன் சாதக பாதங்களை மக்களுக்கு வெளியே

தெளிவுபடுத்திக் கூறினார்களா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இன்னும் இருந்து வருகிறது,

எமக்கென ஒரு தனியார் ஊடகம் இல்லை என்று இருந்தாலும் எமது பிரச்சினைகளைப் பேசுவதற்காக உள்ள சமூக வலைத்தளங்களில் செய்திகளைப் பதிவிடுவதில் மிகுந்த கவனமும் நிதானமும் அவசியம் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். நம்பகத் தன்மையான செய்திகளைப் பதிவிட வேண்டும் என்பது மிகவும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

# வை.எம்.எம்.ஏ பேரவையின் 71 வது மாநாடும் வருடாந்த பொதுக் கூட்டமும்

**இன்று நடைபெறும் வை. எம். எம். ஏ. பேரவையின் 71 வது மாநாடும் வருடாந்த பொதுக் கூட்டமும் குறித்து அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹிட் எம். ரிஸ்மி தினகரன் பத்திரிகைக்கு வழங்கி செவ்வி.**

**கேள்வி :** இன்று நடைபெறும் வை. எம். எம். ஏ. பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டமும், மாநாட்டு ஒழுங்குகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன?

**பதில் :** அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 71 வது மாநாடும் வருடாந்த பொது கூட்டமும் இலங்கை மன்றக் கல்லூரியில் இன்று சனிக் கிழமை 20 ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு கொரோனா சுகாதார வழிமுறைகளுக்கு அமைய நடை பெறும்.

இன்று காலையில் 10.00 மணிக்கு வை. எம். எம். பேரவை மண்டபத்தில் அனைத்துக் கிளை களின் உறுப்பினர்ளும் கலந்து கொள்ளக் கூடிய மத்திய குழுக் கூட்டம் இடம்பெறும். மத்திய குழுதான் திட்டமிடல் பிரதான குழு. இதில் நாடளாவிய ரீதியிலுள்ள கிளைகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இது இவ்வருடத்தின் இரண்டாவது மத்திய குழுக் கூட்டம் ஆகும். காலை 10.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும் நடைபெறும்.

சுகாதார வழிமுறைகளைப் பேணி இக் கூட்டம் நடைபெற வேண்டும் என்ற காரணத்தினால் இம்முறை ஒரு கிளையில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஒருவருக்குத் தான் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை இந்த மாநாட்டில் வரலாற்றில் முதல் தடவையாக 25 கிளைகள் வை. எம். எம். ஏ. பேரவையுடன் கூட்டிணைக்கப் படவுள்ளது. இதில் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் புதிய 25 கிளைகள் உள்வாங்கப் படவுள்ளன.

**கேள்வி :** இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யார் கலந்து கொள்ளவுள்ளார்?

**பதில் :** விசேடமாக இந்நிகழ்வின் பிரதம அதிதியாக நீதி அமைச்சர் அலி சப்ரி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பிரதம அதிதியாக அழைப்ப தற்கான முக்கிய காரணம் யாதெனில் இன்றைக்கு அமைச்சரவையில் இருக்கக் கூடிய ஒரே ஒரு முஸ்லிம்

அமைச்சர் என்ற வகையில் நாங்கள் அவரை முதன்மைப்படுத்தி அழைப்பு விடுத்திருக்கின்றோம். நாங்கள் கட்சிகள் என்ற அடிப்படையில் எதையும் நோக்குவதில்லை. இக்கால கட்டத்தில் இருக்கக் கூடிய ஒரே ஒரு கெபினட் அமைச்சர் என்ற வகையில் அழைப்பு விடுத்துள்ளோம்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் சம்மந்தமான சீர்த்திருத்தம் தொடர்பில் அதிகமாக பங்களிப்புச் செய்த ஒரு அமைப்பு என்ற வகையில் இந்த சீர்திருத்தத்தை வெளிக்கொணர வுள்ள இறுதிக் கால கட்டத்தில் அமைச்சர் கலந்து கொள்வதுமிகவும் பொருத்தமானதாக அமையுமென நான் கருதுகின்றேன்.

இன்றைய பேசு பொருளாக இருக்கக் கூடிய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விவகாரம் எல்லாம் குறித்த அமைச்சருடன் சம்மந்தப்பட்டது. அமைச்சருக்கும் நாட்டு மக்களுக்கு இது சம்மந்தமான ஒரு தெளிவூட்ட லுக்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமையும் .

**கேள்வி :** சிறப்பு அதிதிகளை யார் யாரேல்லாம் அழைத்துள்ளீர்கள்?

**பதில் :** விசேட அதிதிகளுக்கான அழைப்பினை பொதுவாக மாற்று மத பிரமுகர்களுக்கே அழைப்பு விடுப்போம். இது வழக்கமாக இருந்து வருகிறது. இம்முறை பெப்ரல் தேர்தல் கண்காணிப் பின் பணிப்பாளர், ரோஹண ஹெட்டி யாராய்ச்சி அவர்களுக்கு அழைப்பு விடுக்க இருந்தோம். அன்றைய தினம் அவருக்கு முக்கியமான அலுவலக வேலை இருப்பதன் காரணமாக எதிர்காலத்தில் அவரை வேறு ஒரு நிகழ்வில் அழைக்க தீர்மானித் துள்ளோம். அடுத்து வரும் நிகழ்வுகளில் அவருக்கு அழைப்பு விடுப்பது எனத் தீர்மானித்துள்ளோம். இந்த முறை பெரும்பான்மையினப் பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்க முடியவில்லை.

கடந்த காலங்களில் வை.எம்.பி. ஏ. இன் தலைவர், சர்வோதய அமைப்பின் தலைவர் ஆரியரட்ன, அதே நேரத்தில் பல்வேறுபட்ட அரசியல் வாதிகள், துறை சார்ந்தவர்கள் எனப் பலரை இந் நிகழ்வுக்கு அழைத்து கௌரவித்து இருக்கின்றோம்.

ஆனால் இம்முறை மட்டும் 1951 ஆம் ஆண்டு கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் காலம் முதல் இன்று வரையி லும் ஒவ்வொரு வருடமும் வை. எம். எம். ஏ பேரவை நடத்தப்படும் மீலாத் விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு தொடர்ச்சியாக ஊடக அனுசரணை வழங்கி வரும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையை கௌரவிப் பதற்காக விசேட அதிதி அழைப்பினை அதன் உதவிப் பணிப்பாளர் ரினோசியாவுக்கு வழங்கி இருக்கின் றோம்.

குறிப்பாக இலங்கையில் மீலாத் விழாவை அரசாங்கத்தால் ஒரு தேசிய விழாவாக பிரகடனப்

படுத்துவதற்கு முன்னர் இருந்து வை. எம். எம். ஏ பேரவை தேசிய மட்டத்திலான மீலாத் விழாக்களை நடாத்தி வந்துள்ளன. வெளிநாடுகளில் இருந்து பேச்சாளர்கள் அக்கால கட்டத்தில் வருகை தருவார்கள். அவர்களுடைய சொற்பொழிவுகள் எல்லாம் இலங்கை வானொலி ஊடாக நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும்.

இது வரையிலும் கடந்த 70 வருடங்களாக எங்களோடு கை கோர்த்து எங்களுக்கு அனுசரணை வழங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையை நாங்கள் கௌரவிக்க கடமைப்பட்டுள்ளோம். அதன் காரணமாக நாங்கள் இம்முறை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பிரிவின் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஒரே ஒரு முஸ்லிம் பெண், என். ஜே. எப். ரினோசியா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது ஒரு முக்கியமான விடயம். முஸ்லிம் பெண்மணி ஒருவர் ஊடகத் துறையில் ஊச்ச நிலையை அடைந்துள்ளார். அதற்காக அவரையும் மற்றும் முஸ்லிம் வானொலி சேவையையும் கௌரவப்படுத்தும் வகையில் இம்முறை இந்த விசேட அதிதியின் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பிரிவின் உதவி பணிப்பாளர் என். ஜே. எப். ரினோசியா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

**கேள்வி :** இவை தவிர வேறு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பதில் :** இந்த மாநாட்டின் போது சமூகத்திற்கும் நாட்டுக்கும் சேவை செய்த ஒரு தனி மனிதரை அல்லது அமைப்பை தெரிவு செய்து, “வை பெனசலிட்டு” என்ற தேசிய விருது வழங்கி கௌரவிப்பது வழக்கமாகும்.

இம்முறை இந்த தேசிய விருதுக்கு ஓட்டமாவடி பிரதேச சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விருதினை ஓட்டமாவடி பிரதேச தவிசாளர் ஏ. எம். நௌபர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் இணைந்து பெற்றுக் கொள்ளவுள்ளனர். அத்துடன் விசேட விருதை வை. டப்லியூ எம். ஏ. இன் பெண்கள் அமைப்பின் தலைவி பாவாஸா தாஹா பெற்றுக் கொள்ளவுள்ளார்.

நாடளாவிய ரீதியில் இன்னும் 25 புதிய கிளைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. ஏற்கெனவே இந்த கிளைகளுக்கான தெரிவுகள் இடம் பெற்றுள்ளன. அக்கிளைகளை வை. எம். எம். ஏ. பேரவையுடன் கூட்டு சேர்க்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இம்மாநாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள கிளையினர்களுக்கிடையே தேசிய மட்டத்தில் அடையாளம்

காணப்பட்ட கிளைகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இப்பொதுக் கூட்டமும் மாநாடும் யாப்பின் பிரகாரம் ஜுன் மாதம் நடைபெற்று இருக்க வேண்டும். எனினும் கொரோனாவின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட போதிலும் ஏற்கனவே ஸூம் ஊடாக நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்று, தலைவராக நானும் செயலாளர் என். ஜி. சபீர் சவாத் அவர்களும் போட்டியின்றி ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளோம். எனினும் பொருளாளர் இஹ்சான் ஹமீட் செயலாற்றி வருகின்றார். இந்நிகழ்வில் முக்கிய அம்சமாக பொருளாளர் உட்பட பொது நிர்வாக தெரிவுகள் இன்று இடம்பெறும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி :** கடந்த காலங்களில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டவர்களைக் குறிப்பிட முடியுமா?

**பதில் :** நான் 54 வது தேசியத் தலைவர் என்ற வகையில் 71 வது மாநாடு ஆகும். 71 வது மாநாட்டுக்கு 71 பேர் பிரதம அதிதிகள் கலந்து கொண்டிருப்பார்கள். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பிரபல்யமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர். குறிப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் தி. மு ஜயரட்ன, அமைச்சர்கள் என மிக முக்கியமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஆளுநர்கள் என முக்கியமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்

குறிப்பாக பங்களதேஸ் தூதுவர் எம். ரயிஸ் ஹமிதுல்லா, இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் பைசர் முஸ்தபா, சபாநாயகர் கரு ஜயசூரிய, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சர் எஸ். பி. திசாநாயக, அமைச்சர் டலஸ் அஹலப்பெரும, அமைச்சர் ரிசாட் பதியுதீன், உயர் நீதிமன்ற பிரதான நீதியரசர் சரத் என். சில்வா, அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் ஜி. எல் பீரிஸ் உள்ளிட்ட இன்னும் எத்தனையோ பிரமுகர்கள் கலந்து சிறப்பித்துள்ளார்கள்

அத்துடன் விசேட அதிதிகளாக பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். வை. எம். பி. ஏ. அமைப்பின் செயலாளர் மஹேந்திர ஜயசூரிய, இராஜாங்க் அமைச்சர் ஸ்ரீயாணி விஜேவிக்ரம, இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்கூஷ, கிழக்கு மாகாண முதல் அமைச்சர் நஷீர் அஹமட், மேல் மாகாண ஆளுநர் செய்யத் அலவி மௌலானா, அமைச்சர் எம். எச். ஏ ஹலீம், ஆளுநர் எம். ஜே. எம். முஸம்மில், துருக்கி நாட்டுத் தூதுவர் சிக்கந்தர் கமல் ஒக்யய், பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகு தாவுத், சிப்லி அஸீஸ், தென்

அபிரிக்கா நாட்டின் தூதுவர் பி. எம். பெட்டோ, லிபியா தூதுவர் அத்னன் இல் சராஹ், இலங்கை மாலைதீவு நாட்டுக்கான இணைப்பதிகாரி டேவிட் பிரிஜர், பாக்கிஸ்தான் நாட்டின் பிரதி தூதுவர் கலாநிதி முஹமட் ஏஜாஸ், அமைச்சர் கபீர் ஹாசிம், முன்னாள் இந்தியாவின் நீதியரசர் ஏ. எம். அஹ்மதி என இப்படி நீண்ட பெயர் பட்டிலை குறிப்பிட்டு சொல்ல முடியும்.

**கேள்வி :** கடந்த காலங்களில் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர்களாக சேவையாற்றியவர்கள் பற்றிக் கூறுவீர்களா?

**பதில் :** நான் வந்து 54 வது தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். வை. எம். எம். ஏ இன் யாப்பின் கோட்பாட்டுப்படி ஒருவர் இரண்டு வருடங்கள் தான் இருக்கலாம். 71 வருடத்தில் 54 தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார் கள். ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ஏ.எம். ஏ. அஸீஸ் முதல் இன்று நான் வரையிலும் பதவி வகித்து உள்ளோம். கடந்த காலங்களில் சேவையாற்றியவர் களுடைய பெயர் பட்டியலைக் குறிப்பிடலாம். பின்வருமாறு

1950 -1952 வரையிலும் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ், 1953 இல் ஐ. எம். யூசுப், 1954 இல் பழீல் ஏ. கபூர், 1955 எம். ஏ. றசாக், 1956 இல் எஸ். எம். எச். மசூர், 1957 இல் எஸ். பி. ஏ. ஹமீட், 1957 இல் எம். லாபிர் காசிம், 1958 இல் எஸ். எச். ஏ. வதூத், 1959 இல் ஏ. எச். எம். பாருக், 1960 இல் எஸ். எம். கமால்டீன், 1961 இல் ஏ. ஆர். ஏ நூர் அமீன், 1962 இல் ஏ. எம். நஷீர், 1963 இல் மர்சூக் புர்ஹான், 1964 இல் எஸ். எஸ். இஸ்ஸதீன், 1965 இல் மன்சூர் எஸ். டீன், 1966 இல் ஏ. எச். எம். ஜசாயிர், 1967 இல் எஸ். பி. சி. ஹலால்தீன், 1968 இல் எம். எம். பஹாவுதீன், 1969 இல் எம். எம். பஹாவுதீன், 1970 இல் எம். பத்ரி ஹாசிம், 1971 இல் எம். எல். எம். பாரூக், 1972 இல் ஓ. எம். எம். ஹுஸைன், 1973 இல் ஏ. எம். முஸ்தகீம், 1974 இல் எம். மக்கீ ஹாசிம், 1975 இல் எம். எம் பஹாவுதீன், 1976 இல் எஸ். எப். எம். ஸவாஹிர், 1977 இல் ஏ. சி. எம் ஹுஸைர், 1978 இல் எம். டி. எம். ஹம்சா, 1979 இல் எம். டி. எம் ஹம்சா, 1980 இல் ஏ. காதர் எம். அலி, 1981 இல் ஏ. காதர் எம். அலி, 1982 இல் காசிம் எம். நயீம், 1983 இல் காசிம் எம். நயீம், 1984 இல் எம். நளீம் ஹனிபா, 1985 இல் எம். நளீம் ஹனிபா, 1986 இல் எம். சுபைர் ஹசன், 1987 இல் எம் சுபைர் ஹசன், 1988 இல் ஹலீம் ஏ அஸீஸ், 1989 இல் ஹலீம் ஏ அஸீஸ், 1990 இல் எம். எப். எஸ் முஹீத், 1991 இல் ஹுஸைன் ஜே. சலாஹுதீன், 1992 இல் ஏ. எல். எம். சபீர், 1993 இல் எஸ். எம். ரஸ்லான் மௌலானா, 1994 இல் எம். ரூமி முஹமட், 1995 இல் எம். ரூமி முஹமட், 1996 இல் ஜுனைத் எம் ஜஹான், டி. எம். கமால்தீன், 1997 இல் டி. எம். கமால்தீன், 1998 இல் காலித் எம். பாரூக், 1999 இல் காலித் எம். பாரூக், 2000 இல் காலித் எம் பாரூக், 2001 இல் எம். பௌசான் எம் அன்வர்,

2002 இல் எம். அஷ்ரப் ரூமி, 2003 இல் எம். அஷ்ரப் ரூமி, 2004 இல் எம். ஹபிழ் சலீம்டீன், 2005 இல் எம். ஹபிழ் சலீம்டீன், 2006 இல் எம். ஜிப்ரி ஹனிபா, 2007 இல் எம். ஜிப்ரி ஹனிபா, 2007 இல் எம். எஸ். ரஹீம், 2008 இல் எம். இவ்லல் அப்துல்லா, 2009 இல் ஏ. பௌமி ஒவைஸ், 2010 இல் ஏ. நத்வி பஹாவுதீன், 2011 இல் ஏ. நத்வி பஹாவுதீன், 2012 இல் கே. என். டீன், 2013 இல் கே. என். டீன், 2014 இல் எம். டி. தாஹ்சிம், 2015 இல் சாதிக் எம். சலீம், 2016 இல் சாதிக் எம். சலீம், 2017 இல் எம். தௌபிக் சுபைர், 2017 இல் எம். என் எம். நபீல், 2018 இல் எம். என். எம். நபீல், 2019 இல் எம். எம். அப்துல் வஹாப், 2020 -2021, 2021-2022 சஹீட். எம். ரிஸ்மி.

வெள்ளி விழாவும் பொன் விழாவும் வெகு விமர்சயையாக கொண்டாடப்பட்டுள்ளது. பவள விழாவும் கொரோனா தொற்றுக் கால கட்டத்திலும் கூட அதற்கான சிறப்பு இலட்சனை வெளியிட்டோம். அத்துடன் மேலும் 70 வது வருடத்தை சிறப்பிக்கும் வகையில் கொவிட் 19 கொரோனா தொற்று சார்ந்த விழிப்புணர்வுட்டும் கலண்டர் ஒன்றையும் வெளியிட்டோம்.

**கேள்வி:** தேசிய மாநாட்டிற்கு பெருமை சேர்க்கும் முகமாக கௌரவிப்பு நிகழ்வுகளை நடத்தும் நீங்கள் அது பற்றி கூற முடியுமா?

**கேள்வி: பதில்:** நிச்சயமாக நாங்கள் ஒவ்வொரு வருடாந்த பொதுக் கூட்டத்திலும் சிறப்பாக இயங்கும் கிளைகளை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக தேசிய மட்டத்தில் அவர்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் விருதுகள் வழங்கி கௌரவித்து வருகின்றோம். தேசிய மட்டத்தில் நாட்டுக்கும் சமூகத்திற்கும் பங்களிப்பு நல்கியவர்களை ‘வை. ஆளுமையாளர்’ விருது வழங்கப்படும்.

இது சகல இன மக்களுக்கும் வழங்கப்படும். நீதியரசர் வீரமந்திரி, கலாநிதி ஏ. எம். ஏ. சுக்ரி உள்ளிட்ட நீண்ட பெயர் பட்டியலொன்றே உள்ளது. காலத்திற்கு காலம் தேசிய மட்டத்தில் தம் ஆளுமைகளை பதிவு செய்தவர்களை அடையாளப்படுத்தி நாங்கள் கௌரவித்து வருகின்றோம்.

மேலும் இந்த விசேட விருது களை நாட்டுக்கும் சமூகத்திற்கும் பங்காற்றக் கூடியவர்களை இனங் கண்டு அவர்களை ஊக்குவிப்பதன் முக்கிய நோக்கம் யாராக இருந்தாலும் சரி உயிரோடு வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்படுதல் சிறப்புடைய தாகும். அந்த வகையில் ஒவ்வொரு மாநாட்டிலும் விருது வழங்கி கௌர வித்து வருகின்றோம். .

அதாவது விசேட அதிரடிப் படையின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லத்தீப், முன்னாள் வெளிநாட்டுத் தூதுவர் ஜாவிட் யூசுப், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எம். எம். நாஜிம், அரச நிர்வாகத் துறையில்

உயர் நிலையிலுள்ள பிரமுகர்களான எம். ஐ. அமீர், எம். ஐ. எம். ரபீக், ஏ. எல். எம். சலீம், மருதூர் ஏ. மஜீத், தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, கதீஜா பவுண்டேசன் தேசமானிய எம். எஸ்.எச் முஹமட், நளீமியா கலாபீடத்தின் பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அகார் முஹமட், கருணாரத்ன ஹேரத், மாதுலுவாவே சோபித மாநாயகர் தேரர், சிராஸ் நூர்தீன், மைத்திரி குனரட்ன, ஸம் ஸம் இரத்தினக் கல் நிறுவனத்தின் இயக்குனர் தொழிலதிபர் இஸட் ஏ எம். எம். ரிபாய், சிரேஷ்ட ஊடகவியலாளர் லத்தீப் பாரூக், இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் இஸட் எல். எம். முஹமட், இல்லியாஸ் அப்துல் கரீம், சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, ஜென்சிலா மஜீத், ஜெஸீமா இஸ்மாயீல், பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், உயர் நீதி மன்ற நீதிபதி சலீம் மர்சூப், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் ரிஸ்வி முப்தி உள்ளிட்ட மிகப் பெரிய பிரபல்யங்கள் வாழும் போதே வாழ்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது முக்கிய அம்சமாகும்.

**கேள்வி:** இத்தகைய நாளில் நீங்கள் விசேடமாக கூற விரும்புவது என்ன?

**பதில்:** இன்று வை. எம். எம். ஏ. பேரவை முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் பிரபல்யமான அமைப்பாகும். அதிகளவு முஸ்லிம் வாலிபர்கள் இவ்வமைப்பில் இணைந்து கொண்டு பணியாற்ற விரும்புகின்றனர். இந்த வாலிபர்களுக்கு காத்திரமான வழி காட்டலைச் செய்ய வேண்டிய பொறுப்பு அனுபவமிக்க மூத்த வை. எம். எம். ஏ. அங்கத்தவர்களுக்கு இருக்கிறது. புதிதாக உருவாகும் கிளைகளில் வாலிபர்களுடன் அனுபமுள்ள வயோதிபர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். தற்போது நாடளாவிய ரீதியில் இவ்வமைப்பு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. இது உண்மையிலேயே இவ்வமைப்பினுடைய எழுச்சியைக் எடுத்துக் காட்ட கூடியதாக இருக்கின்றது என்று குறிப்பிடலாம்.

அதேவேளையில் பல்வேறு சிவில் அமைப்புக்கள் உள்ளன. எனினும் அவர்கள் பிரிந்து பல்வேறு துறை சார்ந்த நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்புக்கள் எல்லாம் ஒன்றுபட்டு செயற்படுவார்களாயின் ஒரு அமைப்பு செய்யும் பணிகளுக்கு இன்னுமொருவடைய ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும். குறிப்பாக ஓர் அமைப்பு ஒரு விடயத்தில் முன்னணி மிக்கவராக இருக்கலாம். அவர்களுடைய பணிகளுக்கு ஏனைய அமைப்பு சார்ந்தவர்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

அடுத்து முக்கியமாக நாங்கள் எந்தவொரு விடயம் செய்யப் போனாலும் எங்களுடைய உயிர் மூச்சாக இருப்பவர்கள் தனவந்தர்கள். வியாபார சமூகம் ஆகும். நாங்கள் அவர்களை எப்பொழுதும் கண்ணி

யத்துடன் வைத்துக் கொள்ள வேண்டும். எமது சமூக நிறுவன செயற்பாடுகளை ஊக்குவிப்பவர்களாகவும் நாங்கள் எழுந்து நிற்பதற்கும் எமது பாரங்களை சுமக்கக் கூடிய பெரும் தூண்களாக இருப்பவர்கள் வியாபார சமூகம் ஆகும். இந்ந நாளில் ஞாபகப்படுத்துவது மிக மிக அவசியமாகும்.

அதேவேளை துறை சார்ந்த புத்திஜீவிகள், வெவ்வேறு திசைகளில் இருந்து செயற்படுகின்றனர். இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற் படுதல் வேண்டும். சில சிவில் முஸ்லிம் சமூக அமைப்புக்களும் பிரிந்து செயற் படுகின்றனர். சிலர் அமைப்புக்களின் திட்டங்களைத் தீட்டுவதில் முதன்மை பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் அத் திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள். சிலர் திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவார்கள். ஆனால் அவர்களுக்கு திட்டங்களைத் தீட்ட முடியாது. எனவே இவர்கள் எல்லோரும் ஓர் அமைப்பாக சேர்ந்து இயங்குபவர்களாயின் இந்த நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெரிய தொரு சேவையைச் செய்த ஆளுமைப் பண்புகளைப் பெற்றவர்களாக உருவாக முடியும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும்.

எமது முன்னோர்கள் கடந்த காலங்களில் எவ்வாறு ஏனைய சமூகங்களுடன் ஒன்றுபட்டு செயற் பட்டு வெற்றி இலக்குகளை அடைந்தார் களோ, பெரும்பான்மை சமூகத்தோடு எவ்வாறு இணைந்து பயணித்தார் களோ அதைப்போன்று பயணிக்க வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறை யினர்களே இந்த நாட்டை பொறுப் பெடுக்க வேண்டியவர்களாக இருக்கின் றார்கள். நாங்கள் எமது தலைமைத் துவப் பண்புகளைப் பொது நோக்குடன் விட்டுக் கொடுத்துச் செயலாற்ற வேண்டும். எங்கெங்கெல்லாம் துறை சார்ந்த வாலிபர்கள் முன் வருகின்றார் களோ அவர்களுக்கு முன்னுரிமை யளித்து அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது அனுபங்களை அவர்களுக்கு பகிர்ந்தளித்து மாற்றம் பெறச் செய்ய வேண்டும். மாறாக அவர்களுடைய இடத்தை நாங்கள் பிடித்துக் கொண்டு அவர்கள் பின் வாங்கும் நிலைமைக்கு நாங்கள் செல்லக் கூடாது. முடியுமான வரை யிலும் ஒவ்வொரு கிராம மட்டத்திலும் மாவட்டத்திலும் வாலிபர்களது எதிர் கால சவால்களை எதிர்கொள்வதற்கு அவர்களை தயார்படுத்துகின்ற வேலையை ஒவ்வொரு அமைப்புக் களும் முன்னெடுத்துச் செல்வது ஆரோக்கியமான சமூக எழுச்சிக்கு வித்திட்டதாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

தினகரன்
20-11-2021

# பெண்களை வலுவூட்டும் செயற்பாடுகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவையின் சகோதர அமைப்பான வை.டப்ளியூ.எம்.ஏ. இன் அனுசரணையுடன் நுவரெலியா வை.எம்.எம்.ஏ. இன் ஏற்பாட்டில் நுவரெலியா வஜிரபுர பிரதேசத்தில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல், புலுஎல சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் 500 பேருக்கும் மேல் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 350 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நுவரெலியா, ஹாவாஎலிய பள்ளிவாசலின் மேல் மாடியில் தையல் கலை சுயதொழில் பயிற்சி நிலைய மாணவிகளின் தையல் கலைக் கைப்பணிக் கண்காட்சியைத் திறந்து வைத்தல், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் ஜனாஸா குளிப்பாட்டும் அறைக்கான மின் இயந்திர உபகரணம் கையளித்தல், பொரகஸ் பள்ளிவாசல் ஒன்றுக்கு ஜனாஸாவை தூக்கிச் செல்லும் “சந்துக்கு” கையளித்தல் மற்றும் கணவனை இழந்த வறிய விதவைத் தாய்மார்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்புக்காக சமையல் பாத்திர இயந்திர உபகரணங்கள் வழங்கி வைத்தல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் வை. டப்ளியூ. எம். ஏ இன் தலைவி பவாசா தாஹா தலைமையில் கொழும்பில் உள்ள வை. டப்ளியூ. எம். ஏ இன் குழுமத்திலுள்ள சகோதரிகளும் கலந்து கொண்டனர். இக்குழுமத்திலுள்ள சகல சகோதரிகளும் மகளிர் தின நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தனர். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவரும் மலேசியா இலங்கை வர்த்தக நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் காலீத் பாரூக் மற்றும் நுவரெலியா வை. எம். எம். ஏ. பேரவையின் மாவட்டப் பணிப்பாளர் ரஹீம், பள்ளிவாசல் தலைவர், நுவரெலியா மாவட்ட வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர்கள் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம் ரிஸ்மி உரையாற்றும் போது,

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் அளவில் வலுசேர்ப்பவர்களாக பெண்கள் திகழ்கின்றார்கள். இன்று இலங்கைக்கு அதிகளவு அன்னிய

செலாவணியை ஈட்டித் தரும் இரு வர்த்துகத்துறைகளில் பெண்களின் பங்களிப்பு அளப்பரிவை. அவைகளில் ஒன்று ஆடைத் தொழில் வர்த்தகமாக இருந்தாலும் சரி மற்றையது தேயிலைத் தொழில் வர்த்தகமாக இருந்தாலும் சரி முன்னணியில் வகிப்பது இந்த இரு வர்த்தக துறைகளுமாகும். இதற்காகவே பெண்களின் பலமும் சக்தியும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்ல வீடுகளில் சிறு வணிகத் துறையில் வர்த்தக உற்பத்திகளைத் தொடங்கி வெற்றிகரமான முறையில் செயற்படுவோர்களாக பெண்கள் உள்ளனர். இதன் மூலம் குடும்பம் பொருளாதார நெருக்கடியை ஈடு செய்வதற்கு பெரும் பங்காளிகளாவும் மற்றும் உண்மையான வெற்றிக்கு பெண்கள் நல்ல மன ஆரோக்கிய மிக்கவர்களாகவும் விளங்குகின்றார்கள். சர்வதேச மகளிர் தினம் என்பது பெண்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடும் உலகளாவிய தினமாகும். பெண்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைக்கான அழைப்பாக இந்நாள் குறித்து நிற்கிறது. அகில இலங்கை வை.டப்ளியூ எம். ஏ. அமைப்பினர் இந்நிகழ்வை கௌரவப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து மிகவும் சிரமத்திற்கு மத்தியில் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளார்கள். இவ்வமைப்பின் வரவானது ஒரு இக்கட்டான கால கட்டத்தில் வறிய மக்களது சில தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட முடியும். வை. டப்ளியூ எம். ஏ. அமைப்பின் தலைவி பவாசா தாஹா தலைமையில் வை. டப்ளியூ எம். ஏ. குழுமத்தினர் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களது நலனையும் சமூக நலனைக் கருத்திற் கொண்டு தமது முதிர்ந்த காலத்திலும் தமது பிள்ளைகள் தாய்மார்கள் சகோதரர்கள் எல்லோரும் ஒரு குழுமமாக வந்து மனிதாபிமான காருண்ய உதவிகளைப் பார்க்கின்ற போது மனதிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழ், சிங்கள கிறிஸ்தவ, முஸ்லிம்களென அதிகமான மக்கள் வருகை தந்துள்ளார்கள். இந்த நான்கு சமூகத்தினர்கள் வருகை தந்திருப்பது மனதிற்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இதனை நாங்கள் பெரு வெற்றியாக கருதுகின்றோம். அந்த வகையில் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் கொடுத்து வைத்தவர்கள். அதேவேளையில் இப்பிரசேத்தை தெரிவு செய்து இவ்வுதவியை செய்ய முன்வந்த எங்களது வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பின் தலைவி பவசா தஹா மற்றும் அக்குழுமத்தினரோடு வருகை தந்த சசோதரிகள் மற்றும் முன்னாள் வை. எம். எம். ஏ. பேரவையின்

தேசியத் தலைவர் காலீத் பாருக் மற்றும் இந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட நுவரெலியா வை. எம். எம். ஏ. கிளையினர்களுக்கு விசேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

நுவரெலியா, வஜிரபுரவில் இடம் பெறும் கண் பரிசோதனை முகாமில் பல்லின மக்கள் மிக நீண்ட வரிசையில் ஆர்வத்தோடு காத்திருந்து கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உடன் இலவச மூக்குக் கண்ணாடிகள் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு முக்கிய அம்சமாகும். இன்றைய கால கட்டத்தில் ஏனைய மாவட்டங்களை தெரிவு செய்து நிவாரண உதவிகள் வழங்குவதை விட நுவரெலியா மாவட்டத்திற்கு உதவி வழங்குவது உயர்ந்தது. இம்முறை வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பு நுவரெலியா மாவட்டத்தை தெரிவு செய்து இப்பிரதேசத்திலுள்ள மக்களின் நலன்கருதி செயற்பட முனைந்தது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். சுயதொழில் வாய்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சமையல் உபரகணங்கள் வழங்குதல் என்பது பாராட்டப்பட வேண்டியது.

வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பால் வழங்கி வைக்கும் உபகரணங்களின் மூலம் உங்கள் வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டு கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் பகிர்ந்தளிக்கின்றார்கள். இதற்கு பங்களிப்புச் செய்த நுவரெலிய வை. எம். எம். ஏ வுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம். எங்களது சகோதர அமைப்பான வை. டப்ளியூ. எம். ஏ இன் தலைவிக்குப் பலமாக வை. எம். எம். ஏ. அங்கத்தவர்கள் செயலாற்றுகின்றனர். இதுதான் அவ்வமைப்பின் பலம். அதே நேரத்தில் அவருடைய தலைமை ஆளுமை தான் அடுத்த பலம். இன்று பெண்கள் ஆண்களை விட சனத் தொகையில் அதிகரித்துள்ளார்கள். இலங்கையிலும் 52 விகிதம் பெண்களாவர். ஆண்கள் 48 விகிதம் உள்ளனர். சமகாலத்தில் சுமார் 2 தசாப்த காலங்களாக இலங்கையில் மட்டுமல்ல இந்த உலகத்திலும் எல்லாப் பதவிகளிலும் பெண்கள் இருக்கின்றார்கள். இங்கு பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப் படுவதாகத் தவறான கருத்துதொன்று பரப்பப்பட்டு இருக்கிறது. ஆனால், இஸ்லாம் தான் பெண்களுக்கான உரிமையையும் சுதந்திரத்தையும் வழங்கிய ஒரு மார்க்கம். ஆகவே, பெண்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைக்கவும் அவர்களை இருந்து பாதுகாகவேண்டிய முழுப்பொறுப்பும் ஆண்களுக்கு இருக்கிறது. குறிப்பாக உலமாக்களாக இருக்கலாம், மார்க்கத் தலைவர்களாக இருக்கலாம், ஒட்டு மொத்த ஆண்களும் பெண்களை மதித்து என்னுடைய தாய்.

என்னுடைய மனைவி. என்னுடைய மகள். இந்த உலகில் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் மிகப் பொறுப்பாக இருப்பவர் தாய்தான். இவர்களோடு சேர்ந்து இவர்களின் சுகதுக்கங்களில் எல்லா வகையிலும் பங்களிப்புச் செய்ய கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில் வை. டப்ளியூ. எம். ஏ. தன்னுடைய சக சகோதரிகளுக்கு அவர்களின் கஷ்டத்தை உணர்ந்து குறிப்பாக விதவைகளுக்கு அவர்களின் வாழ்க்கையை வலுவூட்டுவதற்காக இவ்வாறான உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இவை எங்களுக்கு பெரும் பலமாகும்.

பொதுவாக நாடளாவிய ரீதியில் நான் பல இடங்களுக்குச் சென்றிருக் கின்றேன். அங்கு ஒரு அமைப்பின் ஊடாக உணவுக்காக ஏதாவது ஒரு தொகை உலருணப் பொதிகள் வழங்குவார்கள். அன்றாட செலவுகளுக்கு ஏதாவது உதவிகள் செய்வார்கள். அவர்கள் உனக்கு மீனைக் கொடுக்கின்றார்கள். ஆனால், அவர்கள் மீனைப் பிடிப்பதற்கு வலையைக் கொடுப்பதில்லை. இவர்களுக்கு தொழிலை ஆரம்பிப்பதற்கான அதே செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றன. இந்த உலகத்திற்கு நாங்கள் அனைவரும் அனுப்பப்படடது ஏதோ உதவி செய்து வாழ்ந்து விட்டுச் செல்வதற்காக அல்ல சமூகத் தொண்டாக “ஸகாத்” என்னும் ஏழை வரி ஏன் கட்டாயப்படுத்தியுள்ளது. அடுத்தவரின் கஷ்டத்திற்கு எங்களுடைய ஏழை வரி அவசியமாகும். எமது வருமானத்தில் இரண்டரை விகிதம் கட்டாயம் வழங்க வேண்டும். அதே போல ஒன்றுதான் எங்களிடம் இருக்க வேண்டிய சகல வளங்களுக்கு ஸகாத் கடமையாக்கப் பட்டுள்ளது. பல்வேறுபட்ட தொழில் நுட்ப அறிவாக இருக்கலாம் அல்லது கல்வி நடவடிக்கையாக இருக்கலாம் . எங்களுக்கு இருக்கக் கூடிய சகல வளங்களையும் நாங்கள் பகிர்ந்து கொடுக்க கடமைப் பட்டிருக்கின்றோம். அந்த வகையிலேதான் எங்களது சகோதர அமைப்பான வை. டப்ளியூ. எம். ஏ. சகோதரிகளிடம் இருக்கக் கூடிய வளங்களைப் பகிர்ந்து கொள்கின்றார் கள். முழு இலங்கையிலும் சகல துறைகளிலும் இவர்களது செயற்பாடு ஒரு பலமாக அமையும். நாங்கள் சமாந்தரமாக செயற்படுவதற்கு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் செயற்பாடு களுக்கு ஒரு தூணாக இருந்து செயற்படு கின்றார்கள். எதிர்காலத்தில் இதை விட மேலாக செயற்படுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். .

எங்கள் அமைப்பு கடந்த தேசிய மாநாட்டில் இரு பெண்களை முதன்மைப் படுத்தி சாதனையாளர்களாக விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளோம். அந்த வகையில் வை. டப்ளியூ எம். ஏ அமைப்பின் தலைவி பவாசா தாஹா மற்றும் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம்

சேவை உதவிப் பணிப்பாளர் ரினோசியா ஆகியோரரைப் பாராட்டி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பின் உழைப்பும் உந்து சக்தியும்தான் இந்த இடத்தில் நாம் கலந்து கொள்ள வழிகோலியது. அந்த வகையில் எதிர்காலத்தில் மென்மேலும் இது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வை. டப்ளியூ எம். ஏ. அமைப்பின் தலைவி பவாசா தாஹா உரையாற்றும் போது, “சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நுவரெலியாவுக்கு வந்தமை யானது மலையக மக்களோடு சேர்ந்து கொண்டாடுவதற்காகும். இங்கு சிங்கள, தமிழ் , முஸ்லிம், கிறிஸ்தவம் எனப் பல்லின மக்கள் இன, மத வேறுபாடுகளின்றி வருகை தந்துள்ளார்கள். இதைப் பார்க்கும் போது மிக்க சந்தோசமாக இருக்கிறது. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண் சத்திர சிகிச்சை முகாம் நடாத்தி, இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைப்பதற்காகவே வருகை தந்தோம். இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றி இதனை வழங்கி வருகின்றோம். எத்தொழிலுக்கும் இல்லா சிறப்புரிமை சமையல் தொழிலுக்கு இருக்கிறது. சிறிய அளவிலான முதலீட்டில் எளிதில் தொடங்கலாம். வீசிய விதையை போல் உயர்ந்து வளரும். பெரியளவில் முதல் போட்டு நஷ்டமாகாமல் சிறியளவில் சுதந்திரமாகச் செய்யும் தொழில் சமையல் தொழிலாகும். இத்தொழிலை திறன்பட செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் இந்த உபகரணங்களை உங்களுக்கு வழங்கி யிருக்கின்றோம்

.

விதவைத் தாய்மார்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக நாங்கள் தாய்மார்கள் சேர்ந்து உன்னத நோக்கத்திற்காக இந்த சமையல் இயந்திரங்களை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளோம். எங்களைப் போன்று நீங்கள் ஒரு சாதனையாளராக மாறி, உங்களைப் போல் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்ய முன் வர வேண்டும். அத்தோடு இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி பல வேலைகளுக்கு மத்தியிலும் இந் நிகழ்ச்சிகளில் அனைத்திலும் கலந்து கொண்டு பெருமைபடுத்தினார். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தினகரன்

2022 - 03 - 08

# சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் பணி

**இலங்கையில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் போதைக்கு அடிமையானவர்களை விடுவிப்பதில் அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் செயற்பாடு நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தலைவர்களாக இருந்த அனைவரும் இச்செயற்பாட்டுக்கு பக்கபலமாக செயற்பட்டுள்ளார்கள் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தினகரனுக்கு தெரிவித்தார். தினகரனுடன் நடத்திய கலந்துரை யாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடரும் அவரின் கலந்துரையாடலில்,**

**கேள்வி:** இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான போதைப் பொருள் பயன்பாட்டாளர்கள் உள்ளதாக அண்மைய ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதில் உங்களது அமைப்பினரின் பங்களிப்புக்கள் எவையேனும் உள்ளதா?

**பதில் :**எமது அமைப்பு பன்னெடுங் காலமாக போதைக்கு அடிமையான வர்களை விடுவிப்பதில் முன்னெச்சரிக் கையிலான நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றது. அதற்கான பணிகளை நிறையவே செய்துள்ளோம் என்று மனதிருப்தியுடன் கூறலாம்.

**கேள்வி:** உங்களது அமைப்பு நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. எப்போது இதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன? என்று கூற முடியுமா?

**பதில்:** ஹெரோயின் போதைப் பொருள் பாவனையாளர்களை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் முதலில் எங்கள் முன்னாள் தலைவர்களில் ஒருவரான பத்ரி ஹாசிம் அவர்களே ஈடுபட்டார்கள். அவர் அண்மையில் 94 வயதில் காலமானார். அவர் இறுதிக் காலம் வரையிலும் எம்மோடு இணைந்து இயங்கியவர். அதற்குப் பின்னர் 1990 களில் முன்னாள் தலைவர்களில் ஒருவரான இப்ழால் அப்துல்லா பொறுப்பேற்றார். அவருடைய கால கட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப் பட்டது என்று கூறலாம். இவர்தான் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் உள்ள 'பொங்கோடா' என்ற பெயரில் இயங்கும் அமைப்பின் தலைவராக 2007 ஆம் ஆண்டில் இருந்து பதவி வகிக்கின் றார். அவர் தலைவரான பின்னர் தான் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினால் (யூ. என். ஓ. டி.

சி) ஒரு வேலைத் திட்டம் முன்வைக்கப் பட்டது. அன்று முதல் இன்று வரையிலும் கண்டி, மஹிய்யாவையைச் சேர்ந்த நிசார் எம். நிப்ராஸ் அதனைப் பொறுப்பெடுத்து உலகளாவிய நிதி நிறுவனத்தின் இணைப் பதிகாரியாக செயற்பட்டு வருகின்றார். இவர் சி. சி. எம். எஸ். எல். தேசிய ஒருங்கிணைப்பு பொறிமுறையின் உறுப்பினரும், எமது வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய உதவிச் செயலாளரு மாவார். இத்துறையில் அவர் சிறந்த அனுபவமும் திறனும் வாய்க்கப் பெற்றவர். அவருடைய வழிகாட்டலுடன் இது தொடர்பில் பல்வேறுபட்ட பரிமாண மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சேர்ந்து இயங்கக் கூடிய அளவுக்கு வை. எம்.எம். ஏ. பேரவை வளர்ச்சி பெற்றுள்ளது.

**கேள்வி :** 1984 களில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் 1987 -01 -26 களில் பிரதான சிவில் சமூக அமைப்புகள் ஒன்று சேர்ந்து, பொங்கோடா என்ற பெயரில் ஒரு குடையின் கீழ் போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கான ஒரு உப குழு ஆரம்பிக்கப்பட்டது. அந்த உப குழுவில் எமது வை. எம். எம். ஏ. அமைப்பும் இணைந்து கொண்டது. அந்த வகையில் சமூகத்திற்கு மத்தியில் அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்காக நீங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் எவை?

**பதில் :** நாங்கள் சிநேகபூர்வமான முறையில் அவர்களை அணுகி சமூகமயப் படுத்தலுக்கான ஒரு திட்டத்தை வகுத்தோம். முதலாவது சமூக மட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோடும். இரண்டாவது பாடசாலை மட்டத்தில் முன்னெடுத்தோம். இதனை நாடு முழுக்க சமூக மட்டத்திலும் மற்றும் பாடசாலை மட்டத்திலும் முன்னெடுத்துச் செல்வதற்கு வை. எம். எம். ஏ. கிளைகள் உதவியாக இருந்தன. எங்களுடைய எல்லாக் கிளைகளும் இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தலை வழங்கி அதன் மூலம் கணிசமானளவு வேலைத் திட்டத்தை நாங்கள் சீரான முறையில் முன்னெடுத் தோம். விசேடமாக அமைப்பின் தலைமை யகத்திலேயே அதிகளவு பயிற்சி செயலமர் வுகளை செய்தோம். இது தொடர்பில் நாங்கள் புத்தகம் ஒன்றையும் வெளியிட்டுள்ளோம். “இஸ்லாம் தஹமய மத்தட்ட தித்த” என்ற சிங்கள நூலாகும். இஸ்லாம் போதைப் பொருளைத் தடுக்கின்ற அம்சங்களை வலியுறுத்தி “போதைப் பொருளுக்கு முற்றுப் புள்ளி” எனும் பெயரில் எழுதப்பட்ட நூலாகும். அன்று பிரதமராக இருந்த டி. எம். ஜயரத்ன பிரதம அதிதியாக கலந்து நூலை வெளியிட்டு வைத்தார்.

**கேள்வி:** இதற்கான நிதி உதவிகளை எங்கு இருந்து பெற்றுக்கொண்டீர்கள்?

**பதில்:** இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 2007 இல் ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய நிதியத்தின் ஊடாக போதை ஒழிப்பு குற்றத் தடுப்பு பிரிவினால் பொங்கோடாவுக்கு வழங்கப்பட்டது. பொங்கோடா மூலமாக வை. எம்.எம். ஏ. அமைப்புக்கு இந்த நிதி கிடைக்கப் பெற்றது.

**கேள்வி:** நீங்கள் எவ்வாறு உங்கள் வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றீர்கள்?

**பதில்:** போதைப் பொருள் பாவனையாளர் களைச் சந்தித்து போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபடச் செய்துள்ளோம். முதல் ஆய்வு அறிக்கையின் படி கண்டி மாவட்டத்தில் 650 பேரை அடையாளம் கண்டு கொண்டோம். கண்டி மாவட்டத்தில் 1500 -1800 பேர் அளவில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் இருக்கின்றனர் என்று ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவரையும் அவர்களது சிநேகிதர்கள் மூலமாக ஒருங்கிணைத்து கொண்டோம். அவர்கள் போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபடுவதற்கு புனர்வாழ்வளிப்பதற்கு எவ்வாறான திட்டம் ஒன்றைச் செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கும் தருணத்திலேயே யூ என். உதவி கிடைத்தது. இந்தியாவுக்குச் சென்று குறித்த விடயம் தொடர்பிலான பயிற்சியினை பெற்றுக் கொள்ளுவதற்காக நிசார் எம். நிப்ராஸ் அனுப்பப்பட்டார். அங்கு எல். சி .சி முகாம், லோகோஸ் கொமினிட்டி முகாம். 15 நாளைக்கு போதைக்கு அடிமையானவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு தேவையான உளவளம் மற்றும் அவர்களுக்கு தேவையான படிப்பினையூட்டக் கூடிய கருத்துக்களை வழங்கி அவர்களை போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுவிப்பது எப்படி என்பது பற்றி அங்கு கற்றுக் கொண்டார். நிப்ராஸ் சுமார் 10 பயிற்சி முறைகளை இந்தியாவில் இருந்து கற்றுக் கொண்டு வந்தார்.

பின்னர், கண்டி வை. எம். எம். ஏ. இன் புனர்வாழ்வு மத்திய நிலையம் கண்டி வை. எம். எம். ஏ இல் அமைக்கப்பட்டது. போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபடுவதற்கு வளவாளர்களை நாங்கள் வைத்திருந்தோம். அவர்களுக்கு என்ன பிரச்சினைகள் இருக்கிறவென இனங்கண்டு அவர்களுக்கு தேவையான நடவடிக்கையை எடுக்கின்றனர். முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் முதலியவர்களுக்கு போதைப் பொருள் பாவனையால் அவர்களது குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறி அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டோம். பிரதேச செயலாளர், அரச உத்தியோகஸ்தர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை எவ்வாறு விடுவிப்பது சம்பந்தமாக அவர்களுடன் கலந்துரையாடி அவர்களது உதவியினையும்

பெற்று முயற்சிகளை முன்னெடுத்தோம். புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கு, சிறு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் முயற்சிகளையும் செய்து கொடுத்துள்ளோம். குறிப்பட்ட 06 வருடத்திற்குள் 680 பேரை இனங்கண்டு விட்டோம். அதில் 280 பேருக்கு அவர்களது குடும்பத்தினர்கள் புனர்வாழ்வு அளித்துத் தருமாறு எங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அவர்களது குடும்ப ஆதரவும் எங்களுக்கு இருந்தது. இந்த 680 பேரில் எங்களது வை. எம். எம். ஏ. மத்திய நிலையத்தில் 105 பேருக்கு புனர்வாழ்வளித் துள்ளோம். கலஹாவில் லக்சுமிவத்த என்ற இடத்தில் 15 பேர் வரை தெரிவு செய்து 15 நாள் வதிவிட செயலமர்வு ஒன்றை செய்தோம்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 25 வயதுக்கு உட்பட்ட 04 பேர் வரை சுயதொழில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டு தொழில் வாய்ப்புக்கான உரிய இடங்களை தொடர்பு படுத்திக் கொடுத்திருக்கின்றோம். இதில், 34 பேர் போதைப் பொருள் பாவனையில் இருந்து முற்றாக நீங்கியுள் ளார்கள் என்பதை சந்தோசத்துடன் கூறிக் கொள்கிறேன்.

**கேள்வி :** நீங்கள் உலகளாவிய நிதியம் மூலம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பற்றி?

**பதில் :** 2013 ஆம் ஆண்டில் இருந்து எச். ஐ. வி. எயிட்ஸ் தொடர்பில் உலகளாவிய நிதி நிதியம் மூலமாக பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பணிகள் தொடர்பில் சிறு விளக்கம்: இதற்கென பெமிலி பெலேனிங் ஆசோசியேசன் மற்றும் சுகாதார அமைச்சும் இணைந்து உதவின.

இந்த செயற்றிட்டத்தையும் முன்னெடுக்க கண்டி மாவட்டத்தை மையப் படுத்தி வை. எம்.எம்.ஏ. அமைப்புக்கே வழங்கியுள்ளனர். இந்த நிகழ்ச்சித் திட்டமும் நிசார் எம். நிப்ராஸின் வழிகாட்டலுடன் தான் மேற்கொள்ளப்படுகிறது. கண்டி மாவட்டத் தில் போதைப் பொருள் பாவனையார்களை எயிட்ஸிலிருந்து பாதுகாப்பதற்காக 2013 இல் இருந்து 2021 வரை நாங்கள் வேலை செய்து வருகின்றோம். 9 வருடங்களாக செய்கின்றோம். அடையாளப்படுத்தப்பட்ட போதைப் பொருள் பாவனையாளர் களிடமிருந்து அவர்களை எப்படி பாதுகாப்பது தொடர்பாக வழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் செய்தோம். இச் சந்தர்ப்பத்தில் அவர்களிடத்தில் அதன் அறிகுறி பற்றி தெரிவித்தால் அவர்களுடைய குருதி பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலைக்கு பரிந்துரை செய்வோம். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க 20 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. போதைப் பாவனையில் இருந்து விடுபட்ட வர்கள் தான் எங்களது இந்த அணியின் கீழ் இயங்குகின்றனர். அந்த 20 பேருக்கு

முதலில் பயிற்சி வழங்கினோம். அது 03 நாள் பயிற்சியாகும்.

எச்.ஐ. வி. என்றால் என்ன? அது எப்படி பரவுகிறது. எதன் மூலமாக பரவுகிறது. அது சம்பந்தமாக வைத்தியர் களை அழைத்து வந்து முதலில் 05 நாள் பயிற்சிப் பட்டறை ஒன்றைச் செய்தோம். இதில் 20 பேரை திறன் வாய்ந்த கல்வியாளர்கள் என்ற நிலைக்கு கொண்டு வந்தோம். அவர்கள் ஒவ்வொரு வரும் அவர்களுடன் இருக்கும் நண்பர்கள் 30 பேருக்கு தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறாயின் 600 பேருக்கு எச். ஐ. வி சம்பந்தமாக சம்பூரணமான தகவல்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்துக்கு அக்குறணையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி லரீப் பொறுப்பதிகாரியாக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

**கேள்வி:** இதன் மூலம் உங்களுக்கு பயன் கிடைத்துள்ளதா?

**பதில்:** ஆம். இதை நாங்கள் திறன்படச் செய்தோம். எங்களது பணியைப் பார்த்து கண்டி மாவட்டத்தை மட்டும் அல்ல மாத்தளை மாவட்டத்தையும் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அந்த வகையில் மாத்தளை மாவட்டத்தில் 2016 முதல் 2018 வரையிலும் நடவடிக்கைகளை மேற் கொண்டோம். நாங்கள் அங்கு வேறு ஒரு இணைப்பதிகாரி ஒருவரை நியமனம் செய்து இரு மாவட்டங்களிலும் இணைத்துச் செய்தோம். இதன் மூலம் மேலதிகமாக 600 பேர் கண்டு பிடிக்கப்பட்டனர். இன்னும் கண்டியில் 800 பேர் அளவில் அடையாளம் காணப்பட்டனர். மாத்தளையில் 400 பேர் அளவில் அடையாளம் காணப்பட்டனர். நாங்கள் மாத்தளையிலும் 10 திறன்வாய்ந்த நபர்களை தெரிவு செய்து பயிற்சிகள் வழங்கினோம். இந்த நபர்களுக்கு விசேட கொடுப்பனவு உதவிகள் செய்வோம். அவர்கள் தொண்டர் அடிப்படையில் சேவை செய்தார்கள். அவர்கள் எங்களது அலுவலகம் வராமல் தத்தம் வீடுகளில் இருந்து சேவை செய்யக் கூடியவர்கள். நாங்கள் அவர்களை கண்காணித்து அவர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வோம். மாத்தளையில் 10 பேரும் கண்டியில் 20 பேரும் நன்கு பயிற்றப்பட்ட கள உத்தியோகஸ்தர்கள் பணியாற்றுகின் றார்கள். மாத்தளையைப் பொறுத்த வரையில் ஒரு நபர் 30 நபர்களை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வரும் போது 400 பேர் வரை இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். மூன்று வருடம் மாத்தளை மாவட்டத்தில் வேலை செய்தோம்.

**கேள்வி :** ஒரு சங்கிலித் தொடராக ஒன்றோடு ஒன்றுபட்டதாக சமூகப் பணிகளை மேற்கொள்ளும் நீங்கள் இதனுடன் தொடர்பு பட்ட வேறு பணிகள் என்ன மேற்கொள்கின்றீர்கள்?

**பதில் :** அதாவது 2019 இல் இருந்து அடுத்த வேலைத் திட்டமாக, தொழில் ரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்களை அடையாளம் கண்டு புனர்வாழ்வளித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டோம். அவர்களுக்கு எயிட்ஸ் சம்பந்தமாக அதே மாதிரி களப்பணியாளர்கள் 15 பேரை தெரிவு செய்தோம். அவர்கள் அந்த தொழில் புரிபவர்களுடன் முதலில் நெருங்கிப் பழகிப் பேசினார்கள். முதலாவது ஒருவர் இனங்காணப்பட்டார். அவர் மூலமாக பின்னர் இரண்டு பேர் வந்தார்கள். அந்த இரண்டு பேர் மூலமாக மூன்றாவது நபர் வந்தார். இப்படி அவர்களது சங்கிலித் தொடர்புகள் மூலமாக பலரை அடையாளம் கண்டு தெரிவு செய்தோம். அவர்களுக்கு எச். ஐ.வி என்றால் என்ன? அதனால் ஏற்படும் விளைவு பற்றி வைத்தியர்கள், துறை சார்ந்த நிபுணர்கள் ஊடாக பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவர்களுக்கு கண்டி வைத்தியசாலையிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கண்டி மாவட்டத்தில் பாலியல் தொழில் செய்பவர்கள் ஆய்வு அறிக்கையின்படி 1200 பேர் அளவில் உள்ளனர். நாடு முழுவதும் 30000 பேர் வரை உள்ளனர். அதில் நாங்கள் கண்டி மாவட்டத்தில் 800 பேர் அடையாளம் கண்டு எயிட்ஸ் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். அவர்களுக்கு எயிட்ஸ் உள்ளதா? என கண்டு பிடித்து வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றோம்.

**கேள்வி :** இது குறித்த பெண்கள் தொடர்பில் உங்களது கருத்து என்ன?

**பதில் :** உண்மையிலே இவர்கள் மீதான சமூகத்தின் பார்வை வித்தியாசமான பார்வையாகும். ஆனால், அவர்கள் வேறு வழியில்லாமல் தவறான வழியில் சென்று விட்டனர். அவர்களை எயிட்ஸ் இருந்து பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய மறுவாழ்வுக்காகவும் பாடுபட வேண்டும். இவர்களுடைய வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகும். எல்லோரும் போல் தானும் வாழ வேண்டும் என்ற ஏக்கம் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுடைய சோகம் நிறைந்த ரணமான வாழ்க்கையில் இருந்து மீளக் கட்டி எழுப்புகின்ற வேலைத் திட்டங்களை நாங்கள் அயராது செய்து வருகின்றோம்.

**கேள்வி :** நீங்கள் இறுதியாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில் :** முஸ்லிம்களுடைய சனத் தொகையின் விகிதாசாரத்தை விட அதிகமான அளவு போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர்கள் உள்ளனர். அதனால் இதில் இருந்து விடுபட வை. எம். எம். ஏ. பேரவையின் இந்த செயற்பாட்டுக்கு எல்லோரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்

என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகும். கருத்து வேறுபாடுகளை மறந்து உதவி செய்யுங்கள். குறிப்பாக சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் இந்த போதைப்பொருள் பாவனையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அதிலும் எமது முஸ்லிம் சகோதரர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கேள்வி :** உங்கள் அமைப்பினை போல வேறு அமைப்புகள் உள்ளனவா ?

**பதில் :** ஆம் எமது அமைப்பைப் போன்று வேறு அமைப்புக்களும் பல செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புக்களுடன் ஜம்மிய்யதுல் உலமா கைகோர்த்து செயற்பட வேண்டும். இது பற்றி எங்களிடம் ஆலோசனை கூட பெற்றுக் கொள்ள வருவது இல்லை என்பது குறைதான். இப்படி துறை சார்ந்த செயற்பாடு முன்னெடுக்கப்படும் வேளையில் எயிட்ஸ் தொடர்பாகவும் சொற்பொழிவுகள் இடம்பெற வேண்டும். உலமாக்கள் இதனைப் பற்றி பயிற்சிகள் பெற்று முறையாக செய்வார்களாயின் அதிகமானவர்கள் பயனடைவர். இலங்கையில் போதைப் பொருள் பாவனையில் புனர்வாழ்வளிப்பதற்காக 14 நிலையங்கள் உள்ளன. இது அரசாங்கம் மற்றும் ஏனைய சமூகத்திடம் இருக்கிறது. ஆனால் முஸ்லிம் சமூகம் சார்ந்த புனர்வாழ்வு நிலையம் இதுவரையிலும் இல்லை. அதனால் இதற்கு அவுஸ்திரேலியாவில் இருந்து மிஸ்கீன் மூலமாக ஒரு காணியும் கட்டடமும் மினுவாங்கொடைப் பிரதேசத்தில் செய்வதற்காக அனுமதியையும் பெற்றோம்.

ஆனால் அந்த இடம் நீர் வள வசதி இல்லாமை காரணமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை. இறுதியாக பொருத்தமான இடமில்லை என்று அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு மாகாணத்திற்கும் இவ்வாறான நிலையங்கள் உருவாக வேண்டும். ஒருவரை புனர்வாழ்வளித்து வெளியே விடும் போது அவர் மத நம்பிக்கையில்லாதவராக வெளியே வரக் கூடிய வாய்ப்பு அதிகம் இருக்கிறது. இதில் காணப்படும் பயங்கரம் என்னவென்றால் போதைப் பொருளில் இருந்து விடுபட்டு வெளியே வருபவர்கள் மத நம்பிக்கை அற்றவர்களாக வரக்கூடிய வாய்ப்புக் களும் அதிகம் உள்ளன.

2021-07-21 தினகரன்

# கொரோனா தொற்றும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய செயற்பாடும்

**கேள்வி :** நெருக்கடியான கால கட்டத்தில் உலக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமையும். உங்களது சமூக, சிவில் அமைப்பின் பங்களிப்பு எத்தகையது?

**பதில் :** உண்மையிலேயே எமது நாட்டுக்கு மட்டுமல்ல முழு உலகுக்கும் நெருக் கடியான கால கட்டத்தில் மனிதாபிமான உதவிகளைப் புரிவதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புக்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் தேசிய ஒருங்கிணைப்புக்கான பொறிமுறை குழு சி.சி.எம். என்ற அமைப்பு மூலமாக இலங்கை சுகாதார திணைக்களத்தின் கோரிக்கையினை அங்கீகரித்து கொரோனா தொற்றுத் தேவைகளை நிறைவேற்று வதற்காக பரிந்துரை செய்துள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு சுகாதார தேவைகள் கிடைக்கப் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் உலகளாவிய நிதி நிறுவனத்தின் இலங்கைக்கான கொள்கை வகுக்கும் பொறிமுறை சி. சி. எம். என்ற அமைப்பில் வை. எம். எம். ஏ அமைப்பும் முக்கிய உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. அந்த வகையில் இந்த இடத்தில் எங்களது அமைப்பினது பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நான் மிகுந்த சந்தோசத்துடன் சுட்டிக் காட்ட விரும்பு கின்றேன்.

**கேள்வி :** கொரோனா தொற்றினால் முழு நாட்டு மக்களும் பெரும் பாதிப்பில் தவிக்கையில் உங்களது பங்களிப்புகள் பற்றி விளக்க இயலுமா?

**பதில் :** கொரோனா தொற்று டிசம்பர் 2019 களில் தான் வந்தது. முதலாம் அலையில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலப் பகுதியில் தொழில் வாய்ப்பின்றி பாதிக்கப் பட்ட மக்களுக்கு உலருணவு நிவாரணப் பொதிகள் வழங்கி வைத்தோம். இவை நாடளாவிய ரீதியில் எங்களது வை. எம். எம். ஏ கிளைகள் ஊடாக வழங்கி வைப்பட்டன. அத்தோடு வை. எம். எம். ஏ கிளைகள் மூலம் கொரோனா தொற்றுத் தொடர்பிலான விழிப்பூட்டல் பணிகளையும் முன்னெடுத்தோம். ஆரம்ப கால கட்டத்தில் முகக் கவசம் இல்லாத ஒரு நிலை காணப்பட்டது. நாங்கள் எமது ஒவ்வொரு வை. எம். எம். ஏ கிளைகளூடாக தமது வீடுகளிலுள்ள பெண்கள் மூலமாக தலா 50 முகக் கவசங்கள் தைத்து வழங்க வேண்டும் என்றோம். அதுவும் பக்கத்தில்

உள்ள அனைத்து வீடுகளுக்கும் இன, மத பேதமின்றி பகிர்ந்தளித்தல் வேண்டும் என ஒரு வேண்டுகோள் விடுத்தோம். அவர்கள் சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட முகக் கவசங்களை நாடு முழுவதும் தமது கிளைகள் மூலமாக வழங்கி வைத்தார்கள். விசேடமாக இதில் அவர்களுடைய குடும்பப் பெண்களின் பங்களிப்பு மிக முக்கிய மானது. அவர்கள் எந்தவிதமான பண அறவீடுகளுமின்றி முகக் கவசங்களை தைத்துக் கொடுத்தார்கள்

.

**கேள்வி :** வை. எம். எம். ஏ. அமைப்பு எப்பொழுதும் ஒரு தூர நோக்குடன் வித்தியாசமான முறையில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்குடனேயே செயற்பட்டு வரும் அமைப்பு. இம்முறை அவ்வாறு என்ன செய்தீர்கள்?

**பதில் :** நாங்கள் இம்முறை 2021 ஆம் ஆண்டில் யாரும் செய்யாத பணி யொன்றை செய்துள்ளோம். வருடா வருடம் அச்சிடும் கலண்டரை கொரோனா விழிப்புணர்வூட்டல் கலண்டராக அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். அதிலுள்ள காட்சிப் படங்கள் மற்றும் வாசகங்கள் எல்லாம் கொரோனா தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாத்தல் தொடர்பிலான சுகாதார நடை முறைகளை உள்ளடக்கிய அம்சங்களை வெளிப்படுத்தக் கூடிய வடிவமைப்பிலேயே வெளியிட்டுள்ளோம். பொதுவாக சுகாதார அமைச்சு, பள்ளிவாசல்கள் முதலிய இடங்களுக்கு எமது வை. எம். எம். ஏ. கிளைகள் ஊடாக பகிர்ந்தளித்துள்ளோம். விசேடமாக கொரோனா தொற்றுப் பரவலைத் தடுக்கக் கூடிய சுகாதார வழிகாட்டல்களை சித்தரிக்கும் விடயங்களே அமைந்துள்ளன. தற்போது இந்த அட்டவ ணைப்படி கணிசமான வீடுகளில் முன் ஹோலில் தொங்கவிடப்பட்டிருப்பதைக் காணலாம். அத்துடன் சமூக வளைத்தளம் ஊடாகவும் பார்ப்பதற்கு இணையத் தளத்தில் பதிவேற்றியிருக்கின்றோம்.

**கேள்வி :** இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த உடல்களை தகனம் விடயத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் மத்தியில் பிரதான செயற்பாட்டு குழுவாக இருந்து, உடலை அடக்கம் செய்வதற்காக முஸ்லிம் களுடைய நிலைமையை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி, தொடர்ந்து போராடிய அமைப்பு என்ற வகையில் உங்களது முன்னெடுப்புக்கள் பற்றிக் கூற முடியுமா?

**பதில் :** ஆரம்பத்திலேயே கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களுடைய உடல் தகனம் செய்வது தொடர்பிலான பிரச்சினை காணப்பட்டது. முதலாவது முஸ்லிம் மரணத்தில் பிரச்சினை எழுந்த போது, நாங்கள் ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், சுகாதாரப் பணிப்பாளர், உலக சுகாதார அமைப்பு, மனித உரிமை ஆணையகம், வெளிநாட்டு தூதுவராலயங் கள் முதலியவர்களுக்கு ஒரு நியாயத்தை

வேண்டி எழுத்து மூலமான கோரிக்கை யொன்றை விடுத்தோம். அதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு இரண்டாவது தடவையாக வும் மீண்டு மொரு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தோம். தகனம் செய்யும் விடயத்தில் சுகாதார ரீதியிலான பிரச்சினை இருக்கு மெனக் கருதுவீர்கள் எனில் உலக நாடுகளில் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் மரணங்களை கொங்கிரீட் அமைப்பில் செய்யப்பட்ட பெட்டிகள் மூலம் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. ஆதலால் அதை இலங்கையில் அதனை செய்வதற்கான முழுச் செலவையும் நாங்கள் ஏற்கின்றோம் என்று கடிதத்தில் சுட்டிக் காட்டி எழுதினோம். அவை தவிர கொரோனா தொற்றால் உயிரிழந்த உடல்களை அடக்கம் செய்வதற்கான ஆரம்ப சமிக்ஞை கிடைக்கப் பெற்ற கால கட்டத்தில் உடல்களை மாலைதீவுக்கு கொண்டு சென்று அடக்கு வதற்கான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தது. இது தொடர்பில் 2021-03-30 ஆம் திகதி இலங்கையிலுள்ள எல்லா தேசிய அமைப்புக்கள், பிரபல்யமான தனவந்தர்கள் அரசியல் தலைவர்கள் எனக் கலந்து கொண்ட விசேட கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் ஏற்கெனவே எடுத்த தீர்மானம் ஒன்றை ஒரு தனவந்தார் பரிந்துரை செய்தார்.

**கேள்வி :** மாலைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது பற்றிய தங்கள் அமைப்பின் பணிகள் யாவை ?

**பதில் :** மாலைதீவுக்கு ஜனாஸாக்களை கொண்டு சென்று நல்லடக்கம் செய்வதற்கு ஏற்கெனவே நாங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரையும் சந்தித்து ஓர் இணக்கப்பாட்டுக் கொண்டுவந்துள்ளோம். மாலைதீவு ஜனாதிபதி அதற்கென்றதொரு தீவினையும் ஒதுக்கி தந்துள்ளார். “எனவே இந்த வேலைத் திட்டத்தை நாங்கள் செய்யவுள்ளோம்” என்று அவர் அங்கு கூறினார். அப்பொழுது அங்கு இருந்த அரசியல் தலைவர்கள், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை, முஸ்லிம் கவுன்ஸில் மற்றும் ஏனைய அமைப்புக்கள் உட்பட அனைவரும் அமைதியாக இருந்த நேரத்தில் ஒரே ஒரு அமைப்பு மட்டும் மிகுந்த துணிச்சலுடன் எழுந்து அதற்கு நாங்கள் அதற்கு உடன்பாட மாட்டோம் என எதிர்கருத்தினை முன்வைத்தது. அந்த சந்தர்ப்பத்தில் அவர்களும் அங்கு எங்களுடைய கருத்திற்கு பலமான எதிரான கருத்துக்களை முன் வைத்தார்கள். இருந்த போதிலும் நாங்கள் விட்டுக் கொடுக்க வில்லை. நாங்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள், இங்கே அடக்கம் செய்யப்பட வேண்டும். விசேடமாக இந்த முறையினை அமுல்படுத்தினால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அங்கு ஜனாஸாக்களை அடக்கம் செய்தாலும் காலப் போக்கில் செலவு அதிகமாகும். ஆதலால் குறித்த செலவு கைவிடப்படும் பட்சத்தில் செல்வந்தர்களுடைய உடல்கள் மட்டும் தான் அங்கு அடக்கம் செய்யப் படும். ஆனால் ஏழைகளுடைய

ஜனாஸாக்கள் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்படலாம் என்ற நியாயத் தன்மையை அழுத்தமாக எடுத்துக் கூறி, அவ்விடத்தில் ஓர் உறுதியான நிலைப் பாட்டை எடுப்பதற்கு ஒரு மகத்தான பணியை செய்துள்ளோம் என்ற மனத் திருப்தி எங்களது அமைப்புக்கு இருக்கிறது. அதே நேரம் இந்த விவகாரத்தை மீண்டும் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருக்கும் இலங்கை யிலேயே ஜனாஸா நல்லடக்கம் செய்யப் பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்து, எழுத்து மூலமான கடிதம் அனுப்பி அதில் வெற்றியும் கண்டோம். இந்த விவகாரத்திற்கு ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்தவர்கள். ஆனால் பின்னர் எல்லோரும் நீங்கள் செய்தது சரி என்று எங்களுக்கு ஆதரவு வழங்கினார் கள். அந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் எங்களது கோரிக்கை களை அலசி ஆராய்ந்து பாதகம் இல்லாமல் ஒரு நியாயமான அறிவிப்பை வழங்கிய இருவருக்கும் வை. எம். எம். ஏ அமைப்பு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி :** ஓட்டமாவடியில் ஜனாஸா நல்லடக்கம் பற்றி கூறுங்கள்? கொரோனா தொற்றினால் உயிரிழந்த உடல்கள் ஓட்டமாவடியில் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அவை தற்போது 750 யும் தாண்டி உள்ளன. இது குறித்து உங்களது பங்களிப்பு என்ன?

**பதில் :** சுகாதார அமைச்சின் மூலம் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களது உடல்கள் நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி கிடைத்ததை அடுத்து நாடளாவிய ரீதியில் தேவையான இடங்களுக்கு உடல்களை நல்லடக்கம் செய்யக் கூடிய பெட்டிகளை விநியோகம் செய்து வருகின்றோம். இதுவரையில் நாங்கள் முஸ்லிம்களுடைய உடல்களை நல்லடக்கம் செய்வதற்காக 200 க்கும் மேற்பட்ட பெட்டிகளை விநியோகித்து இருக்கின்றோம். தற்போது முஸ்லிம் களுடைய ஜனாஸாக்கள் 750 க்கும் மேல் தாண்டியுள்ளன. எனினும் நாங்கள் இதுவரைக்கும் அரைவாசிக்கு மேற்பட்ட உடல்களை நல்லடக்கம் செய்யக் கூடிய பெட்டிகளை வழங்கியுள்ளோம். தொடர்ந் தும் எங்களது மாவட்டப் பணிப்பாளர் மற்றும் எங்களது கிளைகள் ஊடாக வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

அதே போன்று இந்தப் பணியில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை, கண்டி மாவட்ட கொவிட்19 ஜனாஸா செயலணி, பல அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் என தங்களது பணிகளை சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு செய்து வருகின்றனர். இந்த அமைப் புக்களது பணி பாராட்டத்தக்கது. நாட்டில் எதிர்பார்த்ததைவிட இத்தகைய பணி அதிகம் தேவையாக இருக்கிறது. அவர்களுடன் எமது அமைப்பும்

பங்களிப்பை சமூகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. யார் யாரெல்லாம் இந்த சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றார்களோ அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வை. எம். எம். ஏ. அமைப்பு எப்பொழுதும் தயாராக இருக்கின்றது.

**கேள்வி :** ஜனாஸா நல்லடக்கம் தொடர்பில் உங்களது வேறு முயற்சிகள்?

**பதில் :** ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு நாடளாவிய ரீதியில் பொருத்தமான மையவாடிகளை இனங்காணப்பதற்காக பல இடங்களை நாங்கள் பரிந்துரை செய்துள்ளோம். அவை மட்டுமல்ல தெரிவு செய்யப்படும் எந்தவொரு மையவாடியிலும் முஸ்லிம் களது உடல்களை மட்டுமல்ல ஏனைய உடல்களையும் அடக்கம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு வேண்டு கோளையும் விடுத்துள்ளோம்.

இது தொடர்பில் நாங்கள் ஆரம்பத்தில் களுத்துறையில் ஒரு ஹோட்டலில் நீதி அமைச்சர் அலி சப்ரியை எமது வை. எம். எம். ஏ. குழு சந்தித்து கலந்துரையாடினோம். அதன் போது நாங்கள் பல இடங்களை தெரிவு செய்து பல கோரிக்கைகளையும் முன்வைத்தோம். முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என். எம். அமீன் எம்முடன் கலந்து கொண்டார். அதன் போது அமைச்சர் அலி சப்ரி கூறுகையில், ஏற்கனவே இலங்கையில் ஆறு இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த ஆறு இடங்களும் ஆய்வுகளுக்காக உட்படுத்தப்பட்டுள்ளன. அப்பொழுது அந்த குறித்த இடங்களைப் பற்றி அமைச்சர் எம்மிடம் கூறியதுடன் எங்களுக்கு ஒரு சாதகமான பதிலையும் வழங்கினார். அந்த பதில் திருப்தியளிக்கக் கூடியதாக இருந்தது. அந்த ஆறு இடங்களில் ஒன்றாக ஓட்டமாவடியும் பரிந்துரை செய்யப் பட்டிருந்தது. அப்பொழுது அமைச்சர் நம்பிக்கை தரக்கூடிய உறுதி மொழியையும் வழங்கினார். அதன்படி அமைச்சர் அன்று தெரிவித்த ஆறு இடங்களில் ஒன்றே ஓட்டமாவடியாகும்.

**கேள்வி** இது இன்று தெரிவு செய்யப் பட்டுள்ளது. கொரோனா தொற்றுக் காலத்தில் வேறு எவ்வகையிலான பணிகளை மேற்கொண்டீர்கள்?

**பதில் :** கொரோனா தொற்றுக் காலத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 500 சக்கர கதிரைகளை வழங்கியுள்ளோம். 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இருந்து இன்று வரையிலும் வழங்கியுள்ளோம். இந்நாட்டில் விசேட தேவையுடைய மூவின மக்களுக்கும் சக்கர கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் நாடளாவிய ரீதியில எமது அமைப்புக் கிளைகளின் வேண்டுகோளின் பேரில் பிரதேச செயலகம் ஊடாக தனிப்பட்ட ரீதியாகவும் வழங்கியுள்ளோம்.

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி பிரதேச செயலகமும் சக்கர நாற்காலிகள் தேவையென எம்மிடம் வேண்டுகோள் விடுத்து. அதற்கிணங்க சக்கர நாற்காலிகள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இதில் சகல இன மக்களும் கலந்து கொண்டு பெற்றுக் கொண்டனர். அத்துடன் கொரோனாவையடுத்து இம்முறை ரமழானில் முஸ்லிம் சிறைக்கைதிகள் தமது மதக் கடமைகளைச் சரிவரச் செய்வதில் உரிய வசதிகளை வழங்க நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியவர்களுக்கு மகஜர் அனுப்பி பலனைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

**கேள்வி :** சமூகத் தேவையை முதன்மைப் படுத்தி பொறுப்புணர்வுடன் செயற்படும் அமைப்பு என்ற பெருமை உள்ளது. அதற்கான காரணம்?

**பதில் :** கொரோனா தொற்று மூன்றாவது அலையோடு வெள்ள அனர்த்தமும் கொழும்பில் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் கேள்வியுற்ற உடன் சமைத்த உணவு வழங்கும் நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டோம். அத்தோடு அம்மக்களுக்கு உலருணவுப் பொதிகளையும் வழங்கு வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். எனினும் பொது சுகாதார பரிசோதகர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. கொரோனா தொற்று, டெங்குநோய் பரவலாம் என்பதால் அனுமதி மறுக்கப் பட்டது. பின்னர் சகல மக்களுக்கும் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த செயற்றிட்டத்தை கொழும்பு சென்ரல் வை. எம். எம். ஏ. மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுத்தார்கள். இன, மத வேறுபாடு களின்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கொரோனா தொற்றினால் நாடு முடக்கப் பட்டதன் காரணமாக வருமானம் இழந்த குடும்பங்களுக்கு நாடளாவிய ரீதியில் உலருணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை எங்களது கிளைகள் மூலமாக வழங்கி வருகின்றோம். அவை மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல பிராந்திய வைத்திய சாலைக்கு கொரோனா சுயபாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளோம். இப்படி இக்கட்டான காலத்தில் சகல மட்டத்தி னருக்கும் மனிதாபிமான உதவிகள் புரிய சந்தர்ப்பம் கிடைத்தடையிட்டு நாங்கள் மனம் திருப்பதி அடைகின்றோம். எவ்வளவு தான் சமூகப் பணிகள் செய்தாலும் அதை பற்றியோ அவர்களுடைய துறை சார்ந்த எண்ணக் கருத்துக்கள் பற்றியோ சமூகம் அறிந்து கொள்வதில் கரிசனை காட்டுவது மிகவும் குறைவு. ஆனால் வை.எம். எம். ஏ. அமைப்பிடம் பல வேண்டுகள்கள் விடுப்பது வழக்கமாகும். அதை நிறை வேற்றுவதும் எமது பொறுப்பாகும். கொரோனா

தொற்றினால் முஸ்லிம்களது உயிரிழப்புக்கள் அதிகம் என பேசப்படுகிறது. முஸ்லிம்களின் உயிரிழப்புக்கான முக்கிய காரணம் தொற்றா நோய்க்குட்பட்டவர்களே அதிகமாகும். அடுத்து முஸ்லிம்கள் செறிவாக வாழ்வதாகும். இந்த நெருக்கடியான கால கட்டத்தில் வைத்திய சாலைகளில் இரத்தப் பற்றாக்குறை காணப்படுகிறது. இரத்த வங்கிகளில் நோயாளிக்குத் தேவையான போதியளவு இரத்தம் இல்லை என சுகாதார அமைச்சு அடிக்கடி வேண்டு கோளை விடுத்து வந்தன. அதற்கு இணங்க கொரோனா தொற்று இரண்டாவது அலையின் போது வை. எம். எம். ஏ. இன் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நுவரெலியா மாவட்டத்திலுள்ள வை. எம். எம். ஏ. அங்கத்தவர்கள், சமயத்த தலைவர்கள், நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி வைத்தனர். தொடர்ந்து வை. எம். எம். ஏ. அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பொரகஸ்லந்த பிரதேசத்திலும் மற்றும் கேகாலை மாவட்டத்தில் கொட்டியாகும்புர பிரதேசத்திலும் இரத்த தானம் வழங்கி வைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழக் கூடிய கல்முனை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் நடைபெற்றது. கொரோனா தொற்றினால் நாடு முடக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மக்கள் கொரோனா அச்சம் காரணமாக வெளியே செல்ல முடியாத நிலைமை இருந்தது. இந்த இளம் வாலிபர்கள் அந்த அச்சத்தைக் கருத்திற் கொள்ளாமல் துடிப்புடன் வெளியே வந்து உதிரத்தை வழங்கியமை பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இது வைத்திய சாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அந்நேரத்தில் வைத்திய சாலையின் அத்தியட்சகர் ஏ. எல். எப். ரஹ்மான் கூறியதாவது, "ஒரு காலத்தில் வைத்தியசாலையில் இரத்தம் தட்டுப்பாடு நிலவும் போது, அருகிலுள்ள காரைதீவு இராணுவ முகாமிற்குச் சென்று படை வீரர்களை அழைத்து வந்து இரத்தத்தைப் பெற்றுக் கொள்வோம். ஆனால் இன்று அந்தக் காலம் மாறியுள்ளது. கொரோனா தொற்றுக் காலத்தில் இளம் துடிப்புள்ள இளைஞர்கள் வருகை தந்து இரத்தம் வழங்கியுள்ளார்கள்" என்று வைத்திய அத்தியட்சகர் அங்கு தெரிவித்தார். கடுமையான பயணத்தடை விதிக்கப்பட்டு நாடு முடக்கப்பட்ட கால கட்டத்தில் நான் அங்கு சென்றேன்.

விசேடமாக என் உடம்பில் இருந்து 18 வது தடவையாக இரத்தம் வழங்கியே அந்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்தேன். எனக்கு இரத்தம் வழங்குவதற்கு என விசேட அறையொன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதனை வைத்திய அத்தியட்சகர் ரஹ்மான்

நேரடியாக வந்து பார்வையிட்டார். உண்மையிலே இந்த நிகழ்வினை அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரையின் போதைப் பொருள் தடுப்பு பிரிவு திட்டத் தவிசாளர் எஸ். தஸ்தகீரின் நெறிப்படுத் தலில், அகில இலங்கை வை எம். எம். ஏ பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் கே. எஸ். சுபைரின் பங்குபற்றுதலுடன் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அதேநேரம் சர்வதேச சுற்றாடல் தினம் வைத்தியசாலையில் இடம்பெற்றது. அதன் போது பிரதம அதிதியாக நான் கலந்து கொண்டேன். எமது வை. எம். எம். ஏ. பேரவையின் கொள்கைத் திட்டத்தில் நாட்டைக் கட்டி எழுப்புதல் எனும் செயற்றிட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், மரம் நடுதல் போன்ற அம்சங்கள் உள்ளன. சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுகாதார சேவையாளர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரக் கண்காட்சிப் போட்டித் தெரிவுகள் அங்கு இடம்பெற்றன. அந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டதோடு நானும் ஒரு நடுவராக கலந்து கொண்டேன். மற்றும் அங்கு விசேட மர நடுகையும் இடம்பெற்றது. அங்கு மரம் ஒன்றையும் என் கரத்தினால் நட்டு வைத்தேன்.

எமது சமூகத்தினர் தடுப்பூசி போடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்ற போக்கு பரவலாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களது ஊரில் மடவளையில் தடுப்பூசி போடும் தினத்திற்கு முதல் நாள் இரவு ஒரு விழிப்புணர்வூட்டும் பதிவொன்றை சமூக வலைத்தளத்தில் வெளிக் கொணரப்பட்டது. அந்தப் பதிவில் நீங்களும் மக்கள் மத்தியில் நல்ல கருத்தை உணர்த்தியிருந்தீர்கள். அது தொடர்பில் கொரோனா தொற்று தடுப்பூசி போடுவதில் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த ஊரில் முதலாவது தடுப்பூசியை நான் தான் கடந்த பெப்பரவரி மாதம் முதலாவதாக பெற்றுக் கொண்டேன். இரண்டாவது தடுப்பூசி ஏப்ரல் மாதம் பெற்றேன். எந்த வொரு பாதிப்பும் பாதகமும் கிடையாது. ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை. முக்கியமான விடயம் என்னவென்றால் மன தைரியம் தான். பல இடங்களுக்கு நாங்கள் அச்சத்தோடு போகும் வேளையில் எங்களுக்கு உளவியல் ரீதியாக நாம் தடுப்பூசிபோட்டு இருக்கின்றோம் என்ற மன உறுதியொன்று வரும். இதில் எந்தப் பாதிப்பும் இல்லை. நூறு விகிதம் நான் அந்த தடுப்பூசியைப் போட்டவன் என்ற வகையில் நம் சமூகத்திற்கு அறியத் தருகின்றேன். இலங்கைக்கு நாளுக்கு நாள் பல்வேறு தடுப்பூசிகள் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. ஆதலால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்படுவது என்பது ஒரு பெரியதொரு சந்தர்ப்பமாகும். அந்த சந்தர்ப்பத்தை

உடனடியாக நாங்கள் கைநழுவ விடாமல் பெற்றுக் கொள்ள வேண்டும். அடுத்தடுத்த கால கட்டத்தில் சிறிய வயதினருக்கும் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் நாங்கள் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை. தைரியமாக செல்லுங்கள் என்ற கருத்தை நான் அங்கு பதிவு செய்தேன். இந்த விழிப்புணர்வூட்டுதல் மூலம் ஊர் மக்கள் சிறந்த தெளிவினைப் பெற்றார்கள். அன்றைய தினம் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவருமே வீட்டில் இருக்கவில்லை என்று கூறுமளவுக்கு எல்லோரும் தடுப்பூசி போடும் இடத்திற்கு சென்றனர்.

தினகரன் 2021-07-02

# தேசிய பாதுகாப்புக்குப் பங்களிக்கும் சிவில் அமைப்புக்களில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. முன்னிலையில்

**அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை இலங்கையிலுள்ள ஏனைய சிவில் சமூக அமைப்புக்களைக் விட முன்னணியில் செயற்படும் அமைப்பாகும். போதை ஒழிப்பு விடயத்தில் வை. எம். எம். ஏ. பேரவை எடுத்துவரும் முயற்சியானது அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் நாட்டில் வாழும் ஏனைய சமூகத்திற்கும் பாரிய பங்களிப்பை ஆற்றக் கூடியவை.**

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அரச ஔடதங்கள் கட்டுப் பாட்டுச் சபையின் வழிகாட்டலுடன் அகில இலங்கை வை. எம். ஏ. பேரவையின் ஏற்பாட்டில் நாடளவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட போதைப் பொருள் தடுப்பு புனர்வாழ்வு அளிப்பதற்காகன பயிற்சி யாளர்களை பயிற்றுவிக்கும் கற்கை நெறியினை பூர்த்தி செய்த நாடளாவிய ரீதியில் 106 பேருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் மற்றும் அதனைத் தொடர்ந்து அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவரும் சாரணிய இயக்கத்தின் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் எம். எப். எஸ். முஹீத் நியமிக்கப்பட்டமை தொடர்பில் கௌரவிப்பு நிகழ்வும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைமையகத்தில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தலைமை உரையாற்றும் போது.

யாரோ ஒரு சிறு குழுவினர் செய்த தப்புக்காக எல்லா முஸ்லிம் சமூகமும் அச்சப்பட்டுக்கொண்டு இந்நாட்டில் ஒரு நொண்டிச் சமூகமாகவும் இரண்டாம் பிரஜையாகவும் வாழ வேண்டும் எனகின்ற அவசியமில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் குற்றச்சாட்டை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தமது தோளில் சுமந்து நிற்க வேண்டிய அவசியமில்லை. நாம் எப்போதும் போல் இந்நாட்டின் முதல்தரப் பிரஜைகளாக ஏனைய சமூகங்களுடன் நட்புறவையும் நல்லெண்ணத்தை பேணி சமத்துவமான

முறையில் எமது இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் மக்களது மன எண்ணங்களில் கொட்டிக் கிடக்கிற அச்சவுணர்வுகளை இல்லாமற் செய்து எதிர் வரும் காலத்தை வெற்றி கொள்ளுகின்ற இளம் தலைமைத் துவங்களை உருவாக்க வேண்டிய தேவை நிறைய இருக்கிறது. இதற்காக எமது சமூகத்தின் நன்மை கருதி நாம் அனைவரும் ஒன்று பட்டு செயற்பட வேண்டும்.

இன்றைய போதையற்ற நாட்டை உருவாக்கக் கூடிய பயிற்றுவிப் பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பது கூட நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு வழங்கும் மகிமை நிரம்பிய உன்னத செயற்பாடாகவும், நமது சமூகம் இந் நாட்டுக்கு வழங்கும் பாதுகாப்பு உத்தரவாதமாகவும் அமைந்திருக்கிறது. அந்த வகையில் இந்நிகழ்வு முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் முக்கியத் துவம் வாய்ந்தது. போதைக்கு அடிமைப் பட்டவர்களை புனர்வாழ்வளித்து சமூக மயப்படுத்துவதற்காக பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சிநெறிப் பட்டறையில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு பயிற்சி நிறைவடைந்தவுடன் சான்றிதழ்கள் வழங்கும் விழாவை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், கொரோனா தொற்று இடம்கொடுக்க வில்லை.

எங்களோடு இணைந்து சேவை யாற்றக் கூடிய நிறுவனம் அதற்குரிய கால நேரத்தை அறிவிக்கவில்லை. இந்நிகழ்வில் இதன் வளவாளர் ரிஸ்கா சாலி, வைத்தியர் எம். ஜி. எம். மபாஸ், வைத்தியர் எம். ஐ. எம். லரீப், எஸ் தஸ்கீர், என். எம் நிப்ராஸ், வளவாளர் பௌஸ்சான் இஸ்ஸ்தீன் ஆகியோர்களுடைய பணி முக்கியமானது இந் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

அதே வேளையில் முதலாவது நான் வேண்டிக் கொள்வது எமது சமூகம் நேரத்திற்கு வேலை செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு ஏனைய சமூகத்திற்கு மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இருந்து அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை அதனை 100 விகிதம் பின்பற்றக் கூடிய ஒரு அமைப்பாக மாறியிருக்கின்றோம். அந்த வகையில் காலை 8.30 மணிக்கு இந்த நிகழ்வை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம். குறிப்பிட்டபடி 8.30 மணிக்கு பதிவுகளை ஆரம்பித்து விட்டோம். ஆனாலும் துரதிருஷ்டவசமாக நாடளாவிய ரீதியில் தூர இடங்களில் இருந்து வருகின்றவர்களுடைய சமூக மளித்தலானது சற்று தாமதமாகிவிட்டது. அதற்காக நான் மன்னிப்புக்கோரிக் கொள்கின்றேன்.

இன்றைய தினத்தில் விசேட பேச்சாளராக பேராசிரியர் ரஷீன் பாபு, இந்த நாட்டில் இருக்கக் கூடிய சமகால நிகழ்வுகள் குறித்து பல்வேறுபட்ட பரந்தளவிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான விளக்கங்களை அவரிடமிந்து தெளிவாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனை நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எங்களது சமூகம் ஒதுங்கியவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக 2018 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் 2 ஆம் பிரஜைகள் போல் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏன் நாங்கள் அந்த நிலைக்குச் செல்ல வேண்டும். நாங்களும் ஏனைய சமூகத்தைப் போன்று முதல் தரப் பிரஜைகள் தான். எங்களை நாங்கள் குறைத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. தேசிய பாதுகாப்புக்கு நாங்கள் எவ்வாறு நாங்கள் ஒத்துழைக்க வேண்டும். இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் உள்ள உரிமை முஸ்லிம் சமூகத்திற்கும் இருக்கிறது.

எங்களிடையே தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம், கலந்துரையாடல்கள், தேசிய ஒற்றுமை, சமாதானம், பரஸ்பரம், புரிந்துணர்வு போன்ற துறைகளில் அறிவும் ஆற்றலும் அனுபவமும் இருத்தல் வேண்டும். இவர்கள் எல்லாவற்றையும் சமமாக மதித்து தமிழ், சிங்கள, ஆங்கில ஆகிய மொழிகளில் எழுதக் கூடியவர்களாகவும் பேசக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். எல்லா இனமும் சமமானவர்கள் என்ற மனநிலையினை உடையவர்களை தெரிவு செய்ய வேண்டும். இது எமது தாய் நாடாகும். இந்த நாட்டின் அபிவிருத்திற்கு நாம் என்ன உதவி செய்யலாம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் முதலில் சுய விமசர்சனம் செய்து கொள்ள வேண்டும். எங்களுக்கு அசாதாரணம் நடந்து இருக்கலாம். ஆனாலும் நாங்கள் அதனை மனதில் வைத்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. மறப்போம் மன்னிப்போம் என்ற அடிப்படையில் நாங்கள் பெரும்பான்மையின சகோதரர்களோடு எவ்வாறு பின்னிப் பிணைந்து எவ்வாறு வாழ்ந்தோமோ, எங்கள் மூதாதையர்கள் வாழ்தது போன்று நாங்களும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அவையே புதிய தலைமுறையினரின் அறிவுத் தேடலுக்கு வழிகாட்டுதலாகவும் நாளைய சந்ததியினர்களுக்கு நாம் சொல்லும் மிகப் பெரிய செய்தியாகவும் அமையும் என நான் கருகின்றேன்.

உண்மையிலேயே போதைக்கு அடிமைப்பட்டவர்களை பல்வேறு தரப்பினர்களைச் சந்திக்கப் போகின்றீர்கள். அதன் மூலம் பல்வேறு புதிய

அனுபவங்களையும் சவால்களையும் பெற்றுக் கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள், மாணவர்கள், எதிர்காலத் தலைவர்கள் உள்ளிட்ட பலதரப்பினர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடி போதைக்கு அடிமைப்பட்டவர்களை புனர் வாழ்வு அளித்து சமூக மயமாக்குதலையும் மாறுதல்களையும் ஏற்படுத்தலாம். இந்த நாட்டில் வழிதவறக் கூடிய நிறைய இளைஞர்கள் உள்ளனர். அதிலும் ஓரளவு பயன்படுத்தியவர்களும் இருக்கின்றார்கள். இந்த நாட்டை முழுமையாக போதையற்ற நாடாக மாற்றுவதற்கும் சரியான பலத்தை அமைத்துக் கொடுக்கவும் இந்தச் சான்றிதழைப் பெற்றுக் கொள்கின்றவர் களின் பணி மிகவும் உன்னதமானது. மனித வாழ்வை உணரச் செய்யும் நல்லதொரு பணியாகும். அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் ஆற்றும் பணிகள் மிகவும் உன்னதமானது. இம்மையிலும் மறுமையிலும் நல்லருள் புரிய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். சிங்கள மொழியிலும் பயிற்சி வழங்க திட்டமிட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்ட வன்முறை தீவிரவாதம் மற்றும் பங்கரவாதத்தை எதிர்த்தல் மற்றும் தடுப்பு தொடர்பான தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனம், பாதுகாப்பு அமைச்சு, யுனெஸ்கோ, மானுடவியலாளர் உளவுத் துறை மற்றும் விஞ்ஞானப் பேராசிரியர் ரஷீன் பாபு உரையாற்றும் போது, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை இலங்கையிலுள்ள ஏனைய சிவில் சமூக அமைப்புக்களை விட முன்னணியில் செயற்படும் அமைப்பாகும். போதை ஒழிப்பு விடயத்தில் வை. எம். எம். ஏ. பேரவை எடுத்துவரும் முயற்சியானது அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் நாட்டில் வாழும் ஏனைய சமூகத்திற்கும் பாரிய பங்களிப்பை ஆற்றக் கூடியவை என்று வன்முறை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்தல் மற்றும் தடுப்பு தொடர்பான தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் பாதுகாப்பு அமைச்சு, யுனெஸ்கோ மானுடவியலாளர் உளவுத்துறை மற்றும் விஞ்ஞானப் பேராசிரியர் ரஷீன் பாபு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், என்னுடைய தந்தையும் மாளிகாவத்தைப் பிரதேசத்தில் இளைஞர் பருவத்தில் வை.எம்.எம்.ஏ. இல் அங்கத்தவராக இருந்துள்ளார். இதனோடு இணைந்து சேவையாற்றியவர். அகில இலங்கை வை. எம். எம். பேரவை சுயாதீனமாக செயற்படும் சிறந்த அமைப்பாகும். சில அமைப்புக்கள் வேறு இயக்கம் சார்ந்தாகவும் அல்லது வேறு

சிந்தனைகளைக் கொண்டதாகவும் காணப்படலாம்.

ஆனால், இவ்வமைப்பு எந்த விதமான பக்கச் சார்புகளுமின்றி சுயாதீனமாக தேசிய பாதுகாப்பு அமைச்சோடு இணைந்து இயங்குவது எமக்கு பெரும் சக்தியும் பலமும் ஆகும். நாம் இவ்வாறு இருவரும் இணைந்து செயற்படுவோமாயின் முஸ்லிம் சமூகத்திற்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களை நாம் தெளிவு படுத்தி விழிப்புணர்வூட்டல் செய்வதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. தேசிய பாதுகாப்பு எனும் போது நாம் முதலில் தலைக்குள் எடுத்துக் கொள்ள வேண்டியது இலங்கையின் அடையாளத்தைக் கொண்டதாகும். இலங்கையிலுள்ள அனைவருக்கும் இலங்கையின் அடையாளம் இருத்தல் வேண்டும். உண்மையிலேயே நாம் அனைவரும் இலங்கையர் என்ற அடையாளம் உள்ளார்ந்த ரீதியில் வர வேண்டும். இலங்கையில் முஸ்லிம் 1400 வருடங்கள் பூர்வீக வரலாற்றைக் கொண்டவர்கள்.

அந்த வகையில் இலங்கையில் முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான வரலாறு ஒன்று உள்ளது. ஆனால், இன்று உள்ளவர்களுக்கு அது ஞாபகமில்லை. இலங்கையின் தேசிய கொடி அவசியம் என்ற கோரிக்கையொன்றை முன் வைத்தவர் முஸ்லிம் ஒருவர். இது உண்மையான வரலாறு. அப்படியாயின் வை. எம். எம். ஏ. பேரவை இது பற்றி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துதல் வேண்டும். தேசிய ஊடகங்கங்கள் நமக்கு கை கொடுக்கா விட்டாலும் சமூக வலைத்தளம் பலமான ஊடகமாகும். இது போன்ற நல்ல விடயங்களை பொது மக்களுக்கு தெளிவு படுத்துதல் அவசியமாகும். ஏனென்றால் சிங்கள சமூகத்திற்கு இது பற்றி தெரியாது. எண்ணற்ற வட்செப் குரூப் இருக்கின்றன. இது பற்றி சிங்கள சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினால் அவர்கள் நல்லதொரு தெளிவினைப் பெற்றுக் கொள்வார்கள். இது பற்றி தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் பயந்து போய் ஒரு பக்கம் சாய்ந்து இருப்பதால் நாங்கள் வீழ்ச்சி நிலைக்கே மீண்டும் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். நாங்கள் முன்னுக்கு மீள்எழுச்சி பெற்று வரவேண்டும். உயிர்த்த ஞாயிறு ஏப்ரல் தாக்குதலுக்குப் பின்னர் நாம் அனைவரும் பயந்த நிலைக்குப் பின்தள்ளப்பட்டிருக் கின்றோம். அவ்வாறு இருக்கத் தேவை யில்லை. அதை மறந்து விட்டு நாம் முன்னுக்குச் செல்லுதல் அவசியமாகும்.

அடுத்து நாட்டின் சட்டம் ஒழுங்கு கடைபிடித்தல் மிக அவசியம் ஆகும். இந்த நாட்டில் ஒவ்வொரு சமயத்தினர்களுக்கு

தனித்துவமான கலாசார ஆடைகளை அணிந்து கொள்வதற்கான வாழ்வதற்கான ஆங்கீகாரம் இருக்கிறது. பௌத்த சமயத்தவராக இருந்தலும் சரி இந்து சமயத்தவராக வாழ்ந்தாலும் சரி, முஸ்லிம் சமயத்தவராக வாழ்ந்தாலும் சரி, கிறிஸ்தவ சமயத்தராக வாழ்ந்தாலும் சரி தத்தமது சமய கலாசார தனித்துவமான ஆடைகளை அணிந்து கொள்ள இயலும். ஆனாலும், வன்முறை சார்ந்த தீவிரமான போக்குகளுக்கு நாட்டில் இடமில்லை. இதற்கு நாட்டின் சட்டம் ஒழுங்கு இடம் கொடுக்காது. முஸ்லிம் பெண்கள் பர்தா ஹிஜாப் அணிந்து செல்ல முடியும். அதே போன்று ஆண்களும் ஜுப்பா, தொப்பி போன்று தனித்துவமான ஆடை அணிய முடியும். இன்று எல்லோரும் நாட்டில் முகக்கவசம் அணிகின்றார்கள். இது நாட்டிலுள்ள சட்ட ஒழுங்கு ஆகும்.

தேசிய பாதுகாப்பு என்பது ஒரு விரிவான விடயம் ஆகும். சுகாதாரப் பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு குறைந்த ளவிலான குற்றம், போதை வஸ்து பொருளாதார பாதுகாப்பு, வலு சக்தி பாதுகாப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, இணையத்தள சைபர் பாதுகாப்பு உள்ளிட்டு அனைத்து வகையிலான இலங்கையின் இறையாண்மைக்கு இந்த நாட்டிலுள்ள அனைவரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சாரணிய இயக்கத்தின் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் எம். எப். எஸ். முஹீத், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் எச். சலீம்டீன், உப தலைவர் தஸ்தகீர், பொருளாளர் பாசில், போதை ஒழிப்பு பிரிவின் திட்டமிடலின் தவிசாளர் என். எம். நிவ்ராஸ், உதவிச் செயலாளர் பராஸ் பாரூக், உதவிப் பொருளாளர் பிர்தௌஸ், கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசாம். உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன் 2022 - 03 - 04

# விசேட தேவையுடைய பிள்ளைகளின் ஆளுமையை உயர்த்த உதவிக்கரம் நீட்டுவோம்

**விசேட தேவையுடைய பிள்ளைகள் இன்று சமூகத்தில் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நல்ல நிலைக்குப் போன பின்பு தாங்கள் எந்தப் பாடசாலையில் படித்தீர்கள் என்று வினவினால், விசேட தேவையுடைய பாடசாலை அல்லது அங்கவீனர்களுடைய பாடசாலைகளில் கற்றோம் என்று சொல்வார்கள். அதனை இன்று வரையிலும் கேட்டு கொண்டு தான் இருக்கிறோம். அவர்கள் அந்நேரத்தில் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் ஆளுமை விருத்திக்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று அகில இலங்கை வை. எம்.எம்.ஏ பேரவைத் தலைவர் கூறுகிறார்**

நீர்கொழும்பு பலஹத்துறையிலுள்ள அல் ஜன்னாஹ் விசேட தேவையுடையோர் நிலையத்திற்கு களவிஜயம் செய்திருந்த போதே அவர் கீழ்கண்டவாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் அவருடன் உரையாடிய போது அவர் கூறிய கருத்துக்கள்:

**கேள்வி:** நீங்கள் நீர்கொழும்பு பலஹத்துறையிலுள்ள “அல்ஜன்னாஹ் விசேட தேவையுடையோர் நிலையத்திற்கு” களவிஜயம் ஒன்றை மேற்கொண்டீர்கள். அந் நிலையம் குறித்து நீங்கள் கூற விழைவது?

**பதில் :** ஐக்கிய இராச்சத்திலுள்ள எனது சகோதரர் எம். எஸ். ரிபான் மற்றும் அவர்களது நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க என்னுடைய தனிப்பட்ட கள விஜயமாகும். அமைப்பு சார்ந்தது அல்ல. அல் ஜன்னாஹ் விசேட தேவையுடையோர் நிலையம் 2018-03-18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது ஒரே ஒரு பிள்ளையை வைத்து கதிரை மேசை இல்லாமல் மேற்படி இயக்குனரின் வீட்டில் இந்த கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இது நீர் கொழும்பு, பலஹத்துறை தைக்கா வீதியில் அமைந்துள்ளது. இதன் ஸ்தாபகப் பணிப்பாளர் அல்ஹாபில் மொஹமட் சப்ரி மொஹமட். பிள்ளை களைத் தேடிச் சேர்ப்பதில் இயக்குனர் மிகவும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டார். விசேட

தேவையுடைய பிள்ளைகள் எங்கெல்லாம் இருக்கிறார் கள் என்று ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு வீடாகச் சென்றார்கள். அவர்களுக்கு தேவையான கல்வி, சுகாதார ஆரோக்கிய ரீதியிலான உடற் பயிற்சிகள் என்பன வழங்கப்படும். எனவே தங்களுடைய கல்வி நிலையத்திற்கு பிள்ளைகளை அனுப்பி வையுங்கள் என்று ஒவ்வொரு வீடாகச் சென்று விழிப்புணர் வூட்டல்கள் செய்தார்கள். அதன் பின்னர் தான் ஒரு பிள்ளையுடன் ஆரம்பித்த கல்வி நிலையம் பத்துப் பிள்ளைகளுடன் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தது. இது ஆரம்பித்து மூன்று மாத கால கட்டத்தில் பிரபல்யமான இக் கல்வி நிலையம் இப்பிரதேச மக்களுக்கு அத்தியா வசியமான தொன்றானது.

**கேள்வி:** அதன் முன்னேற்றம் எவ்வாறு அமைந்துள்ளது?

**பதில் :** இப்பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிலையம் இல்லாத குறைபாடு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. அதனால்தான் அக்கம் பக்கத்திலுள்ள பெற்றோர்கள் ஆரம்பத்திலேயே பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்காக முன் வந்தார்கள். இதனால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. இவர்களை சேர்த்துக் கொள்ள முடியாத பிரச்சினை இருந்தது. ஆதலால் பிள்ளைகள் படிப்பதற்கான பிரத்தியேகமான இடம் ஒன்றைத் தேடினார்கள். எதிர்பாராமல் தற்காலிகமான ஓர் இடமும் கிடைத்தது. அந்த இடத்திற்கு 2019-08-26 ஆம் ஆண்டு நான்கு பிள்ளைகளோடு வந்தார்கள். அவர்களோடு மூன்று ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனாலும் அந்த இடத்தில் தண்ணீர் வசதி இல்லை. வகுப்பறை வசதிகள் இல்லை. மலசல கூட வசதி யில்லை. மின்சார வசதியில்லை. போக்கு வரத்து வசதியில்லை குறிப்பாக எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாமல்தான் இந்தக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அல் ஜன்னாஹ் இந்த இடத்தில் தான் நடைபெறுகிறது. அதற்குரிய உதவி களை நல்ல உயர் குணம் படைத்த தனவந்தர்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் இப்பள்ளிக் கூடத்தின் தேவைப் பாடுகளை அறிந்து உதவி வருகிறார்கள். அவர்களுடைய உதவியுடனேயே இக்கல்வி நிலையம் இயங்கி வருகிறது. தற்போது 45 பிள்ளைகளுடன் 15 ஆசிரியைகளுடன் 4 ஊழியர்களுடன் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

**கேள்வி:** அதன் பௌதீக வளங்கள் அடிப்படைத் தேவைகள் எந்த வகையில் உள்ளன?

**பதில் :**இந்த கல்வி நிலையத்தில் 10 வகுப்பறைகள் இயங்குகின்றன. மூன்று

அலுவலக அறைகள் உள்ளன. இடை வேளையின் போது பிள்ளைகள் விளையாடு வதற்கான சிறிய மைதானம், மலசல கூட வசதிகள் ஆகியன தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் இதற்கான ஒரு நிரந்தரமான இடமோ கட்டட வசதியோ இது வரையிலும் கிடைக்கவில்லை. எனினும் சகோதரர் ரிம்சான் என்பவர் எந்தவிதமான வாடகையும் இல்லாமல் இந்த இடத்தை வழங்கியிருக் கிறார். உண்மையிலேயே அவருக்கு இறைவன் இம்மையிலும் மறுமையிலும் நல்லருள் புரியவேண்டும். அல்ஹாஜ் நஜிமுதீன் அவர்களும் பிள்ளைகள் விளையாடுவதற்கான சிறுவர் பூங்காவை அமைத்துக் கொடுத்துள்ளார். இதில் பிள்ளைகள் இடைவேளை நேரங்களில் தேநீர் அருந்துவதற்காகவும் விளையாடு வதற்காகவும் பயன்படுத்துகிறார்கள். இன்னுமொரு நபர் இந்த கல்வி நிலையத்தின் நலன் கருதி அருகில் ஒரு காணியை வழங்கி இருக்கிறார். அவர் அதற்கான எந்த வாடகையும் எடுப்பதில்லை. அவருக்கும் அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் நல்லருள் புரிய வேண்டும். அத்துடன் இந்த காணிக்கு அருகாமையில் வாடகைக்கு வீடொன்றும் எடுத்து, அதனை அலுவலக நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தி வருகின்றார்கள். இந்த இடத்தில் வாகனத் தரிப்பிடமும் அமைந்துள்ளன. இந்த வீட்டை பெறுவதற்கான முக்கிய காரணம் பிள்ளைகளுக்கு குர்ஆன் வகுப்புக்களை தொடர்ந்து நடத்துவதற்கான திட்டத்திலேயே எடுத்துள்ளார்கள். உண்மை யிலேயே இந்த முயற்சி நல்லதொரு முன் மாதிரியான முயற்சி, வரவேற்கத்தக்கது. இதனை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை. அதே வேளையில் பிள்ளை களுக்கு பகல் உணவும் கல்வி நிலையத்தி லேயே வழங்கப்படுகிறது. இதுவும் பாராட்டத்தக்க அம்சம். எல்லாவற்றையும் விட இக் கல்வி நிலையத்தில் குர்ஆன் வகுப்புக்களையும் நடத்த எடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்க அம்சம். பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக் கொடுத்து வெறுமனே அனுப்புவதை விட குர்ஆன் கல்வியை வழங்கி அனுப்பி வைப்பது மிகச் சிறந்ததே. ஏனென்றால் வேறு எந்தவொரு இடத்திலும் இப்படியான தொரு முயற்சி முன்னெடுக் கப்படவில்லை என்று திட்டவட்டமாக கூறலாம். பொதுவாக இந்தப் பிள்ளைகளை வேறு எந்தக் கல்வி நிலையத்திலும் குர்ஆனைக் கற்றுக் கொள்ள இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள். விசேட தேவையுடைவர்களுக்கான குர்ஆன் வகுப்புக்கள் ஊரிலே இல்லை. அதற்கான வழிகாட்டல் செய்யக் கூடியவர்களும் இல்லை. பயிற்றப்பட்ட ஆசிரியைகளால் தான் வழங்க முடியும்.

மார்க்கக் கல்விகற்ற, மார்க்க உலமாக்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு எப்படி குர்ஆன் ஓதிக் கொடுக்கலாம் எப்படி பராமரிக்கலாம் என்பது பற்றி பயிற்சிகளை வழங்கி அப்பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு கணிசமானளவு தனவந்தர்கள் ஒத்துழைப்பும் பங்களிப்பும் நல்லாதரவும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்

.

**கேள்வி:** இந்த பிள்ளைகள் எந்தவகையில் உளவியல் ரீதியிலான தாக்கத்தை அனுபவிக்கின்றார்கள்?

**பதில் :**விசேட தேவையுடைய பிள்ளைகள் இன்று சமூகத்தில் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல நிலைக்குப் போனதன் பின்பு தாங்கள் எந்தப் பாடசாலையில் படித்தீர்கள் என்று வினவினால் விசேட தேவையுடைய பாடசாலை அல்லது அங்கவீனர்களுடைய பாடசாலைகளில் கற்றோம் என்று சொல்வார்கள். அதனை இன்று வரையிலும் இப்பிள்ளைகள் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் அதே நேரத்தில் உள ரீதியாகவும் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள். அப்படியான ஒரு சூழலில் இருந்து இந்தப் பிள்ளைகளை உருவாக்கக் கூடாது என்ற நோக்கம் இக் கல்வி நிலையத்திற்கு இருக்கிறது. பிள்ளைகள் இந்த கல்வி நிலையத்தை விட்டு வீடு செல்லும் வேளையில் உம்மா வாப்பா உறவினர்கள் யார் சரி கேட்டாலும் விசேட தேவையுடைய நிலையத்தில் இருந்து கற்று வந்தேன் என்று எந்தப் பிள்ளையும் சொல்லக் கூடாது. அப்படி சொல்லும் பட்சத்தில் அவர்கள் உள ரீதியாக பாதிக்கப் படுவார்கள்.

**கேள்வி:** இங்கு கல்வி புகட்டும் ஆசிரியைகள் பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** இக்கல்வி நிலையத்தில் 14 பயிற்றப்பட்ட சகல இனத்தையும் சேர்ந்த இளம் விசேட தேவையுடைய ஆசிரியைகள் இருக்கிறார்கள். முழுமையான டிப்ளோமா கல்வியை நிறைவு செய்த இரு ஆசிரியைகள் இருக்கிறார்கள். தேசிய கல்வி நிறுவகத்தில் இதற்கான கற்கைநெறி போதிக்கப் படுகின்றன. இன்னும் இரண்டு ஆசிரியை மார்கள் இறுதி பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஏனைய அனைத்து ஆசிரியைகளும் எங்கெல்லாம் இந்த விசேட தேவையுடையவர்களுக்கான பயிற்சி நெறிகள் செயலமர்வுகள் நடை பெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று நல்ல பயிற்சி நெறியை நிறைவு செய்த

ஆசிரியர்கள் இங்கு இருக்கிறார்கள். அதே போன்று விசேட தேவையுடைய கல்வியை யும் இங்கேயும் ஆசிரியைமார்களுக்குப் போதிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சி நெறியை நிறை செய்தவர்களுக்கு தலா 20000 ருபாய் ஊழியம், அடுத்தவர்களுக்கு தலா ரூபாய் 15000 வும் பயிற்சிக்காக புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தலா ரூபா 10000 என்ற அடிப்படையில் ஊழியம் வழங்கப்படுகின்றன. குறிப்பாக தகுதியும், திறனும் வாய்ந்த அர்ப்பணிப் போடு சேவையாற்றக் கூடிய ஒரு ஆசிரியை குழாம் இங்கு இயங்குவதை நான் நேரில் கண்ணுற்றேன் என்று கூறிக் கொள்வதில் உவகை அடைகின்றேன்.

பிள்ளைகளுக்கான அனைத்து வளங்கள் தொடர்பில் மின்சாரம் தண்ணீர் வசதிகள் உட்பட சகல பௌதீக வளங்களு டன் இக்கல்வி நிலையம் இயங்குகிறது. இங்கு வரும் வறிய கஷ்டமான பிள்ளை களுக்கு காலைச் சாப்பாடு வழங்குதல், போக்கு வரத்து வசதிகள் வழங்குதல், மருத்துவ உதவிகள் வழங்குதல், சத்துணவு, பால்மா, பம்பஸ் வழங்குதல் மற்றும் முற்றாக இலவசக் கல்வியை வழங்கி வருகின்றனர். பிள்ளைகளுடைய அனைத்து தேவைகளையும் இலவசமாக இந்த கல்வி நிலையம் செய்து கொடுக்கின்றது. அவர்களை சுற்றுலாவும் அழைத்துச் செல்லுகின்றனர். ஒவ்வொரு வருடமும் தவணைப் பரீட்சைகள் நடை பெறுகின்றன. அவர்களுக்கு உடற் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. விளையாட்டுக்களில் கலந்து கொள்ளச் செய்தல், இன மத வேதமின்றி எல்லாயின மக்களுடைய பிள்ளைகளும் இங்கு படிக்கின்றனர். எல்லாப் பிள்ளைகளும் ஒரே சமமான முறையில் சலுகைகளையும் உரிமைகளை யும் வழங்கி வழிநடத்தப் படுகின்றார்கள்.

**கேள்வி :** கல்வி நிலையத்தினரின் எதிர்பார்ப்புக்கள் எவை?

**பதில் :** தனவந்தர்கள் இதற்காக காருண்ணிய உதவிகளை புரிந்து வருகிறார்கள். இவை நல்ல விடயம். எனினும், இதற்கு பண ரீதியிலான பங்களிப்பு மட்டுமல்ல தம்மால் முடியுமான அறிவு ரீதியிலானஆலோசனைகளையும் உடல் ரீதியிலான பங்களிப்பையும் பலரும் பலவாறு வழங்க வேண்டும். இதனுடைய நீடித்த வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பாக அமையும். அதிலும் மிக முக்கியமாக விசேட தேவையுடைய பிள்ளைகள் இருந்தால் வீட்டில் வெறுமனே முடக்கி வைக்காமல் வெளியே அந்தப் பிள்ளை களைக் கொண்டு வந்து இவ்வாறான கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்ஜன்னாவுக்கு நிரந்தரமான இடவசதி இல்லை. அதனைப் பெற்றுக் கொள்ளுவதற்கான முயற்சிகளைச் செய்து

வருகின்றார்கள். விசேட தேவையுடைய பிள்ளைகளின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு இப்பிள்ளைகள் நிரந்தரமானதொரு இடத்தில் இருந்து சகல வசதிகளுடன் கற்பதற்கான காணி கட்டட வசதிகள் அவசியம். அதற்காக நாங்கள் உதவ வேண்டும். அதே வேளை யில் இது வரையிலும் அல்ஜன்னாஹ்வின் வளர்ச்சிக்காக உதவி புரிந்த அனைவருக் கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

**கேள்வி:** நீங்கள் அகில இலங்கை வை. எம். எம்.ஏ. இன் தேசியத் தலைவர் என்ற நோக்கில் இங்கு மேற்கொண்ட கள விஜயம் குறித்த மதிப்பீடுகள் எப்படி?

**பதில்:** இந்த இடத்திற்கு ஒரு பிரல்யமான சிவில் சமூக அமைப்பொன்றின் தேசியத் தலைவர் என்ற ரீதியில் இப்பிள்ளைகளை நேரில் சந்தித்து, அவர்களுடன் இருந்து உணவு அருந்த கிடைத்தமையையிட்டு நான் மற்றற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அதேவேளை என்னுடைய விஜயத்தினால் இந்நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் ஆசிரியை, பிள்ளைகள் ஆகியோருடைய உள்ளத்தில் மனமகிழ்ச்சியைக் காணக் கூடியதாக இருந்தது. முக்கியமான பிரதிநிதிகள் இக் கல்வி நிலையத்திற்கு வந்து பார்த்து ஆலோசனைகளை அறிவுரைகளை வழங்கக் கூடியவர்கள் வருவது இக்கல்வி நிறுவனத்திற்கு பெரும் பக்கப் பலமாக அமையும்.

இப்படி வந்து பார்வையிட்டது என்பது இந்தக் கல்வி நிலையத்திற்கு பெரும் ஒத்துழைப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன். பொது வேலை செய்யும் நிறுவனத்தின் தலைவர் ஒருவர் வந்து அவர்களோடு நட்புறவோடு கைகுலுக்கிக் கொண்டு மனிதாபிமான உதவி செய்ய வந்தமை ஒரு முக்கியமான விடயம். ஏனென்றால் அவர்களுடைய அனுபவங்கள், ஆற்றல்கள் அனைத் தையும் இக்கல்வி நிலையம் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும். குறுகிய கால கட்டத்தில் நிறைய வழிகாட்டல்களை ஆலோசனைகளை வழங்க வழி கிடைக்கும்.

**கேள்வி:** உங்களுடைய இந்த தனிப்பட்ட கள விஜயத்தின் மூலம் அவர்கள் உங்களி டத்தில் முன் வைத்த கோரிக்கைகள்?

**பதில்:** எதிர்காலத்தில் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு வழிகாட்டல், விழிப்புணர்வு, செயலமர்வு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்துள்ளார்கள். பெற்றோர்கள் தொடர்ந்து அந்தப் பிள்ளையைப் பார்த்து பார்த்து மனம் சலித்துப் போகாமல் இருப்பதற்கான உற்சாகம் ஊட்டுதலுக்கான

வேலைத்திட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை யொன்றையும் முன் வைத்துள்ளார்கள். அதற்கு நான் இணக்கம் தெரிவித்ததுடன் நல்ல வளவாளர்களைக் கொண்டு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாக உறுதியளித்துள்ளேன். கர்ப்பிணித் தாய்மார்கள் மத்தியில் மனதை உறுத்தும் அதிர்ச்சி செய்திகளை கேட்டு இப்படியான பிள்ளைகள் பிறப்பதற்கான வாய்ப்பு உள்ளன. கர்ப்பிணித் தாய்மார்கள் கவனக் குறைவாக இருப்பதனால் இவ்வாறான பிள்ளைகள் பிறக்கின்றார்கள். எனவே, இப்பிரதேசத்திலுள்ள தாய்மார் களுக்கான விழிப்புணர்வூட்டல் நடத்து வதற்கான திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளன. இதன் மூலம் நல்ல பிள்ளை களை ஆரோக்கியமான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள இயலும். இவை தவிர பிள்ளைகளுக்கான பகல் உணவு வழங்குதல், மருத்துவ உதவிகள் இப்படி பல்வேறுபட்ட கோரிக்கைகளை அடுக்கடுக்காக முன் வைக்கப்பட்டன. எனினும் உண்மையிலே சில பிள்ளைகள் மருத்துவ உதவிகள் இல்லா விட்டால் அப்பிள்ளைகளை பராமரிக்கமுடியாது. உணவு வழங்குவது கட்டாயம் எனவே இயலுமானளவு உதவிகளை வழங்கு வதற்கு நான் கவனம் செலுத்தியுள்ளேன்.

தினகரன்

2022-02-04

# தியாகங்களின் பெருமையை இளம் தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும்

**கொரோனா தொற்று இன்றும் உலகை தன்பிடிக்குள் இருந்து விட்டு விடாத சூழலில் இலங்கையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் இந்த கால கட்டத்தில் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வை. எம். எம். ஏ பேரவையின் விசேட, சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் தொடர்பில் இக்கட்டுரை வெளிவருகிறது.**

கொரோனா தொற்றால் இலங்கைக்கு ஏற்படும் ஆபத்தை தணிக்கும் வகையில் அரசு பூஸ்டர் தடுப் பூசி வரை சென்று உயிர் ஆபத்துக்களை தடுப்பது மட்டுமல்லாமல் தொடர்ச்சியான கட்டுப் பாட்டு ஒழுங்குகளை முன்னெடுத்து வரும் இந்த சந்தர்ப்பத்தில் வழக்கம் போன்று தேசத்தின் அபிமானத்தை பாதுகாக்கும் வகையில் 74 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். கொரோனா தொற்று சுகாதார விதிமுறைகளுக்கு அமைய எமது வை. எம். எம். ஏ. பேரவை தலைமை யகத்தில் காலையில் தேசிய கொடி ஏற்றப்படும். பின்னர் நாட்டின் சுபிட்சத்திற்கும் பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாடு மீட்சி பெறுவதற்கும் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மான விசேட துஆப் பிரார்த்தனை யொன்றும் காலையில் இடம்பெறும். பின்னர் பகல் 2.30 மணிக்கு வை. எம். எம். ஏ. பேரவையின் கேட்போர் கூடத்தில் பாகிஸ்தான் லாகூரில் நடைபெற்ற “சாவாட் கிக்” குத்துச் சண்டை போட்டியில் கலந்து கொண்டு இலங்கைக்கு 11 பதக்கங்களை பெற்றுக் கொண்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் மற்றும் அவர்களுக்கு பணப்பரிசு வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

**கேள்வி :** பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்திற்கு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத் தனத்தில் இருந்து எமது நாட்டுக்கு விடுதலை கிடைத்தது. இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில் :** எமது நாடு பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டதாகும் ஆசிய ஜோதி புத்தபெருமானின் காலடி பட்ட பாக்கியமும் இலங்கைக்குண்டு. அதே சமயம் பல்வேறு மதங்களையும் போற்றிப் பாதுகாத்துவந்துள்ளது. இந்து மதத்தை எடுத்து நோக்கினால் கண்ணகி வழிபாடு பரவிய நாடு இலங்கையாகும். கண்டி வரலாற்றுப் புகழ்மிக்க “எசலப் பெரஹரா” இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வரலாறும் பெருமைக்குரியதாகும். எமது நாடு கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் மத்தியகாலப்

பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்று மகாவசத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம், தமிழ், கிறிஸ்த மற்றும் பௌத்த மக்கள், ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் ஆட்சி கால கட்டத்தில் இருந்து ஒற்றுமையாக வாழ்ந்த வரலாறுகள் உள்ளன.

குறிப்பாக நான்கு நூற்றாண்டுகள் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்து விடுதலை பெறுவதற்காக எமது மூதாதையர்கள் சுதந்திரத்திற்காகப் போராடினர். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஒத்துழைப்போடு இருந்து தியாகங்கள் செய்தமையாலே இந்த நாட்டில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது.

**கேள்வி :** இந்நாளில் நாட்டுக்காக பல்வேறு உயிர்த் தியாகங்கள் செய்த சுதந்திர புருஷர்களை நாம் நினைவு கூரவேண்டும். அவர்களுக்கு மரியாதை செலுத்துவது ஒவ்வொரு இலங்கையரின் கடமையாகும். காலனித்துவ ஆட்சியிலிருந்து இன்று வரை சிறுபான்மை முஸ்லிம் மக்கள் நாட்டுக்காக பங்காற்றியமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன ?

**பதில் :** அன்று முதல் இன்றுவரை சிறுபான்மையினத்தவர்கள் தங்களுடைய கலாசார விழுமியங்கள், பண்பாடு உரிமைகளோடு சுதந்திரமாக வாழ்ந்து வருகிறார்கள். அதே போன்று முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் 1400 வருட வரலாற்றைக் கொண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றில் இருந்து இன்று வரை எப்பொழுதும் பொதுச் சட்டத்தை மதித்து வாழ்ந்து வந்திருக் கிறார்கள். ஆனால் மதம், கலாசாரம் சார்ந்த விடயங்களில் பொதுச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ள தனியார் சட்டத்தை பின்பற்றி வந்துள்ளனர். அதே போன்று முஸ்லிம் தனியார் சட்டம், தேச வழமை, கண்டியன் சட்டம், அந்தந்த கால கட்டத்தில் அந்தந்த இனங்களுக்கு வழங்கப்பட்ட தனியார் சட்டங்கள். அதன் அடிப்படையில் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

இன, மத பேதமின்றி எல்லோரும் சேர்ந்து போராட்டங்களையும் தியாகங் களையும் செய்தமையினால் தான் இந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்தது. செங்குருதியைக் கொடுத்து சித்திரவதை அனுபவித்து பெற்ற சுதந்திரமாகும். ஒரு முஸ்லிம் பெண்மணி மஹியங்கனை பங்கரகம்மன பிரதேசத்தில் செங்குருதியைக் கொடுத்து தியாகம் செய்துள்ளார். மூதாதையர்களது வீரப் பண்புகள், வீரச் செயல்கள் வரலாற்றில் புகழ் வாய்ந்தவையாகும். மறக்க முடியாத வையாகும். தேசிய வீரர்களாக சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களும் இதில் இடம் பிடித்திருக் கிறார்கள்.

சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள அறிஞர் சித்திலெப்பை, அநகாரிக்க தர்மபால, டி எஸ். சேனாநாயக்க, சேர் ராசிக் பரீத், டி. பி. ஜயா, கலாநிதி ஏ. எம். ஏ.

அஸீஸ், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் முதலிய எல்லோரும் இந்நாட்டுக்காக சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும்பான்மையின மக்களோடு இணைந்து பல தியாகங்கள் செய்தனர்.

**கேள்வி :** சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள போராடிய தேசிய வீரர்கள் பலரை குறிப்பிடலாம். அப்படியாயின் முஸ்லிம்கள் பற்றிக் கூற முடியுமா?

**பதில் :** டி. பி ஜாயா மிக முக்கியமான மனிதர். 1890-01-01 கலகெதரையில் பிறந்து 1960 ஆம் ஜூன் மாதம் முதலாம் திகதி சவூதி அரேபியாவில் மரணம் அடைந்தார். அவர் பல பதவிகளை இந்த நாட்டில் வகித்திருக்கின்றார். 1924-1931 காலப் பகுதியில் சட்ட சபை பேரவையில் உறுப்பினராக இருந்திருக்கிறார். 1936-1947 ஆம் ஆண்டு கால கட்டத்தில் அரசாங்க சபையில் அங்கம் வகித்திருக் கிறார். இவர் 27 வருட காலமாக கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றியவர். 1947 களில் அவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு 1952 வரையிலும் கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார். தொழில் சமூக சேவை அமைச்சராகவும் 1947-1950 வரையிலும் அவர் செயலாற்றியிருக்கிறார். இதில் முக்கியமான விடயம் என்ன வென்றால் 1947 ஆம் ஆண்டு சட்ட சபைக்கு அவர் தெரிவு செய்யப்படும் முன்னர் 27 வருட காலமாக ஸாஹிராவின் அதிபராக இருந்தது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ ஸாஹிராக்களை உருவாக் கியுள்ளார். கொழும்பு ஸாஹிரா, அலுத்கம சாஹிரா, கம்பளை சாஹிரா, மாத்தளை சாஹிரா இவை போன்ற இன்னும் பல கல்லூரிகளை உருவாக்க காரணகர்த்தா வாக இருந்தவர் இவரே. அத்துடன் கொழும்பு ஹைரிய்யா கல்லூரியின் உருவாக்கத்திற்கு அவரே காரணமாக இருந்தார். அவர் அரசியலுக்குள் வர வேண்டும் என்பதற்காக அன்று அந்தப் பாடசாலையின் நலன்கருதி 1948 ஆம் ஆண்டு கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களிடம் கொழும்பு சாஹிராக் கல்லூரியைப் ஒப்படைத்தார்.

கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ், 1935 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு பட்ட அரச உயர் பதவிகளில் இருந்தவர். அவர் தேசிய வீரர் டி. பி. ஜாயா செய்த பணி மிகப் பெறுமதியான பணியெனக் கருதி பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கின்றார். டி. பி. ஜாயா அவர்களின் ஆலோசனைக் கும் வழிகாட்டலுக்கும் அமைய கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ், கொழும்பு சாஹிராக் கல்லூரியை நடத்தினார். அவர் அங்கு 13 வருடங்கள் சரியான முறையில் கடமையாற்றினார். அவரது திறமைகள் சாலச் சிறந்தவை. இயல்பாகவே எல்லோருடனும் இனிமையாகவும் சகஜமாகவும் பழகும் தன்மை மற்றும் தனக்கென ஒதுக்கப்பட்ட வேலையை செவ்வனே நிறைவு செய்யும் பாங்கு அவரை ஒரு தலைசிறந்த கல்விமானாக சிறந்த சமூகப் பற்றாளராகவும் அடையாளப்படுத்தியது எனலாம். இக்கால கட்டத்தில் தான் 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இலங்கையில்

சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருந்த வை. எம். எம். ஏ. கிளைகள் ஒன்று சேர்ந்து வை. எம். எம். ஏ. பேரவை உருவாக்கப் படுகிறது. அது அவர் அதிபராக இருக்கும் காலகட்டம்.

**கேள்வி :** இன்று நாம் 74 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை 72 வது ஆண்டைக் கடந்து கொண்டிருக்கின்றது. இன்றைய சுதந்திர தின நிகழ்வில் நீங்கள் மக்களுக்கு கூற விழைவது என்ன?

**பதில் :** கடந்த காலங்களில் நாங்கள் எவ்வாறு ஒன்று பட்டு ஒற்றுமையாக இருந்து சுதந்திர தினத்தைப் பெற்றுக் கொண்டோமோ அதே போன்று நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுவோமாக இருந்தால் சமகாலத்தில் ஏற்பட்டிருக்கும் சுகாதார, பொருளாதார, சமூக பின்னடைவுகளை இலகுவாக வெற்றி கொள்ளலாம். பொதுவாக இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு சமூகமும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்திடம் நான் வினயமாக கேட்டுக் கொள்வது என்னவென்றால்,

தேசம் என்பது வேறு. அரசாங்கம் என்பது வேறு. ஒரு தேசத்தை தற்காலிமாக ஆட்சி செய்வதற்கு தற்காலிக பாது காவலர்களாக அந்த நிர்வாகிகளே அரசாங்கம் ஆகும். எப்பொழுதும் நாங்கள் தேசம் என்று வரும் போது நாங்கள் முதலாவது தேசத்திற்கு பங்களிப்புச் செய்யக் கூடிய மக்களாக இருக்க வேண்டும். எந்த கட்சியாக இருந்தாலும் அரசாங்கத்தின் எதிர் காலத்தில் சரியான செயற்திட்டங்களுக்கு ஒத்துழைக்க கூடிய சமூகமாக நாங்கள் இருக்க வேண்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் தேசத்திற்காக எதையாவது செய்வோம் என்ற மனப்பாங்கிலே நாங்கள் செயலாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எனவே சுதந்திர தினத்திற்கு பிற்பட்ட காலத்தில் 70 களில் அரசியல் காரணமாக ஒரு சில பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கிறது. எனவே எதிர்கால சமூகம், எதிர்கால தலைவர்கள் பல்வேறு பட்ட இன்னல்களை சவால்களைச் சந்திக்க இருக்கின்றார்கள். அனுபவம் வாய்ந்த தலைவர்கள் எதிர்காலத் தலைவர் களுக்கு வாய்ப்பளித்து அவர்களை வழி நடத்தி இந்த நாட்டை கட்டி எழுப்புவற்கு எல்லோரும் ஒன்றுபடுவோம். இலங்கை சகல வளங்களையும் கொண்ட நாடு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நீர் வளம், கடல் வளம், இயற்கை வளம் என சகல வளங்களையும் கொண்ட நாடாகும் உலகத்தில் முதல் தர நாடாக இருந்து மிளிர்ந்திட வேண்டும். உலக நாட்டு மக்கள் எமது நாட்டுக்கு சுற்றுலாவுக்காக வருகை தரும் இந்த நிலைமையில் எங்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து பல்லின மக்களுடன் சேர்ந்து நாட்டை கட்டி எழுப்ப வேண்டும்.

# பிள்ளைகளுக்கு தேவையான நல்ல சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு

**பிள்ளைகளுக்கு தேவையான களத்தை அமைத்துக் கொடுக்க வேண்டி பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. ஆதலால் பெற்றோர்கள் தம் வீட்டுச் சூழலை ஒரு சந்தோசமான சூழலாக மாற்ற வேண்டும். பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு முன்மாதரிமிக்கவர்களாக இருத்தல் வேண்டும். நாம் எப்பொழுதும் குழந்தைகள் இன்னாரைப் போன்று வர வேண்டும் என நாங்கள் அதிகளவு ஆசைகள் வைப்பதிலும் அதிகளவு கனவு காண்பதிலும் எந்த தவறுகளும் இல்லை என அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.**

முதலாம் ஆண்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு கண்டி கல்வி வலயத்திற்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியில் அதிபர் கலிலுர் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

**அவர் ஆற்றிய உரை :**

கொரோனா தொற்றுக் காலத்தில் எமது மாணவர்களுக்கு சூம் (Zoom) தொழில் நுட்பத்தில் கல்வி போதிக்கப் பட்டது. இக்கல்வி முறை அவர்களுக்கு புதியதாக இருந்தாலும் இப்பிள்ளைகள், பெற்றோர்களின் உதவியுடன் கல்வியைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் இம்மாணவர்கள் பழைய மாணவர்களை விட ஒரு படி மேல் சென்று புதிய தொழில் நுட்ப கல்வி முறையில் கல்வி கற்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை வரவேற்கத் தக்க அம்சமாகும். எக்கால கட்டத்திலும் குழந்தைகள் பற்றி பாராமுகமாக இருந்து விடக் கூடாது. ஒவ்வொரு விடயங்களையும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் சரியான வழிகளை காட்டுகின் றோமோ அதேபோல் எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவகையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப தொழில் வழிகாட்டல் கல்வியையும் வழங்க வேண்டும்.

இதற்கு பெற்றோர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கூடுதலாக தாய்மார்கள் தம் பிள்ளைகள் மீது கவனம்

செலுத்தினாலும் அதற்கு சமமாக ஆண்களும் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் தாய், தந்தை இருவரும் சரி சமமான பங்களிப்பைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு வீடுகளிலும் நல்லதொரு சூழல் உருவாகும். அதேபோன்று பெற்றோர் களாகிய நீங்கள் நேரத்திற்கு வேலை செய்யப் பழக்கிக் கொள்ளுங்கள். அதைப் பார்த்து உங்கள் பிள்ளைகள் பழகிக் கொள்வார்கள். உங்களிடம் காணப்படும் நல்ல பழக்க வழக்கங்களை பிள்ளைகள் பார்த்துப் பழகிக் கொண்டால் மேலானதாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் ஒரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையிலே புத்தம் புதிய விடயங்களை நோக்கி நகருங்கள். நான் 58 வயதாகியும் கூட இன்னும் கல்வி கற்றுக் கொண்டிருக் கின்றேன். என்னுடைய இரண்டாவது எம். பி. ஏ பட்டத்தை இவ்வருட இறுதியில் முடிக்கவுள்ளேன். பெற்றோர்கள் தம் வீட்டில் கல்விச் சூழலை உருவாக்குதல் வேண்டும். பெற்றோர்களும் கல்வி கற்றல் மிக முக்கியம். இன்றைய இளம் பெற்றோர்களும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் மேலும் முயற்சிகள் எடுக்க வேண்டும். உங்களிடம் இல்லாததை உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. எனவே, நீங்கள் பிள்ளைளுக்கு வழிகாட்டுதலை மேற் கொள்ளவதோடு அதற்கப்பால் தாங்களும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தளத்தையும் பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுப்பது இன்றைய தேவையாகும். உலகில் மிகவும் சிறப்பான தொழில் ஆசிரியர் தொழிலாகும். இவ்வாசிரி யர்களால் தான் எல்லாத் துறையினர் களையும் உருவாக்க முடியும். ஆசிரியர்கள் தான் உலகத்தில் முதன்மை வாய்ந்த தொழிலைச் செய்கின்றார்கள். எல்லா நபிமார்களும் முதலில் ஆசிரியராகத் தான் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார்கள். மக்களது எழுச்சிக்காக எதுவிதமான பலாபலன்களையும் எதிர்பாராமல் பாடுபட்டுள்ளார்கள். மனிதனது விரிவான சிந்தனைகளுக்கு திறவுகோலாகத் திகழ்ந்துள்ளார்கள். எனவே, எங்களிடையே காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஆரம்ப காலத்தில் கல்வி கற்பிக்கும் முறையில் ஒரு கொள்கைத் திட்டம் இருந்தது. ஆனால், தற்போது அது இல்லை. அது கற்றல், கற்பித்தில் ஊடாகத்தான் பிள்ளைகளைப் படிப்பித்தல் வேண்டும். நாமும் கற்றல், கற்பித்தல் முறையில் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டே கற்பிப்பவன் தான் ஒரு சிறந்த ஆசிரியன். அந்த வகையில் ஆசிரியர்களாக இருந்தால் என்ன அல்லது பெற்றோர்களாக இருந்தால் என்ன இரு சாராரும் மென்மேலும் கற்றலை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு ஆசிரியர்களிடத்திலும் உள்ளத்தில் ஒரு விடயம் இருக்க வேண்டும். அதாவது ஒரு ஆசிரியர் ஓய்வு பெறும் போது தான் இத்தனை மாணவனை உருவாக்கினேன் என்ற எண்ணம் இருத்தல்

வேண்டும். குறிப்பாக ஒரு உயர் பதவியில் இருக்கக் கூடிய மாணவனை தானே உருவாக்கினேன் என்று அழுத்தமாகச் சொல்ல வேண்டும்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் வெளிநாடுகளில் நல்ல உயர் பதவிகளில் தொழில் புரிகின்றார்கள். என் துணைவியார் கடந்த 20 வருடமாக இப்பாடசாலையில் சேவையாற்றிய ஒருவர். அந்த மாணவர்கள் இன்னும் தொடர்போடு இருக்கின்றார்கள் எனில், இப்பாடசலையில் நல்ல மாணவர்கள் உருவாகியுள்ளார்கள் என்பதை குறிப்பிட முடியும். நான் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்ட அமைப்பாளராக இருக்கும் போது இப்பாடசாலை மாணவர்கள் குத்துச் சண்டையை ஊக்குவிப்பதற்காக அதற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை பெற்றுத்தருமாறு என் மனைவியின் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அக்கால கட்டத்தில் வை. எம். எம். ஏ. ஊடாக அதனைப் பெற்றுக் கொடுத்தேன். இந்தப் பாடசாலையை கட்டி எழுப்புவதற்காக கண்டியிலுள்ள பல்வேறு பட்ட சமூக அமைப்பினர்கள் இதய சுத்தியுடன் செயற்பட்டு வருகின்றார்கள். கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனம், பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், யங் பிரன்ஸ் அமைப்பு, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஏ. ஜீ. பசான் முஹமட், றசீட், பழைய மாணவர்கள் சங்கம், ஸம் ஸம் பவுண்டேசன், தனவந்தர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என இன்னும் பலரையும் குறிப்பிடலாம். கண்டி நகரில் முஸ்லிம் ஆண் பாடசாலையொன்று இல்லாத குறையை நிவர்த்தி செயவற்கான ஆரோக்கியமான தொரு சூழல் இப்பாடசாலையில் நிலவு கின்றது. கண்டியில் ஆண் பாடசாலை தேவை குறித்து நீண்ட காலமாக வலியுறுத்தப்படும் நிலையில் கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட கட்டுகஸ்தோட்டை நகரில் அமைந்துள்ள சாஹிரா ஆண்கள் பாடசாலை அதற்குத் தீர்வாக கல்வி எழுச்சி பெற்று வருதை அவதானிகக் கூடியதாக இருக்கின்றது.

எனவே பெற்றோர்களாகிய உங்களுக்கு இன்றிலிருந்து கடமை ஆரம்பித்து விட்டது. இது உங்கள் பாடசாலை. நீங்கள் எந்தளவுக்கு பிள்ளைகள் மீது அதிகளவு அன்பு செலுத்துகின்றீர்களோ அந்தளவுக்கு பாடசாலை மீதும் அன்பு செலுத்துங்கள். கண்டி கல்வி வலய விளையாட்டுத்துறை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.ஆர். எம். ரிஸ்னி உரையாற்றும் போது, இப் பாடசாலையில் தமிழ், சிங்கள மொழி மூலம் தரம் ஒன்றுக்கான மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள். இலங்கையில் காணப்படுகின்ற பாடசாலைகளில் பல மொழிகளிலும் கல்வி கற்பிக்கப்படுகின்ற ஆண்கள் பாடசாலையாக கண்டி சாஹிரா ஆண்கள் பாடசாலை காணப்படுகின்றது. இப்பாட சாலையில் மாணவர்களுக்கான கல்வி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டி

ருக்கின்ற காரணத்தினால் தான் இப்பாடசாலைக்குப் பெற்றோர் அதிகளவிலான மாணவர்களை போட்டி போட்டுக் கொண்டு அனுமதித் திருக்கின்றார்கள். எனவே, மாணவர்களின் கல்வி நடவடிக்கை சம்பந்தமாக இப்பாடசாலை முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றது. எதிர்காலத்தில் சாஹிரா மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு பாடசாலை நிர்வாகத்திற்கு இருக்கிறது. இதற்கான ஒத்துழைப்பினை சிறந்த முறையில் வழங்க வேண்டும். கண்டியில் ஆண்கள் பாடசாலையில்லை என்ற வெற்றிடத்தை இப்பாடசாலை நிரப்பிக் கொண்டிருக்கின்றது. எனவே இப்பாடசாலையின் வளர்ச்சி முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது. மேலும் இப்பாடசாலையின் கல்வி மாத்திரமல்லாமல் இணைப்பாட விதானத்தில் விளையாட்டுத் துறையில் பல சாதனைகள் படைத்த பாடசாலையாக காணப்படுகின்றது. இப்பாடசாலையின் குத்துச் சண்டை, கராட்டி, கிரிகெட், றகர், காற்பந்து, மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் மாணவர்கள் அகில இலங்கை மட்டத்தில் பல பதக்கங்களைப் பெற்று இப்பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் ஏ.எச். கலிலுர் ரஹ்மான் உரையாற்றும் போது, சாஹிராக் கல்லூரி வளர்ச்சியில் சற்று தொய்வு ஏற்பட்டுள்ள காலத்தில் அதன் அதிபராக கடமையேற்று இன்று வரையிலும் பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்காக சேவையாற்றி வருகின்றேன். இப்பாடசாலையை கட்டி எழுப்புவதற்காக பாடசாலை அபிவிருத்திக் குழு, ஆசிரியர்கள், பழையமாணவர்கள். அரசியல்வாதிகள், கண்டி மஸ்ஜித் சம்மேளனம், யங்பிரன்ஸ் இயக்கம், கட்டுகஸ்தோட்டை இஸ்லாமிய நலன்புரிச் சங்கம், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை போன்ற அமைப்புக்களின் உதவியுடன் பாடசாலைகளின் கல்வி, விளையாட்டு, பௌதீக வள அபிவிருத்தி போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கு தேவையான மூன்று ஆண்டுத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா தொற்றால் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டமையினால் கல்லூரியின் இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் மற்றும் பாடசாலைக்கு கேட்போர் கூடம் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் வகுப்பறைகளுடன் கூடிய நான்கு மாடி கட்டடத்தை தனவந்தர்களின் உதவியுடன் கட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் எமது கல்லூரிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் பாடசாலைக்குத் தேவையான நவீன வசதிகளுடன் கூடிய கனணி தொழில் நுட்ப கூடம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக உறுதியளித்துள்ளார். அத்தோடு

அண்மையில் பல்வேறு அமைப்புக்களின் நிதி உதவியுடன் ஸ்மாட் வகுப்பறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் கடந்த காலங்களில் சேறும் சகதியுமாக காணப்பட்ட பாடசாலை நுழைவாயில் சமூக நலன் விரும்பிகளின் உதவியுடன் சீமெந்துக் கற்கள் பதித்து புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. எனவே மிகத் துரிதமாக வளர்ந்து வரும் கண்டி சாஹிரா ஆண்கள் கல்லூரிக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்து வரும் அனைவருக்காகவும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தலை சிறந்த பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை.

இந் நிகழ்வில் கண்டி கல்வி வலயத்தின் விளையாட்டுத் துறை ஆசிரிய ஆலோசகர் எம். ஏ. ஆர். எம். ரிஸ்னி, இலங்கை வானொலி புகழ் பிரபல்யமான மார்க்க உலமா மௌலவி இப்றாஹீம், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் பசான் முஹமட், பெற்றோர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# அழகிய சமூக வாழ்வுக்கான பணி

**சமூக இயக்கச் செயற்பர்ட்டாளர் சஹீட் எம். ரிஸ்மி எப்போதும் துடிப்பபோடு செயலாற்றக் கூடியவர். சமூகப் பற்று மிக்கவர். பல்வேறு சமூக அமைப்புக்களோடு தொடர்பைக் கொண்டவர். மூத்த உயர்தரச் சமூகப் பற்றாளர்களுடன் இணைந்து அறிவைப் பகிர்ந்து கொள்வதே அவரது பலம். அதனால் தான் வை.எம்.எம்.ஏ. இயக்கத்தின் தேசிய பொதுச் செயலாளர். தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர். சமூக கல்வி அபிவிருத்திக்கான திட்டமிடல் இணைப்பதிகாரி உள்ளிட்ட பல உயர் பதவி களில் அவரை உயர்த்தி வைத்திருக்கிறது. அவை மட்டுமல்ல குறி பார்த்து துப்பாக்கி சுடுவதில் தேசிய மட்டப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்றவர். இனங்களுக் கிடையே சகவாழ்வுக்காக அயராது பாடுபடுபவர். தேசமான்ய, தேசகீர்த்தி, ஹபிபுல் இன்சான் போன்ற பல பட்டங்களை யும் சிறப்புக்கயையும் பெற்றவர். இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**கேள்வி:** நீங்கள் மறக்க முடியாத ஆரம்ப கால சமூகப் பங்களிப்பு எவை என்று கூறுவீர்களா?

**பதில் :** 2001 ஆம் ஆண்டளவில் மடவளை யிலுள்ள பிரபல்யமான மதீனா தேசிய பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து நான் பங்காற்றியுள்ளேன். இந்த நிலையில் எமது பகுதியிலுள்ள பிரபல்யமான மதீனா தேசிய பாடசாலை இருந்த போதிலும் ஆங்கிலக் கல்வியின் தேவை கருதி எமது பிரதேச மாணவர்கள் கண்டியிலுள்ள பிரபல்யமான பாடசாலை களை நோக்கிச் செல்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அவசியம் என உணர்ந்தேன். என்னுடைய நண்பன் ஜாசில் என்பருடன் இணைந்து ஹில் கண்டரி என்ற பெயரில் ஓர் ஆங்கிலக் கல்லூரியை ஆரம்பிக்கத் திட்டமிட்டேன். அன்று 76 பிள்ளைகளை வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை இன்று 1100 பிள்ளைகளுடனும், 85 ஆசிரியர்களுடனும் ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. நாங்கள் அந்த நேரத்தில் எடுத்த சரியான முடிவின் காரணமாக எமது பிரதேசத்திலுள்ள பிள்ளைகளை வெளியே அனுப்பாமல் ஆங்கில கல்வி எழுச்சிக்கான பாதையைத் திறந்து வைத்தோம். எமது இஸ்லாமிய தனித்துவமான கலாசார சூழலுக்குள் நல்லதொரு இஸ்லாமிய பாடசாலை ஒன்றை உருவாக்க முடிந்தது என்ற வகையில் மனத்திருப்தி அடைகிறேன்.

**கேள்வி:** தாங்கள் மடவளைப் பிரதேசத்தில் வட்டி ஒழிப்புக்காக கூடுதல் பங்காற்றி இருக்கிறீர்கள். அது பற்றிக் கூற முடியுமா?

**பதில் :** ஆம், அதாவது மடவளையில் வட்டியை ஒழிக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் பலபேர்கள் இங்கு முனைப்புடன் செயற்பட்டனர். ஒரு சமூக நல அமைப்பொன்றை ஆரம்பித்தார்கள். அந்த வகையில் பைதுல்மால், ஹர்துல் ஹசன் போன்ற சின்னச் சின்ன உதவி களைச் செய்து சமூக அங்கீகாரத்தைப் பெற்றனர். எனினும், பின்னர் அது அந்நூர் இஸ்லாமிய நிதி வங்கி நிறுவனமாக மாற்றம் பெற்றது. இது தொடர்பாக நாங்கள் சந்தர்ப்பத்திற்கு இணங்க மார்க்க அறிஞர்களை அணுக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் செயலை

தொடர்ந்து செய்ய முடியாது என்ற காரணத்தினால் இஸ்லாமிய வங்கி முறை கற்கை நெறியைக் கற்ற ஆர்வமுடையவர் ஒருவர் தேவை என்பது உணரப்பட்டது. அதற்கிணங்க அந்த கற்கை நெறியையும் கற்றதோடு மேலதிகமான பட்டப் படிப்பை துறைபோக கற்றேன். அதன் காரணமாக அந்நூர் இஸ்லாமிய வங்கியில் 12 வருடங்களாக அதாவது இன்று வரையும் ஓர் ஆலோசகராக இருந்து செற்பட்டு வருகிறேன்.

அதே வேளை அதன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருக்கிறேன். இது பாரியதொரு நிறுவனமாக மாறி இருக்கிறது. இன்று மடவளையில் யாருமே வட்டிக்காக வங்கிகளை நாடிச் செல்வது இல்லை என்ற நிலை உருவாகி இருக்கிறது. இது சாதாரண நகை வைத்து பணம் எடுப்பதற்கு மட்டுமல்ல இந்த நிதி நிறுவனம் வேறு பெரிய வர்த்தக நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்து பெரியளவில் முதலீட்டை கொண்ட நிதி நிறுவனமாக விளங்குகின்றது. உதாரண மாக, ஒருவர் வீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியில்லை எனில் நாங்கள் அதனைப் பெற்றுக் கொடுத்து அப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளும் நிலைக்கு வளர்ந்துள்ளோம். வட்டியை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை முழு முயற்சியுடன் செய்து வருகின்றோம்.

**கேள்வி:** ஆரம்பகால ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளராக இருந்தீர்கள். தற்போது அரசியலிலிருந்து விலகிச் செயற்படுகிறீர்கள். இதற்கான காரணம் என்ன?

**பதில் :**நான் முழுமையாக அரசியலில் இருந்து ஒதுங்கி குறிப்பாக மக்களுடைய சமூக நலப் பங்களிப்புக்காகவே என்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகிறேன். முதலில் எனது குடும்பத்தினர் அரசியல், சமூக சேவை என்பவற்றுக்கு ஆதரவு வழங்கவில்லை. எனினும் தற்போது என்னுடைய மனைவி பிள்ளைகள் யாவரும் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றனர். அது என்னுடைய சமூக சேவைப் பங்களிப்புக்கு வலு சேர்க்கக் கூடியதாக இருக்கிறது என்று கூற முடியும்.

நான் தேசிய அமைப்பில் முக்கிய அங்கம் வகிப்பதன் காரணமாக ஒரு தனிக்கட்சி என்ற நிலைக்கப்பால் பொது மனிதனாக செயற்பட வேண்டிய நிலை இருக்கிறது. எல்லாக் கட்சிகளின் அரசியல் வாதிகளுடனும், எல்லா அமைச்சர்களுடனும் நெருக்கமான உறவைப் பேணி ஒரு பொதுவான வட்டத்திற்குள் நின்று தற்போது சேவையாற்றி வருகிறேன். ஆரம்ப காலத்தில் அமைச்சர் ரவூப் ஹகீமுடன் இணைந்து செயற்பட்டாலும் தற்போது அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளிட்ட பல சிங்கள, தமிழ் அரசியல் பிரமுகர்களுக்கு இடையில் நட்புறவையும் நெருக்கத்தை யும் ஏற்படுத்தி சமூக மாற்றத்திற்கான பணிகளை செய்து வருகிறேன்.

தற்போது அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் ஆலோசகராகவும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கீழ் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருந்து பொது நலப் பணிகளை செய்து வருகிறேன். இரு பிரதான அமைச்சர்களுடைய முக்கிய பதவிகளை வகித்த போதிலும் கூட பொது நல இயக்கச் செயற்பாட்டின் எழுச்சிக்காக உணர்வு பூர்வமாக பங்காற்றி அந்த இயக்கத்தின் அடையாளச் சின்னமாக இருக்கவே விரும்புகிறேன். இவ்வாறான நிலையில் ஒரு தனிப்பட்ட அரசியல் வாதியின் கீழ் செயற்பட்டால் மற்றுமொரு அரசியல்வாதியிடம் சென்று பதவி அந்தஸ்து பெற்று செயற்பட முடியாது. உண்மையில் அவர்கள் விடவும்

மாட்டார்கள். எனினும் என்னைப் பொறுத் தவரையில் இரு பிரதான கட்சிகளுடனும் இணைந்து கொண்டு செயலாற்றுவதோடு நின்று விடாமல் அமைப்புச் செயற் பாட்டையும் மையப்படுத்தி உயிர் மூச்சாக நின்று பங்காற்றி வருகிறேன். இது பதிய கலாசார மாற்றத்திற்கான வடிவமாகும்.

**கேள்வி:** வை.எம்.எம்.ஏ பேரவையின் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில் :**அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் என்ற பதவி இலகுவானது அல்ல. எனினும் கடந்து மூன்று வருடமாக தேசிய பொதுப் பொருளாளராக கடமையாற்றி யுள்ளேன். தேசிய பொதுச் செயலாளர் பதவியை நான் கடமையேற்றாலும் அது மிகவும் கடினமானது. எனினும் இந்த இயக்கத்திலுள்ள நிர்வாக கட்டமைப்பு பழைமை வாய்ந்தவை. இதில் ஆற்றல், அறிவுத்திறன் மிக்க மூத்த சமூகத் தலைவர்கள், சமூக இயக்கச் செயற் பாட்டாளர்கள் இருக்கிறார்கள். அவர் களுடைய வழிகாட்டல்களை கருத்திற் கொண்டு முன்னெடுத்துச் செல்ல வுள்ளேன்.

நூற்றாண்டைத் தாண்டி இந்த நிறுவனம் சம்மேளனமாக உருவாகி 67 வருடங்களில் 52 தேசியத் தலைவர்களை உருவாக்கிய பெருமை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ இயக்கத்திற்கு உண்டு. எனினும், இந்தச் சம்மேளனத்தை உருவாக்கிய பெருமை ஏ.எம்.ஏ. அஸீஸையே சாறும்.

இறுதியாக நடந்த வை.எம்.எம்.ஏ பேராளர் மாநாடு என்பது மிகவும் வித்தியாசமான முறையில் இடம் பெற்றது. அதே நேரம் கண்டி மாவட்டத்தில் ஜம்இய்யதுல் உலமா சபையின் தெரிவு இடம் பெற்றது. இந்தத் தெரிவுகளுக்காக கடுமையான போட்டி நிலவியதாக நாங்கள் அறிகின்றோம். ஆனால் முழு நாட்டிலும் 116 கிளை நிறுவனங்கள் உள்ளன. இந்த அமைப்பைப் பொறுத்த வரையில் எந்த போட்டியும் இல்லாமல் நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதற்குக் காரணம் கடந்த வருடம் எமது பேராளர் மாநாட்டின் பெயரளவில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. பதவிகளுக்காக கடுமையான போட்டிகள் இருந்தன. அதனை நாங்கள் படிப்பினையாக இவ்வருடம் எடுத்துக் கொண்டு எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டோம். இம்முறை இடம் பெற்ற நிர்வாகத் தெரிவு முறையெல்லாம் விட்டுக் கொடுப்போடு இடம் பெற்றது. இந்த முறையே எதிர்காலத்தில் கிளை களானாலும் சரி, பேரவைகளானாலும் சரி இருத்தல் வேண்டும். இம்முறையில் புதியதொரு மாற்றத்தை நாங்கள் கண்டோம்.

இதிலும் விசேடமாக இம்முறை நிர்வாகத் தெரிவில் புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் கொழும்புக்கு வெளியே தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இது முக்கிய அம்சமாகும். இதில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த எம்.என்.எம். நபீல் தேசிய தலைவராகவும் அநுராதபுரத்தைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.ஐ.எம். நளீம் நடப்பு வருடத்திற்காக தெரிவ செய்யப்பட்டுள்ளார்கள்.

**கேள்வி: வை.எம்.எம்.ஏ அமைப்பு வருடா வருடம் வழங்கி வரும் புலமைப் பரிசில்கள் விடயமாக கூற முடியுமா?**

2000 ஆம் ஆண்டளவில் இருந்து எமது வை.எம்.எம்.ஏ அமைப்பு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக புலமைப் பரிசில் நிதி உதவி வழங்குதல்

ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பலஸ்தீன் நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவராக இருக்கின்ற பௌசான் அன்வர் தலைவராக இருந்த கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அவர் தனது சொந்தப் பணத்தில் ஐந்து பேருக்கு புலமைப் பரிசில் வழங்கியுள்ளார். அது தான் முதல் ஆரம்பமாகும்.

இந்த இயக்கத்தின் முன்னால் தேசிய தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும், காழியார் சபையின் முன்னால் தலைவரும், தற்போதைய கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவருமான நத்வி பஹாவுத்தீனின் இந்த வேலைத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. இதற்கான நிதியினை அறவிட வேண்டும் என்ற நோக்கில் பிரபலமான வர்த்தகரொருவரைச் சந்தித்து உரையாடிய போது முதன் முதலாக 10 இலட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளார். இறுதியாக நான் பொறுப்பெற்ற பின்னர் இந்த புலமைப் பரிசில் நிதி உதவி வழங்கும் திட்டத்திற்காக இரண்டு மில்லியன் ரூபாவை ஆரம்பத்தில் உதவிய அந்த மனிதரே நிதியைத் தந்து உதவினார். இந்த எங்களுடைய கல்விச் சேவைக்காக செல்வந்தர்கள் இன்னும் பலர் தாராளமாக தந்துதவுவதற்கு தயாராக இருக்கிறார்கள். இதன் மூலம் முஸ்லிம்கள் மத்தியில் கல்வி மறுமலர்ச்சியை வெகு விரைவில் காணலாம் என எதிர்பார்க்கிறேன்.

ஐந்து பேருடன் 2000 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதி உதவி வழங்கும் வேலைத் திட்டம் 2017 ஆம் ஆண்டில் 300 பேர் வரையிலான மாணவர்களுக்கு கொடுப்பதற்கு வளர்ச்சி கண்டு இருக்கிறது. எம்முடைய இலக்கு 1000 மாணவர்களுக்கு கொடுக்க வேண்டும். இதற்காக நாங்கள் அறிவித்தல் விடுத்த போது 1111 விண்ணப்பங்கள் எங்களுக்கு கிடைக்கப் பெற்றன. அதில் தான் நாங்கள் 300 பேருக்குக் கொடுத்துள்ளோம். ஐந்து மாவட்டங்களை ஐந்து வலயங்களாகப் பிரித்து அந்தப் பகுதிகளுக்கு நாங்கள் சென்று நேர்முகப் பரீட்சைகளை நடத்தினோம். ஏனென்றால் செலவு செய்து கொண்டு அவர்கள் அங்குமிங்கும் அலையக் கூடாது என்ற வகையில் அவர்களுடைய காலடிக்குச் சென்று நேர்முகத் தெரிவுகளை நடாத்தினோம். மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் செல்வதற்காக வாய்ப்பை கூட்டுவது தான் எமது முழு நோக்கமுமாகும்.

**கேள்வி: நீங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபாவின் விசேட ஆலோசகராக இருந்து கல்விப் பணிபுரிவதற்கான புதிய திட்டங்கள் வகுத்துச் செயற்பட்டுவருவதாக நாங்கள் அறிகிறோம். அது பற்றிக் கூற முடியுமா?**

**பதில் :** அமைச்சர் பைசர் முஸ்தபாவின் ஊடாக எமது சமூகத்தின் எதிர்காலச் சந்ததியினருக்காக கல்வி சமூக மேம்பாட்டுக்கான கல்வி உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் புதிய வேலைத் திட்டத்தை தயாரித்து செயற்பட்டு வருகிறோம்.

கடந்த காலத்தில் எமது முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கணிசமானளவு நிதியை முஸ்லிம் அரபு நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டார். தற்போது நல்லாட்சி அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் ஒரு தடவையாவது அந்நாடுகளுக்குச் செல்லவில்லை. ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் உதவிகள் கிடைக்கின்றன. கடந்த அரசாங்கம் நேரடியாகப் பெற்றுக் கொண்ட தெல்லாம் தடைப்பட்டுள்ளன. அரசாங்கத்திற்கும் அரபு நாடுகளுக்கும் ஏதோ இடை

வெளியொன்று தென்படுவதாக எங்களுக்குப் புலப்படுகிறது.

எனினும், இந்த நிலையைக் கவனத்திற் கொண்டு அமைச்சர் பைசர் முஸ்தபாவின் ஏற்பாட்டில் கொழும்பு சினமன் லேக் ஹோட்டலில் சகல அரபு நாட்டு தூதுவராலயங்களுக்கும் அழைப்பு விடுத்து, கல்வி சமூக மேம்பாட்டிற்கான செயலமர்வை நடத்தி எங்களுடைய திட்டத்தை அறிமுகம் செய்தோம். அந்த வகையில் எல்லா நாட்டு தூதுவராலயங் களும் அனுசரணை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றன.

முழு நாட்டுக்கான கல்வித் திட்டத்தை முதற் கட்டமாக கொழும்புக் கும் கண்டிக்கும் மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளோம். கொழும்பில் எட்டு பாடசாலைகளையும் கண்டியில் எட்டு பாடசாலைகளையும் தெரிவு செய்துள் ளோம். இதில் விஞ்ஞானப் பிரிவுக்கு இரண்டு பாடசாலைகளும், வர்த்தகப் பிரிவுக்கு இரண்டு பாடசாலைகளும் தொழிநுட்பப் பிரிவுக்கு இரண்டு பாடசாலைகள் என ஒவ்வொரு பாட ரீதியாக தரம் பிரிக்கப்பட்டு அப்பாடசாலை களை நவீன பாடசாலைகளாக அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

குறிப்பாக தற்போது காணப்படும் பல்கலைக்கழக உள் நுழைவை இரு மடங்காக அதிகரிக்கின்ற ஐந்து வருட வேலைத் திட்டத்தையே நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் முஸ்லிம் நாடுகள் இதற்காக முன் வந்திருக்கின்றன. 18 அரபு முஸ்லிம் நாட்டுத் தூதுவர்கள் கலந்து கொண்டனர். இங்கு வருகை தந்த அனைவரும் ஒவ்வொரு பங்களிப்பை நல்குவதாக பொருந்திக் கொண்டார்கள்.

**கேள்வி:** உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் என்ன?

**பதில் :** எமது நாட்டின் 18 தேசிய முஸ்லிம் அமைப்புக்கள் உள்ளன. வை.எம்.எம்.ஏ நிறுவனத்திற்கு அகில இலங்கை மட்டத்தில் 116 கிளைகள் உள்ளன. குறிப்பாக இதில் எமது நாட்டிலுள்ள 18 தேசிய அமைப்புக்களை சேர்த்து செயலாளர் அமையம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறேன். இந்தப் 18 பேரும் மாதாந்தம் கூட வேண்டும். வெவ்வேறு இடங்களில் கூட்டங்கள் நடத்தி தம் அனுபவங்களை யும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வதுடன் மேலும் பல புதிய அனுபவங்களைப் பெற முடியும். அது மட்டுமல்ல வேலைத் திட்டங்கள் முன்னோடி வேலைத் திட்டங்களைப் பகிர்ந்து கொண்டு ஒத்திசைந்த நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு ஏதுவாக அமையலாம். எல்லா விடயத்திலும் ஒத்துப்போக முடியா விட்டாலும் ஒரு சில விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுக்கலாம். இதனை வெகு விரைவில் ஆரம்பிக்க வுள்ளேன்.

அதே போன்று போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தையும் நாங்கள் அரசாங் கத்துடன் இணைந்து முன்னெடுத்துச் செல்கிறோம். கண்டி, மாத்தளை ஆகிய இரு மாவட்டங்களையும் நான் பொறுப்பேற்று இருக்கிறேன்.

எமது பிரதேசத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஊடாக வேலையற்ற யுவதிகளின் தொழில் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு தையல் இயந்திர பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துள் ளோம். இந்த தையல் பயிற்சி நெறியை பூர்த்தி செய்யும் ஒவ்வொரு யுவதிக்கும் தையல் மெஷின்கள் இலவசமாக வழங்கி

வைக்கப்படுகின்றன. இவ்வாறு பயிற்சியை முடித்து வெளியேறும் ஒவ்வொரு குழுவினரையும் இணைத்து கூட்டுறவு சங்கமாகப் பதிவு செய்து எதிர்காலத்தில் ஒவ்வொரு சங்கத்திற்கும் சிறிய ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து மேலும் அவர்கள் தொழில் ரீதியிலான முன்னேற்றத்தை மேற் கொள்வதற்கு திட்டங்களை வகுத்து அவர்கள் கையாள வேண்டிய ஆலோசனைகளையும் நாங்கள் வழங்கி வருகிறோம். கூட்டுறவு சார்பான விடயங்களுக்கு எமது சமூகத்தைச் சார்ந்தவர்கள் பங்குபற்றுவது இல்லை. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக் கவுள்ளோம்.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் மாவட்ட பயற்சி நிலையம் என்று மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது விசேடமாக தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கூட்டுறவுத் துறை, முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையிலும் மிகவும் உவப்பான தொன்றாகும். கூட்டுறவுத் துறையில் வட்டி இல்லை. இலாபம் நஷ்டம் தான் பார்க்கப் படுகிறது. நூற்றுக்கு நூறு வீதம் இஸ்லாமி முறைப்படியிலான வட்டியற்ற வகையில் தான் இதனை மேற் கொள்கிறார்கள். முஸ்லிம்கள் நிதியை சரியான முறையில் பயன்படுத்தக் கூடியதுதான் கூட்டுறவுத் துறை. ஆனால் முஸ்லிம்கள் அதில் இல்லை. கூடுதலான தொழில் வாய்ப்புக் கள் பெற்றுக் கொள்ள முடியும். எதிர் காலத்தில் முஸ்லிம்களை இதில் நாட்டம் கொள்ளச் செய்யும் வகையிலான நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள் ளோம். தமிழ் மக்கள் இந்த கூட்டுறவுத் துறையில் ஆர்வம் காட்டுவது போன்று முஸ்லிம்கள் இல்லை. அதாவது கூட்டுறவுத் துறை தொடர்பாக விரிவுரை நிகழ்த்துவதற்கு தமிழ் மொழியில் ஒருவரைக் கூட பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இவை போன்ற பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வுள்ளோம்.

தினகரன் 2017-09-02

## விருதுகளும் கௌரவிப்பும் Awards and Appreciation

| | |
|---|---|
| 2006 | அல்-ஹிக்மா பாடசாலை வெள்ளி விழா விளையாட்டுப் போட்டியில் கௌரவிக்கப்பட்டது. |
| 2010 | அகில இலங்கை சமாதான நீதவான் |
| 2010 | சிறந்த சமூக சேவையாளர் விருது by KUWA |
| 2012/2013 | சிறந்த மாவட்டப் பணிப்பாளருக்கான விருது, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை |
| 2013 | சாமசிரி விருது |
| 2014 | சிறந்த கிளைத்தலைவர் அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை |
| 2015 | இன நல்லிணக்கத்துக்கான கௌரவம். |
| 2015 | தேசிய பொதுப் பொருளாளர் பாராட்டு, பேராளர் மகாநாடு 2015 |
| 2016 | வை. எம். எம். ஏ. மடவளையின் கௌரவிப்பு |
| 2016 | சாதனையாளர் விருது/ மனித உரிமை அமைப்பு |
| 2017 | Habeebul Insan மனித நேயன் விருது by Mulim league |
| 2017 | அம்பாறை மக்களால் தேசிய பொதுச் செயலாளர் பாராட்டு. |
| 2017 | சமூக சேவையாளர் விருது Disaster welfare . |
| 2017 | சாதனைளர் விருது |
| 2017 | வை எம் எம் ஏ மாவனெல்லை பாராட்டு |
| 2017 | முகவரி தந்த முத்து |
| 2018 | வித்துக்களுக்கு விருது /கிழக்கு மாகாணம் |
| 2018 | கௌரவிப்பு - வை எம் எம் ஏ பேராளர் மாநாடு, கல்வியல் கல்லூரி, அட்டாளச்சேனை. |
| 2018 | சமூக நேயன் விருது |
| 2018 | அஹதியா பாடசாலை பாராட்டு |
| 2018 | சமூக சேவைக்கான விருது by Helping alliance |
| 2018 | சமூக சேவைக்கான தேசமான்ய விருது மனித உரிமை பாதுகாப்பு அமைப்பு |
| 2019 | பிரதம அதிதிக்கான பாராட்டு / நிக்கொள்ள வை எம் எம் ஏ |
| 2019 | தேசிய பொதுச்செயலாளருக்கான குழுப் பணி பாராட்டு (தேசிய தலைவரின் பாராட்டு) |
| 2019 | இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவன பிரியாவிடை |
| 2019 | தேசபந்து விருது |
| 2019 | Halping hand சமூக சேவகன் விருது |
| 2019 | கட்டார் மாநகர சபையின் கௌரவிப்பு |
| 2020 | தேசிய தலைவர் பாராட்டு -பதுளை, இரத்னபுர, ஹம்பாந்தொட்டை மக்கள் சார்பாக |
| 2020 | தேசத்தை வளப்படுத்திய உலகளாவிய குடிமகன் (Global citizenship enriched the nation ) by Eclat United |
| 2020 | கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் கௌரவிப்பு |
| 2020 | தேசிய தலைவர் தெரிவுக்கான பாராட்டு - மடவளை மக்கள் |
| 2020 | தேசிய தலைவர் பாராட்டு பதுளை மாவட்டம் |
| 2020/2021 | சிறந்த தலைமைத்துவம் ( Outstanding leadership) by Manithan cultural art forum. |
| 2021 | “தாகம் தீர்க்கும் நீர்” பாராட்டு |
| 2021 | அனைத்து பல்கலைகழக முஸ்லிம் மாணவர் சங்க கௌரவிப்பு |

| | |
|---|---|
| 2021 | பதுளை மாட்டப் பணிப்பாளரால் பாராட்டு |
| 2021 | இரண்டாவது முறையாக தேசிய தலைவர் தெரிவு -பாராட்டு - ஹகீமியா மத்ரசா கம்பளை. |
| 2021 | அமேசன் கல்லூரி பட்டமளிப்பு விழா கௌரவிப்பு |
| 2022 | அமெரிக்க தூதரக வாழ்த்து |
| 2022 | சேவை ஞாபகார்த்த விருது |
| 2022 | சமூக சேவையாளர் விருது - லேக் ஹவுஸ், தினகரன் 90 வது ஆண்டு நிறைவு |
| 2022 | கெனடியன் Academy பட்டமளிப்பு விழா கௌரவ அதிதி /Key note speaker award. |
| 2022 | சேவை நினைவு விருது (Service memorial Award 2022) by மூதூர் வை எம் எம் ஏ, திருகோணமலை மாவட்டம் சார்பாக. |




# பின்னிணைப்பு

# எங்கள் குடும்பம்

## பேல விதானலே கெதர

இப்ராஹிம் லெப்பே (கொள்ளுப்பாட்டன்)
முஹம்மது இப்ராஹிம் (முப்பாட்டன்)
முஹம்மது இஸ்மாயீல் (பாட்டன்)



அலுத்வலவ்வே கெதர நபீஸா பீபீ (81) பேல | விதானலே கெதர முஹம்மது சஹீட் (91) **(JP)**

மணப்பெண் அழங்காரம், தையற்கலை
(தாய்)

வர்த்தகர்
(தந்தை)

பிரேம் நசீர் சகோதரன் - வர்த்தகர் (60)
ரிஸ்வான் சகோதரன் முயற்சியாளர்- வர்த்தகர் (கடார்) (54)
ரிபான் சகோதரன் - ஓட்டுனர் பயிற்றுனர் (UK) (44)
ரிஷாத் சகோதரன் வர்த்தகர் (ஜப்பான்) (41)

சகீலா சகோதரி (57)
ரிஸானா சகோதரி ஆசிரியை (49)



ஏ.கே. சித்தி ரலீனா ஆசிரியை (மனைவி) | தேசபந்து சஹீட் எம் ரிஸ்மி - சமாதான நீதவான்


SLTS-1,GTC.

MBA-KH, PGD(IBF)-UK , PGD(IB&Mgt)-SL, DIBF(ABP)-UK,DIBM-SL,DIBA-SL




**சஹாத் எம் ரிஸ்மி, (மகன்)**
BEng(Hons)(UK), MTech(Aus)

சுகாதாரம், கல்வி மற்றும் வணிகத் துறைகளில் தகவல் தொழில் நுட்ப நிபுணராக தொழில் புரிந்து, தற்போது வெஸ்.்.பார்மர்ஸ் குழுமத்தின் புகழ்பெற்ற ஆஸ்திரேலிய ஈ-காமர்ஸ் நிறுவனத்தில்



**பஹாத் எம் ரிஸ்மி (மகன்)**
BSc(Hons), MSc (UK), PGD (CAN)

பயோடெக்னாலஜியில் கல்வியாளராகவும், ஆராய்ச்சியாளராகவும், மாணவர் ஆலோசகராகவும்். தற்போது Apotex Inc (கனடா) இல் தரக் கட்டுப்பாட்டு வேதியியலாளராகவும், மெலும் டொராண்டோ இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் ்.பார்மாசூட்டிகல் டெக்னாலஜியில் வருகை தரக்கூடிய தர விரிவுரையாளராாவும், உத்தரவாதக்



**சாரா எம். ரிஸ்மி (மகள்)**
B.Sc.Psychology & Counseling®, Dip in Counseling & Psychology
Advanced Certificate in Psychotherapy.

உளவியல் சிகிச்சை, கல்வி மற்றும் மாணவர் ஆலோசகர்

**சகூரா சபீன் சாலி (மருமகள்)**
Bsc (Hons) UK Graduate in Biomedical Sciences

ஆராயச்சியாளர், கற்பித்தல், மாணவர் ஆலோசகர், உயிரியல் மற்றும் மருத்துவ

**எம். ஐ. மொஹமட் (மருமகன்)**
(BA (Hons), DTTF, DTTC, DTTM

விமான மற்றும் விமான நிலைய மேலாண்மை,
பயணம் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்



**மொஹமட் எம். ரிஸ்மி (மகன்)**
மாணவன்

இலக்கு:
செயற்கை நுண்ணறிவு /தரவு விஞ்ஞானி

விளையாட்டு : கிரிக்கட்



**ஆதம் - ஆயிதா**
(பேரன்) (பேத்தி)

## பின்னிணைப்பு – I

# பத்திரிகை அறிக்கைகள்

## சிறைகளிலுள்ள முஸ்லிம் கைதிகளின் ரமழான் நலன்களை கவனிக்குமாறு மகஜர்

ரமழான் மாதத்தில் முஸ்லிம் சிறைக் கைதிகள் தமது மதக் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கான உரிய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர் உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளதாக அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகளும் மனிதர்களே. முந்தைய காலங்களில் இது போன்ற சிறப்பு ஏற்பாடுகள், வசதிகள், விளக்கமறியல் மற்றும் ஏனைய சிறையில் உள்ள கைதிகளுக்கு வழங்கப்பட்டன.

இம்முறை அந்த வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை என சிறைக் கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே முஸ்லிம் கைதிகளுக்கு ரமழான் மாதத்தில் அவர்களது மதக் கடமைகளைச் செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஷேட பிரார்த்தனைகள், இரவு நேரத் தொழுகைகள், சஹர் மற்றும் இப்தார் ஏற்பாடுகளைச் செய்யுமாறே அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2021 ஏப்ரல் 27

## முஸ்லிம் சிறைக்கைதிகள் குறித்த வை.எம்.எம்.ஏ யின் மகஜருக்கு உரிய பலன்

ரமழானில் முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கு சமயக் கடமைகளைச் செய்வதற்கு வசதி செய்யுமாறு கோரி அனுப்பிய மகஜருக்கு உரிய பலன் கிடைத்திருப்பதாக, அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்ததாவது:

சிறையிலுள்ள முஸ்லிம் கைதிகளுக்கு இந்த ஆண்டு கொரோனாக் காரணமாக தமது மதக் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு உரிய வசதிகள் வழங்க மறுக்கப்பட்டன.

எனினும் இதற்கான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சிறைக்கைதிகளின் பெற்றோர்கள் வை. எம். எம். ஏ பேரவைக்கு முறைப்பாடு முன்வைத்தனர். இதையடுத்து நீதி அமைச்சர் அலி சப்ரி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மற்றும் உயர் அதிகாரிகளுக்கு, அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை சுட்டிக்காட்டியிருந்தது. இதன் பலனாக, சிறைக்கைதிகளுக்கு வழமைபோன்று இம்முறையும் சமயக் கடமைகளில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள கைதிகளுக்கும் நோன்பு திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கோரப்பட்டதற்கிணங்க இவர்களுக்கும் இந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவர் தெரிவித்தார்.

2021 மே 06

## இனங்களுக்கிடையில் ஐக்கியம் தலைத்தோங்க அடித்தளமாகட்டும்

**அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி**

கொரோனாவின் மூன்றாவது அலை மக்களை உலுக்கி மிரட்டிக் கொண்டிருக்கின்ற தருணத்தில் ஈதுல் அல்ஹா புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்றாஹீம் நபி (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தினரதும் தியாகத்தை நினைவு கூர்ந்து கொண்டாடும் பெருநாளில் நாட்டு மக்கள் மத்தியில் சமத்துவம், சகோதரத்துவம், சுபீட்சம், இனங்களுக்கிடையிலான ஐக்கியம் தலைத்தோங்க வழிவகை செய்யும் திருநாளாக இப்பெருநாள் அமைய வேண்டும்.

சுகாதார நடைமுறைகளைப் பேணி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளிகளைப் பேணி அடுத்தவர்களுக்கு தம்மால் கொரோனா தொற்றுத் தீங்கும் வாராமல் முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே இந்நோயில் இருந்து தப்பிக்க முடியும்.

எனவே, நோய் வந்த பின் நொந்து போவதை விட வருமுன் காப்பதே மேல் என்பது நினைவில் நிறுத்தி முஸ்லிம்களாகிய நாங்கள் அனைவரும் இப்பெருநாளைக் கொண்டாட வேண்டும். இத்தியாகத் திருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த ஈதுல் அல்ஹா பெருநாள் வாழ்த்துகள் உரித்தாகுக.

21 ஜூலை 2021

## தடுப்பூசிகள் போடக் கூடாதென்ற தவறான சிந்தனைகளை புறந்தள்ளி அனைவரும் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும்

தடுப்பூசிகள் போடக் கூடாதென்ற தவறான சிந்தனைகளை எல்லாம் தாண்டி கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும் எமது உடன் பிறப்புக்களின் உயிர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு கொரோனா தடுப்பூசிகள் ஏற்றாதவர்கள் வீடுகளில் மறைவாக இருப்பார்களாயின் உடனடியாக தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

இந்த விடயம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் உள்ள அகில இலங்கை வை. எம். எம். ஏ. அமைப்பின் கிளைகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் ஏனைய அனைத்து சிவில் அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து கவனம் செலுத்த வேண்டிய நிலை தற்போது எமது சமூகத்திற்கு மத்தியில் எழுந்துள்ளது.

ஏனென்றால் தவறான சிந்தனையின் காரணமாக 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசிகள் போட்டுக் கொள்ளாதவர்கள் எமது சமூகத்தில் கணிசமானளவு இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொடுக்கும் விடயங்களில் துரிதமாக செயற்பட வேண்டிய தேவை தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது,

குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் சில தவறான சிந்தனையின் காரணமாக நமது சமூகத்தில் கொரோனா தொற்று தடுப்பூசிகள் ஏற்ற முன்வராமல் மறைந்து காணப்படுவதாக கணிப்பீடு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது அவர்களையும் அவர்கள் சார்ந்த குடும்பத்தையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

ஆதலால் தவறான சிந்தனையின் காரணமாக கொரோனா தடுப்பூசிகள் ஏற்றாமல் வீடுகளில் மறைந்து இருப்பார்களாயின் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் அவர்கள் குற்றமிழைத்தவர்களாக கருதப்பட வேண்டிய நிலைமை ஏற்படலாம்

எனவே முஸ்லிம்களாகிய நாம் கொரோனா தடுப்பூசிகள் ஏற்றவில்லை என்ற குற்றச் சாட்டை பெற்றுக் கொள்ளாமல் எங்கெல்லாம் கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றதோ அங்கெல்லாம் தேடிச் சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு அந்தந்த பள்ளி நிர்வாகிகள், சிவில் அமைப்புக்கள், வை. எம். எம். ஏ. கிளையினர்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து மிக அவசர அவசியமாக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

24 ஆகஸ்ட 2021

## குறிஞ்சாக்கேணி படகு விபத்து சமூகத்தின் நன்மதிப்பை பாதுகாப்பதாக இளைஞர்களின் செயற்பாடு அமைய வேண்டும்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை தலைவர் அனுதாபம்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்துள்ள மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார். இந்த விபத்து தொடர்பில் உண்மை நிலைமையைக் கண்டறிந்து அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

துருக்கி நாட்டில் நடைபெறும் மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக விமான நிலையம் சென்ற வேளையில் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பாதுகாப்பான முறையில் படகுப் பாதைச் சேவை இடம்பெறவில்லை யென பொது மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி உடன் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வருதல் வேண்டும். இதற்கான நிரந்தர தீர்வையும் அரசாங்கம் வழங்க வேண்டும். அதனால் ஆத்திரம் கொண்ட பொது மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் இல்லம் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இது இளைஞர்களை பிழையான வழிமுறைகளுக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாகும். சமூகத்தின் நன்மதிப்பை பெற்றுக் கொள்வதற்காக போராடும் இத்தருணத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆரோக்கியமான செயற்பாடுகள் அல்ல.

எனவே இந்த விபத்தின் காரணமாக பெரும் சோகத்தில் மூழ்கியுள்ள நிலையில் மரணம் அடைந்த பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்கள் அவர்களது உற்றார் உறவினர்கள் ஏனைய அனைவருக்கும் ஆழ்ந்த கவலையையும் துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2021 நவம்பர் 25

## சூழ்நிலைகேற்ப நிதானம் பொறுமை மிக அவசியம் முஸ்லிம் மக்களிடம் YMMA பேரவை கோரிக்கை

புனித நோன்பு காலத்தில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் நிதானமாகவும் பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி முஸ்லிம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றம், மின்வெட்டு, உணவுத்தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களால் பொது மக்கள் ஆட்சியார்களின் அலுவலகங்கள், இல்லங்களை சுற்றிவளைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த நாட்டில் தற்போது அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை கவனத்தில் கொண்டு மிகவும் நிதானமாகவும் பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும்.

விசேடமாக இளைஞர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி நடந்து கொள்வது மிகமிக அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை நீங்கி மீண்டும் இந்நாடு மீள் எழுச்சிபெற்று அபிவிருத்தி காண சகல இன மக்களோடும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுடன் இந்தப் புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் அதிகளவு பிரார்த்தனைகளிலும் வணக்கவழிபாடுகளிலும் ஈடுபடுதல் அவசியமாகும் என்று அவர் இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

2022 ஏப்ரல் 04

## நிதானமாகவும் பொறுமையுடனும் பெருநாளைக் கொண்டாடுவோம்!

எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியான சூழலில் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது இனிய பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஸக்காத் எமது வாழ்க்கையையும், பொருட்களையும் தூய்மையாக்கக் கூடியதாகும்.

அது குடும்பங்களின் உறவை மேன்மையடையச் செய்கிறது. ஏழ்மையைத் துடைக்கின்றது. எத்தனையோ வகையான பிரச்சினைகளில் இருந்து சமூகத்திற்கான நலனைத்தரக் கூடியதாக உள்ளது. அது இறைக்க இறைக்க ஊற்றெடுக்கும் ஒன்றாகும். இன்று எமது நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைத் துடைப்பதற்கும் வலுசேர்க்கக் கூடியதாகவும் இருக்கிறது.

அதனால் தற்போதைய சூழலில் வீணான செலவுகளைத் தவிர்த்து தம்மிடம் உள்ள பொருளாதாரத்தை பக்குவத்தோடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியத்துவம் இப்பொருளாதார நெருக்கடியால் ஏனையவர்களும் துன்புற்று கஷ்டங்களை எதிர்நோக்காமல் இருக்க கொடுத்துதவி செய்வதிலும் காட்ட வேண்டும்.

எனவே இப்புனித பெருநாளைக் கொண்டாடும் நாம் ஆடம்பரமான முறையில் பெருநாளைக் கொண்டாடுவதைத் தவிர்த்து நிதானமாகவும் பொறுமையுடனும் செயற்பட வேண்டும். அடுத்தவர் மனம் நொந்து போகாமல் எமது பெருநாளை சிறப்புடன் அமைத்துக் கொள்வோம்.

2022 மே 03

## சமூக,சமயம் பாராது விசேட தேவை உடையோருக்கு சக்கர நாற்காலிகள்

மக்களின் இயலாத் தன்மை, வறுமையைக் கருத்திற்கொண்டு, வை.எம்.எம்.ஏ. பல வழிகளிலும் இன, மத, மொழி பேதமின்றி உதவி உபகாரங்களைப் புரிந்து வருவதாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீத் எம். ரிஸ்மி தெரிவித்தார். ஆயிரம் சக்கர நாற்காலிகள் வழங்கும் வைபவத்திலே அவர், இவ்வாறு குறிப்பிட்டார்.இங்கு பேசிய அவர் தெரிவித்ததாவது:

சகல சமூகத்தவர்களுக்கும் தேவையறிந்து உடனடி நிவாரணங்களை வழங்குவதில் எமது பேரவை கரிசனை காட்டி வருகிறது. கொவிட் - 19 (கொரோனா) தொற்று ஏற்பட்டு மக்கள் அவதியுற்ற கால கட்டத்தில் கூட, எமது பேரவைக்கு கிடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளின் ஊடாக, பாரிய சேவைகளைச் செய்தோம். இன்றும்கூட வை.எம்.எம்.ஏ. பேரவை மிகச்சிறப்பான நன்மை தரும் கைங்கரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிறது.

நாடெங்கும் உள்ள விசேட தேவையுடையோரைத் தேடி, அவர்களுக்காக சக்கர நாற்காலிகளை இலவசமாக வழங்கியுள்ளோம். இந்த நல்ல பணியை இறைவன் அருளால் ஆரம்பித்துள்ளோம்.

சகல சமூகங்களிலும் உள்ள விசேட தேவையுடையோரை அடையாளம் கண்டு, இன, மத, மொழி பேதமின்றி சேவையாற்றுவது, மகிழ்ச்சியளிக்கிறது. வை.எம்.எம்.ஏ. கிளைகள் இவற்றைச் செய்து வருகின்றன.

இந்நிகழ்வில், தேசிய பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாபிர் சவாத், தேசிய பொருளாளர் இஹ்சான் ஹமீத் உள்ளிட்ட மாவட்டப் பணிப்பாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

2020 செப்டம்பர் 29

## முஸ்லிம் விவாகரத்து சட்ட சிபாரிசுகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை கோரிக்கை

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துள்ள தீர்மானங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என வை.எம்.எம்.ஏ. பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. பேரவைப் பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

இந்த திருத்தச் சட்ட கலந்துரையாடல் 2009 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. அது கடந்த ஒன்பது வருடங்களாக இயங்கவில்லை. 2018 ஆம் ஆண்டு பல்வேறு தரப்பினர்களுடைய அழுத்தம் காரணமாக மீண்டும் அந்தக் குழு கூடியது. அந்தக் குழு வெளியிட்ட அறிக்கையின் கருத்து முரண்பாட்டின் காரணமாக இரு தரப்பினாகளாகப் பிரிந்தனர். குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையில் 11 அம்சங்கள் ஷரீஆவுக்கு எந்தளவு ஏற்புடையது என இரு தரப்பினர்களிடையே கருத்து முரண்பாடான அம்சங்கள் முக்கியமான அவதானங்களைக் கொண்டிருந்தன.

ஓய்வு நிலை நீதிபதி சலீம் மர்சூப் தலைமையில் ஒரு குழுவும் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை மற்றுமொரு குழுவாகவும் பிரிந்து இருந்தனர்.

எனினும் இரு தரப்பினரும் முன்வைத்த ஆக்கபூர்வமான சமயோசிதமான கருத்துக்களை ஒன்று திரட்டி இரு தரப்பார்களையும் ஒன்றிணைத்து இந்த அறிக்கையில் காணப்பட்ட முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் நோக்கில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. அமைப்பு 2018 ஆம் ஆண்டில் செப்டம்பர் 3 ஆம் திகதி கொழும்பில் மாநாடொன்றை நடத்தியது. அதில் நீதித் துறையில் விசேட நிபுணத்துவம் பெற்ற 50 பேர்களும், இஸ்லாமிய சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களும், புத்தி ஜீவிகள், பெண்கள் அமைப்புக்கள், உலமாக்கள் என கலந்து கொண்டனர்.

இந்த 11 விடயங்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் கருத்துக் கணிப்பீடொன்றை செய்தோம். இரு தரப்பினர்களையும் எப்படி ஓர் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரலாம் என்ற அறிக்கையொன்றை செய்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முஸ்லிம் சமய கலாசார மற்றும் தபால் துறை அமைச்சின் செயலாளர், நீதி அமைச்சு, ஓய்வு நிலை நீதிபதி சலீம் மர்சூப், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் ரிஸ்வி முப்தி ஆகியோர்களுக்குக் கையளித்தோம்.

ஆனாலும் நாங்கள் முன்னெடுத்த செயற்பாட்டு அறிக்கை தொடர்பில் அரச மட்டங்களுக்கு பரிந்துரை செய்த விடயம் சம்பந்தமாக அந்த இரு குழுக்களிடம் நாங்கள் விளக்கங் கோரியிருந்தும் அவர்கள் அலட்சியப் போக்கிலேயே இருந்தார்கள்.

இது தொடர்பில் இறுதியாக நீதி அமைச்சர், முஸ்லிம் பாராளுமன்ற தெரிவுக் குழுவினர்களிடம் சமர்ப்பித்து ஒரு தீர்மானத்தை எடுங்கள் என சொல்லியிருந்தும் அதைக் கூட அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. எனினும் இது சம்பந்தமாக இரு நட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்பித்த போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள்.

எனினும் உள்வாங்கப்பட்ட அம்சங்கள் ஷரீஆவுக்கு முரண் இல்லாமல் யாரும் பக்க சார்பின்றி பெயருக்குச் செய்த மாதிரியில்லாமல் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும்.

2019 ஜுலை 17

## அனைத்து முஸ்லிம் தேசிய அமைப்புகளும் ஒன்றிணைந்து எதிர்காலத் திட்டம் தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் வை.எம்.எம்.ஏ. தேசிய பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி

மாவனெல்லை, புத்தளம் வணாத்தவில்லு சம்பவங்கள் தொடர்பில் ஆளுநருடனோ அல்லது பாதுகாப்புச் செயலாளருடனோ பேச்சு வார்த்தைகள் நடத்துவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. முஸ்லிம் சமூகம் இன்று இரண்டு பெரும்பான்மைச் சமூகங்களின் இருமுனைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது. அனைத்து முஸ்லிம் தேசிய அமைப்புகளும் ஒன்றிணைந்து எதிர்காலத் திட்டம் தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் என வை.எம்.எம்.ஏ. யின் தேசிய பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, முஸ்லிம் சமூகத்தையும், இளைஞர்களையும் நல்வழிப்படுத்துவதற்காக சகல தேசிய அமைப்புக்களும் தனித் தனியான திட்டங்களைச் செயற்படுத்தக் கூடாது.

தேசிய அமைப்புக்களான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, தேசிய சூரா சபை, ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் மற்றும் வை.எம்.எம்.ஏ. போன்ற அமைப்புக்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட வேண்டும். வை.எம்.எம்.ஏ. நிறுவனம் எந்த தேசிய அமைப்புடனும் இப்பணிக்காக இணைவதற்குத் தயாராக உள்ளது.

எமது இளைஞர்கள் சரியான வழியில் வழிநடத்தப்படாமையே இவ்வாறான அம்சங்களுக்குக் காரணமாகும். காலம் தாழ்த்தாது அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

வை.எம்.எம்.ஏ. அமைப்பு இளைஞர்களை வழிநடாத்தி வருகிறது. பயிற்சிகள் வழங்கி வருகிறது. இதே வேளை அவர்கள் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையில் செம்மைப் படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் நூற்றுக் கணக்கான வருடங்கள் நாம் பெரும்பான்மை இனத்துடன் நல்லுறவுடன் வாழ்ந்து வந்துள்ளோம். மீண்டும் நாம் அந்த உறவினை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்றார்.

2019 ஜனவரி 25

## முஸ்லிம் தனியர் சட்ட விவகாரம் இணக்கப்பாடுகள் ஏற்படும் வரை சட்டத்திற்கு அங்கீகாரமளிக்காதீர்கள் பாரளுமன்ற உறுப்பினர்களுக்கு வை.எம்.எம்.ஏ கடிதம்

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் திருத்த சிபாரிசுகளில் சில விடயங்களில் கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ள சிபாரிசுக் குழுவின் தலைவர், முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப், சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைக்கும் ஓர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வரை சட்டத் திருத்தத்திற்கு அங்கீகாரமளிக்க வேண்டாம் என வை.எம்.எம்.ஏ. அமைப்பு நேற்று அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள நாளை 7 ஆம் திகதி முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளதாக தெரிவித்து கூட்டமொன்றுக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையிலேயே வை.எம்.எம்.ஏ. யினால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வை.எம்.எம்.ஏ. அமைப்பு பல பல கலந்துறையாடல்களை நடத்தி சட்டத் திருத்தம் தொடர்பாக பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கை யொன்றைத் தயாரித்துள்ளது. அவ்வறிக்கை சலீம் மர்சூக், பாயிஸ் முஸ்தபா மற்றும் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி ஆகியோருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இரண்டொரு தினங்களில் இரு தரப்பினரையும் சந்தித்து இணக்கப் பாடொன்றை எட்டுவதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன என வை.எம்.எம்.ஏ. யின் தேசிய பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

2019 பெப்ரவரி 06

## உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட நிறுவனங்களே மக்களுக்கு சேவை வழங்குகின்றன – சஹீட் எம். ரிஸ்மி

இலங்கையிலுள்ள எனைய அரச நிறுவனங்களை விட மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட நிறுவனங்கள் தான் கணிசமானளவு சேவைகளை மக்களுடன் நெருங்கி செய்து வருவதாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இதுவரையிலும் கடமையாற்றிய சஹீட் எம். ரிஸ்மி தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்த பின்னர் அலுவலக உத்தியோகஸ்தர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

இங்கு பல பிரிவுகளாக இருந்த குழுக்களை ஒருமுகப்படுத்தி எனக்கு வேலை செய்ய தேவை இருந்தது. இங்குள்ள ஊழியர்கள் அனைவரும் தனித்தனியயாக சகோதர வாஞ்சையுடன் பழகி அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த கடமைகளை நிறைவேற்றி வந்தோம். இந்த அலுவலகத்தில் கடமைபுரியும் அதிகாரிகள் அனைவரும் வெளிப்படையாகவே இயங்கி வருகின்றனர். இதில் ஒவ்வொருவரும் திறன் வாய்ந்தவர்கள் உள்ளனர். தத்தமது செயற்திறன் மூலமாக எதிர்காலத்தில் முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகளை செய்து வந்துள்ளோம்.

இந்த நிறுவனத்தின் எதிர்பார்ப்பு என்ன? இதன் மூலம் எதனை வழங்க முடியும். இதன் மூலம் ஒரு நபர் பயன் அடைய இருப்பாராயின் அவர்களைச் சந்தோசப்படுத்த வேண்டும். அந்த வகையில் இவர்களுடைய ஊழியர் சேம இலாப நிதி 15 விகிதமாக இருந்தது. அவற்றை 25 விகிதமாக உயர்த்த முடிந்தது. அதன் பின்னர் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கிணங்க ஆயுட் காப்புறுதித் திட்டம் ஒன்றை உருவாக்க முடிந்தது.

இதற்கு மேலாக எமது அதிகாரிகளுடைய தகைமைக்கு எற்ப வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கான வரி அறவீடு சரியான முறையில் இருக்கவில்லை. அதனை தரப்படுத்தி எப்படிப் போகலாம் என்பதை தயாரித்து வரிசைக்கிரமமாக செய்து வைத்துள்ளேன். ஒரு பொதுவான திட்டத்தின் அடிப்படையில் செயற்பட ஏற்பாடு செய்துள்ளோம். எந்த விதமான பிரச்சினையுமின்றி செல்ல முடியும் என நான் கருதுகிறேன்.

எமது நிறுவகம் தொடர்பாக விசேடமாக இலங்கையில் உள்ளூராட்சி மன்ற சபைகள் 341 உள்ளன. இது தொடர்பாக இந்த நிறுவனம் தொடர்பாக எவருக்காவது தெரியுமா? நான் அமைச்சர்களுடன் அரச நிறுவனங்களில் பணியாற்றி உள்ளூராட்சி மன்ற சபைகளுடன் எனக்கொரு தொடர்பு இருந்தது. இந்த வகையில் இந்த நிறுவனம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டும் என் யோசனை இருந்தது. எமது சிவில் சமூகம் நூற்றுக்கு எண்பது விகிதம் இருந்தாலும் இந்நாட்டை நிர்வகிப்பவர்கள் பொது மக்களே. எனினும் எங்களுக்கு விளம்பரம் அவசியமாகும். ஊடகத்துறையின் பக்கம் கைகோர்த்துக் கொண்டு அது சம்பந்தமாக கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்றார்.

2019 ஜூன் 12

## எட்டு மாதங்களினுள் ஹஜ் சட்டம் நிறைவேறும்

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவுறுவதற்கு இடையில் எதிர்வரும் எட்டு மாதங்களுக்குள் இலங்கையின் ஹஜ் ஏற்பாடுகளுக்கென புதிய ஹஜ் சட்ட மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்படும்.

சட்ட வரைபில் அனைத்து தரப்பினரதும் சிறந்த ஆலோசனைகள் உள்வாங்கப்படும் என அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் தன்னைச் சந்தித்த வை.எம்.எம்.ஏ. பிரதிநிதிகளுடன் தெரிவித்தார்.

வை.எம்.எம்.ஏ. யின் தேசிய தலைவர் எம்.என்.எம். நபீல் மற்றும் தேசிய பொதுச் செயலாளர் சஹீட் எம் ரிஸ்மி உள்ளங்கிய குழுவினர் அமைச்சர் ஹலீமை அமைச்சின் காரியாலயத்தில் சந்தித்து ஹஜ் சட்ட மூலத்துக்கான உத்தேச வரை பொன்றினை அமைச்சரிடம் கைளித்தனர்.

வை.எம்.எம்.ஏ யின் ஹஜ் சட்ட வரைபினைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே, “எமது நாட்டில் ஹஜ் ஏற்பாடுகளுக்கென ஒரு தனியான சட்டம் இன்மையால் ஒவ்வொரு வருடமும் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. கடந்த காலங்களில் ஹஜ் முகவர்கள் நீதிமன்றுக்கும் சென்றார்கள். அதனால் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொள்வதற்காகவே ஹஜ்ஜுக்கென சட்டமொன்று நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளது” என்றார்.

அத்துடன் வை.எம்.எம்.ஏ கையளித்த சட்ட வரைபு தொடர்பில் அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்தார். வை.எம்.எம்.ஏ யின் உத்தேச சட்ட வரைபில் பல முன்னேற்றகரமான விடயங்கள் உள்ளடங்கப்பட்டிருந்தன. வரைபின் பிரதி, அமைச்சின் செயலாளரி டமும் கையளிக்கப்பட்டது.

அரச ஹஜ் குழுவுக்கு 10 பேர் நியமிக்கப்பட வேண்டும். அக்குழுவில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பிளர் ஒருவர் உள்வாங்கப்பட வேண்டும். அவரை சபாநாயகரே நியமிக்க வேண்டும். மேலும் ஹஜ் முகவர் சங்ககங்கள் இரண்டின் பிரதி நிதிகள் ஒருவர் வீதம் உள்வாங்கப்பட வேண்டும் என உத்தேச சட்ட வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய 7 பேரை முஸ்லிம் விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நியமிப்பார். இவர்களில் மூவர் துறைசார் நிபுணர்கள். இவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார். 2 மார்க்க அறிஞர்கள், 2 டாக்டர்கள் இருவரில் ஒருவர் பெண் டாக்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு இதற்கு மேலதிகமாக முஸ்லிம் பண்பாடலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நிர்வாக உறுப்பினராக செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உத்தேச வரைபில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஹஜ் கோட்டா பகிர்ந்தளிக்கும் முறை ஹஜ் குழுவே தீர்மானிக்கும். ஹஜ் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு ஓர் விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும். முறைப்பாடுகள் நிரூபிக்கப்பட்டால் ஹஜ் முகவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன் சிறைத் தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இவ்விசாரணைக் குழுவுக்கு ஹஜ் யாத்திரிகர்கள் மாத்திரமல்ல ஹஜ் முகவர்களும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம் என்பன உட்பட மேலும் பல விடயங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளன.

2019 மார்ச் 06

## ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும்

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் நோக்கங்களையும், இலக்குகளையும் அடைந்து கொள்ளும் வகையில் எங்களது செயற்பாடுகள் அமைய வேண்டுமென பேரவையின் பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் நிர்வாகிகளுக்கான செயலமர்வு தவிசாளர் எம்.எஸ் ரஹீம் தலைமையில் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் டாக்கர் ஏ. எம். ஏ. அஸீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் நிர்வாகிகள் இச்செயலமர்வில் கலந்து கொண்டுள்ளீர்கள். இதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கிளையின் தலைவர் என்பவருக்கு ஒரு குறித்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அப்பொறுப்பை யாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முன்னெடுத்தச் செல்ல வேண்டியது அவசியமாகும்.

தலைவர்களிடம் உண்மைத் தன்மை. நம்பகத் தன்மை, தூரநோக்கான சிந்தனை, தொடர்பாடல் திறன், ஏனையவர்களுடன் சுமூகமான உறவைப் பேணுதல், நெகிழ்வுத் தன்மை, கீழ் பணிதல், திட்டமிடல்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல், பயிற்சியளித்தலும் விருத்தி செய்தலும், தீர்மானிக்கும் ஆற்றல் என்பன இருக்க வேண்டும்.

தங்களது பிரதேசங்களிலுள்ள தேவைகளை அறிந்து அவற்றினை சிறந்த முறையில் திறம்பட முன்னெடுக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களுக் கான ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களை தலைமைக் காரியாலயத்திற்கு மாதாந்தம் அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் ஆண்டு முடிவில் எமது அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையினால் வழங்கப்படுகின்ற விருதுகளுக்கு நீங்கள் தெரிவு செய்யப்படலாம். நீங்கள் திட்டமிடுகின்ற செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கிளைகளின் உறுப்பினர்கள் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவை உப செயலாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, பொருளாளர் எம்.ஐ.எம். நளீம், முன்னாள் தலைவர்களான அஷ்ரப் பூமி, ஹிலால் அப்துல்லா எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் முன்னாள் தலைவர் எம். எஸ் ரஹீம் மற்றும் பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி ஆகியோரினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
2017

## கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு YMMA கடும் எதிப்பு

கொவிட் 19 தொற்றின் காரணமாக மரணிக்கும் இலங்கை முஸ்லிம்களின் உடல்களை மாலைத்தீவுக்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு நாட்டுக்கு அல்லது வெளிநாட்டு பிரதேசமொன்றுக்கு அனுப்புவதை எதிர்ப்பதாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம் ரிஸ்மி ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் அவசர நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் வை.எம்.எம்.ஏ பேரவை சார்பாக வெளியிட்டுள்ள அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதாபிமான உதவிக்காவும், எமது துக்கத்தில் பங்கு கொள்வதையிட்டும் மாலைத்தீவு குடியரசின் அரசாங்கத்திற்கும், மாலைத்தீவு மக்களுக்கும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு, தங்களது நிலத்தை வழங்க முன்வந்து தமது ஆதரவை வெளிப்படுத்தியமையானது இஸ்லாத்தின் போதனைகளில் உள்ள அன்பு, கருணை, சாந்தி, சமாதானம் மற்றும் சகோதரத்து வத்தையே வெளிப்படுத்துகின்றது.

இந்நிலையில், தாங்கள் பிறந்து பாரம்பரியமாக வாழ்கின்ற இந்தப் பூமியைத் தவிர, வேறு எந்தப் பூமியிலும் அடக்கம் செய்யப்படுவதை அவர்கள் நினைத்தும் கூடப் பார்க்கமாட்டார்கள்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு, முஸ்லிம்களின் உடல்களை மட்டுமல்ல தமது அன்புக்குரியவர்கள் மரணித்தால் அவர்களது உடல்களையும் அடக்கம் செய்ய எதிர்பார்த்திருக்கும் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ மக்களினதும் சமய, கலாசார மற்றும் சம்பிரதாயத் தேவைகள் தொடர்பில் கவனத்தில் கொள்வார்கள் என்றும் வை.எம்.எம்.ஏ உறுதியாக நம்புகிறது

இதே வேளை, உலக சுகாதார இஸ்தாபனத்தினால் (WHO) வெளியிடப் பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்கிய முறையில், எமது தாய் நாட்டின் கொவிட் 19 தொற்றின் காரணமாக மரணித்த எமது அன்புக்குரியவர்களை அடக்கம் செய்யக் கூடிய விதத்தில் தொழில் நுட்பக் குழு கிட்டிய எதிர்காலத்தில் சாதகமான ஒரு முடிவை வெளியிடும் என்றும் வை.எம்.எம்.ஏ. திடமாக நம்புகின்றது.

2020 டிசம்பர் 20

## அஸ்வர் மறைவுக்கு வை.எம்.எம்.ஏ. பேரவை அனுதாபம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் சமய கலாசர இராஜாங்க அமைச்சருமான மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் இழப்பாகும். மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் மறைவை முன்னிட்டு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய செயலாளர் அல்ஹாஜ் சஹீத் எம். ரிஸ்மி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவர் ஒரு ஊடகவியலாளராக, கவிஞராக, எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக, பாராளுமன்ற உறுப்பினராக, இராஜாங்க அமைச்சராக, பாராளுமன்ற விவகார அமைச்சராக, முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளர் நாயகமாக இருந்து முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகத்திற்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களுக்கிடையே ஒற்றுமைக்காக பெரும் பங்களிப்பு செய்தவர். முன்னாள் பிரதமரும், ஜனாதிபதியுமான ஆர். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று மொழிபெயர்ப்பு செய்தார். மேலும் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் மர்ஹூம் டொக்டர் எம்.சீ.எம். கலீலின் ஆங்கிலப் பேச்சை மாணவராக இருக்கும் போதே கிழக்கு மாகாணத்தில் ஒரு கூட்டத்தில் மொழிபெயர்ப்பு செய்தார்.

வக்பு சபை தலைவராக இருந்து பள்ளிவாசல்களின் நிர்வாகத்தை ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்தார். முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சராக இருக்கும் காலத்தில் நாட்டிலுள்ள கலைஞர்களை வாழும் காலத்தில் பாராட்டி கொரவித்து பொற்கிழி வழங்கி வந்தார்.

பாரளுமன்ற விவகார அமைச்சராக இருக்கும் காலத்தில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு விபரங்களையும் ஒரு நூலாக வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.

கூட்டங்களுக்கு யார் அழைத்தாலும் சென்று வரும் வழக்கமும் இருந்து வந்தது. அத்துடன் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வரும் கடிதங்களுக்கு பதில் எழுதும் பழக்கமும் தன்னோடு எற்படுத்திக் கொண்டார்.

· 2017 செப்டம்பர் 01

## முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கு நோன்பு கால உதவிகள்
## கொழும்பு சிறைச்சாலைக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையின் வேண்டுகோளின் பிரகாரம் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் இரண்டாவது வருடமாகவும் சிறைச்சாலையிலுள்ள முஸ்லிம் கைதிகளுக்கு விசேடமாக 30 நாளும் நோன்பு நோற்பதற்காகவும் மற்றும் நோன்பு திறக்கும் இப்தார் விசேட நிகழ்வுளுக்காகவும் அதற்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையில் இடம்பெற்றது. இந்த உணவுத் தொகையினை அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையின் அத்தியட்சகர் டி. ரஜீவ எஸ். சில்வாவிடம் உத்தியோகபூர்மாக கையளித்தார்.

இதன் போது பெப்ரல் அமைப்பின் உப தலைவரும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் கே. என்.டீன் மற்றும் சிறைச்சாலையின் சமூக நலன்புரி அதிகாரி மகேஸ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

2022 ஏப்ரல் 11

## சிறைக் கைதிகள், அதிகாரிகளுக்கு இஸ்லாமிய பாரம்பரிய உணவு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையால் வழங்கி வைப்பு

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையினால் நோன்புப் பெருநாள் தினத்தில் கொழும்பு ரிமாண்ட் சிறைச் சாலையில் உள்ள கைதிகள் அனைவருக்கும் இஸ்லாமிய காலாசார பாரம்பரிய பகல் உணவு வழங்கி வைக்கும் நிகழ்வு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மியின் தலைமையில் இடம் பெற்றது.

தடுப்புக் காவலிலுள்ள முஸ்லிம் சிறைக் கைதிகளுடன் ஏனைய சிறைக் கைதிகள் ஆயிரத்து 400 பேருக்கும் மற்றும் பாதுகாப்புக் கடமையிலுள்ள அதிகாரிகள் 200 பேர் உள்ளிட்ட மொத்தம் ஆயிரத்து 600 பேருக்கான நோன்புப் பெருநாள் விசேட இஸ்லாமிய கலாசார பாரம்பரிய பகல் உணவு வழங்கி வைக்கப்பட்டது. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் கே.என். டீன், பதில் செயலாளர் ஹாசிப் சுக்ரி, சிறைச்சாலையின் சமூக நலன்புரி அதிகாரி மகேஸ் உள்ளிட்ட வர்கள் பங்கேற்றனர்.

2022 மே 04

## இன, மத, மொழி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுவோம்

இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய உள்ளம் கனிந்த பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். ரிஸ்மி தெரிவித்தார்.

உலக முஸ்லிம்கள் மக்காவில் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்ற ஒன்று கூடும் நிகழ்வு மிகவும் ஆழமான எண்ணக் கருவைக் கொண்டது.

இன, மொழி, பிரதேச எல்லை என்கின்ற வேறுபாடுகளுக் கப்பால் அன்பு, நட்பு, பரஸ்பரம், ஒற்றுமை மற்றும் தியாகம் ஆகிய பெரும் விளக்கங்களை நெறிப்படுத்தும் அம்சங்களை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றது.

எனவே இந்த நல்ல நாளில் எம்மிடையே காணப்படும் வேற்றுமைகளையும் கருத்து வேறுபாடுகளையும் மறந்து எமது சகோதரர்களோடும் ஏனைய சமூகத்தினரோடும் வாஞ்சையோடு பழகி ஒற்றுமையின் யதார்த்தங்களை உலகிற்கு புரிய வைக்க வேண்டும் என தெரிவித்தார்.

2017 செப்டம்பர் 01

**பிள்ளைகளுடன் பெற்றோர் நட்புறவோடு இருத்தல் மிக அவசியமானதொன்றாகும்**

பெற்றோர்களாகிய நாம் எமது பிள்ளைகளுடன் நண்பர்களாக இருத்தல் அவசியமான தொன்றாகும். அவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு கரை சேர்க்கின்ற வரைக்கும் அவர்களோடு இருத்தல் வேண்டும். குறிப்பாக அவர்கள் தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக் கொள்ளும் வரையிலும் இருத்தல் வேண்டும். தொழில்நுட்ப ரீதியிலான வழிகாட்டல்களையும் செய்தல் வேண்டும். கல்வியை நாங்கள் தேடிப் படித்த ஒரு காலம் இருந்தது. இன்று கல்வி வீட்டைத் தட்டிக் கொண்டிருக்கின்றது. இணையத்தளம் ஊடாக வீட்டில் இருந்தவாறே கல்வி கற்கக் கூடிய சூழல் உருவாகியுள்ளது என்று அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்

கம்பளை, மரியாவத்தை அல் மத்ரஸதுல் ஹகீமிய்யா மத்ரஸா மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வும், சான்றோர் கௌரவிப்பும் கெலிஓய, எலமல்தெனிய, பேல்ஸ் கல்யாண மண்டபத்தில் அதிபர், மௌலவி பி.எம். ஹுஸைனுடீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கல்வியால் மட்டும் அடுத்த எதிர்கால சவால்களை வெற்றி கொள்ள முடியாது. ஒழுக்கப் பண்புகள் அவசியமாகும். ஒழுக்கக் கல்வியினை மத்ரஸாக் கல்வியினூடாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு பெற்றோர்கள் மிக கவனம் செலுத்த வேண்டும். தொழில்நுட்ப புரட்சியின் மூலமாக இன்று எல்லோரும் வீட்டிலிருந்தவாறே கைவிரல்களின் மூலமாக தொழில் செய்கிறார்கள். அதைத் தவறாகப் பயன்படுத்தினால் நாங்கள் கற்ற கல்வியின் பலனைக் காணமுடியாது. அதனை நாம் துஷ்பிரயோகம் செய்தவர்களாக மாறி விடுவோம். மார்க்கக் கல்வி இருந்தால் மட்டும் தான் தாம் ஒழுக்க மாண்புகளுடன் நடந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு வீட்டிலும் உம்மா, வாப்பாவின் தொலைபேசிகளை பிள்ளைகள் பார்க்க வேண்டும். பிள்ளைகளுடைய தொலைபேசிகளை உம்மா பார்க்க வேண்டும். மனைவியின் தொலைபேசியினை கணவன் பார்க்க வேண்டும். கணவனின் தொலைபேசியை மனைவி பார்க்க வேண்டும். குறிப்பாக, கணவன், மனைவி இருவருக்கிடையே தொலை பேசியினை சரளமாக, வெளிப்படையாகப் பயன்படுத்தக் கூடிய புரிந்துணர்வு இருத்தல் அவசியமாகும். பெற்றோர் செய்யும் தவறுகளிலிருந்து விடுபட்டு வெளியே வந்து பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகவும் எடுத்துக் காட்டாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் திறமை அடிப்படையில் தான் அவர்களுக்கு வழிகாட்டுதல் வேண்டும். பெற்றோர்களின் தேவைக்கு ஏற்ப வழிகாட்டுதல் செய்யக் கூடாது. வாய்ப்புக்கள் இருக்கக் கூடிய துறைகளை தான் காட்டிக் கொடுக்க வேண்டுமே தவிர, நான் நினைக்கிறதையோ அல்லது பிள்ளைகள் நினைத்து விட்டார்களே என்று ஒத்துழைக்காமல் இந்த உலக சவாலை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கக் கூடிய துறைகளில் அவர்களை முன்கொண்டு செல்ல வழிகளைச் செய்ய வேண்டும்.

இங்கு பல்வேறு அரசியல், சமய, சமூக, படித்த, வியாபார சமூகம் என பல்துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இன்று தனவந்தர்கள் தான் எல்லா வகையிலும் கைகொடுக்கக் கூடிய பெரிய தூண்கள். இன்று பெற்றோர்கள் தான் வீட்டுத் தலைவர்களாவர். அவர்களுக்குத் தான் பாரிய பொறுப்பு இருக்கிறது. எமது பிள்ளைகளை வழி நடத்த வேண்டிய மிக முக்கிய பெறுப்பு இருக்கிறது. நல்ல இலக்கை நோக்கி எமது பிள்ளைகளை வழி நடத்த வேண்டும். இன்றைய எதிர்காலம் மிகவும் எச்சரிக்கையான காலகட்டம். எமது பிள்ளைகளின் எதிர்கால சவால்களை எதிர் கொள்வதற்கு பெரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2021 டிசம்பர் 14

## அரசியல் தீர்வு விடயத்தில் அரசியல்வாதிகள் போன்று சிவில் அமைப்புக்களுக்கும் பொறுப்புண்டு வை.எம்.எம்.ஏ. பொதுச் செயலாளர்

முஸ்லிம்களுடைய எதிர்காலம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. புதிய அரசியல் சீர்திருத்தம் பற்றி நேர், எதிர் மறைகளை கடந்தகால அரசியல் தலைவர்களின் அனுபவப் பின்புலங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து எமது சமூகத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, எல்லா சிவில் அமைப்புக்களினதும் பொறுப்பாகும் என்று அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் தொடந்து கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிந்தித்து தூரநோக்குடன் செயல்படல், இன்றைய கால கட்டத்தில் தேவையாக உள்ளது. தற்பொழுதுள்ள புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டம், புதிய தேர்தல் முறை மாற்றத்தினால் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் எதிர்வரும் தேர்தல்களில் மற்றும் பாராளுமன்றத்தின் சிறுபான்மையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் வடகிழக்கு வெளியே பாரிய வீழ்ச்சியுடன் கூடிய பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளது என்பது சமகாலத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறுக்க முடியாத உண்மையாகும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அணர்த்தங்களின் போது அரசியல் தலைவர்களும், கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தொடர்புகள் இல்லாமல் ஒவ்வொருவரும் அறிக்கைகளை விடுவதும், ஒருமித்த கருத்துக்களைத் தெரிவிக்காமல் இருப்பதும் எமது சமூகத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடாகும் என்பதனை நினைத்து கவலை அடைகிறோம்.

உதாரணமாக 1915 இல் நடைபெற்ற இனக்கலவரத்திற்குப் பிறகு அன்றைய தலைவர்கள் அடுத்த சமூகத்தோடு ஒற்றுமையாக இருந்து உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கால கட்டத்தில் இருந்த முஸ்லிம் தலைவர்களான சேர் ரி.பி. ஜாயா, கலாநிதி எ.எம்.எ. அஸீஸ், சேர் எம்.சீ.எம். கலீல், சேர் ராசிக் பரீத், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆகியோரை நினைவு கூறுவது சாலச் சிறந்தது.

இக்கால கட்டத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலும், எதிர்க் கட்சியிலும் 21 க்கு மேற்பட்டவர்கள் இருந்தும் என்ன செய்தார்கள் என்பது சமூகம் அறிந்த விடயமாகும்.

அரசில் கட்சிக்கு அப்பால் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், பெரிய சிவில் அமைப்புக்களும் ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ந்து இயங்குவது காலத்தின் தேவையாகும். இதனைத் தொடர்ந்து முஸ்லிம் கவுன்சில் இதே நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், இதன் நோக்கத்தை அவர்களால் அடைய முடியவில்லை. இதே போல சூறாக் கவுன்சில் ஒரே குடையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டாலும் தனியாக இயங்கியதால் மற்றவர்களின் ஒற்றுமையின்மையினால் நோக்கத்தை அடைய முடியவில்லை.

ஆனால், முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஏக ஆதரவை பெற்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை இந்த பாரிய பொறுப்பை ஏற்று சகல முஸ்லிம் கட்சிகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், சிவில் அமைப்புக்களையும் ஒரே குடையின் கீழ் அமைப்பை ஆரம்பிப்பது காலத்தின் தேவை என்பதனை வலியுறுத்துகிறோம். உதாரணமாக, இவ்வமைப்பில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை, முஸ்லிம் மீடியா போரம். அகில இலங்கை முஸ்லிம் லீக், ஜமாஅதே இஸ்லாமி, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனம், மலே பேரவை. மேமன் சங்கம், சர்வதேச இஸ்லாமிய நிலையம், முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக துறை சார்ந்த கல்விமான்களும், ஆய்வாளர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ஒரே குடையின் கீழ் அமைக்கப்படும் இவ்வமைப்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் 20வது சீர்திருத்தச் சட்டம், புதிய உள்ளூராட்சி தேர்தல் முறை சம்பந்தமாக விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகளை நடாத்த வேண்டும். இது விடயமாக அரசியல்வாதிகளுக்கு கூட தெளிவு இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதுவரை தீர்க்கப்படாத முஸ்லிம்களின் பிரச்சினைகளை இனங்கண்டு இதனை அரசியல் தலைவர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க ஆவண செய்தல் வேண்டும்.

அதன் முதல் கட்டமாக ஆசிய தலைவர் எம்.என்.எம். நபீல் அவர்களின் வழி நடத்தலின் கீழ் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை மத்திய மாகாணத்தில் புதிய தேர்தல் முறை, அரசியல் யாப்பு சம்பந்தமாக தெளிவுபடுத்தல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

ஒரு சமூகம் அதன் தலைவிதியை அவர்களால் மாற்றிக் கொள்ளாதவிடத்து இறைவனால் மாற்றப்பட மாட்டாது என்பதற்கு உலமா சபை முஸ்லிம் சமூகத்தை குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றிற்கு ஏற்ப வழி நடாத்த வேண்டும் என்றார்.

2017 ஒக்டோபர் 20-22

## பின்னிணைப்பு – 2

# சஹீட் எம். ரிஸ்மியின் உள்ளம் கவர்ந்த துறை சார் இளம் தலைமைத்துவங்கள்

# பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்



**தென்கிழக்குப் பல்கலையின் வித்தொன்று சரித்திரமான கதை!**

☞ தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் முதற்தொகுதி மாணவன்.
☞ தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறையின் ஸ்தாபக தலைவர்.
☞ இலங்கை முஸ்லிம் சமூகத்தின் முதல் சமூகவியல் பேராசிரியர்.
☞ தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவராக இருந்து, முதற் பீடாதிபதி.
☞ தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவராக இருந்து, முதல் உப வேந்தர்.
☞ இலங்கையில் மிகவும் இள வயது (43) உப வேந்தர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் அப்பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி உயர்வு 09.08.2021 முதல் அமுலுக்கு வரும்வகையில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் அப்பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவர் உப வேந்தராக நியமிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும். இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் சமூகவியல் முதற்தொகுதி மாணவராக கல்வி கற்று, அப்பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு, முதல் சமூகவியல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றவர். பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் இள (43) வயதில் உப வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருதினைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சாதாரண குடும்பப் பின்னணியினைக் கொண்டவர். இவர் மிஸ்கீன் பாவா அபூபக்கர் மற்றும் உதுமான்கண்டு வதவியத்தும்மா ஆகியோரின் மூன்றாவது பிள்ளையாவார். மூன்று சகோதரிகளையும் ஒரு சகோதரரையும் உடன் பிறப்புக்களாகக் கொண்ட பேராசிரியர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியை சில்மியத்துல் சிபானாவை மணமுடித்துள்ளார். இவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியினை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றுக்கொண்டார். பல்கலைக்கழக கல்வியினை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். இப்பல்கலைக்கழகத்தில்

சமூகவியல் துறையினைக் கற்ற ஆரம்ப மாணவர் தொகுதியினைச் சேர்ந்த இவர், சமூகவியல் துறையில் முதல் வகுப்புச் சித்தியினையும் பெற்றுக் கொண்டார். 2005 இல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக இணைத்துக் கொள்ளப்பட்ட பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், 2006ஆம் ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறை நிரந்தர விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் சமூகவியல் முதுதத்துவமாணிப் பட்டத்தினை (2010) பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் முரண்பாடு மற்றும் சமாதானம் தொடர்பான பட்டப்பின் படிப்பினை (2010) இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரட்போர்ட் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார். தனது கலாநிதி பட்டப்படிப்பினை உலகில் தலைசிறந்த பல்கலைக் கழகங்களுள் ஒன்றாக விளங்கும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். இக்கற்கையினைத் தொடர்வதற்கான ஆய்வுப் புலமைப்பரிசிலினை பெற்றுக்கொண்ட பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், புகழ்பெற்ற கல்விமான் பேராசிரியர் செய்ட் பரீட் அலடாஸின் வழிகாட்டலின் கீழ் தனது ஆய்வினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமூகப் பிரச்சினைகள், தொடர்பாடல், இனத்துவம், அரசியல், சமூகவியல், சிறுபான்மைக் கற்கைகள் முதலிய ஆய்வுப் பரப்புக்களில் நிபுணத்துவம் பெற்றுள்ள இவர், 2011இல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் இரண்டிற்கும், 2017 இல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ஒன்றிற்கும் பதவியுயர்த்தப்பட்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பிரிவினை தனியான ஒரு துறையாக நிறுவுவதில் பெரும் பங்காற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், 2017ஆம் ஆண்டு அத்துறையின் முதலாவது தலைவராக நியமிக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகத்தின் மாணவர் நலன்புரி சேவைகள், சர்வதேச தொடர்புகள், பல்கலைக்கழக ஆசிரியர் விருத்தி நிலையங்களின் பணிப்பாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பதவி நிலைகளை வகித்த பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், 2019ஆம் ஆண்டு கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு தற்போது வரை அதன் பீடாதிபதியாக செயற்பட்டு வருகின்றார். பீடாதிபதி என்றவகையில் தனது பீடத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இவரது அயராத முயற்சியின் பயனாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் ஐந்து துறைகளினால் (அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், மெய்யியல், புவியியல், தமிழ்) பட்டப்பின் படிப்புக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம்

எமது பிரதேசத்தினை சேர்ந்த மாணவர்கள் முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு உருவாகியள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுரை ஆற்றியுள்ள இவர், உலகத் தரம் வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகள் பலவற்றில் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் தனது ஆய்வு வெளியீடுகளுக்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆய்வாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். உலகத் தரம் வாய்ந்த சஞ்சிகைகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டமைக்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் வழங்கப்படும் கௌரவப் பட்டத்தினை பல முறை பெற்ற பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், 2019 இல் ‘கெய்சிட்’ என அழைக்கப்படும் வியன்னாவில் உள்ள சர்வதேச சம்பாஷனை நிலையத்தின் பட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒரு மாணவனாகவும் சமூகத்தில் ஒரு இளம் ஆய்வாளராகவும் இப்பிராந்தியத்தின் சிறந்த கல்விமானாகவும் இந்நாட்டின் சிறந்த குடிமகனாகவும் செயற்படும் பீடாதிபதி பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், உப வேந்தராக நியமிக்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இவர் மென்மேலும் பல உயர்வுகள் பெற வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!



# பேராசிரியர் பீ.எம். ஜமாஹிர்

பேராசிரியர் பீ.எம். ஜமாஹிர் மர்ஹூம்களான பைக்கீர் முகையத்தீன் மற்றும் சுபைதா உம்மா தம்பதிகளாரின் நான்காவது புதல்வனாக 1968-08-13 இல் மருதமுனையில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்று அதிலும் குறிப்பாக, கலைப் பிரிவில் பொருளியல், வர்த்தகம், அளவையியலும் விஞ்ஞான முறையும் மற்றும் இஸ்லாம் ஆகிய பாடங்களைக் கற்று அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலை மாணவனாக சிறப்புச் சித்தி பெற்று 1990 களில் பேராதனை பல்கலைக் கழகத்தினுள் பிரவேசித்தவர்.

பல்கலைக்கழகத்தில் தனது புலமைத்துவக் களமாக மெய்யியல் (Philosophy) எனும் பாடத்துறையை வரித்துக் கொண்டு இளமாணி B.A. (Hon), முதுகலைத் தத்துமாணி (M. Phil) ஆகிய இரு பட்டங்களையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா (PGD) சான்றிதழையும் பெற்றவர். மேலாக 2004 ஆம் ஆண்டு ISLE எனும் செயல்முறைத் திட்டத்தின் கீழ் 'Wilhem fellowship' எனும் புலமைப் பரிசில் பெற்று தமிழ் நாடு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பள்ளியில் தனது முனைவர் (Ph.D) பட்டத்தையும் நிறைவு செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது செயல் இலக்காக அறிவார்வத்தையும், அர்ப்பணிப்பையும், சுதந்திரத்தையும். மாணவர் ஊக்கமூட்டலையும் முன்னிறுத்தி செயற்பட்டு வரும் பீ.எம். ஜமாஹிர் அவர்கள் உள்நாட்டிலும் பிராந்திய நாடுகளிலும் கலந்த கொண்டு, கணிப்புக்குள்ளான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர். மெய்யியலும் சமயமும், மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும், பொது உளவியில் ஒரு அறிமுகம், ஒழுக்கவியல் ஓர் அறிமுகம், நவீன அளவையியல், அளவையியலும் கோட்பாடுகளும், கார்ணோ வரைபடம் ஓர் அறிமுகம், மெய்யியல் சிந்தனைகள் போன்ற முக்கிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மெய்யியல் கற்கை நெறிக்கான தர நிர்ணயக் குழுவின் அங்கத்தவராகச் செயற்பட்ட இவர், பல்கலைக் கழகங்களில் மெய்யியல் பாடத்தைக் கற்பித்தல் தொடர்பான பாட அறிக்கை B.A. (Subject Benchmark Statement in Philosophy-2011) தயாரித்த முதன்மை வளவாளராவார். தற்போது இப்பாட அறிக்கையை மேன்படுத்தும் குழுவின் அங்கத்தவராக செயற்படுவதும் மனங் கொள்ளத் தக்கதாகும். இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் க.பொ.த. உயர்தரத்தில் அளவையியலும் விஞ்ஞான முறையும் (Logic and Scientific method) என்ற பாடக் கலைத் திட்டக் குழுவின் பிரதான வளவாளராக இருந்து செயற்பட்ட பேராசிரியர் அவர்கள் இந்தப் பாடம் தொடர்பான ஆசிரியர் (Teacher's Guide) வழிகாட்டி கைநூலையும் உருவாக்க பங்காற்றியிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறை தலைவராக கடமையாற்றிய இவர், பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானகள் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் மெய்யியல் பாடத்தின் பாட இணைப்பாளராகவும் செயற்பட்டு மெய்யியல் துறையின் விருத்திக்கு அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. மேலாக, சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் (Senior Student Chancellor), மாணவர் வழிகாட்டி (Mentor), சிரேஷ்ட விடுதிக்காப்பாளர், மாணவர் அமைதியின்மையைத் தடுக்கும் குழுவின் அங்கத்தவர், கலைப்பிட ஆசிரியர் நலன்புரிச் சங்கப் பொருளாளர் எனப் பல குழுக்களிலும் பொறுப்புக்களிலும் சிறப்பாக செயற்பட்ட பேராசிரியர் பீ.எம். ஜமாஹிர், கலை பீடத்தின் ஒவ்வொரு கல்வியாண்டுக்குமான மிகச் சிறந்த மாணவருக்கான தங்கப் பதக்கத்தை வழங்குவதற்கான தேர்வுக் குழுவில் (The awarding Gold Medal for most outstanding student graduating from the faculty of Arts), தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் கடமையாற்றி பீடத்தின் விருத்திக்கு பங்களித்திருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு ஆய்வு மையத்தின் தவிசாளராகவும், அல்லாமா இக்பால் தேசிய மாநாட்டு குழுவின் அங்கத்தவராகவும் இருந்து மாகவி அல்லாமா இக்பாலின் சமய மெய்யியல் சிந்தனைகள் குறித்து தென்கிழக்கு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் நிந்தவூர் போன்ற இடங்களில் உரை நிகழ்த்தியுள்ளதும் அறியத்தக்கது. அத்துடன் பல்வேறு நூல்கள் குறித்து திறனாய்வு செய்தும் இலக்கியப் பங்களிப்பு செய்துள்ளார்.

அதிலும் குறிப்பாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முதலில் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களின் 'விஞ்ஞானங்களும் சமூக விஞ்ஞானங்களும்', 'இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு' ஆகிய இரு நூல்களை அறிமுகப்படுத்தி வெளியிட்ட பெருமைக்குரியவர்.

சமகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கழைக்கழம் மற்றும் களனிப் பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் சுமார் பத்துக்கும் மேற்பட்டவர்களின் பேராசிரியர் பதவி உயர்வுக்கான மதிப்பீட்டுக் குழு, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு பிரதிநிதி எனக் கலந்து கொண்டு சக விரிவுரையாளர்களின் பதவி உயர்வுக்கு தனது பன்முகத் தன்மை கொண்ட வகிபாகத்தை வழங்கியுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

தென் கிழக்குப் பல்கழைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்களின் அன்புக்குரிய மாணவரான பேராசிரியர் ஜமாஹிர் அவர்கள். அவரின் காலப் பகுதியில் அப்பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளராகவும் 2017-2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தனது விடுப்பு லீவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறைப் பேராசிரியராகவும் ஒரு வருடம் சேவையாற்றியும் உள்ளார்.

மேலாக, பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் வெளியிடப்படும் 'பல்கலை' என்ற ஆய்வுச் சஞ்சிகையின் ஆசிரியராகச் செயற்பட்ட இவர். மேற்படி பீடத்தின் மற்றொரு ஆய்வுச் சஞ்சிகையான 'Sri Lanka Journal of the Humanities' , அல்-முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் இலங்கைக் கிளையினால் வெளியிடப்படும் 'International Journal of the Humanities Social Science' மற்றும் திருச்சி இராஜா வெளியீடான "செம்மொழித் தமிழ்" ஆகிய ஆய்வுச் சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருவதும் இவரின் உயிர்ப்பு மிகு புலமைக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.



# பன்முக ஆளுமை கொண்ட ஊடகவியலாளர் இர்பான் இக்பால்

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு, வரலாறு மற்றும் சமூகவியல் தொடர்பிலான தனது இரு தசாப்த கால ஆய்வினை யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்? என்ற தலைப்பில், நவமணி பத்திரிகையில் தொடர்ச்சியாக நூறு வாரங்களுக்கு மேல் வெளியிட்டு வந்ததன் ஊடாக பத்திரிகை வாசகர்கள் மத்தியிலும் பரிட்சயமான இர்பான் இக்பால், இணையப்பரப்பில் சோனகர்.கொம் எழுத்தூடகம் மற்றும் முஸ்லிம் குரல் இணைய வானொலியை நிறுவி, 21ம் நூற்றாண்டின் சமூக ஊடகத் தேவையினை இணையத்தில் நிறுவுவதில் பாரிய பங்காற்றிய, எழுத்தாளரும், ஆய்வாளருமாவார்.

கொழும்பு, றோயல் கல்லூரியின் பழைய மாணவரான இர்பான், பாடசாலைக் காலத்தில், கனிஷ்ட பிரிவில் கல்வி கற்கும் காலத்திலேயே வாராந்த, புலனாய்வு மற்றும் ஜனரஞ்சக அம்சங்கள் நிறைந்த, “பப்படம்” என்ற பெயரிலான கையெழுத்துப் பத்திரிகை வெளியிட்டு தனது எழுத்தாற்றலை வெளிக்காட்டி வந்ததோடு, சமகாலத்தில், தேசிய அளவில் வெளியான எழுச்சிக் குரல் பத்திரிகையில் “முஸ்லிம் அன்பன்” என்ற புனைப் பெயரில் சிறுகதைகள் மற்றும் கவிதைகள் எழுதி வந்தவராவார்.

அத்துடன், 90களின் ஆரம்பத்தில் கொழும்பில் இருந்து வெளியான “மழலை என் செல்வம்” சிறுவர் சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் பணியாற்றியிருந்த இவர், கல்லூரியின் இலக்கிய வெளியீடுகளிலும் தொடர்ச்சியாகப் பங்களித்து வந்ததன் ஊடாக தனது எழுத்துத் துறையை மேம்படுத்திக் கொண்டிருந்தார். தனது கலைப்பயணத்தின் இன்னொரு மைல் கல்லாக, 90களின் நடுப்பகுதியில் இலங்கையின் முதலாவது டிஜிட்டல் இசைத் தொகுப்பான “புயல்” ஆல்பத்தினை இசையமைத்து வெளியிட்டிருந்த இவர், அக்காலப் பகுதியில் ஊடகப் பிரசுரங்களில் தொடர்ச்சியாக இடம்பிடித்துக் கொண்ட கலைஞராகவும் அறியப்படுகிறார். தொழில் ரீதியாக கணணி பொறியியலாளரான இவர், பணி நிமித்தம் லண்டனுக்கு குடிபெயர்ந்த நிலையிலும், தனது ஊடகத்துறை மீதான ஆர்வத்தினால் அங்கு இயங்கும்

ஆங்கில மொழி ஊடகப்பரப்பில் இணைந்து தனது கலைப் பயணத்தை தொடர்ந்ததோடு 2000ம் ஆண்டளவில் தமிழ் மொழி மூலமான வானொலி ஊடகங்கள் ஆரம்பித்த போது, அதில் பங்களித்து, தன்னை ஒரு வானொலி கலைஞராகவும் முழுமையான ஊடகவியலாளராகவும் நிலைப்படுத்திக் கொண்டிருந்தார். தற்காலத்தில், சமூக வலைத்தளங்களில் ஏறத்தாழ பத்து லட்சம் பேர் பின்பற்றும் சோனகர்.கொம் ஊடக வலையமைப்பினை நிர்வகித்து வருவதுடன் இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஊடக பரப்பில் தொடர்ச்சியாக இயங்கி வருகிறார். 90களின் இறுதிப் பகுதியில் நிலா எப்.எம் எனும் பெயரில் இணைய வானொலியொன்றினை ஆரம்பித்த இர்பான், அக்காலப்பகுதியிலேயே சர்வதேச அளவில் எழுத்தாளர்களை ஒன்றிணைக்கும் நிலா முற்றம் என அறியப்பட்ட முழுமையான இலக்கிய தளத்தினையும் ஆரம்பித்து, யுனிகோட் எழுத்துரு தளங்கள் உருவாவதற்கான அடிப்படைப் பங்களிப்பையும் செய்தவராவார்.

ஊடகப் பரப்பில் பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் அறிவாற்றல் ஊடாக சர்வதேச ஆய்வு மாநாடுகளிலும் கலந்து கொள்ளும் இவர், 2018 ஒக்டோபரில் நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சும், சுவிட்சர்லாந்தின் சூரிச் பல்கலையும் இணைந்து கொழும்பில் நடாத்திய சர்வதேச மாநாட்டிலும் ஆய்வாளராக கலந்து கொண்டிருந்தார் தற்போது ஐக்கிய இராச்சியத்தில், University of Derby பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் தனது மேலதிக கல்வியைத் தொடர்ந்து வருவதோடு, தகவல் தொழிநுட்பத் துறையில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார். அவரது குழந்தைகள் இருவரும் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளில் தமது மேற்படிப்பை நிறைவு செய்யும் கட்டத்தை எட்டியுள்ளதோடு, தந்தை வழியில், ஐக்கிய இராச்சியத்தின் தேசிய அளவிலான இளைஞர் எழுத்தாளர் சங்கத்திலும் (Young Writers' Association) அறியப்பட்ட எழுத்தாளர்களாகவும், தமது துறை சார் கல்வியியல் சஞ்சிகைகளில் (Journal) பங்களிக்கும் எழுத்தாளர்களாகவும் திகழ்கின்றனர்.



## கலாநிதி எம்.இஸட்.எம்.. நபீல்

கலாநிதி M.Z.M. நபீல் தனது ஆரம்பக் கல்வியை, ஹெம்மாதக பள்ளிப்போருவை முஸ்லிம் வித்தியாலயம், மடுள்போவை பாதிபிய்யா மு.ம.வி, அல்அஸ்ஹர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பெற்றார். பின் அஸ்ஸலபிய்யா கலாபீடத்தில் சன்மார்க்க பட்டம் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மொழியில் (B.A Hons) பட்டத்தையும் அதே பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய கற்கைத் துறையில் (M.A.) பட்டத்தையும் பெற்றார். அத்தோடு, பிரித்தானியாவின் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கல்விப் பணியில் உதவி ஆசிரியராக் கடமையாற்றிய இவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது, பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர் அறபு, இஸ்லாமிய நாகரிகத் துறையின் தலைவராகவும் இருந்துள்ளார். கண்டி ஸ்ரீதலதா மாளிகையால் நடாத்தப்படுகின்ற Sri Lanka International Buddhist Academy மற்றும் ISLE (Intercollegiate Sri Lankan Studies) யில் 2010 முதல் Visiting Lecturer ஆகவும் கடமையாற்றி வருகின்றார்.

தமிழ், அறபு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய நான்கு மொழிகளிலும் புலமை உடைய இவர், பட்டப் பின் படிப்பு பாட நெறிகளைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்பிப்பதுடன் அப்பரீட்சைக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் மேற்பார்வை செய்பவராகவும் உள்ளார்.

இவர் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதி உள்ளதோடு, தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளிலும் (National and International Conferences) பல ஆய்வுகளைச் சமர்ப்பித்துள்ளார். அத்தோடு பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீட ஆய்வுக்குழுவின் தலைவராகவும் (Chairperson, Faculty Research Committee) கடமையாற்றியுள்ளார்.

எளிமையான இயல்புணர்வும் அனைவரையும் நேசிக்கும் சுபாவமும் கொண்ட இவரது கல்விப் பணிகள் தொடர்வதனூடாக சமூகம் பயனடைய வேண்டும் என்று பிரார்திக்கின்றோம்.

# கலாநிதி சாமிலா தவூத்



கண்டி அக்குறணையை பிறப்பிடமாக் கொண்ட கலாநிதி சாமிலா தாவூத் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றுகின்றார். அவர் தனது பாடசாலை கல்வியினை அக்குறணை சாஹிரா தேசிய பாடசாலை மற்றும் அஸ்கர் தேசிய பாடசாலைகளில் பூர்த்தி செய்து, தனது சட்ட கற்கையினை தொடர்வதற்காக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் இணைந்து கொண்டார். இவர் தனது சட்டமாணிக் கற்கையின் போது மிகவும் சிறந்த பெறுபேறுகளை பெற்றதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பல புலமைப்பரிசில்களை தட்டிக்கொண்டதுடன் இச்சட்டமாணி கற்கை நெறியினை சிறப்புத்தேச்சியுடன் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து, இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையில் தேர்ச்சிபெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

சட்டமாணி பட்டப்படிப்பில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் அதே கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்ற இணைத்துக் கொள்ளப்பட்டார். பின்னர் தனது விடாமுயற்சி மற்றும் தொழில் செயற்திறன் காரணமாக அதே பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராக சேவையாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்காலத்தில் உயர் கல்வி கற்பித்தலுக்கான பயிற்சி சான்றிதழ் மற்றும் வர்த்தக நடுத்தீர்ப்பு டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடித்தார். இவரின் வளர்ச்சியில் அடுத்த படிக்கல்லாக நோர்வே நாட்டின் முதற்தர பல்கலைக்கழகமான ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் பகிரங்க சர்வதேச சட்டத்தில் சட்ட முதுமாணிப் பட்டத்தினை கற்பதற்காக இவருக்கு நோர்வே அரசினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசிலினை குறிப்பிடலாம்.

அத்துடன் அவுஸ்திரேலியாவின் Queensland University of Technology என்ற பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் அதியுயர் பட்டமான கலாநிதி

பட்டத்தினை கற்பதற்கு புலமைப் பரிசிலொன்றினை பெற்றுக் கொண்டதோடு அக்கற்கை நெறியினை 2019 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பூர்த்திசெய்தார். சட்டத்துறையில் இலங்கை முஸ்லிம் பெண்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே கலாநிதி பட்டம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கலாநிதி சாமிலா தாவூத் அவர்கள் சட்ட இளமாணி மற்றும் முதுமாணி மாணவர்களுக்கு கற்பிக்கின்ற அதேவேளையில் சட்ட முதுமாணி மற்றும் கலாநிதி மாணவர்கள் பலரின் ஆராய்ச்சி மேற்பார்வையாராகவும் பரீட்சகராகவும் செயற்படுகின்றார். மேலும் இவர் பல உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். அதுமாத்திரமன்றி அவுஸ்திரேலியா, நோர்வே, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தியா போன்ற இன்னோரன்ன நாடுகளில் பல மாநாடுகளிலும் செயலமர்வுகளிலும் பங்கேற்றுள்ளார்.

அத்தோடு இவர் பல உள்நட்டு மற்றும் சர்வதேச வெளியீடுகளில் தனது ஆக்கங்களையும் வெளியிட்டுள்ளார். கலாநிதி சாமிலா தாவூத் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்தில் பல நிர்வாகத்துறை சார்ந்த விடயங்களிலும் பங்கேற்கின்றார். குறிப்பாக கொழும்பு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பின் சிரேஷ்ட பொருளாளர், மாணவ ஆலோசகர் மற்றும் சட்ட ஆங்கில அமைப்பின் இணைப்பாளர் போன்ற பதவிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

இவரது ஆராய்ச்சி ஆர்வ துறைகளாக நிலையான வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு முதலீட்டு சட்டம், சர்வதேச வர்த்தக மற்றும் வணிகச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், சுற்றாடற் சட்டம் மற்றும் சிறுபான்மை உரிமைகள் ஆகியவை அடங்கும்.

சமூக பணிகளில் ஆர்வம் கொண்ட இவர் இலங்கையை சேர்ந்த பலதுறை சார்ந்த புத்திஜீவிகளை உள்ளடக்கிய அமைப்பொன்றான RPSL Consortium என்கின்ற அமைப்பின் தலைமை செயலாளராகவும் மற்றும் இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார். இதுமாத்திரன்றி, கடந்த காலங்களில் சமுதாய மேம்பாட்டுக்காக வேண்டி பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்சித் திட்டங்களில் வளவாளராகவும் பங்கேற்றி சமூகத்துக்கு மிகவும் அளப்பறிய சேவையாற்றியுள்ளார்.



# பேராசிரியர் எம். ஐ. சபீனா இம்தியாஸ்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட முதுநிலை விரிவுரையாளரகப் பணியாற்றும் கலாநிதி எம். ஐ. சபீனா இம்தியாஸ் அவர்கள் (23.12.2020) ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தாவரவியல் துறையில் பேராசிரியராக (Professor in Botany) பதவியுயர்வு பெறுகின்றார்.

1997ம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீட உருவாக்கத்தின் ஆரம்ப காலத்தில் உதவி விரிவுரையாளராக பல்கலைக்கழக ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட இவர் 1998 ஆம் ஆண்டு நிரந்தர விரிவுரையாளர் நியமனம் கிடைக்கப் பெற்றார்.

தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையளர் தரம் II, தரம் I மற்றும் துறைத்தலைவர், கல்விசார் திணைக்களங்களின் தலைவர், இணைப்பாளர், மாணவர் ஆலோசகர், பணியாளர் மேம்பாட்டு திணைக்களத்தின் தலைவர் என பல்வேறுபட்ட பொறுப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் பல பெற்றதுடன் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக தொடர்ச்சியாக 14.06.2010 முதல் 23.07.2016 வரை இருதடவைகள் கடமையாற்றி பிரயோக விஞ்ஞான பீடத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு தன்னை முழுதாக அர்ப்பணித்து சிறப்பாக செயலாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் சபீனா இம்தியாஸ் அவர்கள் ஆசிரியர் மர்ஹூம் அப்துல் ரஹ்மான் முகமது இஸ்மாயில் மற்றும் சீனி முகமது சல்ஹா உம்மா தம்பதியின் சிரேஷ்ட புதல்வியாக பிறந்த இவர் தனது ஆரம்ப மற்றும் உயர் கல்வியினை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்றதுடன் 1989 ஆம் ஆண்டு நடை பெற்ற உயர்தர பரீட்சையில் உயிரியல் துறையில் சிறப்பு சித்தி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

1995 ஆம் ஆண்டு சிறப்பு தேர்ச்சியுடன் தனது விஞ்ஞானமானி கற்கை நெறியை பேராதனை பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்த இவர் இரண்டு வருடங்கள் உதவி விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டதன் பிற்பாடு மீண்டும் பேராதனை

பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்பின் படிப்பான விஞ்ஞான முதுமானி (Master of Science), முனைவர் (Doctor of Philosophy) கற்கை நெறிகளை திறம்பட பூர்த்தி செய்தார்.

தனது கலாநிதி கற்கை நெறியில் தேர்ச்சி மிகு ஆய்வினை மேற்கொண்டதற்காக பேராதனை விவசாய பட்டப் பின் கற்கை நிறுவகத்தின் (PGIA) உயரிய விருதான சேர் ஜோன் கொத்தலாவல தங்கப் பதக்கத்தினை (Sir John Koththalaavala Gold medal) வென்றார். PGIA இன் வரலாற்றில் இத்தகைய விருதுபெற்ற ஒரேயொருவர் இவரேயாவார்.

2006ஆம் ஆண்டு அமெரிக்காவின் full bright ஆணைக்கு குழுவினால் புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டு அமெரிக்காவின் மிச்சிகன் மாநில பல்கலைக் கழகத்தில் தனது post-doctoral fellowship ஐ வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

அம்பாறை மாவட்டத்தின் முதல் பெண் கலாநிதியான இவர் தற்பொழுது அம்பாறை மாவட்டத்தின் முதல் பெண் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றிருப்பதும் சிறப்பம்சமாகும்.

தற்பொழுது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தர நிருணய பிரிவின் பணிப்பாளராக (Director, Centre for Quality Assurance) கடமையாற்றும் இவர் பல்கலைக்கழத்தின் தரமிக்க கல்வி அபிவிருத்தி செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டதன் மூலம் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் எமது இலங்கை திரு நாட்டின் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களுக்கு நிகராக கல்வியில் போட்டி போடக் கூடிய சூழலை ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும்.

தாவரவியல் மற்றும் உயிரியல் விஞ்ஞானத்தில் பல்வேறு பட்ட சிறப்பு மிக்க ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் புத்தகங்களை வெளியிட்டுள்ள இவர் அமெரிக்க உட்பட பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் கல்வி சார் பயணங்களை மேற்கொண்டு அங்கும் தனது ஆய்வுக் கட்டுரைகள் சமர்பித்து தான் பிரதிநிதித்துவப் படுத்தும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நாமத்தையும் இலங்கை திருநாட்டின் கௌரவத்தையும் மேலோங்கச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை பேராசிரியர் சபீனா இம்தியாஸ் அவர்கள் தான் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக கடமையாற்றிய காலப் பகுதியில் செய்த குறிப்பிட்ட முன்மொழிவுகள் மற்றும் செயற்திட்டங்கள் (Proposal and scientific writing) மூலம் உருவானதுதான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் எம்.எஸ்.எம் அஸ்லம்



பேராசிரியர் எம்.எஸ்.எம் அஸ்லம் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் (SUSL) சுற்றுலா மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தில் சுற்றுலா முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், முகாமைத்துவ கற்கைகள் பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் தலைவராகவும், ஆசிய இதழின் தலைமை ஆசிரியராகவும் உள்ளார். மேலாண்மை ஆய்வுகள். அவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மாவனல்லை உயன்வத்தையில் உள்ள நூரனியா எம்.எம்.வி என்ற பாடசாலையில் கற்றார். 1998 இல் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வணிகக் கற்கைகளில் B.Sc (Specialization in Travel and Tourism) இளங்கலைப் பட்டம் பெற்றார். 2005 ஆம் ஆண்டு இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி பட்டப்படிப்பை முடித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு மலேசியாவின் புத்ரா பல்கலைக்கழகத்தில் இருந்து சுற்றுலாத்துறையில் கலாநிதி பட்டம் (PhD)யைப் பெற்றார்.

பேராசிரியர், அஸ்லம் இளங்கலை மற்றும் முதுகலை மட்டங்களில் முகாமைத்துவ துறைகளில் மற்றும் குறிப்பாக சுற்றுலாத் துறையில் பல பாடங்களை கற்பித்து வருகிறார். கூடுதலாக, அவர் மென் திறன் மேம்பாடு மற்றும் தொழில் திறனை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளார். சுற்றுலா மற்றும் பொதுவாக பல்வேறு துறைகளில் அவர் பல ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளை மேற்கொண்டுள்ளார். தலைவர், இணைத் தலைவர், முக்கியப் பேச்சாளர், அறிவியல் குழுவின் உறுப்பினர், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் குழுவின் உறுப்பினர் என பல பிரபலமான சர்வதேச மற்றும் தேசிய சுற்றுலா மாநாடுகளுக்கு அவர் பங்களித்துள்ளார். பேராசிரியர் அஸ்லம் தனது ஆராய்ச்சியை தனித்தனியாகவும் கூட்டாகவும் புகழ்பெற்ற சர்வதேச இதழ்களான Heritage Tourism, Tourism Management, Journal of Tourism Policies,

Current Issues in Economy and Finance இதழ்கள் போன்றவற்றில் வெளியிட்டார். கூடுதலாக, அவர் ஒரு தலைமை ஆசிரியர்/ஆசிரியர் மற்றும் பங்களிப்பாளராக உள்ளார். ஸ்பைஸ் டூரிசம், உண்மைகளை வெளிக்கொணருதல், மோட்டார் பாரம்பரிய சுற்றுலா, உலகளாவிய தெற்கில் நிலையான சுற்றுலா மற்றும் வளரும் நாடுகளில் நிர்வாக சங்கடங்கள், பயணம் மற்றும் சுற்றுலா, நிலைத்தன்மை, பொருளாதாரம் மற்றும் மேலாண்மை சிக்கல்கள், கலாச்சார ஹான்டபிள் டூரிசம் போன்ற பல திருத்தப்பட்ட புத்தகங்களுக்கு முதலியன. சர்வதேச தேயிலை சுற்றுலா குறித்த பணிக்குழுவின் உடனடி முன்னாள் தலைவர் ஆவார். ஏசியன் ஜர்னல் ஆ∴ப் மேனேஜ்மென்ட் ஸ்டடீஸின் தலைமை ஆசிரியராகவும் உள்ளார். மலேசியா கிளந்தான் பல்கலைக்கழகத்தில் தொழில் முனைவோர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஆரோக்கிய பீடத்தில் சர்வதேச ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார். பேராசிரியர் அஸ்லம் இலங்கையின் தேசிய, மாகாண, உள்ளூர் மற்றும் சமூக மட்ட சுற்றுலாத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான வளவாளர்/ ஆலோசகர்/ ஆலோசகராகவும் பணியாற்றுகிறார். பொது, தனியார் மற்றும் சமூகப் பங்குதாரர்களுக்கான பல திறன்/திறன்-வளர்ப்பு பட்டறைகள் மற்றும் தலைமை/தொழில்முறை மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றையும் அவர் தொடர்பு கொண்டுள்ளார். உலக வங்கி/ IMF, UNDP, GIZ – Germany, ILO, WUSC, ICEI/ OVERSEAS, Skill for Inclusive Growth (S4IG) Aus AID ஆகியவற்றின் பல திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான குழுத் தலைவர் மற்றும் தலைமை ஆலோசகராக அவர் பல பணிகளை முடித்துள்ளார். பேராசிரியர் அஸ்லம் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தனது தீவிரப் பங்களிப்பையும் சேவைகளையும் வழங்குவதோடு, தேவையான இடங்களில் ஆலோசனைகளையும் தலைமைத்துவத்தையும் வழங்கியுள்ளார்.

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.ஏ.எம். நவாஸ்



**சுற்றுலா காவல்துறையின் இயக்குனர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.ஏ.எம். நவாஸ்**

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.ஏ.எம். நவாஸ் சுற்றுலா காவல் துறையின் இயக்குனராவார். இவர் அக்கரைப்பற்றைப் பிறப்படமாகக் கொண்டவர். இவர் ஆரம்பக் கல்வியை அக்கறைப்பற்று ஸாஹிராக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை அக்கறைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலத்திலும் கற்றவர். மனித உரிமைகளுக்கான முதுகலைப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 2010 - 2014 காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட ஒருவர்.

இவர் விளையாட்டுத்து துறையில் 1976 முதல் 1982 வரை பள்ளி கால்பந்து அணியில் பிகாசித்த இவர் 1980 முதல் 1982 வரை பள்ளி கால்பந்து அணியின் தலைவராகவும் இருந்துள்ளார்.

கல்முனை மாவட்ட பாடசாலை உதைபந்தாட்டப் போட்டியில் 1980 முதல் 1982 வரை தொடரேச்சியாக 03 வருடங்கள் கல்லூரிக்கான “பாபுஜீஸ்” சவால் கிண்ணத்தை சம்பியனாக வென்றார். பாடசாலையின் பல கோப்பைகளையும் மற்றும் போட்டிகளையும் வென்றவர்.

1980 இல் பாங்கொக்கில் நடைபெற்ற 9 வது ஆசிய பாடசாலை உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய பாடசாலை அணியை பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் சுற்றுலாத் துறையின் காவல் பிரிவின் இயக்குனராக இருந்து நேர்த்தியான முறையில் செயற்பட்டு வரும் இவர் காவற் துறை சார்ந்த நீண்ட அனுபவங்களையும் தகைமைகளையும் கொண்டவராவார். இவருடைய பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

# பட்டயக்கணக்காளர் ரிபாஸ் ஜப்பார்



ரிபாஸ் ஜப்பார் பிரயல்மான பட்டயக்கணக்காளர் ஆவார். இவருடைய முழுப் பெயர் பெலேவிடானேலே கெதர முகமது ரிபாஸ் ஜப்பார்.

இவர் இல. 42, கொங்கஹமுத்தொடுவ, மடவள பஸார் என்ற ஊரை வசிப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தையின் பெயர் சால்தீன் அப்துல் ஜப்பார். இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாரதியாக கடமையாற்றியவர். தாயார் அம்ரா பீபீ ஆவார்.

ஆரம்பக் கல்வி முதல் இடைநிலைக் கல்வியை வரை மதீனா தேசிய பாடசாலையில் கற்றவர். உயர் கல்வி இளமாணி வியாபார முகாமைத்துவம் (BBA) - கொழும்பு பல்கலைக்கழகம், முதுமாணி வியாபார முகாமைத்துவம் (MBA)– Postgraduate Institute of Management, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இலங்கை பட்டய கணக்காளர் (Chartered Accountant) - இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் போன்ற கற்கை நெறிகளில் பட்டம்பெற்றவர்.

இவர் தற்போது தொழில் தலைவராகவும் பங்குதாரராகவும் செயற்பட்டு வருகின்றார். ஆர். ஜே அசோசியேட்ஸ் (RJ Associates) ஆர். ஜே அசோசியேட்ஸ் என்பது 2001 முதல் கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனை வழங்கும் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனமாகும். நிறுவனர், பங்குதாரர் / தலைமை நிர்வாக அதிகாரி (CEO), ஆர். ஜே கன்சல்டிங் (RJ Consulting). ஆர். ஜே கன்சல்டிங் 2010 முதல் கம்பனி செயலாளர் (Company Secretarial), உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் கணக்கறிக்கை தயார் செய்தல், (Outsourced Accounting), வியாபார மற்றும் வரி ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமாகும்.

ஆர் ஜே அசோசியேட்ஸ் மற்றும் ஆர். ஜே கன்சல்டிங் மூலம் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள், கணக்கியல் துறையில் பயிற்சி பெற்று அவர்களது மேற்படிப்பை தொடர்ந்துள்ளார்கள்.

தலைமை நிர்வாக அதிகாரி (CEO) (2014 முதல் இன்று வரை) - த மொண்டிசோரி வேர்க் சொப் (பிரைவேட்) லிமிடெட் (The Montessori Workshop (Pvt) Ltd) கல்விசார் பொருட்கள் மற்றும் உதவிப் பொருட்களை உற்பத்தி செய்து அமெரிக்க சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகும்.

இவர் உதவிக் கணக்காளர், கணக்காளர், நிதித் தலைவர், தலைமை நிதி அதிகாரி (CFO), இயக்குநர் நிதி மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) போன்ற பதவிகளில், உற்பத்தி, நுகர்வோர் பொருட்கள், சுற்றுலாத்துறை, கட்டுமானம் மற்றும் சொத்து மேம்பாடு, வியாபார மற்றும் வரி ஆலோசனை, ஏற்றுமதி, கணக்கறிக்கை, கம்பனி செயலாளர் சேவைகள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்பு 12 போன்ற பல்வேறு துறைகளில் 22 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில் ரீதியிலான பங்களிப்பையும் அனுபவங்களையும் பெற்ற ஒருவர்.

இவரது மனைவி நஸ்ரீனா ரிபாஸ், பட்டய கணக்காளர் (Chartered Accountant) நிறுவகத்தின் உறுப்பினர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் வியாபார முகாமைத்துவ பட்டதாரி, பங்குதாரர்- ஆர். ஜே அசோசியேட்ஸ் (RJ Associates)

இவர் இளம் வயது முதல் இன்று வரையிலும் சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு காட்டி வருபவர். குறிப்பாக பல்கலைக்கழக காலங்களிலும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளதுடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதன் முதல் இன்றுவரை ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.

மேலும் இவர் ஊர் மஸ்ஜித்கள் மற்றும் பிற சிவில் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறார். அதேவேளை கௌரவ பதவிகளில் இயக்குனர் - நிதி - நிவாரணம் மற்றும் மேம்பாட்டுக்கான செரண்டிப் அறக்கட்டளை (Serendib Foundation for Relief and Development), தலைமை நிர்வாக அதிகாரி இஸ்லாமிய புத்தக நிலையம் (Islamic Book House) எனப் பல்துறைகளில் இயங்கி வருபவர்.



# இளம் வயதிலேயே ஊடகத்துறையில் உயரம் தொட்ட அஸாம் அமீன்

இலங்கையின் இளம் ஊடகவியலாளரான அஸாம் அமீன் 1988ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். இவர் பிரபல பத்திரிகை ஆசிரியரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் என்.எம். அமீன் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியை நஸ்லிமா அமீன் தம்பதியினரின் மூத்த மகனாவார்.

அஸாம் அமீன் அவரது ஆரம்பக் கல்வியை கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியிலும், உயர் கல்வியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார். அஸாம் ஒரு வணிகத் துறைப் பட்டதாரியாவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் போது, இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தில் செயற்திட்டப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்தார். அதன் பின்னர் அஸாம், பிரபல சர்வதேச ஊடகமான பிபிசியின் சந்தேஷய என்ற சிங்களச் சேவையின் இலங்கைக்கான செய்தியாளராகக் கடமைப் பொறுப்பேற்றார்.

அஸாம் அமீன் இளம் வயதிலேயே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஊடகத்துறையில் தனக்கென தனியான இடத்தைப் பெற்றுக்கொண்டார். பிபிசியில் 10 வருடங்கள் பணிபுரிந்ததைத் தொடர்ந்து, நிவ்ஸ்வயர் என்ற தனது சொந்த செய்திச் சேவையை ஆரம்பித்தார். இன்றளவில் நிவ்ஸ்வயர், இலங்கையில் இயங்கி வரும் முன்னணி செய்தி ஊடகங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

இலங்கையின் அரசியல், சமூக, வணிக விடயங்கள் தொடர்பான செய்திகளை நிவ்ஸ்வயர் விரைவாகச் சுமந்து வருகின்றது. கிரிக்கெட் விளையாட்டு தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்காக அஸாம் அமீன், கிரிக் வயர் என்ற விளையாட்டுச் செய்திச் சேவையையும் நடத்தி வருகிறார். கிரிக் வயர், கிரிக்கெட் ரசிகர்களிடம் மாத்திரமன்றி, தேசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் வீரர்களிடத்திலும் பிரபல்யம் பெற்றுள்ளது.

இளம் தலைமுறையினருக்கும், வளர்ந்து வரும் ஊடகவியலாளர்களுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்கும் அஸாம், சிறந்த அரசியல் மற்றும் விளையாட்டுத்துறை விமர்சகரும் ஆவர். பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களில் பிரபல்யம் பெற்ற இவர், பல தடவைகளும் நாட்டின் சிறந்த சமூக ஊடகவியலாளராக வாசகர்களின் வாக்குகளால் தெரிவானார்.

சமூக ஊடக தினத்தன்று எட்டிசலாட் நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில், 2018 ஆம் ஆண்டின் Most Popular Journalist on Media என்ற விருதை அஸாம் பெற்றுக்கொண்டார். அத்தோடு, ஶ்ரீலங்கா யுனைட்ஸ் நிறுவனம் 2021ஆம் ஆண்டின் Outstanding Young Role Model என்ற விருதை வழங்கி, இவரை கௌரவித்தது. இளம் ஊடகவியலாளரான அஸாம் அமீன், இன்று இலங்கையின் தவிர்க்க முடியாத ஊடக ஆளுமையாக வலம் வருகிறார்.



## வளவாளர் பாசிர் மொஹிடீன்

அக்குறணையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாசிர் மொஹிடீன் அவர்கள் தனது ஆரம்பப் பாடசாலைக் கல்வியினை அகுறணை பாலிகா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலை பாடசாலைக் கல்வியினை அகுறணை அஸ்ஹர் தேசிய கல்லூரியிலும் கற்றார். மேலும் பாடசாலைக் காலங்களில் விளையாட்டு, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றார். உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் கற்று அஸ்ஹர் தேசிய பாடசாலையின் வரலாற்றில் அதி சிறந்த பெறுபேற்றைப் பெற்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவப் பீடத்திற்கு தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார் பாசிர் மொஹிடீன்.

அவர் The Chartered Institute of Management Accountants (CIMA – Finalist) மற்றும் Master of Business Administration (MBA) University of Wales ஆகிய உயர் கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளார். Kandy WESSWOOD COLLEGE (Boys' School) மற்றும் LOYAL LADIES' COLLEGE ஆகிய பிரபல சர்வதேச பாடசாலைகளின் ஸ்தாபகத் தலைவர் (Founder Chairman) ஆக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். தற்போது இவ்விரு பாடசாலைகளிலும் 2000 மாணவர்கள் கல்வி பயின்று வருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சுயமுன்னேற்றத்திற்கான அமைப்புக்களில் ஒன்றான Toastmasters Club (Public Speaking &Leadership) இன் ஒரு Active Member ஆக இருப்பதுடன் Hill Capital Toastmasters Club இன் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். Toastmasters International இன் Advanced Communicator Silver மற்றும் Advanced Leader Bronze போன்ற முக்கிய அடைவுகளையும் பெற்றுள்ளார். தேசிய மற்றும் சர்வமத ரீதியிலான பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி பல விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அமைப்புக்களில் ஒன்றான Past Prefects' Guild இன் தலைவராக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றி பாடசாலையின் அபிவிருத்தி பணிகளில் பங்கேற்றுள்ளார். பாசிர் மொஹிடீன் அவர்கள் ஒரு சிறந்த ஊக்குவிப்பு பேச்சாளர் ஆவார். மாணவர்கள், பெற்றார்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வியாபாரிகள், உலமாக்கள், மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர்க்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மனித வலுவூட்டலுடன் தொடர்புடைய 20க்கு மேட்பட்ட தொலைகாட்சி நிகழ்ச்சிகளிலும் 300ற்கும் மேட்பட்ட வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார்.

## இக்பால் அலியின் நூல்கள்

1996 இல் முற்றத்திற்கு வாருங்கள் (கவிதைத் தொகுதி)

2001 இல் புள்ளிகளில் சில புள்ளிகள் ( கவிதைத் தொகுதி)

2001 இல் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி கே. எம். எச். காலிதீன் (வாழ்க்கை வரலாற்று நூல்)

2002 இல் நான் மூன்று சக்கரக்காரன் (சிறுவர் பாடல்கள்)

2003 இல் அன்பு பெருக (சிறுவர் பாடல்கள்)

2003 இல் நல்லதொரு பயணம் (சிறுவர் கதைகள்)

2001 இல் நயனம் சஞ்சிகை (கலை இலக்கிய சஞ்சிகை 1–3 இதழ்கள்)

சஹீட் எம். ரிஸ்மி சிறந்த சமூகப் பணியாளர். ஒரு வர்த்தகப் பிரமுகராக இருந்தாலும் கல்வியின் அடித்தளம் வரை சென்று பல பட்டங்களையும் பெற்று அதன் புலமைகளில் செழித்தவர். இவர் சமூகப் பணியும், செயற்பாடும் இந்த வழித்தடத்திலேயே நகர்ந்து முன்னேறுகிறது. இவரது சமூகப் பணி இன்றைய சிவில் சமூக செயற்பாட்டாளர் களிலிருந்து தனித்து நிற்கிறது. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸின் சிந்தனை மரபில் இருந்து ஒரு சொட்டும் நெறி பிறழ்ந்து விடாமல் அவருடைய சமூகப் பணி நன்கு பிரகாசிக்கிறது.

---

சஹீட் எம். ரிஸ்மி இன் சமூகவியல் பயணம் வேறுபட்டதாக உணர்ந்து கொள்ள முடிகிறது. இலங்கையில் தேசிய நலனுக்காகப் பங்களிப்பு செய்த புகழ்பெற்ற பெரியார்களான அறிஞர் சித்திலெப்பை, அப்துல் காதர் போன்றவர்களை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வார். இளம் தலைமுறை யினர்களும் இந்த இடத்திற்கு வர வேண்டும் என்று மனதில் ஆதங்கப்பட்டுக் கொள்வார். நமது நாட்டின் தேசிய சுதந்திர புருஷர்களாக மதிக்கப்பட்ட வர்களுடைய விபரங்கள் பற்றி சஹீட் எம். ரஸ்மியிடம் பெறமுடிகிறது. இளம் தலைமைத்து வங்களை முன்னேற விடாமல் தடைபோடுபவர்கள் யார் யாரேனக் கூறுகிறார். இவ்வாறு இவர்கள் பற்றி எல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டும் அவருடைய திறமை நம்மை பிரமிக்க வைக்கிறது. கொரோனா காலத்தில் ஜனாஸாக்களை மாலை தீவில் அடக்கலாம் என்ற செய்தி வெளிக்கிளம்பிய போது சினந்து கொண்டு எதிர் குரலெழுப்பியவர்.

---

இவருடைய தலைமைத்துவப் பண்பானது நட்பு என்ற அடிப்படையில்தான் எல்லா அனுகுமுறைகளும் அமைந்திருக்கும். ஆதிக்கம், அதிகாரம், ஆகிய மேலதிக்க மன உணர்வுகளைத் துளி கூட இவரிடம் காணுதல் அரிது. இளம் தலைமைத்துவத்தில் தம் சமூக இளைஞர்களை மீண்டெழுவச் செய்வதிற்குரிய குறித்த சிந்தனைகள், செயற் திட்டங்கள் எல்லாம் புதிய பாதையை உருவாக்கக் கூடியவையாக அமைந்துள்ளன.



Dr. AMA Azeez - 1st Founder President
1950-1952

FAITH - UNITY - DISCIPLINE
ESTD - 1950



Saheed M Rismy - 54th Current
National President 2021-2022



IM Yousuf
2nd President 1953



M Falil A Caffoor
3rd President 1954



MA Razak
4th President 1955



SBA Hamid
6th President 1957



SHA Wadood
8th President 1958



AHM. Farook
9th President 1959



SM Kamaldeen
10th President 1960



ARA Noor Amin 11th
President 1961



AM Nazeer
12th President 1962



M Mansoor S Deen
15th President 1965



SB Halaldeen
17th President 1967



MM Bahaudeen
18th National
President 1968,
1969 & 1975



Budree Hashim
19th National
President 1970



MLM Farook
20th National
President 1971



OMM Hussain
21st National
President 1972



AM Mustakeem
22nd National
President 1973



Macky Hashim
23rd National
President 1974



SFM Zavahir
24th National
President 1976



ACM Huzair
25th National
President 1977



M.M. Hamza
26th National
President 1978-79



Cader M Ali
27th National
President 1980-81



Cassim M Naeem
28th National
President 1982-83



Naleem Haniffa
29th National
President 1984-85



Zubair Hassen
30th National
President 1986-87



Haleem A Azeez
31st National
President 1988-89



MFS Muheed
32nd National
President 1990-91



ALM Sabir
34th National
President 1992



M Raslan Moulana
35th National
President 1993



M Rumi Mohamed
36th National
President 1994-96



Khalid M Farouk
39th National
President 1998-00



Ashroff Rumi
41st National
President 2002-03



MH Saleemdeen
42nd National
President 2004-05



Jiffry Haniffa
43rd National
President 2006-07



MS Raheem
44th National
President 2007



Iflal Abdulla
45th National
President 2008



Nadvi Bahaudeen
47th National
President 2010-11

KN Deen
48th National
President 2012-13

MT Thahasim
49th National
President 2014

Sadique Saleem
50th National
President 2015-16

Thaufiq Zubyr
51st National
President 2017

MNM Naphiel
52nd National
President 2018-19

MM Abdul Wahab
53rd National
President 2020

**5th President – 1956 Mr. SMH Mashoor, 7th President – 1957 Mr. Lafir Cassim, 13th President – 1963 Mr. Marzook Burhan,14th President – 1964 Mr. SS Issadeen, 16th President – 1966 Mr. AHM Jezail, 33rd National President – 1991 Mr. Hussain J Salahudeen, 37th National President – 1996 Mr. Junaid M Jhan, 38th National President – 1997 Mr. TM Kamaldeen, 40th National President – 2001 Mr. Fawzan M Anver, 46th National President – 2009 Mr. A Fahmee Oowise**

**ISBN 978-624-5709-27-4**